# உயிர் விடுகதை

சுபா



ON

## உள்ளே...


1. உயிர் விடுகதை 5
2. புதை மணல் 83
3. பெயர்? முகவரி? அன்பு! 165


# உயிர் விடுகதை

## 1

ரவிசங்கர் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் மீது நிழல் படிந்தது. நகராமல் நின்றது. நிமிர்ந்தான். கதவுக்கு வெளியே இருந்து வந்த வெளிச்சத்தை அடைத்துக் கொண்டு சுந்தர வடிவேல் நின்றிருந்தார்.

''அப்பா!'' என்றான். புத்தகத்தை மூடிவிட்டு மரியாதை யுடன் எழுந்தான்.

சுந்தரவடிவேல் சைகையாலேயே அவனை உட்காரச் சொன்னார். கட்டில் நுனியில் உட்கார்ந்து கொண்டார். அந்த நேரத்திலும் அவரிடமிருந்து பா்ஃப்யூம் வாசம் வந்தது. பட்டுச் சட்டை பளபளத்தது. வேட்டி தரையில் புரண்டது. வேட்டிக் கரை கூட புதிதாய் அழுக்கில்லாமல் இருந்தது.

"படிக்கிறாயா?" என்றார்.

நிற்கும்போது ஆறரை அடிக்கு மேல் உயரம். அழுத்தமான முகம். அகலமான உடம்பு. உட்கார்ந்த போதும் கம்பீரம் குன்றவில்லை.

பிரின்ஸ்பால் எதிரே நிற்கும் மாணவன் போன்ற உணர்வை யாரிடமும் ஏற்படுத்தக் கூடிய தோற்றம்.

"ஆமாம்..." என்றான் ரவிசங்கர். "நாளைக்குக் காலையில் ஒரு ஆப்பரேஷன்."

"புஸ்தகம் படித்து விட்டா வெட்டப் போகிறாய்?"

"இல்லையில்லை. ஜஸ்ட் ஒரு ரெஃபரன்ஸிற்காக..."

"புது க்ளினிக்கில் எப்படியிருக்கிறது பிராக்டிஸ்?"

"உங்கள் ஆசீர்வாதத்தில் பிரமாதமாக நடக்கிறது அப்பா. நல்ல கூட்டம்..."

"கூட்டம் வருவது பெரிசில்லை, ரவி. பேர் வாங்க வேண்டும். ரவிசங்கரா, கைராசியான டாக்டராயிற்றே என்று எல்லோரும் சொல்ல வேண்டும். இன்று பேங்க் மேனேஜரிடம் பேசிக் கொண்டிருந்தேன். இம்போர்ட் செய்த எக்ஸ்ரே, ஸ்கேனிங் மெஷினிற்கெல்லாம் லோன் தர ஸோனல் ஆபீசில் சம்மதித்து விட்டார்களாம்."

"அப்படியாப்பா?" ரவிசங்கரின் முகம் மலர்ந்தது.

"நம்மை பகைத்துக் கொள்ள முடியுமா, சொல். இந்த ஊரிலேயே அத்தனை வசதியும் இருக்கும் க்ளினிக் உன்னுடைய க்ளினிக்காக இருக்க வேண்டும், ரவி. அதுதான் என் லட்சியம்."

"சொல்லியிருக்கிறீர்கள் அப்பா..."

"என்னிடம் இல்லாத பணம் இல்லை. வைரத்தில் நம்மை அடித்துக் கொள்ள ஊரில் ஆள் இல்லை. நினைத்திருந்தால் உன்னையும் இந்த பிஸினஸில் இழுத்து விட்டால் உட்கார்ந்த இடத்தில் உன்னாலும் லட்சம் லட்சமாய் சம்பாதித்திருக்க முடியும். ஆனாலும் உன்னை ஏன் டாக்டருக்குப் படிக்க வைத்தேன் என்று உனக்குத் தெரியும்."



"தெரியும் அப்பா. டாக்டர் வசதி இல்லாமல் அம்மா செத்துப் போன நாளைப் பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறீர்கள்."

"என்ன வசதி வேண்டுமோ, கேள், ரவி. ஏற்பாடு பண்ணித் தருகிறேன். ஆனால் நீ சின்ஸியராக இருக்க வேண்டும்."

"என் தொழில் மீது முழு கவனமாக இருக்கிறேன் அப்பா. சின்ஸியராகத்தான் இருக்கிறேன்."

"சின்னச் சின்ன அல்ப சந்தோஷங்களில் உன் கவனம் சிதறக் கூடாது, ரவி..."

"சிதறாது அப்பா.."

"நிச்சயமாகத் தானே?"

"நிச்சயமாகப்பா.."

"அப்படியானால் மீரா யார்?"

"அப்பா!"

"மீரா யார்?"

"அ... எ... வ... வந்து..."

"அவளை மறந்து விடு ரவி.. கல்யாண ஆசை வந்து விட்டதா.. என்னிடம் சொல்... ஃபாரின் ரிடர்ன்ட் டாக்டர் ஒருத்தியின் ஜாதகம் வந்திருக்கிறது. உனக்கு தொழிலிலும் உதவியாய் இருப்பாள்..."

"இ... இல்லைப்பா... கல்யாணம் இப்போது வேண்டாம்..."

"மீராவை மறந்து விடு."

சுந்தரவடிவேல் ஒட்டகச்சிவிங்கி போல் எழுந்தார். அவனை நெருங்கி ஆதரவாக அவன் முதுகில் தட்டி விட்டு வெளியேறினார்.



## 2



தூசு படிந்த சாலை பாம்பு போல் படுத்திருந்தது.

சாலையோரமாக அந்த மாருதி நின்றது. ஒதுக்கத்தில் மரங்கள் குடை விரித்திருந்தன. ஈர பூமியில் வெள்ளைப் பூக்கள் காகிதக் குப்பை போல் சிதறியிருந்தன. பூமியிலிருந்து மேடிட்டு மறுபடிப் புதைந்த வேர் கிளையின் மீது ரவிசங்கர் உட்கார்ந்திருந்தான். புல்லிதழ்களை ஒவ்வொன்றாகப் பறித்துப் போட்டாயிற்று. காற்று தாழ்வாக வீசும்போது பூவிதழ்கள் பறந்தன. புற்களெல்லாம் சேர்ந்து தொழுகை செய்தன.

மடியில் வந்து பட்டாம் பூச்சிகளைப் போல் அமர்ந்த பூவிதழ்களை வருடிக் கொண்டு ரவிசங்கர் காத்திருந்தான்.

ர்ர்ர் என்ற டீசல் என்ஜினின் சப்தம் வெகு தூரத்தில் இருந்து அதிர்வுகளாகப் புறப்பட்டது. அவனை அலை அலையாகத் தாக்கியது நிமிர்ந்தான். வளைந்து மரங்களுக்குப் பின் மறைந்த சாலையின் திருப்பத்தில் பஸ் தெரிந்தது.

விறைப்பானான். பஸ்ஸின் ஒலி சிறிது சிறிதாகக் கூடி நெருங்கி, அவனைத் தாண்டிப் போனது. ஐம்பது மீட்டர் தள்ளி நின்றது. நின்ற பஸ்ஸில் அந்தப் பக்கத்துப் படிகளில் இருந்து ஒரு கொலுசு அணிந்த கால் இறங்கி தரையில் ஊன்றுவது பஸ்ஸின் கீழ்ப்படியில் தெரிந்தது. வெளேர் என்ற, அப்பழுக்கில்லாத கால். நொடியின் பின்ன நேரத்



திற்குள், அந்தக் காலை மூடி புடவை இறங்கியது. இன்னொரு காலும் பதித்து அந்தப் பெண் இறங்கி விட்டாள். அந்த ஒற்றைப் பயணியை இறக்கி விட்ட களைப்போடு பஸ் சீறி விட்டு புறப்பட்டது. தூசு பறக்க விலகி ஓடியது.

பஸ் விலகியதும் அவள் முழுசாகத் தெரிந்தாள்.

மீரா!

அவளை ஒவ்வொரு முறை பார்க்கும் பொழுதும் அவனுக்கும் எழும் அதே உணர்வுதான் இப்போதும் எழுந்தது.

குழந்தை!

இருபது வயதுக் குழந்தை. ஐந்தடி நாலங்குலம். மதர்ப்பான மார்புகள். வெட்டி விரியும் இடுப்பு. அகன்று குறுகும் கால்கள். எதுவும் அவன் கண்களை ஈர்த்ததில்லை. அவள் முகம்! துடிப்பான ஒரு சிறுமியைப் போன்ற முகம். பெரிய விழிகள். அவற்றில் படபடப்பு, சின்ன எடுப்பான மூக்கு, ரோஸ் நிற உதடுகள், தப்பாத பல் வரிசை, குமிழ் முகவாய், வெளிச்சத்தைப் பிரதிபலிக்கும் சருமம், எல்லாவற்றையும் மீறி முகத்தில் பிரகாசிக்கும் வெகுளித்தனம்.

அவனைப் பார்த்ததும் அவள் முகத்தில் தானாக ஊற்றெடுத்த புன்னகையை அவள் அடக்க முடியாமல் சாலையைக் கடந்து வந்தாள். ஸ்லிங் ஸ்லிங் என்று கொலுசு முனகிக் கொண்டே வந்தது. சாலையைக் கடந்து, அவன் மாருதியைத் தாண்டும்போது அதன் தூசுப் போர்வையில் ஒற்றை விரலால் விளையாட்டாக ஒரு கோடு இழுத்தாள். காற்று புடவையை மோதி அவள் உடம்போடு நெருக்கியபோது, செல்லமாக கோபித்து, கால்களை விடுவித்து நடந்தாள்.

''ரொம்ப நேரம் வெயிட்டிங்கா?''

''இல்லை. இப்பத்தான் வந்தேன்.''

''வழில ஒரு ஆக்ஸிடென்ட் டிராஃபிக்கெல்லாம் திருப்பி விட்டுட்டாங்க.''

ரவிசங்கருக்கு எதிரே பூவிதழ்கள் சிதறியிருந்த பூமி மெத்தையில் உட்கார்ந்தாள். முழங்கால்களில் முகவாயை இருத்தி, அவனைக் கண்களுக்குள் பார்த்தாள்.

''போன் வந்திருக்குன்னு சொன்னப்ப, அம்மாவுக்குத்தான் என்னவோ ஆயிருச்சின்னு பயந்துக்கிட்டே போனேன். உங்க குரலைக் கேட்டதும்தான் நிம்மதியாச்சு. காலேஜுக்கெல்லாம் சாதாரணமா போன் பண்ண மாட்டீங்களே...''

''சாதாரணமா பண்ண மாட்டேன். ஆனா இன்னிக்கு அவசரம்.''

''எனி பிராப்ளம்?'' என்றாள் இமைகளை இமைத்து.

''அப்பாவுக்கு உன்னைப் பத்தி தெரிஞ்சு போச்சு.''

''நீங்க சொன்னீங்களா?''

''இல்ல.. யார் சொன்னாங்கன்னு தெரியல. ஆனா உன் பேரு மீராங்கறது கூட அவருக்குத் தெரிஞ்சிருந்தது.''

''என்னிக்கிருந்தாலும் தெரிய வேண்டியது தானே? என்ன சொன்னாரு?''

''..........''

''என்ன சொன்னாரு ரவி?''

''மறந்துடுங்கறாரு...''

''மறந்துடப் போறீங்களா?''

''மீரா! ப்ளீஸ்... அந்த வார்த்தையைக் கூடச் சொல்லாத...''

''அப்பா கிட்ட நீங்க என்ன சொன்னீங்க?''

''ஒண்ணும் சொல்லல.. திடீர்னு அவர் குண்டைத் தூக்கிப் போட்டதும் வெலவெலத்துப் போச்சு எனக்கு.. வாய்ல வார்த்தையே வரல்ல...''



''அவ்வளவு தான? அது ஒரு ஸ்டேட் ஆஃப் ஷாக்... இன்னிக்குப் போய் சொல்லுங்க...''

''முடிவு பண்ணிட்டேன். சொல்றதுன்னு, ஆனா தனியா இல்ல... உன்னையும் கூட அழைச்சிட்டுப் போகப் போறேன்..''

''என்னையுமா? நான் எதுக்கு?''

''சும்மா மீரான்னு ஒரு பேரைக் கேட்டுட்டுத்தான் அவரு மறந்துடு, தொலைச்சிடுன்னுல்லாம் பேசறாரு... உன்னைப் பார்த்தா உடனே புரிஞ்சுடும் அவருக்கு. பையன் ஏதோ ஒரு தறுதலையை நம்பி ஏமாந்துடலை.. நம்ம குடும்பத்துக்கு ஏத்த பொண்ணாத்தான் பார்த்திருக்கான்னு..''

''எனக்கு பயமா இருக்கு ரவி.. உங்கப்பாவைப் பத்தி நீங்க சொல்லியிருக்கறதெல்லாம் நெனைச்சாலே குடல் நடுங்குது..''

''நல்ல கதையா இருக்கே? நாளைக்கு நான் க்ளினிக் போயிட்டா, அவரை கவனிச்சு சாதம் போட்டு, பூஜைக்கு பூப்பறிச்சு கொடுத்து - எல்லாம் செய்யப்போறது நீதான்? பயந்தா எப்படி?''

''பயம்னா.. எனக்கொண்ணும் பயம் இல்ல... ஒரு.. ஒரு மரியாதை தான். எப்பப் போலாம்?''

''இப்பவே?''

''ஐயையோ...''

''பயப்படறியே...''

''நாளைக்கு வரேன் ரவி... பத்து நாள் கழிச்சு இன்னிக்குத் தான் மீட் பண்றோம்... அதுக்குள்ள கட் பண்ணச் சொல்றீங்களே?''

''சுபஸ்ய சீக்கிரம்னு சொல்வாங்களே, கேட்டதில்ல?''

''அப்படீன்னா?''

"நல்ல காரியங்களை ஒத்திப் போடக்கூடாது. உடனே செய்ஞ்சிடணும்னு அர்த்தம்..."

"அம்மாவோட வரலாமேன்னு பார்த்தேன்..."

"அஃபீஷியலா அப்புறம் அம்மாவோட வா... ஆனா இப்ப என் கூடத்தான் வர்றே? ப்ரெண்ட்லியா வர வேண்டியது தான்?"

"இப்பவேவா?"

"இப்பவே வா..."

"நா... நான் ரெடி..."

"நானும்..."

ரவிசங்கர் எழுந்து அவளுக்கு கை கொடுத்துத் தூக்கினான். மிருதுவான விரல்கள். அந்த விரல்களைத் தாமரை மொட்டாகப் பற்றினான்.

"ஐயோ உங்க அப்பா..."

"எங்கே?" என்று ரவிசங்கர் அவள் கையை விட்டதும், பொங்கிச் சிரித்தாள். அவன் அவளைத் தலையில் குட்ட கையை ஓங்கினான்.



## 3



சுந்தரவடிவேல் ஒற்றைக் கண்ணில் வட்ட லென்ஸை மாட்டியிருந்தார். நீலநிற வெல்வெட் பரப்பி நட்சத்திரங்களாய் சிதறியிருந்த வைரங்களை ஒவ்வொன்றாகப் புரட்டி, குறிப்பிட்டதொரு கல்லை எடுத்தார். லென்ஸ் வழியே தரிசித்து திருப்தியாகப் புன்னகைத்தார். லென்ஸைக் கழற்றினார் நிமிர்ந்தார்.



"அடடே... நீயா... வா... வா... எப்பொழுது வந்தாய்? கடைக்கெல்லாம் வர மாட்டாயே, நீ?"

ரவிசங்கர் தெளிந்தான்.

"நான்... நான்..."

"என்ன, சொல்லேன்..."

"அவளை அழைத்து வந்திருக்கிறேனப்பா."

"எவளை?"

"மீராவை..."

அவர் முகத்து தசைகள் இறுகின. வால் மிதிக்கப்பட்ட புலி போல் முகம் ஒரு கணம் ஆக்ரோஷமானது. உடன் தளர்ந்தது. வலுக்கட்டாயப் புன்னகை அமர்ந்தது.

"இங்கே கடைக்குக் கூட்டி வந்திருக்கிறாயா?"

"ஆமாம்..."

"அவளுக்குக் கடையைச் சுற்றிக் காட்டவா?"

"இல்லை... நீங்கள் அவளைப் பார்க்க வேண்டும் என்று.."

"பார்த்து?"

"பார்த்து... பார்த்து... பாருங்களேன், ப்ளீஸ்..."

"ஏன் இப்படி பிக்பாக்கெட் அடித்தவன் மாதிரி நடுங்குகிறாய்? கூட்டி வா... பார்க்கிறேன்..."

"தேங்க்ஸ்..." ரவிசங்கர் திரும்பி ஷோருமின் மரப்படிகளில் வேகமாக இறங்கிப் போனான்.

சாக்லெட் வைத்திருக்கும் புது விருந்தாளியை சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே நெருங்கும் சிறு குழந்தை போல் மீரா படிகளில் தயங்கி ஏறினாள்.

"வாம்மா."

சுந்தரவடிவேலின் அழுத்தமான குரல் அவளுள் நரம்புகளைப் பிசைந்தன. மதுரை வீரபத்திர சாமியைப் போல என்ன ஒரு ஆஜானுபாகுவான உடம்பு! இந்த உடம்பு எப்படி இந்தக் கடையில் வணங்கி உட்கார்கிறது?

''உக்காரும்மா...''

''ப.. பரவாயில்லை...''

''படிக்கிறாயா?''

''ஆமாம்...''

''காலேஜா? ஸ்கூலா?''

''காலேஜ்... பி.காம் பைனல்...''

''அப்பா என்ன பண்ணுகிறார்?''

''அப்பா இல்லை, அம்மா மட்டும்தான்...''

''அப்படியா! வீடு எங்கே?''

''செண்பகத் தோட்டம் ஏரியாவில்...''

''அவ்... வளவு தள்ளியா இருக்கிறாய்?''

''அப்பா ஆசையாய் கிரவுண்டு வாங்கிப் போட்டார். வீடு கட்டி முடித்ததும் செத்துப் போய்விட்டார்... அம்மாவுக்கு சென்டிமென்ட்டலாக அந்த வீட்டில் இருக்க வேண்டும் என்று ஆசை...''

''மொத்தமே பத்தோ, பதினைந்தோ தானே அந்த ஏரியாவில் வீடு இருக்கும்?''

''ஆமாம்... எங்களுடைய ரோடிலிருந்து ஒதுங்கி உள்ளே தான் இருக்கிறது... மலிவாய் வேறு எங்கும் கிரவுண்டு கிடைக்கவில்லை..''

மீராவுக்கு அவருடைய கேள்விகள் பிடித்திருந்தன. படிப்பு, வீடு, என்ன பஸ்ரூட் என்று கேட்டுக் கொண்டிருந்



தால், தங்கு தடையில்லாமல் பதில் சொல்லிக் கொண்டே போகலாம்.

''கடையைச் சுற்றிப் பார்த்தாயாம்மா?''

''இல்லை... ஆனால் பார்த்தாலே பிரமிப்பாய் இருக்கிறது...''

''ஒவ்வொரு வைரக்கல்லும் என்னுடைய ரத்தத்துளி... பிஸினஸ் படிந்து, அதில் முன்னுக்கு வர நான் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமில்லை.''

''சொல்லியிருக்கிறார்...''

''யார், இவனா? இவனுக்கு என்ன தெரியும்? நான் அவனிடம் சொன்னதை அவன் உன்னிடம் சொல்லியிருப்பான். ஒரு நாளில், ஒரு ராத்திரியில் சம்பாதிக்கிற காசில்லை இது. எனக்கப்புறம் எல்லாம் இவனுக்குத்தான்...''

ரவிசங்கர் தர்ம சங்கடமாக நெளிந்தான். மீராவிடம் அப்பா சொத்தைப் பற்றியும், தன் செல்வத்தைப் பற்றியும், செல்வாக்கைப் பற்றியும். பிரமாண்டமாகப் பேசப் பேச, அவளுள் எழப்போகும் தாழ்வுணர்ச்சியை எண்ணித் தவித்தான்.

''உனக்கு வீட்டில் கல்யாணத்திற்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்மா?''

''இ... இல்லை...''

''இருபது வயசுதானே... முதலில் படிப்பு முடியட்டும் என்று உன் அம்மா நினைக்கிறாளோ என்னவோ?''

''அ.. ஆமாம்...?''

''உன் கல்யாணத்திற்கு நகையெல்லாம் நம் கடையிலேயே செய்து கொடுத்து விடலாம்...?''

''அப்பா...''

''என்ன ரவி?''

"மீரா... என்னை... நான்... அவளை..."

"நீ அவளை?"

"இவளை எனக்குப் பிடித்திருக்கிறது... இவளையே கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன் அப்பா..."

"சொல்லவேயில்லையே நீ!"

"நீங்களே கூப்பிட்டு விசாரித்தீர்களே..."

"சந்தேகப்பட்டேன்... அவ்வளவுதான்.. நீ ஆமாம் என்று கன்ஃபர்ம் செய்யவில்லையே?"

"சார்... ரவிசங்கரின் பேரில் நானும் உயிரையே வைத் திருக்கிறேன்..."

"ரவியின் மேலா, அவனுக்கு வந்து சேரப் போகிற சொத்தின் மேலா?"

"ஒரு பைசா இல்லாமல் அவர் வெளியே வந்தாலும், எங்களால் சந்தோஷமாய் சேர்ந்து வாழ முடியும், சார்..."

"வெரிகுட்..." சுந்தரவடிவேல் எழுந்தார். "எனக்கு இருப்பது ஒரே மகன்தான். அவன் இந்த ஊரில் பெரிய டாக்டராக வர வேண்டும் என்று எனக்கு ஆசை. அவனுடைய பெண்டாட்டியும் ஒரு டாக்டராக இருந்தால் அவனுக்கு தொழிலில் ரொம்ப உதவியாய் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்..."

"அவருக்கு ஹெல்ப் செய்ய நான் டாக்டருக்குப் படிக்கக் கூடத் தயாராயிருக்கிறேன், சார்..."

"கடையில் நுழைந்து வைர நெக்லஸ் வாங்குகிற மாதிரி யான விஷயமில்லை, இது. டாக்டர் படிப்புக்கு அட்மிஷன் கிடைப்பதென்றால் அவ்வளவு சுலபம் என்று நினைத்து விட்டாயா?"

"மீரா இருந்தால் எனக்கு ஹெல்ப் தான் அப்பா..."



"புரிகிறது.. புரிகிறது... உனக்கு அவள் மேல் எவ்வளவு பிடிப்பு இருக்கிறது என்று எனக்குப் புரிகிறது... உன் ஆசைக்கு எதிராக என்றைக்காவது நான் நடந்து கொண்டிருக்கி றேனா?" சுந்தர வடிவேல், ரவிசங்கரை நெருங்கி அவனைத் தன்னோடு நெருக்கிக் கொண்டார். "மீராவின் அம்மாவையும் ஒரு நாளைக்கு அழைத்து வா.... பேசுவோம்..."

"அப்பா..." ரவிசங்கரின் முகம் சூரியன் போல் பிரகாசமானது.

"தாங்க்யூ சார்..."

"பட் யூ ஹேவ் டு வெயிட்.. உன் படிப்பு முடிகிற வரையில் அவசரம் கூடாது..."

"அவசரமில்லை அப்பா..."

"அதுவரை நீங்கள் அடிக்கடி சந்திக்காமல் இருந்தால் கூட எனக்கு சந்தோஷம்..."

"அது... அது..."

"முடியாது?"

"முடியும்" என்றாள் மீரா. "எங்களால் முடியும் சார்..."

"குட். ஒன் மோர் பாயிண்ட். நான் ஓகே சொல்லி விட் டேனே என்று ஊர் பூராவும் தம்பட்டம் அடித்து விட வேண்டாம். காரியத்தைக் கெடுப்பதற்கென்றே பத்துப் பேர் கிளம்பி வருவார்கள். பத்திரிகை அச்சாகிற வரை இது நமக்கு மட்டுமே தெரிந்த நியூஸ்..."

"சரி சார்..."

"ரவி, நீ இவளை அனுப்பி விட்டு வா... உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும்..."

ரவிசங்கர் மேகத்தில் நடந்தான். மின்னலை அணிந் திருந்தது போல் ஒரு உற்சாகம். மீராவை வாசல் வரை

சென்று ஆட்டோவில் ஏற்றிவிட்டு (புடவை, புடவை என்று புடவையை உள்ளே அடக்கிக் கொள்ளச் சொல்லும் சாக்கில் ஒரு கணம் அவள் இடுப்பு வளைவை ஸ்பரிசித்து) மாடியேறி அப்பாவின் ரூமிற்கு வந்தான்.

''என்னப்பா?''

போனில் வைரம் பேசிக் கொண்டிருந்த சுந்தரவடிவேல், பேசி முடித்ததும், ''நாளைக்கே நீ அடையாறு கிரவுண்டைப் போய்ப் பார்... சுத்தம் செய்து வீட்டைக் கட்ட ஆரம்பித்து விடலாம்...''

''யாருக்குப்பா வீடு...''

''உனக்குத்தான்...''

''எனக்கு எதற்கு தனி வீடு?''

''முட்டாள் மாதிரி பேசாதே... புதுப் பொண்டாட்டிக் கென்று சில ஆசைகள் இருக்காதா? ஆர்கிடெக்டிற்கு போன் பண்ணி, என்னை வந்து பார்க்கச் சொல்...''

சுந்தரவடிவேல் அவனைப் பாசத்துடன், நட்புடன், ஒரு சுந்தரமான புன்னகையுடன் பார்த்தார்.

## 4

''டாக்டர்...''

''ஏய்!'' என்றான், ரவிசங்கர். ''ஒழுங்காய். பேர் சொல்லிக் கூப்பிடுகிறவளுக்கு இன்றைக்கு என்ன வந்தது?''

''ஷ்... அம்மா வெளியே வெயிட்டிங்...''

''லீஸ்... கன்ஸல்டிங்கா?''



''ஆமாம்...''

''உள்ளே அழைத்து வா...''

மீராவின் அம்மா அவள் தோளைப் பற்றிக் கொண்டு, கன்ஸல்டிங் ரூமின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

உடம்பு நிறைய உள்வாங்கியிருந்தது. சிறு ஸ்டூலில் உட்கார்ந்தபோது, அந்த செய்கையே பெரும் உழைப்பு போல் மூச்சு வாங்கியது.

''எப்படியிருக்கிறீர்கள், அம்மா?''

மீராவின் அம்மா ஒரு உலர்ந்த புன்னகையைக் கூட்டி னாள். ''வேளா வேளைக்கு மருந்து சாப்பிட்டுக் கொண்டிருக் கிறேன்... இருந்தாலும், சில நாள் ராத்திரிகளில் நெஞ்சை யடைக்கிறது...?

''டஸ்ட் ஒத்துக் கொள்வதில்லை உங்களுக்கு...''

''தூசியே வராதபடி ஒதுக்குப்புறமாய் அதற்காகத் தானே அப்பா வீடு கட்டினார்!'' என்றாள், மீரா.

''என்ன வீடோ, போ, ஒரு அவசரத்திற்கு போன் செய்ய வேண்டுமென்றால் கூட ஒரு கிலோ மீட்டர் நடக்க வேண்டியிருக்கிறது.''

''ஏன் மீரா ஒரு போனுக்கு அப்ளை பண்ணி விடலாமா?''

''ஒவ்வொரு அடியாக எடுத்து வைப்போம் டாக்டர்... நேற்றைக்கு உங்கள் அப்பாவைப் பார்த்தபோது, எனக்கு உள்ளுக்குள் நடுக்கம். 'ஏண்டி சிறுசுகள்தான் ஆசைப்பட்ட தென்றால் நீ எடுத்துச் சொல்ல வேண்டியது தானே, அவர்களுக்கும் நமக்கும் அந்தஸ்து ஒத்து வராது என்று?' என்று மூஞ்சிலேயே காறித் துப்புவாரோ என்று எனக்கு பயம்.''

"சீச்சீ, அவரைப் பற்றி நீங்கள் ரொம்ப மட்டமாக நினைத்து விட்டீர்கள்..."

"தப்பு தான். எவ்வளவு பெருந்தன்மையாக, கல்யாணத் திற்கான செலவுகள் எல்லாம் கூட அவரே பொறுப்பெடுத்துக் கொள்வதாகச் சொன்னார்!"

"செலவு என்னம்மா செலவு? என் அப்பாவின் கடையில் ஒரு நாள் புரளும் பணம் கூட ஆகாது. கல்யாணத்துக்கு... நீங்கள் அதைப் பற்றியெல்லாம் நினைத்துக் கொண்டிருக் காதீர்கள். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்..."

"அம்மாவுக்கு உடம்புக்கு வந்ததால்தான் நீங்கள் வீட் டிற்கு வந்தீர்கள்... அங்கேதான் என்னை..." மீரா வாக்கியத்தை நிறுத்திவிட்டு முகம் சிவந்தாள். "அதனால் அம்மாவின் இருமலுக்கு நாம் தேங்க்ஸ் செல்ல வேண்டும்..."

"தேங்க்ஸ் மாமியாரே..."

மூவரும் சிரித்தார்கள்.

## 5

"மே இருபத்து நான்கு நல்ல முகூர்த்த நாள், ரவி இன்னும் இருபது நாள் இருக்கிறது. நீ ஒரு செட் இன்வி டேஷன் மாடல் வாங்கிக் கொண்டு வா. அதில் ஒன்றை செலக்ட் பண்ணலாம்."

சுந்தரவடிவேல் காலண்டரில் தேதிகளைப் புரட்டிக் கொண்டே பேசினார்.

"ச.. சரிப்பா..." சந்தோஷத்தில் வார்த்தை தடுமாறியது, ரவிசங்கருக்கு.



ரவிசங்கர் அந்த அறையை விட்டு வெளியேறியதும், சுந்தரவடிவேல் டெலிபோனை அருகே இழுத்தார்.

## 6

எட்டு திக்கிலும் நீலம்.

அந்த சிறு பாய்மரப் படகு கடலில் மெல்ல மெல்ல அசைந்து நகர்ந்தது. படகின் மூக்கு ஏற்றத்தில் ரவிசங்கர். அவன் ஷார்ட்ஸ் அணிந்திருந்தான். அவனுடைய திண்மை யான தொடைகளில் காது உரச, ஒருக்களித்துப் படுத் திருக்கும் மீரா.

"மீரா..."

"ம்..."

"மேல நிலா..."

"ம்..."

"சுத்தி ஜிலுஜிலுன்னு தண்ணி..."

"ம்."

"ரெண்டு பேருமா கையைக் கோர்த்துக்கிட்டு ஜாலியா நீச்சலடிச்சா என்ன?"

"எனக்கு நீஞ்சத் தெரியாது ரவி..."

"உனக்கு நீச்சல் தெரியாட்டி என்ன? என்னை நம்பி தண்ணில குதிக்க மாட்டியா?"

"யார் சொன்னது? குதிப்பேன்... வாங்க..."

காற்று பாய்மரத்தில் பாய்ந்து அதன் வெள்ளைத் துணியை சர்ப்பமாக்கிக் கொண்டிருந்தது. அவர்கள் படகின் நுனியில்

சேர்ந்து நின்றார்கள். கை கோர்த்து ஒருவர் உடலை இன்னொருத்தர் உரசிக் கொண்டு.

''ஒன் டூ த்ரீ சொல்லட்டுமா?''

''வேணாம்...''

''பின்ன?''

''நான் சொல்றேன்... லவ்... லவ்... லவ்...'' இருவரும் சேர்ந்து குதித்தார்கள்.

இதோ உப்பு நீரை மோதப் போகிறார்கள். இதோ. இதோ.

இல்லை. மோதவில்லை. கடல் நீரில் அவர்கள் விழுந்து விடவில்லை. அப்படியே ஆகாயத்தில் மிதந்து பறந்து எழும்பி...

''மீரா...''

''ம்?''

''ஆச்சரியமாயிருக்கா?''

''ரவி... எப்படி ரவி நம்மளால பறக்க முடியுது!''

''இப்படியே சொர்க்கத்துப் போகப் போறோம் நாம...'' ரவிசங்கர் அவள் காதருகில் கிசுகிசுத்தான்.

வானத்தில் நீலப் படுதாவில் ஒரு தேவதையின் முகம் தெரிந்தது. பெரிதானது. அன்புடன் வா என்று அழைத்து, திடீரென்று தேவதை அலறினாள்.

''க்லீல்...''

மீரா வெகு திடுக்கிட்டு விழித்தாள்.

கனவு. எல்லாம் கனவு. ஆனால் தேவதை ஏன் அப்படி அலறினாள்?



அப்போது தான் அவளுக்கு அந்த சத்தம் கேட்டது. காலடிச் சத்தம். ஒரு அடிக்கும் அடுத்ததற்கும் நடுவில் மௌனமாக நீள இடைவெளிகள் விட்டு.

அம்மாவா? உடம்பு முடியாமல் எழுந்திருக்கிறாளா?

மீரா கட்டிலில் எழுந்து உட்கார்ந்த நேரம் படுக்கையறை கதவு பளீரென்று திறக்கப்பட்டது.

அரண்டு போய்ப் பார்த்தாள்.

வெளிச்சமில்லாத இருட்டில் இரண்டு பேர்.

''யாரது?''

''எமன்கள்...''

அவள் பதறி எழுந்திருக்குமுன், அவர்கள் அவனை நெருங்கி விட்டனர். ஒருத்தன் கையை வளைத்து அவள் வாயைப் பொத்தினான். மற்றவன் இடுப்பிலிருந்து நீளமான கத்தியை எடுத்தான்.

## 7

தெரு நிறைய மக்கள்.

அத்தனை முகங்களிலும் வம்பை வேடிக்கை பார்க்கும் ஆர்வம்.

சூரிய வெளிச்சம் மரங்களைத் தாண்டி போலீஸ் ஜீப்பின் உச்சியிலும், அந்த வெள்ளை மாருதிக் காரின் வழுக்கையிலும் கிளை நிழல்களாய்ப் படிந்திருந்தது. ஆம்புலன்ஸ் ஒன்று அலறி வழி கேட்டுக் கொண்டே வந்தது.

ஈரமான மரத்தடியில் ரவிசங்கர் உட்கார்ந்திருந்தான்.

காலையில் செய்தி வந்ததும் அப்படியே அலறிப் புறப் பட்டதால் தலை சீவப்படவில்லை. சட்டையும், பேண்ட்டும் கசங்கியிருந்தன. சாக்ஸ் இல்லாமல் ஷூக்களை பாதங்கள் நிறைத்திருந்தன.

திறந்திருந்த கதவு வழியே முதலில் வீட்டிற்குள் நுழைந் திருந்த வேலைக்காரக் கிழவி பேயடித்தவள் போல ஒரு ஓரத்தில் உட்கார்ந்து இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

''ரவி...''

குரல் கேட்டு நிமிர்ந்தான்.

சுந்தரவடிவேல்!

அந்த நிலையிலும் பதறி எழுந்தான். ''அப்பா!'' குரல் சிதறியது.

''ரவி... என்ன ஆயிற்று?''

''யாரோ வீட்டை உடைத்துக் கொண்டு ராத்திரி உள்ளே புகுந்திருக்கிறார்களப்பா...''

''முகமூடிக் கொள்ளைக்காரர்களா?''

''மீராவிடமும், அவள் அம்மாவிடமும் என்ன இருக்கிறது கொள்ளை அடிக்க? பணம் திருட வந்தவர்கள் எதற்காகப்பா இரண்டு பேரையும் வெட்டிப் போட்டார்கள்?''

''என்னது! மீராவையுமா?'' சுந்தரவடிவேல் பதறி அந்த வீட்டைப் பார்த்தார்.

''ஆமாம்...'' ரவிசங்கரின் குரல் உடைந்து அழுகை காற்றுக் குமிழ்கள் போல் பதறி வந்தது.

''ரொம்ப காயம் பட்டு விட்டதாமா?'' என்று கேட்டு விட்டு உடனே நாக்கைக் கடித்துக் கொண்டார்.

காரணம் வீட்டை விட்டு வெளியே வந்த ஸ்ட்ரெச்சர்கள்.



இரண்டிலும் உடல்கள் முகம் வரை இழுத்து மூடப்பட் டிருந்தன.

''ரவி... என்ன கொடுமையடா இது? கல்யாணத்திற்கு இன்னும் மூன்று வாரம் தான் இருக்கிறது. இன்விடேஷனைக் கூட ப்ரூப் பார்த்துக் கொடுத்தாயிற்று. இந்த நிலைமையிலா இப்படி ஆக வேண்டும்... வாட் எ கிரேட் ஷாக்...''

ரவி அவர் மார்பில் சரிந்தான். விசும்பத் தொடங்கினான்.

## 8

டெலிபோன் விடாமல் ஒலித்தது. ரவிசங்கரின் தூக்கம் கலைத்தது. ரிசீவரை எடுத்தான். தூக்கம் கலைந்த குரல் களுக்கே உரிய கரகரப்புடன், ''ஹலோ'' என்றான்.

''டாக்டர்?''

''யெஸ்?''

''டாக்டர், நான் சாந்தி பேசுகிறேன்...''

சாந்தி? அவனுடைய க்ளினிக்கில் தலைமை நர்ஸ்.

''சொல்லு சாந்தி...''

''நேற்று நைட் மிஸ்டர் ராமபத்திரனுக்கு செஸ்ட் பெயின்... மூச்சுத் திணறல். ஆக்ஸிஜன் வைத்தோம். உங்களிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு இன்டன்ஸிவ் கேர் யூனிட்டிற்கு மாற்றி விடலாம் என்று...''

ராமபத்திரன்? ரவிசங்கருக்கு அந்த அறுபது வயது நோயாளி சட்டென்று நினைவுக்கு வந்தார்.

''இன்னும் அரை மணி நேரத்திற்குள் வருகிறேன். அதுவரை மெயின்டெயின் பண்ணுங்கள்...''

தூக்கம் கலைந்து விட்டது. மூன்று நாள் தாடி முள்ளாய் முகத்தில் உறுத்தியது.

ஜன்னலுக்கு வெளியே பார்வையை எறிந்தான்.

சாய்ந்த கோடுகளில் சூரியன் வெளிச்சத்தை பூமிக்கு தூது அனுப்பத் துவங்கி விட்ட நேரம். மரக்கிளைகளுக்கு நடுவில் பின்னப்பட்டிருந்த சிலந்தி வலை வெள்ளி இழைகளாகப் புலப்படத் துவங்கியிருந்தது. பூச்சிகள் பறந்தன. பூச்சிகளைத் தேடி பறவைகள் பறந்தன.

க்ச் க்ச் க்ச் என்று பட்சிகளின் பூபாளம்.

எழுந்தான். நினைவில் வலை பின்னியிருந்த மீராவின் முகம் பிரம்மாண்டமாய் வளர்ந்தது. அந்த அறையெங்கும் அவள் வாசம் நிறைந்தது. மூன்று நாட்களாக அந்த நினைவின் அலைகளிலிருந்து மீள இயலாமல் அவன் க்ளினிக்கின் பக்கமே போகாதது இப்போது உறுத்தலாய் மனதில் வியாபித்தது.

கீழே ஹாலில் சோபாவில் ஹிண்டுவின் புதுவாசத்திற்குள் புதைந்திருந்த சுந்தரவடிவேல் நிமிர்ந்து பார்த்தார். அவர் கண்களில் மத்தாப்பு. பேப்பரை அவசரமாக மடித்து வைத்து விட்டு எழுந்தார்.

''ரவி...'' குரல் தழுதழுத்தது. ''நீ எங்கே தாடி வளர்த்துக் கொண்டு சாமியாராகவே மாறி விடுவாயோ என்று பயந்து விட்டேன். இன்றைக்குத்தான் உன்னைப் பார்க்க சந்தோஷமாயிருக்கிறது...''

ரவிசங்கர் ஈரமில்லாத புன்னகை ஒன்றை சிந்தினான்.

கிட்டத்தட்ட ஆறடி உயரம். நீலக் கோடுகள் வரைந்த வெள்ளைச் சட்டை தூய வெள்ளை பேண்ட். கறுப்பு பெல்ட், கறுப்பு ஷூக்கள். செதுக்கிய மீசை. சோகத்தில் நிழல் இப்போது படிந்திருந்தாலும், வசீகரமான பெண்மைக்



கண்கள். இவனுடைய கம்பீரமும் அழகும்... என் மகன் ஒரு ராஜாவைப் போன்றவன்.

''சாப்பிட்டாயா, ரவி?''

''க்ளினிக்கில் ஒரு எமர்ஜன்ஸி கேஸ்... அர்ஜண்ட்டாகக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்... பிரேக்ஃபாஸ்ட்டை எடுத்து வரும்படி டிரைவரிடம் சொல்லி விட்டேன்...''

''மூன்று நாளாய் நீ போகாமல் க்ளினிக்கில் எத்தனை பிரச்னைகளோ... போ... போ... சீக்கிரம் போ...''

சுந்தரவடிவேல் அவனை வாசல் வரை வந்து வழியனுப்பினார்.

## 9

ஏ.ஸி.யின் மெலிதான விர்ர். க்வார்ட்ஸ் கடிகாரத்தின் டிக்-டிக்-டிக்.

ரவிசங்கர் விளக்கு வெளிச்சத்தில் எக்ஸ்ரேயை உயர்த்திப் பார்த்தான். நோயாளியின் குறிப்பேட்டில் ஏதோ எழுதினான்.

இன்னொரு நோயாளியின் குறிப்பேட்டை எடுத்துக் கொடுக்கப்பட்ட மருந்துகளை கவனித்துச் கொண்டிருந்தபோது, அறைக் கதவு குட்டப்பட்டது.

''யெஸ்.''

நர்ஸையோ, சக டாக்டரையோ, நோயாளியையோ எதிர்பார்த்திருந்தவனுக்கு சுந்தரவடிவேலைப் பார்த்ததும் ஆச்சரியமாயிருந்தது. அவருடன் ஐம்பது வயது மதிக்கத்தக்க இன்னொரு மனிதரும் வந்திருந்தார்.

எழுந்து வரவேற்றான்.

"ரவி... இவர் பெயர் ராஜாராமன். பேங்க் மேனேஜர். நாம் கேட்டிருக்கும் அட்வான்ஸைத் தருவதற்கு முன் ப்ரீசேங்ஷன் இன்ஸ்பெக்ஷன் ஒன்று செய்ய வேண்டுமென்று வந்திருக் கிறார்..."

"வாருங்கள் சார்..."

எக்ஸ்ரே யூனிட் வந்திறங்கியதும் அதை எந்த அறையில் நிறுவப் போகிறோம், ஸ்கேனிங் மெஷின் தருவிக்கப்பட் டதும் அதற்காக எந்த அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சார வாரியத்திலிருந்து வந்திருக்கும் அனுமதிக் கடிதம்...

மீண்டும் அவனுடைய பிரத்யேக அறை.

பேங்க் மேனேஜரின் முகத்தில் திருப்தி தெரிந்தது. "நிச்சயம் லோன் வாங்கித் தருகிறேன்" என்றார் மலர்ந்த முகத்தோடு.

நர்ஸ் ஒருத்தி சில கடிதங்களைக் கொண்டு வந்து மேஜை யில் வைத்தாள். ஒரு ட்ரேயில் பக்கத்து ஹோட்டலிலிருந்து சூடான காபி தருவிக்கப்பட்டு பரிமாறப்பட்டது.

ரவிசங்கரின் கவனம் கடிதங்களின் மீது பதிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இருந்த கடிதம் - வெள்ளை உறை. உறையின் எல்லைகளை ஒட்டி ஒரு சிவப்புக் கட்டம்.

FOR THE EYES OF RAVISHANKAR ONLY என்று சிகப்பு மசியில் எழுதி அடிக்கோடிடப் பட்டிருந்தது.

காபி முடிந்ததும் மேனேஜர் விடைபெற்றுப் போனார். சுந்தரவடிவேல் மட்டும் தங்கினார்.

"ரவி... இந்த மேஜை ரொம்ப சின்னதாக இருக்கிறது. உனக்கு இன்னும் பெரிய மேஜை ஒன்று ஆர்டர் பண்ணி விடவா?"



ரவிசங்கர் அவர் பேச்சை ஒரு புறம் கவனித்தபோதும், அந்தக் கடிதத்தை எடுத்தான். சாதாரணக் கடிதம் போல பட்டையாக இல்லாமல் சற்று உப்பலாக இருந்தது.

"என்ன இது, ரவி?"

"தெரியவில்லை. பர்ஸனல் என்று போட்டு வந்திருக் கிறது..."

பேப்பர்க் கத்தி வைத்து ஒரு ஓரமாகக் கிழித்தான். கடித உறையில் இருந்ததை வெளியே கவிழ்த்தான்.

நீளமான காம்பும், ஒற்றைப் பச்சை இலையுமாக வெளியே வந்து விழுந்தது ஒரு ரோஜா. அதன் பின்னே நான்காய் மடிக்கப்பட்ட ஒரு கடிதம்.

சுந்தரவடிவேலின் புருவங்களில் ஆச்சரியம்.

ரவிசங்கர் கடிதத்தைப் பிரித்து குரல் கொடுத்து படித்தான்.

*இருதயமில்லாத டாக்டர் ரவிசங்கருக்கு,*

*வணக்கம்.*

*சுந்தரவடிவேல் என்கிற மாபெரும் அயோக் கியனின் மகனாக நீ வாழ்ந்தது போதும். அவனுடைய உறவை அறுத்து எறி. மே இருபதாம் தேதிக்குள் சுந்தர வடிவேல் ஒரு பொது அறிக்கை விட வேண்டும். அதில் - உனக்கும், அவனுக்கும் எந்தத் தொடர்பு மில்லை, உறவுமில்லை என்றும், சுயமாக சம்பாதித்துச் சேர்த்த அவனுடைய சொத்தில் ஒரு நயா பைசா கூட உனக்குக் கிடையாது என்றும் அவன் சொல்ல வேண்டும். வக்கீல் வைத்து சாசனம் எழுதி அதை கோர்ட்டில் பதிவு செய்ய வேண்டும். அப்படி நான் குறிப்பிட்ட தேதிக்குள் அந்த அறிக்கை வெளியாகா விட்டால், மே இருபத்து நான்காம் தேதி உலகின் எந்த*

*மூலையில் நீ ஒளிந்து கொண்டாலும் உன் உயிர் என் கையால் பறிபோகும்.*

*- இருதயமில்லாதவன்.*

''என்னப்பா இது?''

''தலைகால் புரியவில்லையே'' என்றார் சுந்தரவடிவேல். ''உனக்குப் போய் ஒருத்தன் மிரட்டல் கடிதம் ஏன் எழுத வேண்டும்? நான் சம்பாதித்த காசு உனக்கு சேர்வதில் அவனுக்கு அப்படி என்ன வருத்தம்?''

ரவிசங்கர் கடிதத்தை முன்னும், பின்னும் புரட்டிப் பார்த் தான். மொட மொடப்பான பாண்ட் பேப்பர். வலுவான பால்பாயிண்ட் கையெழுத்து.

ரோஜாவின் காம்பைப் பற்றி எடுத்தான். கவரில் வைத்து அனுப்பப்பட்டதால் சற்று அமுத்தப்பட்டு அதன் வடிவம் மாறிப் போயிருந்தாலும், ரோஜா புதிதாய் இருந்தது. ஆரோக் கியமாய் இருந்தது.

''கிறுக்குத்தனமாய் இருக்கிறது'' என்றான்.

''கிறுக்குத்தனம் என்று அசால்ட்டாக இருக்க முடியாது, ரவி... போலீஸிற்கு உடனே தெரிவித்து விடுவது தான் நல்லது...''

''போலீஸா!''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அந்தக் கடிதத்தை முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தார். கவரை எடுத்து அஞ்சல் தலையில் விழுந்திருந்த முத்திரையைப் பார்த்தார்.

''இதே ஏரியா போஸ்ட் ஆபீஸில்தான் போஸ்ட் ஆகியிருக் கிறது.''

''அப்படியா!'' சுந்தரவடிவேல் ஆச்சரியம் காட்டினார்.



''நேரில் கொடுக்கலாம் என்று வந்தானோ என்னவோ கடைசி நிமிடத்தில் ஐடியாவை மாற்றிக் கொண்டு போஸ்ட் பண்ணியிருப்பான்...''

''ரோஜாப் பூவைப் பார்த்தால் புதிதாய் இருக்கிறது, இல்லை?''

''அதுதான் எனக்குக் குழப்பமாயிருக்கிறது. மிரட்டுகிற வன் எதற்காக ஒரு ரோஜாப்பூவைக் கூட அனுப்பினான்?'' என்றார் பால்ராஜ்.

''உங்களுக்குக் குறிப்பாய் யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?''

''என் பிஸினஸ் பெரிய பிஸினஸ் இன்ஸ்பெக்டர். கோடி கோடியாய் பணம் புரள்கிற பிஸினஸ். பொறாமை பிடித்த வர்கள் யாராவது நிச்சயம் இருப்பார்கள். ஆனால் அதற்கு நேரடியாக பணம் கேட்டு பிளாக் மெயில் செய்திருந்தால் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். ரவிசங்கரை என்னுடைய மகன் இல்லை என்றோ, அவனுக்கு நயா பைசா சொத்தில்லை என்றோ நான் சொல்வதால் மிரட்டுகிறவனுக்கு என்ன லாபம் என்றுதான் புரியவில்லை.''

''இந்த கடிதத்தை லேபிற்கு அனுப்பிப் பார்க்கிறேன். உங்கள் இரண்டு பேர் கைரேகைகளைத் தவிர வேறு ரேகை ஏதாவது கிடைக்கிறதா பார்ப்போம்...'' இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கடிதத்தை இன்னொரு முறை படித்துப் பார்த்தார். ''மே இரு பத்து நாலு என்று தேதி கொடுத்திருக்கிறானே, அன்றைக் கென்ன ஸ்பெஷல் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

''மே இருபத்து நாலு!'' என்றான், ரவிசங்கர் சற்று திகைப் போடு. ''அன்றைக்கு எனக்கு கல்யாணத்திற்கான நாளாகக் குறிக்கப்பட்டிருந்தது, இன்ஸ்பெக்டர்...''

''ஈஸிட்?''

''ஆனால் நடுவில் ஒரு ட்ராஜிடி. இவனைக் கல்யாணம் செய்து, கொள்ள வேண்டிய பெண்ணை யாரோ கொலை செய்து விட்டார்கள்...''

''வாட்!''

''மீரா என்ற பெண்ணும், அவள் அம்மாவும் கொலை செய்யப்பட்டது தெரியுமில்லையா உங்களுக்கு?''

''அந்தப் பெண்ணா? அவளையா நீங்கள் கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தது?''

''ஆமாம்'' என்றான், ரவிசங்கர். அவனுடைய பணத்திற்கும், செல்வத்திற்கும், அவ்வளவு எளிமையான வீட்டில் பெண் எடுப்பார்களா என்ற சந்தேகம் அவருக்கு இருந்திருக்கலாம்.

''இதைத் தவிர ஏதாவது போன்கால் வந்தாலோ, வேறு கடிதம் வந்தாலோ உடனே என்னை காண்டாக்ட் பண்ணுங்கள்...''

''தேங்க்யூ இன்ஸ்பெக்டர்...''

பால்ராஜ் அந்த ரோஜாவை விரல் படாமல் கவருக்குள் போட்டு எடுத்துக் கொண்டார்.

## 10

இன்ஸ்பெக்டர் இந்திய தேவன் எழுந்து கை குலுக்கினார்.

''பால்ராஜின் குடுமி சும்மா ஆடாதே. என்ன மேட்டர்?''

இந்திய தேவன் இளைஞர். போலீஸ் முரட்டுப் பருவங்களை இன்னும் முழுதும் பார்க்காதவர். ரேஸ் குதிரை போல்



கம்பீரமான உயரம். உள் வாங்கிய வயிறு. போலீஸ் தொப்பியைத் தாண்டித் தெரிந்த சற்றே சுருண்ட முடி.

சிகரெட்டுகள் கொளுத்தப்பட்டன. லாக்கப்பிலிருந்து ''ஹம்மா, எனக்கு வயித்தை வலிக்குதே...'' என்று குரல் கூவியது. ஜன்னலுக்கு வெளியே, போக்குவரத்து சீறிக் கொண்டிருந்தது. ஸ்டேஷன் காம்பவுண்டிற்குள் கண்டு பிடிக்கப்பட்ட திருட்டு சைக்கிள்கள் மழை, வெயில் கண்டு துருவேறிக் கொண்டிருந்தன.

சுருள் புகையை பால்ராஜ் மின்விசிறியை நோக்கி வீசினார்.

''இந்த ஊதுபத்தி எங்கே வாங்குகிறீர்கள்? ஸ்மெல் அட்டகாசமாய் இருக்கிறதே'' என்று பைல்களின் பாரத்தில் காம்பு செருகப்பட்ட ஊதுபத்தி பற்றி விசாரித்தார், பால்ராஜ்.

''நேத்து ஒரு ரெய்டு அங்கே கிடைத்தது.''

''ப்ராஸ்ட்டிட்யூஷனா?''

''வேறெங்கே இவ்வளவு நல்ல ஊதுபத்திகள் உபயோகிக்கிறார்கள்?''

''இப்பொழுதெல்லாம் குற்றவாளிகளுக்கும் நிறைய ரசனை வந்து விட்டது...'' என்றார், பால்ராஜ் சிரித்து, ''நேற்று ஒரு டாக்டருக்கு மிரட்டல் கடிதம் வந்தது. கடிதத்துடன் என்ன அனுப்பியிருந்தான் தெரியுமா? புதிதாய்ப் பறித்த ஒரு ரோஜாப்பூ.''

''அப்படியா!''

''நான் தான் இன்வெஸ்டிகேட் பண்ணிக் கொண்டிருக்கிறேன்... லெட்டரைப் பார்த்தால் கிறுக்குத் தனமாய்த்தான் இருக்கிறது...'' என்று விவரங்களையெல்லாம் சொன்னார். ''மே இருபத்து நான்காம் தேதி ரவிசங்கருக்கும், மீராவிற்கும் மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருந்ததாம். அந்தப் பெண் அதற்குள் கொலை செய்யப்பட்டு விட்டாள்...''

''தெரியும்... என் ஏரியாவில்தான் கொலை நடந்தது. அதைப் பற்றி விசாரித்துப் போகத்தான் வந்தீர்களா?''

''ஆமாம், இந்திய தேவன்... எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, விசாரணையெல்லாம்?''

''கொலை நடந்த இடத்தில் பெரிதாய் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. கதவை கடப்பாரை வைத்து நெம்பித் திறந்திருக்கிறான் வந்தவன்... முதலில் அம்மாவை வெட்டியிருக்கிறான். அப்புறம் மீராவை... பீரோவெல்லாம் திறந்து கிடந்தது. மீராவின், கழுத்தும், அவள் அம்மாவின் கழுத்தும் வெறுமையாய் இருந்தன... செயினைக் கழற்றிப் போயிருக்கிறான்...''

''ஒருத்தன் தானா, இந்திய தேவன்?''

''ஒருத்தனா, நிறையப் பேரா என்று புரியவில்லை... ஆனால் கைரேகைகள் எதுவுமே கிடைக்கவில்லை... வந்தவன் அல்லது வந்தவர்கள் கிளவுஸ் அணிந்து வந்திருக்க வேண்டும்...''

''கொலை நடந்த நேரம்?''

''ராத்திரி இரண்டு மணியிலிருந்து மூன்று மணிக்குள், அந்த ஏரியாவில் எந்த நடமாட்டமும் இல்லாத நேரம்... இன்றைக்குக் கூட விசாரணைக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறேன், பால்ராஜ்...''

''யாரை விசாரிக்கப் போகிறீர்கள்?''

''வந்தவன் யாராக இருந்தாலும், அவ்வளவு ஒதுக்குப்புறமான இடத்திற்கு நடந்து வந்து விட்டுப் போயிருக்க முடியாது. அந்த ஏரியாவிற்கு அருகில் இருக்கும் ஆட்டோ ஸ்டாண்டில் விசாரித்து விட்டேன்.. அந்த நேரத்தில் எந்த ஆட்டோவும் வரவில்லை, போகவில்லை.''

''சொந்த வண்டியில் வந்திருந்தால்?''



''அதைப் பற்றித்தான் கண்டு பிடிக்க வேண்டும்... மீராவின் வீடு இருந்த செண்பகத் தோட்டம் ஏரியாவில் புறம்போக்கு நிலத்தில் நிறைய குடிசைகள் வந்திருக்கின்றன. அங்கிருப்பவர்களிடம் விசாரிக்கலாம் என்று ஐடியா...''

செண்பகத் தோட்டம் கழற்றி வீசப்பட்ட மாலை போல் கிடந்தது. சாலைகளும், கார் வீதிகளும் எட்டிப் பார்க்காத ஏரியா. ஏக்கர் ஏக்கராக வாங்கியிருந்த ஏதோ ஒரு ரியல் எஸ்டேட் கம்பெனி கேக், கேக்காக நிலங்களை வெட்டி விற்றுக் கொண்டிருந்தது.

மண் சாலையில் மேடுகள், திடீர் பள்ளங்கள். ஷாக் அப்ஸார்பர்களின் சக்தியை சோதிக்கும் திடீர் குழிகள்.

ஜீப் வந்தபோது புழுதி பறந்தது. குடிசையிலிருந்து தெருவிற்கு வந்து விளையாடிக் கொண்டிருந்த வயிறு மட்டும் பெரிதாயிருந்த ஒரு நிர்வாணக் குழந்தை ஜீப்பைப் பார்த்ததும் அரண்டு போய் குடிசைக்குள் ஓடியது. அங்கங்கே முகங்கள் தென்பட்டன. புறம்போக்கு நிலத்தில் ஏன் குடிசைகள் போட்டீர்கள் என்று ஆட்சேபித்து அவர்கள் குடிசைகளைக் கலைக்க ஜீப்கள் வந்துவிட்டது என்ற அச்சம் அந்த முகங்களில் தெரிந்தது.

அழுக்கு ாடியுடன், பரட்டைத் தலையுடன் இருந்த இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞனை இந்தியத் தேவன் தேர்ந்தெடுத்தார்.

''உன் பெயர் என்ன?''

''வீரமணிங்க...''

இந்த ஏரியாவில் போன வெள்ளிக்கிழமை ராத்திரி இரண்டு கொலைகள் நடந்தது, தெரியுமா?''

''தெரியுங்கோ.. எங்க வீடல்லாம் பணமோ, நகையோ.. ஒளிச்சு வச்சிருக்கமான்னு போலீஸ்காரங்க சோதனையெல்லாம் போட்டாங்களே...''

''உங்களில் யாரும் குற்றம் செய்யவில்லை என்று தான் நானும் நம்புகிறேன். ஆனால் கொலை செய்தவன் யாரென்று உங்கள் உதவியுடன் கண்டு பிடிக்க முடியும் என்று நினைக்கிறேன். வந்தவன் காரிலோ, ஸ்கூட்டரிலோ, பைக்கிலோ தான் வந்து போயிருக்க வேண்டும். ராத்திரி ஒரு மணிக்கு அப்புறம், விடிகாலை மூன்றரை, நான்கு மணிக்குள்ளான நேரத்தில் நீங்கள் சந்தேகப்படும்படியான யாரையாவது பார்த்தீர்களா?''

''அந்தநேரத்துல அல்லாம் தூங்கிட்டிருந்தோம், சார்...'' என்றவன் திடீரென்று நினைத்துக் கொண்டு, ''நேரமெல்லாம் தெரியாது, சார். ஆனா ஒரு மோட்டார் சைக்கிள்ல ரெண்டு பேர் வந்தாங்க...''

''எப்படியிருந்தார்கள்?''

''சொல்றேன் சார். என் தங்கச்சி மவனுக்கு நாலு வயசு ஆவுதுங்க. ராத்திரி கண்டதைத் தின்னுப்புட்டு, வயித்து வலி... கக்கூஸ் போவணுமின்னு எழுப்பிட்டான். அதோ ரோடுக்கு எதிரால அங்க ரோடுல ஒரு மோட்டார் சைக்கிள் நின்னு போயிருந்துச்சு. ரெண்டு பேர் இருந்தாங்க. எத்தையோ கழட்டி ரிப்பேர் பார்த்திட்டிருந்தாங்க... உதைச்சா கெளம்பலை.. அப்புறம் ஒருத்தன் உக்காந்துக்க, இன்னொருத்தன் பின்னாலேர்ந்து தள்ளிக்கிட்டே வந்தான். வண்டி ஸ்டார்ட் ஆயிடிச்சு, ரெண்டு பேரும் உக்காந்து புர்ரு புர்ருன்னு விரட்டிக்கினு வந்தாங்க. பாவிப்பய என் தங்கச்சி மவன், காரியம் முடிஞ்சு கரெக்டா எழுந்து அப்பத்தான் ரோடுல ஓடி வரான். பைக்குல வந்து விழுந்தான். அவனுங்க பிரேக்கு அடிச்சு நிறுத்திட்டாங்க. பையனுக்கு ஜாஸ்தி அடிபடலை. ஆனாலும் சத்தம் கேட்டு எங்காளுங்கல்லாம் வந்துட்டாங்க. பைக்ல வந்த ரெண்டு பேரும் கொஞ்சம் கூட எதிர்த்துப் பேசலை, கால்ல விழாத குறையா மன்னிப்பு கேட்டானுங்க. எத்தனை வேணா பணம் தர்ரோம்னானுங்க..



பையனுக்கு காயம் இல்லேன்னாலும், வர்ற பணத்தை விடுவானேன்னு வாங்கிட்டேன்...''

''எவ்வளவு கொடுத்தார்கள்?''

'கத்தைக் கத்தையா பணம் இருந்தது வண்டி ஓட்டியவன் பாக்கெட்டுல. நானூறு ரூபா கொடுத்தான்...''

''அந்தப் பணம் இருக்கிறதா?''

வீரமணி இந்திய தேவனை சந்தேகத்தோடு பார்த்தான். ''ஆஸ்பத்திரி செலவுக்காக வாங்கினதுங்க... செலவாய்டிச்சி...''

''இதோ பார், உன்னிடமிருந்து பணத்தைப் பிடுங்கிப் போவதற்காக நான் வரவில்லை. ஆனால் கள்ள நோட்டுடன் இரண்டு பேர் தப்பித்திருக்கிறார்கள். அந்த நோட்டு கள்ள நோட்டாக இருந்தாலும் மாற்றும் இடத்தில் நீ போலீஸில் மாட்டிக் கொள்வாய். இப்போது என்னிடம் கொடுத்தால், அதற்கு பதில் நல்ல நோட்டு தருவேன்...''

''ஏமாத்த மாட்டீங்களே, ஐயா? ஏழைங்க...''

''*சீச்சீ...*''

''செலவானது போக நூத்தம்பது ரூபா இருக்குங்க. கொண்டாறேன்...''

மூன்று ஐம்பது ரூபாய் நோட்டுகள். இந்திய தேவன் கைக் குட்டை நீட்டி பிச்சை போல் பெற்றுக் கொண்டார். பால்ராஜ் அவரிடமிருந்து நூற்றம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

ஜீப்பில் திரும்பும் போது இந்திய தேவனின் முகத்தில் சந்தோஷம் இருந்தது. ''வண்டியை ரிப்பேர் பண்ணிக் கொண்டிருந்ததால் அவன் கையில் கிரீஸ் பட்டிருக்கிறது. மூன்று நோட்டையும் எண்ணிக் கொடுத்ததில் விரல் ரேகை தெளிவாகப் பதிந்திருக்கிறது.. லேபிற்கு அனுப்பினால் நல்ல ரிசல்ட் கிடைக்குமென்று தோன்றுகிறது.''

''ரிசல்ட் தெரிந்தவுடன் எனக்கு தகவல் கொடுங்கள், இந்திய தேவன்'' என்றார் பால்ராஜ்.

## 11

**திரு. சுந்தரவடிவேல்.**

**வைர வியாபாரி.**

எழுத்துக்கள் அழுத்தமாய் பெரிது பெரிதாய் இருந்தன.

சுந்தரவடிவேல், காபிக் கோப்பையின் அருகே இருந்த அந்தக் கடித உறையைப் பார்த்தார், தொண்டைக் குழியில் காற்று அடைத்தது.

''யார் வாங்கியது, இதை?''

டிரைவர் கட்டிய கைகளுடன் முன்னே வந்தான்.

''ஐயா, காலையில் காரைத் துடைத்து வைத்து விட்டு, நான் குளிக்கப் போனேன். திரும்பி வந்து பார்த்த போது விண்ட் ஷீல்டில் வைப்பருக்குக் கீழே இது செருகப்பட்டிருந்தது. கவரின் மேல் உங்கள் பெயர் இருந்ததால் டீப்பாயில் கொண்டு வந்து வைத்தேன்...''

''காரில் இந்தக் கடிதம் எப்படி வந்தது?''

''தெரியாது, ஐயா.. வாட்ச்மேனும் பத்து நிமிடம் இல்லாதிருந்திருக்கிறான்...''

''சரி, நீ போ...''

டிரைவர் அவர் முகத்தில் முதன் முறையாகத் தெரிந்த அச்சக் கோடுகளை கவனித்து விட்டு, விலகினான்.



சுந்தரவடிவேலின் இதயத்தில் புயல் வீசியது. ராஸ்கல், அதே கையெழுத்து!

''ரவீ...'' என்று குரல் கொடுத்தார்.

சட்டையை இன் செய்தபடியே படிகளில் இறங்கி வந்த ரவிசங்கர் அப்பாவின் முகத்து உணர்ச்சிகளை அங்கிருந்தே கவனித்தான்.

''எனிதிங் ராங்?'' என்றான்.

''இங்கே வா.. இதைப் பார்...''

ரவிசங்கர் அந்தக் கடித உறையைப் பார்த்தான்.

''இது எப்பொழுதுப்பா வந்தது?'' என்றான் குரலில் வியப்புடன்.

''எவனோ வீட்டிற்குள் புகுந்து காரில் வைத்துவிட்டுப் போயிருக்கிறான்.''

''நீங்கள் தொடாதீர்கள், அப்பா.. இன்ஸ்பெக்டரைக் கூப்பிடுவோம்.''

''டிரைவர் ஏற்கெனவே தொட்டுக் கொண்டு வந்திருக்கிறான்...''

''அது பரவாயில்லை, இன்ஸ்பெக்டர் வரட்டும்...''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சிகரெட்டை சிமெண்ட் பாதையில் போட்டு, பூட்ஸ் காலால் அழித்து விட்டு, மிடுக்காக உள்ளே நுழைந்தார்.

''குட் மார்னிங்...''

அந்த வீட்டின் பிரம்மாண்ட ஹாலையும், மெலினைன் வடிவமைப்பில் மேலேறிய படிகளையும், காலுக்குக் கீழ் மிதிபடும் கார்ப்பெட்டையும் கவனித்த போது சுந்தரவடிவேலின் பணத்தின் பலம் தெரிந்தது.

சோபாவில் உட்கார்ந்தார்.

''இந்தக் கடிதம் இன்று காலை என் காரில் வைப்பருக்குப் பின்னால் யாராலோ வைக்கப்பட்டிருக்கிறது, இன்ஸ்பெக்டர்.''

கடிதம் பார்த்த போதே சற்று உப்பலாய்த் தெரிந்தது. உறைக்குள் என்ன இருக்கும் என்பது கூட பால்ராஜிற்குப் புரிந்து விட்ட மாதிரி இருந்தது. கைக்குட்டையால் கடிதத்தைப் பிடித்து, முனையை கத்தரித்து எடுத்தார். கவிழ்த்தார்.

ரோஜாப்பூ, முந்தின முறையை விட இன்னும் புதிதாக இருந்தது. ஒரு இதழில் பனித்துளியின் ஈரம் கூட தெரிந்தது.

''வெரி ஃப்ரெஷ்,'' என்றார் பால்ராஜ். உறைக்குள்ளிருந்த காகிதத்தை வெளியே எடுத்தார், பிரித்தார். சுந்தர வடி வேலிடம் நீட்டினார்.

''நீங்களே படியுங்கள். ஏனென்றால் கடிதத்தில் ஏதாவது ரொம்ப பர்ஸனலாக இருந்தால் அப்புறம் உங்களுக்கு வருத்தமாயிருக்கலாம்...''

சுந்தரவடிவேல் விரல் படாமல் இன்னொரு காகிதத்தில் அந்தத் தாளைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தார்.

*மகாராஜராஜஸ்ரீ சுந்தரவடிவேலுக்கு*

*சாமான்யன் எழுதுவது,*

*உன் மகன் உயிர் குறித்து உனக்கு எந்தக் கவலையோ, அக்கறையோ இல்லை என்பதை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். தினமும் பேப்பரில் தேடுகிறேன். நான் கேட்ட அறிவிப்பு வரவில்லையே.*

*என்னுடைய அடுத்த குறி, நீ!*

*உனக்கு உன் உயிராவது முக்கியமா, இல்லையா? முக்கியமென்றால்...*



*மே இருபத்து நான்காம் தேதிக்குள் உனக்கென்று ஒரு லட்சம் ரூபாயை மட்டும் வைத்துக் கொண்டு, மிச்ச சொத்து எல்லாவற்றையும் அனாதை விடுதி களுக்கு எழுதி வைத்து விடு. ஞாபகம் இருக்கட்டும் - ஒரே ஒரு லட்சம். அதற்கு மேல் உன் வசம் காசிருந்தால் மே இருபத்தாறு - உன் உயிர் உனக்கு சொந்தமில்லாதது ஆகிவிடும்.*

*- இருதயமில்லாதவன்.*

''எ... என்ன இது? யார் இவன்? மகா கிறுக்கனாய் இருப்பான் போலிருக்கிறதே...'' சுந்தரவடிவேலின் குரல் நடுங்கியது. ''இவனைக் கண்டுபிடிக்க இன்னும் எத்தனை நாள் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள், இன்ஸ்பெக்டர்?''

''எனக்கு உங்கள் உதவியில்லாமல், குற்றவாளியைக் கண்டுபிடிப்பது கஷ்டம், மிஸ்டர் சுந்தரவடிவேல்...''

''என்ன செய்ய வேண்டும், நான்? கண்டுபிடித்து கைகளைக் கட்டிப் போட்டு உங்களிடம் கொண்டு வந்து நிறுத்த வேண்டுமா?''

''கோபப்படுவதில் அர்த்தமில்லை, சார். சிட்டியில் இருக்கும் அத்தனை பேருடைய தமிழ்க் கையெழுத்தையும் வாங்கி வந்து செக் பண்ண முடியுமா, எங்களால்? உங் களுக்கு எதிரிகள் யார், யார், எதற்காக இதைப் போன்ற கடிதம் எழுத வேண்டும். இந்த ரோஜாப் பூவிற்கு அர்த்தம் என்ன - எதுவும் எனக்குத் தெரியவில்லை...''

''எதிரிகள் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை, இன்ஸ்பெக்டர்... ஆனால்...'' சுந்தரவடிவேல் சற்று தயங்கினார்.

''எதையும் மறைக்காதீர்கள். உண்மையைச் சொன்னால் தான் எங்களுக்கு உதவியாய் இருக்கும்...''

''சொல்லுங்கள், அப்பா...'' என்றான் ரவிசங்கர், அவரை உன்னிப்பாகப் பார்த்து.

''ரவி.. நீ என்னை மிஸ்டேக் பண்ணக் கூடாது...''

''ஏன் அப்பா?''

''நீ அந்தப் பெண் மீராவைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டது எனக்குப் பிடிக்கவில்லை. மனசில்லாமல், தான் சம்மதம் சொன்னேன். இது அந்தப் பெண்ணிற்குப் புரிந்திருக்கலாம்...''

''யார், மீராவிற்கா?''

''ஆமாம்.. அவள் அதை யாரிடமாவது சொல்லியிருக் கலாம். மீராவுக்கு வேண்டியவர்கள் யாரோ, அவள் செத்துப் போனதும், என் மேல் அநாவசியமாகக் கோபப்பட்டிருக் கலாம். பணம் இருக்கிறவனுக்கெல்லாம் திமிர் இருக்கும் என்ற ஐடியாவோடு என்னை ஏழையாக்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம். உனக்கு நான் வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்து விடுவேன் என்ற ஆத்திரத்தில் நீ என் மகனில்லை என்று நான் பப்ளிக்காக சொல்ல வேண்டும் என்று மிரட்டலாம்.''

''மீராவையும், அவள் அம்மாவையும் விட்டால் அவர் களுக்கு வேறு யாரும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை, அப்பா...''

''உனக்கும் எனக்கும் தெரியாமல் இருக்கலாம்.. போலீஸ் கண்டுபிடித்து விடும்...''

சுந்தரவடிவேல் இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கொண்டே பேசினார். முகமும், கழுத்தும், பின்முதுகும் நிறைய வியர்த் திருந்தது.



''உங்கள் அப்பா சொல்வதில் அர்த்தமிருக்கிறது, ரவி சங்கர்,'' என்றார், பால்ராஜ். ''கிட்டத்தட்ட என்னுடைய ஐடியா எப்படி ஓடிக் கொண்டிருந்ததோ அதே லைனில்தான் அவரும் யோசித்திருக்கிறார். நான் உங்களுடன் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்...''

''நான் க்ளினிக்கிற்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்.. காரில் போய்க் கொண்டே பேசுவோமா, இன்ஸ்பெக்டர்?''

## 12

விரையும் வாகனங்கள். குறுக்கில் வரும் மந்தமான ஆட்டோக்கள். சைக்கிளிஸ்ட்டுகள், சில சமயம் பாதசாரிகள். கார் சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

ரவிசங்கர் டேஷ் போர்டிலிருந்து ஒரு வெள்ளைக் கவரை எடுத்தான். பால்ராஜிடம் இடது கையால் நீட்டினான், ''நேற் றைக்கு வந்தது...''

அதே போன்ற எல்லைக் கட்டம். உங்கள் பார்வைக்கு மட்டும் என்ற வாசகங்கள்.

சற்று கசங்கிய ரோஜா.

*நண்பா,*

*உன் நாட்கள் குறைகின்றன. மரணம் உன்னைத் தழுவும் பொழுது அதன் வலி உனக்குப் புரியும்.*

*அதுவரை இன்னொரு ஏழைப் பெண்ணை ஏமாற்றாமல் இரு, போதும்.*

*- இருதயமில்லாதவன்.*

''இதை ஏன் நீங்கள் எனக்கு முன்பே சொல்லவில்லை?''

''அப்பாவிடம் சொல்வீர்கள். அப்பா பயப்படுவார் என்று'' ஸ்டீயரிங்கை வளைத்து ஒரு ஸ்கூட்டரைத் தவிர்த்து விட்டு நிமிர்ந்தான். ''தவிர, இந்தக் கடிதங்களைப் பார்க்கும் போது எனக்கு சீரியஸாய்த் தோன்றுவதேயில்லை... யாரோ விளை யாடுகிறார்கள்...''

''இல்லை ரவி.. இன்னொரு ஏழைப் பெண்ணை ஏமாற்றா தீர்கள் என்ற வரி என்ன சொல்கிறது? மீரா இறந்ததற்கு உங்களை நேரடியாக சம்பந்தப்படுத்தா விட்டாலும், மீராவின் மரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒருத்தரின் வார்த்தை களாகவே எனக்குத் தோன்றுகிறது...''

''இதைத் தான் தனியாகப் பேச வேண்டும் என்றீர்களா?''

''மீராவின் கொலைக்கு அப்புறம் கொலைகாரர்களைக் கண்டுபிடிக்க ஒரு புறம் தீவிரமான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன... அவளுடைய டைரிகள், கடிதங்கள் எல்லாவற்றிலும் மறுபடி மறுபடி உங்களைப் பற்றித்தான் வருகிறது. அதைத் தாண்டி எங்களால் மீராவைப் பற்றி எதையும் கணிக்க முடியவில்லை.''

''அதனால்?''

''மீராவைப் பற்றி விசாரிக்க இப்போது யாரும் இல்லை, உங்களைத் தவிர. மீராவிற்கு நெருக்கமாயிருந்தவர்கள், மீராவின் மீது நிறைய அன்பும், பாசமும் வைத்திருந்தவர்கள், அவள் மரணத்திற்குப் பிறகு மனம் ஒடிந்து போயிருக்கக் கூடியவர்கள் யார் யார் என்று ஒரு லிஸ்ட் முதலில் தயார் செய்ய வேண்டும்.''

''எனக்குத் தெரிந்து நான் தான்.''

''உங்களிடம் மீரா சொல்லியிருக்கலாம், வேறு யாரைப் பற்றியாவது...''



''இறந்து போனவளின் வாழ்க்கையைக் கிளறிப் பார்ப்பது அநாகரீகம்.''

''இப்போது அவசியம், ரவி...''

''மீராவின் கொலைகாரர்களை முதலில் கண்டுபிடி யுங்கள். அவர்களை கோர்ட்டிற்குக் கொண்டு போகுமுன் நான் சந்திக்க வேண்டும். சந்தித்து ஏண்டா பாவிகளா, எந்தப் பாவமும் செய்யாத அந்தப் பெண்ணை எப்படிடா ஈவிரக்க மில்லாமல் வெட்டிச் சாய்க்க முடிந்தது உங்களால் என்று கேட்க வேண்டும்...''

''கொலைகாரர்களைப் பற்றி ஆரம்பத் தகவல்கள் சேகரித்து விட்டோம், ரவி.''

க்ரீச் என்று பிரேக் அடித்து கார் இடதுபுறம் ஒதுங்கி நின்றது. ரவிசங்கர் துடிக்கும் முகத்தசைகளோடு இன்ஸ் பெக்டரைப் பார்த்தான். ''யார் அவர்கள்?''

''மொத்தம் இரண்டு பேர். மோட்டார் சைக்கிளில் வந்து போயிருக்கிறார்கள். ஒருத்தனுடைய கைரேகை கிடைத்து விட்டது.. லேபில் கொடுத்திருக்கிறோம்...''

''கண்டுபிடித்ததும் எனக்குச் சொல்வீர்களா?''

''ஆச்சரியமாயிருக்கிறது, உங்கள் ஆசை. நான் கேட்கும் தகவல்களைத் தரமாட்டீர்கள். அநாகரீகம் என்பீர்கள். ஆனால் நீங்கள் கேட்பதை மட்டும் நான் தரவேண்டுமா?''

''இன்ஸ்பெக்டர், நாம் ஒரு அண்டர்ஸ்டாண்டிங்கிற்கு வருவோம். மீராவின் இன்னொரு பகுதியைப் பற்றி நான் சொல்கிறேன். கொலைகாரர்களை எனக்குக் கண்டுபிடித் ததும் சொல்வீர்களா?''

''அக்ரீட்...''

காரைக் கிளப்பினான், ரவிசங்கர்.

டிரைவ் இன் ஹோட்டல்.

திறந்தவெளி ரெஸ்டாரண்ட். மரங்களின் கிளைகளில் காகங்கள் பசியுடன் காத்திருந்தன. வியர்த்த சர்வர்கள் தயிர் வடையும், காபியுமாக ட்ரேக்களில் சுமந்து பறந்தார்கள்.

''மீராவின் காலேஜில் ஒரு மாணவன் பெயர் இருதயராஜ்'' ரவிசங்கர் ஒரு முக்கியமான ரகசியத்தை இதழ் விரிக்கும் பாவனையுடன், மெலிந்த குரலில் பேசினான்.

இருதயராஜ் என்ற பெயரைக் கேட்டவுடன், இன்ஸ் பெக்டர் பால்ராஜின் முகத்தில் சிறு மாறுதல். கடிதங்களை எழுதியனுப்பியவனின் பெயர் 'இருதயமில்லாதவன்' என்று குறிப்பிட்டிருந்ததை அவர் மனம் முடிச்சு போட்டது.

''மீராவை விட ஒரு வருஷம் சீனியர். அவனுக்கு முதல் பார்வையிலேயே மீராவைப் பிடித்துப் போய்விட்டதாம். கடிதம் எழுதி விட்டான். அன்பே, நீ தான் என் உயிர், நீ இல்லாமல் வாழ்க்கை எனக்கு சூன்யமாகிவிடும். எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா.. மீரா திகைத்துப் போய் விட்டாள். அந்தப் பையன் மிக நல்லவன், சாதுவானவன், யாருடைய வம்பிற் குள் போகாதவன், கண்ணியமானவன், புத்திசாலி என்றெல் லாம் பெயர் வாங்கியவன். அவன் போய் லவ் லெட்டர் எழுதி விட்டானே என்று அவளுக்கு ஆச்சரியம். அவனைக் கடிதம் தரப்பட்ட நாள் மாலையில் தனியாக காலேஜ் கிரவுண்டில் சந்தித்திருக்கிறாள்.நீங்கள் என்னை ஆசைப்பட்டதெல்லாம் சரி, ஆனால் நான் ஏற்கனவே ஒருத்தரைக் காதலிக்கிறேன். அவர் பெயர் ரவிசங்கர் என்றெல்லாம் சொல்லி இருக்கிறாள். அவன் இடிந்து போய்விட்டானாம். என் காதலை மட்டும் நிராகரித்து விடாதே, மீரா என்று கண்களில் கண்ணீரோடு கெஞ்சியிருக்கிறான். நீ வேண்டுமானால் மூன்று நான்கு நாள் எடுத்துக் கொள். நன்றாக யோசி. ஆனால் கடைசியில்



என்னிடம் வந்து, ஐ லவ் யூ என்று சொல்லி விடு என்று புலம்பியிருக்கிறான். ஒரு கடிதத்தோடு முடியவில்லை. அப்புறமும் இரண்டு, மூன்று கடிதங்கள் எழுதியிருக்கிறான். அவனை நான் குறை சொல்ல மாட்டேன். மீராவின் அழகு அப்படி. யாராயிருந்தாலும், சொக்குப்பொடி போட்டு விடும்.

''மீரா பிடிவாதமாக என்னைத்தான் காதலிக்கிறாள் என்பதை அவனுக்கு உறுதியாக எடுத்துச் சொன்னதும், அவன் விரக்தியோடு சிரித்தானாம். நீ இல்லை என்று ஆனபின் எனக்கு படிப்பதற்கு காலேஜ் எதற்கு.. நீ எங்கிருந் தாலும் வாழ்க என்று சொல்லி விட்டுப் போனவன்தான். அப்புறம் காலேஜிற்கே வரவில்லை!''

''அவ்வளவு வெறியா?''

''எனக்குக் கூட ஒரு கடிதம் எழுதினான். அதிர்ஷ்டக் காரனுக்கு ஆயிரம் வாழ்த்துக்கள்' என்று....''

''அவனுடைய கையெழுத்து ஞாபகம் இருக்கிறதா, ரவி?''

''இல்லை சார்...''

''அந்தக் கடிதம் இருக்கிறதா?''

''மீராவிற்கு அவன் எழுதிய கடிதங்கள் கூட என்னிடம் தான் இருக்கின்றன.''

''அவற்றை நான் பார்க்க வேண்டும்?''

''ஈவினிங் தரவா?''

இப்பொழுதே கிடைத்தால் பரவாயில்லை...''

''க்ளினிக்கிற்கு டயமாகிவிட்டதே என்று பார்த்தேன்... பரவாயில்லை, உங்களுக்கு உதவியாயிருக்கும் என்றால் அந்தக் கடிதங்களை உங்களுக்கு முதலில் தருகிறேன்...''

காரைத் திருப்பி வீட்டை நோக்கி செலுத்தினான், ரவிசங்கர்.

ரவிசங்கர் மேஜை இழுப்பறையிலிருந்து ஒரு பைலை எடுத்தான். அதில் கசங்கியிருந்த கசங்காமல் இருந்த பல்வேறு கடிதங்களை ஒவ்வொன்றாக நகர்த்தினான். சில தாள்களை மட்டும் அப்படியே உருவினான். இன்ஸ்பெக்டரிடம் நீட்டினான்.

பால்ராஜின் முகம் நூறு வாட் பல்பு போல் பிரகாசித்தது.

''கையெழுத்து அப்படியே அச்சாக இருக்கிறது, ரவி...''

''ஆமாம்...'' ரவிசங்கர் அவர் தோளுக்கு மேலிருந்து பார்த்தான். குரலில் வியப்பு இருந்தது.

''மிரட்டல் கடிதங்களை எழுதியிருப்பவன் அந்த இருதயராஜ் தான்...''

''அவன் எதற்காக என்னைக் கொல்ல வேண்டும், இன்ஸ்பெக்டர்?''

''ஸிம்ப்பிள் லாஜிக். அவன் மீராவின் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கியிருந்தாலும், தொலைவிலிருந்து அவள் வாழ்க்கையை கவனித்துக் கொண்டிருந்திருப்பான். அவளை நீங்கள் கல்யாணம் செய்து கொள்ள உங்கள் அப்பா சம்மதித்த போது சந்தோஷப்பட்டிருப்பான். அவள் செத்துப் போனதும் உங்கள் இருவரையும்தான் சந்தேகப்பட்டிருப்பான். பணம் இருந்த திமிர் என்று பணத்தை இழக்கச் சொல்லி பிளாக்மெயில் செய்கிறான்... உங்கள் அப்பா கிட்டத்தட்ட இதை யூகம் பண்ணிவிட்டார்...''

''அவனைக் கண்டுபிடித்தால் என்ன செய்வீர்கள், இன்ஸ்பெக்டர்?''

''ஏன்?''



''அடிக்காதீர்கள். அரெஸ்ட் பண்ணாதீர்கள், மீராவின் பேரில் அவன் ஆசை வைத்ததும், மதிப்பு வைத்ததும் தப்பில்லை. ப்ளீஸ் அவனை அடித்து உதைத்து துன்புறுத்தாதீர்கள்...''

''சரி'' என்று புன்னகைத்தார் பால்ராஜ். ''தேங்க்ஸ் ஃபார் தி ஹெல்ப்... ரோஜாப் பூவிற்குக் கூட எனக்கு இப்போது அர்த்தம் புரிகிறது.''

''நம் அக்ரிமென்ட்டை மறந்து விடாதீர்கள், இன்ஸ்பெக்டர்...''

''நெவர்'' என்று கைகுலுக்கினார் பால்ராஜ்.

## 13

கடற்கரை சாலையில் இருந்தது அந்தக் கல்லூரி. காம்பவுண்டு சுவரில் கல்லூரி எலக்ஷனுக்காக மாணவர்கள் பெயிண்ட் நிறங்களில் நின்றார்கள். தந்திக் கம்பத்தில் உட்கார்ந்திருக்கும் குருவிகளைப் போல சுவர் மீது வரிசையாக உட்கார்ந்திருக்கும் மாணவ, மாணவிகள்.

ஒரு தைரிய மாணவன் சக மாணவியின் முகத்துப் பருவை தொட்டு ஏதோ பாடம் நடத்திக் கொண்டிருக்க, அத்தனை பேரும் சேர்ந்து சிரித்தது பால்ராஜைக் கவர்ந்தது.

கல்லூரியில் நுழைவதற்காகவே யூனிஃபார்மைக் களைந்து விட்டு மஃப்டியில் வந்திருந்தார். இருந்த போதிலும், கழுத்துக்கு மேல் சற்று தூரம் பின்மண்டை தெரியும் கிராப்பும், அவருடைய மிடுக்கான நடையும், பியூன்களை விறைக்க வைத்தது. பிரின்ஸ்பால் உடனே சந்தித்தார்.

"இருதயராஜ்? யெஸ்.. எம்.காம் முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தான். நல்ல பையன். திடீரென்று ஒரு நாள் காணாமல் போய்விட்டான். காலேஜ் வரவேயில்லை. அவனுடைய ஹாஸ்டல் ரூமைக்கூட அவன் காலி செய்ய வில்லை. அவனுடைய பேரண்ட்ஸிற்கு கிராமத்திற்கு கடிதம் எழுதிப் போட்டோம். அலறி அடித்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு கடிதம் போயிருந்தது - அவனிடமிருந்து."

"எனக்கு வாழ்வில் பிடிப்பில்லை. சின்னச் சின்ன சந் தோஷங்களுக்காக வாழ்க்கையை திசை திருப்பிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. வாழ்க்கையின் மாபெரும் சந்தோஷம் மன அமைதிதான். அதைத் தேடி இமயச் சாரலுக்கு போகிறேன். என்னைத் தேடவேண்டாம். போலீஸில் கூட சொன்னோம். ஆனால் ஓடிப்போகிறவனைப் பற்றி அவர் கள்தான் என்ன செய்வார்கள்?"

"அவன் இமயத்திற்குப் போகவில்லை என்று நினைக் கிறேன், நான்..." என்றார் பால்ராஜ். "இங்கேயே எங்கேயோ தான் சுற்றிக் கொண்டிருக்கிறான்.. அவன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசர சூழ்நிலை.. அவனுடைய நண்பர்கள் யாரையாவது சந்திக்க முடியுமா...?

"யூ மீட் ராமச்சந்திரன்..."

ராமச்சந்திரன் புருவங்களுக்கு நடுவில் குங்குமப் பொட்டு வைத்திருந்தான். திருநீறுப் பட்டை வியர்வையில் புகை போல் தெரிந்தது. கண்களில் தைரியமின்மை. சட்டைக் காலரில் வியர்வை அழுக்கு. நகங்களை கடித்துக் கொண்டே பதில் சொன்னான்.

"எங்களை விட்டுப் போன பிறகு ஒரே ஒரு தடவைதான் சார், அவனிடமிருந்து கடிதம் வந்தது..."



எங்கே அந்தக் கடிதம்?"

"படித்தவுடன் எரித்து விடும்படி எழுதியிருந்தான். எரித்து விட்டேன்..."

"கடிதத்தில் என்ன எழுதியிருந்தான்?"

"வார்த்தைக்கு வார்த்தை ஞாபகமில்லை, ஆனால், தீக்குச்சி போன்றதுதான் வாழ்க்கை, பற்றியவுடன் அணைந்து போவதில் அர்த்தமென்ன, குறைந்தது ஒரு மெழுகுவர்த்தியை யாவது ஏற்றி விட்டுத் தான் நான் மரிப்பேன் என்கிற மாதிரி ஏதோ எழுதியிருந்தான்...?"

"எத்தனை நாளைக்கு முன்னால் இந்த லெட்டர் வந்தது?"

"நான்கைந்து வாரமிருக்கும்...?"

"எங்கேயிருந்து வந்தது?"

"பெங்களூரோ, மங்களூரோ.. LORE என்ற எழுத்துக்கள் மட்டும் தான் போஸ்ட் ஆபீஸ் ரப்பர் ஸ்டாம்பில் தெரிந்தன..."

"வேறு யாருக்காவது கடிதம் எழுதுவானா?"

"எனக்குத் தெரிந்து இல்லை, சார்..."

"அவனிடமிருந்து கடிதம் வந்தால் உடனே என்னை காண்டாக்ட் பண்ண வேண்டும்.. இந்தா என் போன் நம்பர்."

"சரி, சார்.. இருதயராஜ் ஏதாவது வம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறானா, சார்?"

பால்ராஜ் அவன் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. "இருதயராஜ் டைரி எழுதும் பழக்கமுண்டா?"

"எனக்குத் தெரிந்து இல்லை, சார்..." இரண்டாவது தடவை.

"அவனுடைய பொருள்களை எல்லாம் விட்டு விட்டுப் போய்விட்டான் என்று பிரின்ஸ்பால் சொன்னாரே..."

''அதையெல்லாம் அவனுடைய பேரண்ட்ஸ் கலெக்ட் பண்ணிக்கொண்டு போய் விட்டார்கள், சார்...''

பால்ராஜ் மறுபடியும் பிரின்ஸ்பாலின் ரூமிற்கு நடந்தார். அவரிடம் கேட்டு இருதயராஜின் போட்டோ ஒன்றை வாங்கிக் கொண்டார்.

ஸ்டேஷனுக்குத் திரும்பியதும் ரவிசங்கருக்கு போன் செய்தார்.

''நேரம் கிடைக்கும் பொழுது இங்கே வந்துவிட்டுப் போக முடியுமா? என்னிடம் இருதயராஜின் போட்டோ இருக்கிறது. அவனை நீங்கள் சந்தித்த ஞாபகம் இருக்கிறதா என்று சொல்ல வேண்டும்...''

''வருகிறேன்'' என்றான், ரவிசங்கர்.

## 14

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் காபிக் கோப்பையை ரவிசங்கரின் புறம் நகர்த்தினார்.

''உங்கள் வீட்டில் நீங்கள் எனக்குக் கொடுத்ததைப் போல எல்லாம் எதிர்பார்க்காதீர்கள்... இது பக்கத்துக் கடை நாயர் போட்ட காபி...''

ரவிசங்கர் புன்னகையுடன் காபியை எடுத்துக் கொண்டான்.

பால்ராஜ் அந்த போட்டோவை அவனிடம் தள்ளினார்.

''இதில் இருக்கும் பையனைப் பார்த்திருக்கிறீர்களா?''



போட்டோவை ஸ்கேன் செய்வது போல் பார்த்தான் ரவிசங்கர்.

''இவனை நான் நேரில் பார்த்ததில்லை. காரில் ஒரு முறை போகும் போது மீரா எனக்கு இவனைக் காட்டியிருக்கிறாள். காரை நிறுத்தி, கிட்டத்தில் அநாகரீகமாக பார்க்காமல் போகிற போக்கில், பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தவனைப் பார்த்தேன். ஆனால் இந்த போட்டோவைப் பார்த்த பிறகு கூடவா இன்ஸ்பெக்டர், உங்களுக்குப் புரியவில்லை. இந்த பையனா மிரட்டல் கடிதமெல்லாம் எழுதுவான்? அப்படியே எழுதினாலும், கொலை செய்கிற அளவிற்கெல்லாம் இவனுக்கு மனசு இறுகியிருக்கும் என்று நம்புகிறீர்களா? ஹீ லுக்ஸ் ஸோ இன்னோஸெண்ட்...''

''எந்த முகத்திற்குப் பின்னால் எந்த கொலைகாரன் இருப்பான் என்று யாராலும் சொல்ல முடியாது. ரவிசங்கர்.. எக்ஸ்க்யூஸ் மீ...'' என்று கூப்பிட்ட போனை எடுத்தார்.

''பால்ராஜ் ஹியர்.. அப்படியா.. வெரிகுட், வெரிகுட்.. நான் இப்பொழுதே கிளம்பி வருகிறேன்...'' என்று ரிசீவரை வைத்தார்.

செண்பகத் தோட்டத்தில் மூன்று ஐம்பது ரூபாய்களைக் கைப்பற்றியிருக்கிறோம் என்று சொன்னேனே, லேபிற்கு அனுப்பியதில் அதில் இருந்த ஒரு செட் கைரேகைகளை அடையாளம் கண்டு பிடித்து விட்டார்களாம்..''

''ரியல்லி?'' ரவிசங்கருக்கு கண்களுக்குக் கீழே துடித்தது.

''உங்களுடன் நானும் வரலாமா, சார்?''

''நமக்குள் அக்ரிமென்ட் வேறு இருக்கிறதில்லை?'' பால்ராஜ் சிரித்தார்.

''கமான், லெட்ஸ் கோ...''

இன்ஸ்பெக்டர் இந்திய தேவன் ரவிசங்கரை சற்றே சந்தேகத்தோடு பார்த்தார்.

''என்ன பார்க்கிறீர்கள்?'' பால்ராஜ் அறிமுகம் செய்து வைத்தார். ''கொலைகாரன் யார் என்று தெரிந்து கொள்வதில் இருவருக்கும் எக்கச்சக்க ஆர்வம்...''

''புரிகிறது.. செத்துப் போனது லவர் ஆயிற்றே?'' என்றார் இந்தியதேவன்.

''கைரேகைகளை ஒப்பிட்டுப் பார்த்ததில் அவனுடைய ரெக்கார்ட்ஸ் ஏற்கெனவே போலீஸில் இருப்பது தெரிய வந்தது. கூலிக் கொலைகாரன்...''

''அப்படி என்றால்?'' என்றான் ரவிசங்கர்.

''பத்தாயிரம் ரூபாயை அவனிடம் கொடுத்து, உங்கள் போட்டோ ஒன்றைக் கொடுத்து, இந்த ஆளுடைய தலை வேண்டும் என்று சொன்னால் போதும், தலையைக் கொண்டு வந்து தந்து விடுவான்... ஏற்கெனவே மூன்று மர்டர் கேஸ்களில் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறோம்...''

இந்திய தேவன் பைலை பால்ராஜின் புறம் நகர்த்தினார்.

திறந்தவுடன் ஆறு ஆங்கிள்களில் ஒரு இளைஞனுடைய போட்டோ இருந்தது.

'நான்கு வருடத்திற்கு முன்னால் எடுக்கப்பட்ட போட்டோ.. அப்புறம் முகத்தில் என்னென்ன மாற்றம் செய்து கொண்டானோ?''

ரவிசங்கரும் பைலில் இருந்த விவரங்களைப் படித்தான்.

*பெயர்: பத்மராஜன்.*

*வயது: 24.*

*உயரம்: 5.6''*



*எடை: 72 கிலோ.*

*நிறம்: மிகக் கறுப்பு.*

*தலைமுடி: கறுப்பு, சுருள்முடி.*

*முக்கிய அடையாளம்: வாயின் இடது ஓரத்திலிருந்து காது வரை கத்தியால் வெட்டப்பட்ட தழும்பு.*

*வழக்கமான ஆயுதம்: கசாப்புக் கத்தி.*

''இவன் தான் அன்றைக்கு மீராவின் வீட்டிற்குப் போயிருந்தான் என்பதற்கு ஆதாரம்?'' என்றான் ரவிசங்கர்.

''வீரமணி... செண்பகத் தோட்டக் குடிசைப் பகுதியில் இருப்பவன். அவனை அழைத்து வந்து போட்டோவைக் காண்பித்தாயிற்று. இவன் தான் அன்றைக்கு மோட்டார் சைக்கிளில் வந்தவன் என்று சொல்லி விட்டான். பைலில் இருக்கும் மற்ற போட்டோக்களை எல்லாம் புரட்டிப் பார்த்து, அவனுடன் வந்தவன் யார் என்றும் அடையாளம் கண்டு பிடித்து விட்டோம்...''

''என்ன இந்திய தேவன், செம அமர்க்களமான ஸ்பீட்!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, பால்ராஜ். வழக்கமாய் பத்மராஜனுடன் கூட்டு சேர்பவன் யார் என்று நமக்குத் தெரியும். வெங்கடபதி, அவனுடைய போட்டோவைக் காட்டினேன். ஆஹா, இவன் தான் என்று வீரமணி குதித்தே விட்டான்.''

''இப்போது பத்மராஜன் எங்கே இருக்கிறான்?''

''ஹோட்டல் சோழாவில் ரூம் நம்பர் நானூற்றிப் பதினேழில்.. ஏன் சார் வெறுப்பேற்றுகிறீர்கள்? அவன் எங்கே இருக்கிறான் என்று தெரிந்தால் இத்தனை நேரம் அரெஸ்ட் பண்ணி சென்ட்ரல் ஜெயிலில் தூக்கிப் போட்டிருக்க மாட்டோமா?''

''ஸாரி'' என்றான் ரவிசங்கர். ''எனக்கு ஒரே துடிப்பாக இருக்கிறது. அவனைப் பிடித்து மூஞ்சியிலேயே குத்த வேண்டும் போல் ஒரு ஆவேசம்...''

''காம் டவுன்.. காம் டவுன்'' என்று பால்ராஜ் அவன் தோளைத் தட்டிக் கொடுத்தார். ''பத்மராஜனைக் கண்டு பிடிக்கும் வேலையில் இந்திய தேவன் ஈடுபடப் போகிறார். இருதயராஜைக் கண்டுபிடிக்கும் பிழைப்பில் நான் இறங்கப் போகிறேன்...''

''யார் கிடைத்தாலும் அவர்களை நான் முதலில் பார்க்க விரும்புகிறேன், இன்ஸ்பெக்டர்.''

## 15

சுந்தரவடிவேலிற்கு திடுக்கென்ற முழிப்பு வந்தது. முழிப்பு வந்ததுமே உடம்பில் ஒரு பதட்டம் வந்தது. கட்டிலில்தான் அவர் படுத்திருந்தார். ஆனால் நிற்பது போன்ற உணர்வு ஏன்? இரவு விளக்கை அவர் எப்போதும் போட்டுக் கொண்டு படுப்பது வழக்கம். ஆனால் இப்போது விளக்கு எதுவும் எரியவில்லை என்பதால் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளவே சற்று நேரம் பிடித்தது. கட்டிலிலிருந்து நழுவாமல் அவருடைய கைகளும் கால்களும் கட்டிலோடு கட்டப்பட்டிருந்தன. தலையணையில் அவர் தலை வைத்தபடி நெற்றிப் பகுதியில் ஒரு பட்டைத் துணி ஓடியது. வாய் திறந்து பேச முடியாதபடி அவருடைய வாயையும் ஒரு துணி மூடியிருந்தது.



அத்தனையும் சேர்த்து அவரோடு கட்டில் அப்படியே நிமிர்த்தி நிற்க வைக்கப்பட்டு இருந்தது.

யார் அது? யார் இப்படிச் செய்தது? அவன் அவர் கையையும், காலையும் கட்டும் வரையில் ஏன் விழிக்கவில்லை. இப்போது ஏன் விழிப்பு வந்தது?

புவியீர்ப்பு சக்தியின் காரணமாக அவருடைய உடலும், மெத்தையும் இழுக்கப்பட, கட்டிலோடு கட்டியிருந்த கயிறுகள் அங்கங்கே பிடித்து இழுக்க வலியின் வேதனை அவருக்குப் புரிந்தது.

ரவீ என்று கத்த நினைத்தார். வாய்க்குள் பூட்டு.

கையால் எதையாவது நகர்த்தி சப்தம் செய்யலாம் என்றால், கைக்கு விலங்கு, சுந்தரவடிவேல் அந்தக் கணத்தில் அப்படியே கரைந்து போய் விடக் கூடாதா என்று ஏங்கினார்.

எத்தனை லட்சங்களுக்கு அதிபதியாய் இருப்பவன் நான்! ஆனால் இரும்புப் பெட்டியிலும், ஷோகேஸ் லாக்கர்களிலும் இருக்கும் என் சொத்தில் ஒரு பைசா கூட என்னை இப்போது விடுவிக்கப் பயன்படாதா?

கண்கள் இருட்டுக்குப் பழக்கமானதும் எதிரேயிருந்த சுவர் கடிகாரத்தில் நேரம் தெரிந்தது.

3:30a.m

காலை ஐந்தரை மணிக்குத் தான் அவர் எழுந்து பழக்கம். எழுந்ததும் முதல் காபி சூடாக இறங்க வேண்டும்.

இன்னும் முழுசாக இரண்டு மணி நேரங்கள். அதுவரை அவரை யாரும் தேடக்கூட மாட்டார்கள். ஆண்டவனே, ஏதாவது காரணம் வைத்து ஒரு வேலைக்காரனோ, சமையல்காரனோ இந்த ரூமிற்கு இப்போது வரக்கூடாதா?

ஏ.ஸி. ஒரு புறம் ஓடிக்கொண்டிருந்த போதிலும், அவருக்கு ஏகமாய் வியர்த்தது. மண்டைக்குள் அலை அலையாக ஒரு உணர்வு மோதிக் கொண்டிருந்தது.

முகவாயை மார்பில் கூட போட முடியாதபடி உடம்பு அங்கங்கே இறுக்கப்பட்டு இருந்ததாலேயே வேதனை அதிகமாய் இருந்தது.

வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. வாந்தி எடுக்க வேண்டும் போன்ற உணர்வு வியாபித்தது. ஆனால் அதற்கான சுதந்திரம் கூட மறுக்கப்பட்ட உடம்பு தவித்தது.

சுந்தரவடிவேல் கடிகாரத்தின் முள்ளை சற்று நேரம் பார்த்தார். பார்க்கப் பார்க்க அதன் ஒவ்வொரு அசைவும் அவருள் ஒரு தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்தியது. அதையே பார்த்துக் கொண்டிருந்தால் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது.

கண்களை மூடிக் கொண்டார்.

முருகா, என்னை ஏனப்பா இப்படிச் சோதிக்கிறாய்?

''காக்க காக்க கனகவேல் காக்க... நோக்க நோக்க நொடியினில் நோக்க...''

மனதில் வரிகள் மீண்டும் மீண்டும் ஓடின. இமைகளுக்குள் விழிகள் களைத்துப் போய் எப்படியோ உறங்கிப் போயின.

மறுபடியும் பளிச்சென்று விழிப்பு வந்த போது மணி 5:45. படுக்கையறைக் கதவு திறந்திருந்தது.

''ஐயா'' என்று சமையல்காரன் பதறி நின்றான். அவர் கட்டுகளை அவிழ்த்து விடுவதற்கு பதில் அங்கிருந்து ஓடினான்.

இரண்டாவது நிமிடம் அங்கே ரவிசங்கர் நின்றிருந்தான்.



அவன் விழிகள் தெறித்து விடும் போல் பெரிதாயின.

''அப்பா, என்னப்பா இது!''

சமையல்காரரும், அவனுமாகச் சேர்ந்து முதலில் கட்டிலை சரித்தார்கள். படுக்க வைத்தார்கள். பரபரப்பாக கட்டுகளை அவிழ்த்தான் ரவிசங்கர்.

''யாரப்பா இப்படிப் பண்ணியது?''

''எனக்குத் தெரியலையேடா, ரவி...'' சுந்தரவடிவேலுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர் கண்களில் தானாக நீர் சேர்ந்திருந்தது.

புல்லை முகரும் பசுவின் மூக்கு போல் ரவிசங்கரின் மூக்கு சுருங்கி விரிந்தது.

''இந்த ரூமில் க்ளோரோஃபாம் வாசனை இருக்கிறது...''

சுந்தரவடிவேல் பாத்ரூமிற்கு ஓடினார். கால்கள் மரத்துப் போய், ஒத்துழைக்காமல் தடுமாறின. காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தார்.

இரவிலிருந்து போராடிக் கொண்டிருந்த உணர்வு பீறிட்டு வெளிப்பட்டது.

''ஓடு.. கொஞ்சம் ஐஸ் வாட்டர் எடுத்து வா... இதோ பார் இங்கே பார்த்ததை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்காதே...'' என்றான் ரவிசங்கர், பரபரப்பாகி.

சமையல்காரன் ஓடினான்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் தன் லத்தியை உள்ளங்கையில் தட்டியபடியே அந்த அறையை வலம் வந்தார்.

''ஜன்னல் திறந்திருந்ததா?''

''அவசியமேயில்லை'' என்றார், சுந்தரவடிவேல். ''ஆட்டமாடிக் டோர் தூங்கும் போது நான் கதவை உள்ளே தாள் போட்டுக் கொள்வதில்லை...''

''வீட்டிற்குள் அவன் எப்படி நுழைந்தான் என்பது தான் ஆச்சரியம் என்றான் ரவிசங்கர். ''பெரிய தேக்குக் கதவு, உள்புறம் பூட்டித்தான் வைப்போம் இரவுகளில்...''

''வீட்டிற்குள் வருவதற்கு வேறு வழி இருக்கிறதா?''

''சமைலறையிலிருந்து அப்படியே வீட்டின் பின்புறம் உள்ள சர்வீஸ் வராண்டாவிற்குப் போக ஒரு கதவு உண்டு. ஆனால் அதுவும் கூட உள்புறம் தாழ்ப்பாள் போட்டுத்தான் இருக்கும்...''

''போலீஸ் நாயை வரவழைத்துப் பார்க்கலாம்'' என்றார், பால்ராஜ்.

''வேண்டாம், இன்ஸ்பெக்டர்...'' என்றார், சுந்தரவடிவேல். ''பேப்பர் பேப்பராய் பப்ளிசிடி கொடுத்து விடுவார்கள்...''

''நான் ஒரு பெரிய தப்பு பண்ணி விட்டேன்'' என்றான், ரவிசங்கர். ''ஆரம்பத்தில் அந்த மிரட்டல் கடிதத்தைப் பெரி தாக மதிக்க வேண்டாமென்றுதான் நினைத்தேன். ஆனால் இப்போது எனக்கு கவலை வந்து விட்டது..''

''எனக்கு ஐம்பத்திரெண்டு வயதாகிறது, இன்ஸ்பெக்டர். இந்த ஐம்பத்திரண்டு வருடங்களில் ஒரு தடவை கூட நான் இந்த வேதனையை அனுபவித்ததில்லை... அப்பா, கொடுமை!''

''ஒற்றை ஆளாக வந்திருப்பானா இன்ஸ்பெக்டர்? கட்டிலை அவனால் ஒற்றையாய் நிமிர்த்த முடியுமா?''

''வந்தவன் யார் என்று நாம் சீரியஸாகக் கண்டு பிடிக்க வேண்டுமென்றால், போலீஸ் நாயை வரவழைப்பதில் தப்பில்லை என்று நினைக்கிறேன்'' என்று வலியுறுத்தும் குரலில் சொன்னார் பால்ராஜ்.

''வரட்டும், அப்பா...'' என்றான், ரவிசங்கர்.



''சரி'' என்றார், சுந்தரவடிவேல்.

வாலில்லாத கறுப்பு நாய் கட்டிலின் கால்களை முதலில் மோப்பம் பிடித்தது. பெட்ஷீட்களை, தலையணையை முகர்ந்து பார்த்தது. அதன் கழுத்துப் பட்டையில் கட்டப்பட்ட சங்கிலியின் மறுமுனையில் ட்ரெய்னர்.

நாய் நகர்ந்தது. வெளியே ஓடியது. காரிடாரில் நடந்து, மாடிப்படிகளில் வேகமாக இறங்கியது. படிகளின் அடி வாரத்தில் சற்று தயங்கியது. இடது புறம் திரும்பியது. கிச்ச னுக்கு ஓடியது.

அத்தனை பேரும் அதன் பின்னே விரைந்தனர். கொல்லைப்புறம் போவதற்கான கதவை நாய் முன்னங் கால்களால் தட்ட, கதவு திறக்கப்பட்டது. நாய் சர்வீஸ் வராண்டாவைத் தாண்டியது. தோட்டத்திற்குள் புகுந்தது.

போலீஸ் ஜீப்கள். நாய். இவற்றையெல்லாம் பார்த்து ரோடில் ஏற்கெனவே கூட்டம் சேர்ந்திருந்தது. காம்பவுண்டு சுவரைத் தாண்டி உள்ளே எட்டிப் பார்க்க முனைந்தவர்களை விரட்டுவதற்கே கான்ஸ்டபிள்களுக்கு நேரம் சரியாக இருந்தது.

நாய் தோட்டத்தின் ஒரு மூலையில் சென்று நின்று கால்களால் பூமியைப் பிறாண்டியது.

மண்ணைக் கலைத்து புதிதாக மூடியிருந்த அடையாளம் தெரிந்த அந்த மூலையில் பால்ராஜ் தோண்டச் சொன்னார். மண்ணைச் சற்றுப் புரட்டியதும் ஒரு பாலிதீன் கவர் தென்பட்டது. கவரினுள் ஒரு சட்டை சுருட்டி வைக்கப்பட்டு இருந்தது.

கவரைத் திறந்ததும் சட்டையிலிருந்து அடர்த்தியான ஒரு செண்டின் வாசம் வீசியது.

''வந்தவன் இந்தச் சட்டையை போட்டுக் கொண்டு தான் வந்திருக்க வேண்டும்'' என்றார், பால்ராஜ். ''லேபிற்கு அனுப்பிப் பார்க்கிறேன்...''

சுந்தரவடிவேல் அன்றைக்கு மதியத்திற்கு மேல் தான் கடைக்குப் போனார். முந்தைய இரவில் அந்த இரண்டு மணி நேரங்கள் அவர் நெஞ்சில் இன்னும் ஜதி போட்டுக் கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சற்று மிரட்டிக் கேட்டதும் சமையல்காரன் ஒரு விஷயத்தை ஒப்புக் கொண்டான்.

''நான் மார்னிங் எழுந்து பார்த்த போது ஸர்வீஸ் வராண்டாவிற்குப் போகும் அந்தக் கதவு தாழ்ப்பாள் போடாமல் இருந்தது. நான் தான் ஒரு வேளை ராத்திரி திறந்து வைத்து விட்டேனோ என்று குழம்பி விட்டேன். சொன்னால் நீங்கள் திட்டுவீர்களோ என்று சொல்லவில்லை....''

அதிலிருந்தே சுந்தரவடிவேலின் குழப்பம் அதிகமாகி விட்டது. சமையல்காரன் ஒருவேளை அந்த இருதயராஜிற்கு உடந்தையாய் இருப்பானோ? இல்லை முதலில் லெட்டர் கொண்டு வந்து கொடுத்தானே, டிரைவர், அவன் தான் உடந்தையா?

அவருடைய பிரத்யேக டெலிபோன் குர்க் குர்க் என்று கூப்பிட்டது. எடுத்தார்.

''என்ன சுந்தரவடிவேல், கட்டில்ல யோகா பண்ணினியா?''

எள்ளலான குரல், சுந்தரவடிவேல் திடுக்கிட்டார்.

''யார் அது?''

''எ மேன் வித் நோ ஹார்ட். புரியலை? இருதயமில்லாதவன். இன்னிக்குத் தேதி என்ன? பதினெட்டு. இன்னும் ரெண்டு நாளு டைம். அப்புறம் உன் மவனை டிஸ்க்... வேட்டி கிழிக்கற மாதிரி கிழிச்சிருவேன்... உங்க வீட்டுக்குள்ளாற எப்படி அசால்ட்டா நொழைஞ்சேன் பாத்தியா?''



சுந்தரவடிவேல் பரபரத்தார். போலீஸிற்கு சொன்னால் உடனே இந்த காலை ட்ரேஸ் பண்ணி அவனைப் பிடித்து விடுவார்களே...

''நீ நேரில் வா.. உன்னிடம் நான் பேச வேண்டும்...''

''என்னாண்டை நீ எதுவும் பேச வேணாம், மச்சான்.. பேப்பர்ல நோட்டீஸ் வுடு போதும்... எஸ்.டீ.டி.ல எத்தனை நேரம் பேச முடியும்? வச்சுர்ரேன்...''

மறுமுனைத் தொடர்பு அறுந்தது.

உடனே சுந்தரவடிவேல் இன்ஸ்பெக்டருக்கு போன் செய்தார். ரவிசங்கருக்கு போன் செய்தார்.

## 16

''எஸ்.டீ.டி. என்றா சொன்னான்?'' பால்ராஜ் மூக்கை சொறிந்து கொண்டார்.

''உண்மையோ, பொய்யோ?'' என்றான், ரவிசங்கர். ''வேண்டுமென்றே நம்மைக் குழப்புவதற்காக எஸ்.டீ.டி. என்று சொல்லியிருக்கலாம் நேற்றைக்கிரவு வந்தவன் அதற்குள் எவ்வளவு தூரம் ஓடிப்போய்விட முடியும்?''

''செங்கல்பட்டு போனால் கூட அங்கிருந்து எஸ்.டீ.டி. பேசலாமே, ரவி'' என்றார், பால்ராஜ். ''உங்கள் வீட்டு வேலைக்காரர்களில் யாராவது உடந்தையா இருப்பார்களோ என்று

எனக்கு ஒரு சந்தேகம், ரவி.. தோட்டத்தில் கிடைத்த சட்டையை லேபில் டெஸ்ட் பண்ணிக் கொண்டிருக் கிறார்கள். இருதயராஜின் அளவிற்கு அது பொருந்துகிறது. ஆனால் அவ்வளவு காட்டமான செண்டை அவன் ஏன் அணிந்து வந்தான் என்று தான் புரியவில்லை...''

''இன்ஸ்பெக்டர்.. இருதயராஜின் கிராமத்திற்குப் போய் அவன் அப்பாவை காண்டாக்ட் பண்ணினால் அவனுடைய இருப்பிடம் தெரியாமலா போய்விடும்? என்றான், ரவிசங்கர்.

''ரவி. பேசாமல் நான் பேப்பரில் ஒரு அறிக்கை விட்டு விடுகிறேனே.. வெறும் அறிக்கை தானே? நானென்ன நிஜத்தில் உன்னை மகன் இல்லை என்று உதறி விடவா போகிறேன்?''

''சீச்சீ, அது கோழைத்தனம்.. அடுத்தது நீங்கள் சொத்தை யெல்லாம் தர்மத்துக்கு எழுதி வைக்க வேண்டும்... நடக்கிற காரியமாப்பா இது? குற்றவாளியைக் கண்டு பிடிப்பது தான் புத்திசாலித்தனம்...''

''இன்னும் இருபத்து நாலு மணி நேரம் தானே இருக்கிறது, ரவி?''

''கண்டு பிடிப்போம்...'' என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

''இன்ஸ்பெக்டர், எனக்கே போரடிக்கிறது ஒரு விஷ யத்தைச் சொல்ல...''

''என்ன ரவி?''

''இன்றைக்கும் எனக்கு ஒரு மிரட்டல் கடிதம் வந்தது - ரோஜாப்பூவுடன். கடைசி எச்சரிக்கையாம்...''

''கடிதத்தை என்னிடம் கொடுங்கள், ரவி.. கடைசிவரை நாம் நம்பிக்கையை விடக்கூடாது... இன்றிலிருந்து உங்கள் வீட்டிற்கு இரண்டு கான்ஸ்டபிள்களை ராத்திரி காவல் இருக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்.''



சுந்தரவடிவேல் கூடை நாற்காலி ஊஞ்சலில் உட்கார்ந்து தரையை மிதித்து சென்று கொண்டிருந்தார். ரவிசங்கர் எதிரே மோடாவில் அமர்ந்தான்.

''என்னப்பா ரொம்ப டல்லாக இருக்கிறீர்கள்?''

''இன்றைக்கு தேதி பத்தொன்பது, ரவி...''

''போலீஸ் கண்டு பிடித்து விடுவார்கள் அப்பா...''

''எனக்கு போலீஸின் மீது நம்பிக்கையே இல்லை, ரவி...''

''மே இருபத்து நாலு வரை நான்கு நாள் டயம் இருக் கிறதே.''

''நான்கு நாட்களுக்குள் என்ன சாதித்து விடப் போகிறது, போலீஸ்?''

''ஆமாம் அப்பா - மீராவைக் கொன்றவர்கள் யார் என்று கண்டுபிடித்த பிறகு கூட அவர்களை அரெஸ்ட் செய்ய முடியவில்லை, இந்த போலீஸால்.''

''அந்த இருதயராஜ் எங்கே இருந்தாலும் அவனைக் கண்டு பிடித்து இனி அவனிடமிருந்து நமக்கு எந்த மிரட் டலும் வராமல் செய்யும் ஆட்கள் இருக்கிறார்கள் ரவி...'' சுந்தரவடிவேலின் முகம் இறுகியிருந்தது.

''என்னப்பா சொல்கிறீர்கள்?''

''கையில் பணம் சேரச்சேர, பிரச்சனைகள் அதிகம், ரவி. பயம் அதிகம். சில காரியங்களுக்காக ரவுடிகளைத் தெரிந்து வைத்திருப்பதில் தப்பில்லை...''

''எனக்கென்னவோ...''

''டோண்ட் ஒர்ரி.. பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து விட்டு, நீ நிம்மதியாய் போய்த் தூங்கு.. காவலுக்கு கான்ஸ் டபிள்கள் வந்து விட்டார்களா?''

''வந்து விட்டார்கள்.. வீட்டில் எல்லாக் கதவுகளும் உள்ளே பூட்டப்பட்டிருக்கிறதா என்று நானே பர்ஸனலாகப் பார்த்து விட்டேன், அப்பா...''

ரவிசங்கர் எழுந்து போனதும், சுந்தரவடிவேல் இறங்கினார். தன் பெட்ரூமிற்குள் நுழைந்தார். டெலிபோனை எடுத்து சில எண்களைத் தட்டினார்.

''பத்மராஜன், நான் சுந்தரவடிவேல் பேசுகிறேன்...''

''சொல்லுங்கள் சார்...'' என்றான், பத்மராஜன் கடித்துக் கொண்டிருந்த எலும்புத் துண்டத்தை பீங்கான் சாஸரில் அவசரமாக வைத்து.

''நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டுமே...''

''என்ன காரியம் சார்?''

''இருதயராஜ் என்று ஒருத்தன்.. ரோஜாப்பூவைக் காட்டியே மிரட்டிக் கொண்டிருக்கிறான்.. அவனுடைய கிராமத்து அட்ரஸ் தருகிறேன்... இன்னும் இரண்டு நாட்களுக்குள் அவன் எங்கே ஒளிந்து கொண்டிருந்தாலும் கண்டுபிடி.. தீர்த்துக்கட்டு...''

''போலீஸ் என்னைத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருக்கிறது, சார்...''

''எவ்வளவு பணம் வேண்டும், சொல்...''

''ஒரு லட்சம்...''

''என் மகன் உயிரை விட எனக்கு ஒரு லட்சம் பெரிசா? கேஷாகவே தருகிறேன்... வேண்டுமானால் அட்வான்ஸாகவே தருகிறேன்.''

''வேண்டாம் சார், காரியத்தை முடித்து விட்டு வாங்கிக் கொள்கிறேன்.''



ரிசீவரை வைத்தான், பத்மராஜன். ''டேய்'' என்றான்.

''என்னண்ணே?'' வெங்கடபதி புது மொட்டையை ஆர்வத்துடன் தடவி கொண்டே எதிரே வந்து பவ்யமாக நின்றான்.

''வேலை வந்து விட்டது நமக்கு'' என்றான், பத்மராஜன்.

## 17

அந்த அம்பாஸிடர் கார் புளியமரத்தடியில் பிரேக் அடித்து நின்றது.

பத்மராஜன் ரியர்வியூ மிர்ரரில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். அவனுடைய தழும்பையும், உடனடி அடையாளங்களையும் மறைத்து தாடி மூடியிருந்தது. பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து பட்டனைத் தட்டினான்.

பளிச் என்று திறந்தது. அழுத்தி மூடினான்.

''நீ முதலில் போ... கதவைத் தட்டு...'' என்றான்.

வெங்கடபதி தோளில் ஒரு ஜோல்னாப் பை மாட்டியிருந்தான். அதன் திறந்த வாயினூடே உள்ளே சில பவுடர் டப்பாக்கள் தெரிந்தன. பவுடர் விற்க வந்திருப்பவன் என்றே நினைக்கத் தூண்டும் தோற்றம். இறங்கினான்.

கிராமத்து மண் வீதியின் மறுபுறம் இருந்தது அந்த வீடு.

இருதயராஜின் வீடு.

கதவைத் தட்டியதும் வந்து திறந்தவருக்கு ஐம்பது வயது இருக்கலாம். உழைத்து உரமேறிய உடம்பு. கழுத்தில் சிலுவை தொங்கியது.

''யாரப்பா வேண்டும்?''

''இங்கே என் நண்பன் இருதயராஜ் இருந்தானே...''

''இருதயராஜ் இல்லை'' என்று கதவைச் சாத்த அவர் முனைந்ததும் வெங்கடபதி எட்டி உதைத்து உள்ளே நுழைந்தான். அவர் மீது பாய்ந்து நொடியில் அவர் கழுத்தில் கத்தியை வைத்தான்.

''கத்தினால் ஒரே சீவு'' என்றான்.

''இப்பொழுது சொல்லுங்கள், எங்கே இருதயராஜ்?'' என்று கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான், பத்மராஜன். கதவைக் காலாலேயே, அறைந்து மூடினான்.

உள்ளேயிருந்து வெளிப்பட்ட ஒரு பெண்மணி - இருதயராஜின் அம்மாவாக இருக்க வேண்டும் - பயத்தில் புடவைச் சுருளை வாயில் அடைத்துக் கொண்டாள்.

சிலுவை மனிதரின் கண்களில் பயரேகை.

''இருதயராஜன் என் மகன்தான்... காலையில் கூட அவனைப் பற்றி கேட்டுக் கொண்டு போலீஸ் வந்திருந்தது.. அவர்களிடம் சொன்னதையே நான் உங்களிடம் சொல்கிறேன்.. இருதயராஜ் இல்லை...''

''எங்கே போயிருக்கிறான்?''

''கர்த்தரின் திருவடிகளுக்கு...''

''என்னது?''

அவன் காலேஜில் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்தானாம். அந்தப் பெண் இவனைத் திரும்பிப் பார்க்கவில்லையாம். மனம் வெறுத்து சாமியாராகப் போகிறேன், இமயம் போகிறேன் என்று கடிதம் எழுதினான்... ஒரு மாதத்திற்குள்ளாகவே திரும்பி வந்தான். எங்களை ஒரு தடவை



கடைசியாகப் பார்க்க வந்தேன் என்றான். அன்று ராத்திரியே விஷத்தைக் குடித்து செத்துப் போய் விட்டான்...''

''நம்பச் சொல்கிறீர்களா?'' பத்மராஜின் குரலில் கோபம் கொப்புளித்தது....

''நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்'' என்று குரல் வந்தது.

திடுக்கிட்டுத் திரும்புமுன் டிஸ்க் - டிஸ்க் - இரண்டு சைலன்ஸர் தோட்டாக்கள் - பத்மராஜனும், வெங்கடபதியும் திகைத்த விழிகளுடன் கீழே சரிந்தனர்.

துப்பாக்கியுடன் நின்ற இளைஞனை பெரியவர் ஆச்சரியக் கண்களால் பார்த்தார். ''யாரப்பா நீ? போலீஸா?''

''இல்லை... நானும் உங்கள் மகன் போலத்தான்... என் பெயரும் இ...ரு...த...ய...ரா...ஜ்'' அவன் கதவை மூடினான். அவர் ஓடிப்போய் திறந்து பார்த்த போது மாயமாய் மறைந்திருந்தான்.

## 18

அந்த கிராமம் அதற்கு முன் அத்தனை போலீஸ் ஜீப்களைப் பார்த்ததில்லை.

பத்மராஜனும், வெங்கடபதியும் அகப்பட்டு விட்டதில் இன்ஸ்பெக்டர் இந்திய தேவனுக்கு ததும்பும் மகிழ்ச்சி இருந்த போதிலும், அவர்களை உயிருடன் பிடிக்காத ஒரு வேதனை இருந்தது.

அவர்கள் எதற்காக இருதயராஜைத் தேடிவர வேண்டும்? ரோஜாப்பூவை வைத்து மிரட்டும் இருதயராஜிற்கும், இவர்களுக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்ததா? என்ன தொடர்பு? காலையில் வந்து விசாரித்த போது இருதயராஜ் தற்கொலை செய்து கொண்டதாக அவன் அப்பா சொன்னாரே, உண்மையா, பொய்யா? - பால்ராஜிற்குக் குழப்பமாயிருந்தது.

இருதயராஜ் என்று சொல்லிக்கொண்டு வந்த ஆள் எங்கள் மகனில்லை. அவன் எப்போதோ செத்து விட்டான் என்று அவன் அப்பா சொன்னபிறகு, புதிதாய் ஒரு கொலைகாரனைத் தேடும் வேலை தன் தலையில் விழுந்து விட்டதே என்று லோக்கல் இன்ஸ்பெக்டருக்கு எரிச்சல்.

ரவிசங்கர் இன்டன்ஸிவ் கேர் யூனிட்டில் இருந்த போது, பால்ராஜிடமிருந்து போன் வந்தது என்று குறித்து வைத்திருந்தார்கள்.

எனவே, கொஞ்சம் வேலை குறைந்ததும் போன் செய்தான்.

''மீராவைக் கொன்றவர்களைப் பார்க்க வேண்டும் என்றீர்களே, ரவி வருகிறீர்களா?''

''கண்டு பிடித்து விட்டீர்களா, இன்ஸ்பெக்டர்?'' ரவிசங்கரின் குரலில் கும்மாளமிடும் வியப்பு.

''ஆமாம்...''

''எங்கே வர வேண்டும், இன்ஸ்பெக்டர்?''

''மார்ச்சுவரிக்கு...''

''வாட்?''

''உயிருடன் பிடிக்க முடியவில்லை, ரவி...''

''நான்... உடனே வருகிறேன்...''



ஜெனரல் ஆஸ்பத்திரியின் மரநிழலில் பால்ராஜ் நின்றிருந்தார். சிகரெட் வாசம் சூழ்ந்திருந்தது.

''என்ன ஆயிற்று, இன்ஸ்பெக்டர்?'' ரவிசங்கர் கைகளைக் கட்டியிருந்தான்.

''நேற்று இருட்டியபிறகு இருதயராஜின் வீட்டிற்கு பத்மராஜனும் வெங்கடபதியும் போயிருக்கிறார்கள்.. அவனைத் தேடி...''

''அவனை ஏன் அவர்கள் தேட வேண்டும்?''

''அதைத் தான் விசாரித்துக் கொண்டிருக்கிறோம்...''

''எங்கே இருக்கிறது, இருதயராஜின் வீடு...''

''பக்கத்து கிராமத்தில் தான்... மெட்ராஸிலிருந்து ஒரு மணி நேரத்திற்குள் காரில் போய் விடலாம்.. இருதயராஜின் வீட்டில் வைத்து அவர்களை யாரோ சுட்டு விட்டார்கள்...''

''இருதயராஜாக இருக்குமோ?''

''அங்கே தான் ஒரே குழப்பம். ஒரிஜினல் இருதயராஜ் தற்கொலை செய்து கொண்டு விட்டான் என்று அவன் வீட்டில் சொல்கிறார்கள். சுட்டவனை அவன் அப்பா பார்த்தாராம் தாடி மீசையெல்லாம் வைத்து, தலையில் ஒரு தொப்பி வேறு அணிந்திருந்தானாம்... தன் பெயர் இருதயராஜ் என்று சொல்லிக் கொண்டானாம்...''

''இது என்ன புதுக்கதை, இன்ஸ்பெக்டர்? சந்தேக லிஸ்ட்டில் இருப்பவர்களுடைய போட்டோக்களை யெல்லாம் காண்பித்தீர்களா?''

''ரெக்கார்ட்ஸில் இருக்கும் போட்டோக்களையெல்லாம் காண்பித்தாயிற்று. இருதயராஜின் அப்பாவால் சரியாக அடையாளம் சொல்ல முடியவில்லை. இவனாக இருக்கலாம்... அவனாக இருக்கலாம் என்று பத்து போட்டோவை

யாவது காட்டி குழப்பி விட்டார்... லேப் ரிப்போர்ட்படி, பத்மராஜனும், வெங்கடபதியும் கொல்லப்பட்டது ஒரு கோல்ட் பாயிண்ட் த்ரீ எயிட் ரிவால்வரால். அதிக சத்தம் வரவில்லை என்று சொன்னதைப் பார்த்தால், சைலன்ஸர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.. எனக்கு இப்போது புதிய கவலை எல்லாம் ஒன்றுதான்.. இருதயராஜிடம் துப்பாக்கி இருக்கிறது.. அவனுடைய மிரட்டலை இனிமேலும் வெறும் வெற்று மிரட்டலாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது.. லைசன்ஸ் இல்லாத துப்பாக்கி ஒன்று வேறு வைத்திருக் கிறான்...''

''என்னையும் சேர்த்து பயமுறுத்துகிறீர்கள், இன்ஸ் பெக்டர்'' ஒன்று சிரித்தான், ரவிசங்கர்.

''இருபத்துநாலாம் தேதி, உங்களுக்கு கம்ப்ளீட் பாதுகாப்பு தருவது என்று தான் வழி என்று நினைக்கிறேன்...''

மே இருபத்து நான்கு.

விடிகாலையிலேயே இன்ஸ்பெக்டர் பால்ராஜும், மூன்று கான்ஸ்டபிள்களும் ஆஜராகி விட்டார்கள்.

ரவிசங்கர் சற்றே கூச்சத்தோடு சிரித்தான்.

''எங்கேயும் வெளியே போகாதே என்று தடுக்கிறீர்கள், இன்ஸ்பெக்டர்.. வெகு முக்கியமான ஆப்ரேஷன் ஒன்றை நான் இன்றைக்கு செய்தே ஆக வேண்டும்.. நீங்களும் வேண்டுமானால் ஆப்ரேஷன் தியேட்டருக்கு வாருங்கள்....''

''ரொம்ப அவசியமான ஆப்பரேஷனா, ரவி...''

''தவிர்க்கவே முடியாது..என்னவோ ஊரிலேயே பெரிய கொலைகாரனைப் போல என்னைச்சுற்றி எப்போதும் போலீஸ் இருப்பதே எனக்கு வேடிக்கையாய் இருக்கிறது...''

''அப்பா எங்கே?''



''ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து குளித்து பூஜை ரூமிற்கு போனவர்தான்...'' என்று சிரித்தான், ரவிசங்கர்.

சுந்தரவடிவேல் வேட்டி கட்டியிருந்தார். சட்டை இல்லாத மார்பில் பட்டைப் பட்டையாக திருநீறு. கண்களை மூடி, கைகளைக் கூப்பியிருந்தார்.

முருகா முருகா முருகா என்று உதடுகள் விடாமல் சொல்லிக் கொண்டிருக்க, மனதில் எண்ணங்கள் சமுத்திர அலைகளைப் போல் மோதிக் கொண்டிருந்தன.

நான் எத்தனையோ தவறு செய்திருக்கிறேன். சில தலை கள் தரையில் உருள ஆள் அனுப்பியிருக்கிறேன். ஆனால், முருகா எல்லாம் என் மகனுடைய நல்லதிற்காக என்று நினைத்துதான் செய்தேன்... நீ என்னைக் கை விட்டு விடாதே... உனக்கு வைரக் கிரீடமே பண்ணிப் போடு கிறேன்... என் தவறுகளுக்கெல்லாம் ரவிசங்கரை தண்டித்து விடாதே.. முருகா...

''அப்பா...''

ரவிசங்கரின் குரல், அவர் அருகில் மண்டியிட்டு அமர்ந்து மெல்லிய குரலில் கூப்பிட்டதும் கண் திறந்தார்.

''அப்பா கிளினிக்கிற்கு கிளம்பி விட்டேன்.. துணைக்கு கூடவே போலீஸ் வருகிறது.. பயப்படாதீர்கள்...''

''ரவி.. இன்று முழுக்க நீ என்னுடனேயே இருக்கக் கூடாதா?''

''நீங்கள் தானேப்பா சொல்வீர்கள், நான் ஊரிலேயே பெரிய டாக்டர் என்று பேர் வாங்க வேண்டுமென்று?''

''எனக்கு பயமாயிருக்கிறது, ரவி...''

''பயப்படாதீர்கள் அப்பா.. தப்பு செய்கிறவர்கள் தப்பிப் பதே இல்லை... போலீஸின் கண்ணில் மண்ணைத் தூவிய

பத்மராஜனுக்கும், வெங்கடபதிக்கும் வேறு கையால் முடிவு வந்ததா இல்லையா? மீராவையும், அவள் அம்மாவையும் வெட்டிப் போட்டவர்களுக்கும் தண்டனை கிடைத்து விட்டதா இல்லையா? உங்களையும்,என்னையும் மிரட்டிக் கொண்டிருக்கும் இருதயராஜிற்கும் அதே போல் ஒரு முடிவு வரும்.. கவலைப்படாதீர்கள், அப்பா... நீங்கள் கும்பிடும் சாமி கைவிட்டு விடமாட்டார்..."

சுந்தரவடிவேல் கை நிறைய விபூதி எடுத்து ரவிசங்கரின் நெற்றியில் பூசினார்.

"போலீஸ் இல்லாமல் எங்கேயும் போகாதே, ராஜா..."

அவர் கண்களில் திரண்டிருந்த நீரைப் பார்த்து ரவிசங்கர் வியந்தான். ஒரு விரல் நீட்டி அதைத் துடைத்தான்.

## 19

ஹால் கடிகாரம் பத்து முறை சங்கீத ஒலி எழுப்பியது.

பால்ராஜ் ஒரு நீண்ட கொட்டாவி விட்டார்.சோபாவில் அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்த ரவிசங்கர் அவர் தொடையில் செல்லமாகத் தட்டினான். "இன்ஸ்பெக்டர் பாவம் ரொம்ப டயர்டாகி இருக்கிறார்... நீங்கள் வேண்டு மானால் தூங்குங்களேன்..."

பால்ராஜ் புன்னகையுடன் தலையை உதறிக் கொண்டார்.

"காலை நான்கு மணிக்கே எழுந்து விட்டேன்... எனக்கு ரிலீஃபிற்கு வேறு ஆளை அனுப்புகிறேன் என்று டிபார்ட்



மெண்டில் சொன்ன போது கூட இந்த கேஸில் நானே இருக்கிறேன் என்று அடம்பிடித்து விட்டேன்..."

ஜன்னலுக்கு வெளியே தோட்டத்தில் சூழ்ந்திருந்த இரவு இருட்டை விரட்டித் துரத்தும் பெரிய வெள்ள வெளிச் சங்கள்.

"இவ்வளவு பந்தோபஸ்து எதிர்பார்த்திருக்க மாட்டான், நம் நண்பன்..."

சுந்தரவடிவேல் ரவிசங்கரின பக்கத்திலேயே உட்கார்ந்து அவன் கையைப் பற்றி மடியில் வைத்துக் கொண்டிருந்தார்.

"எனக்கென்னவோ இன்னும் பயம் போகவில்லை..."

"இன்ஸ்பெக்டர், உங்களுக்கு எப்படியோ, என்னால் இதற்கு மேல் தாங்க முடியும் என்று தோன்றவில்லை... தூக்கம் கண்களைச் சொருகுகிறது. காலையில் ஐந்து மணிக் கெல்லாம் ஒரு ஆப்பரேஷனிற்கு வேறு போக வேண்டும்" என்று எழுந்து சோம்பல் நெறித்தான், ரவிசங்கர்.

"உங்களுக்கு இன்றைக்கு ப்ரைவஸி கிடையாது, ஸாரி" என்று எழுந்தார் பால்ராஜ்.

"நானும் உன்னுடன் படுத்துக் கொள்ளட்டுமா, ரவி?"

"சீச்சீ, என்னப்பா நீங்கள் குழந்தை மாதிரி, எனக்குத்தான் துணைக்கு இரண்டு கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்களே... இன்ஸ்பெக்டர் சொன்னது போல் இருதயராஜ் பயந்துவிட் டான் என்று தான் நானும் நினைக்கிறேன்.. வீட்டைச் சுற்றிக் காவல் எல்லாப் பக்கமும் வெளிச்சம்.. வரமாட்டான்.. நிம்மதியாக தூங்குங்கள்..."

இரவு மணி 2.00

குக் குக் என்று எலக்ட்ரானிக் வாட்ச் ஒலி எழுப்பியதும், ரவிசங்கர் கண் திறந்தான்.

கட்டிலில் படுத்திருந்தான். கழுத்துவரை போர்வை போர்த்தியிருந்தது. ஏ.ஸி.யின் குளுமை சற்றுக் கூடுதலாக இருந்திருக்க வேண்டும். வாசலருகிலும், ஜன்னலருகிலும் நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்த இரு கான்ஸ்டபிள்களும் மார்புக்குக் குறுக்கே கைகளைக் கட்டியிருந்தனர். ஜன்னல் அருகே இருந்தவர் இமைகளைத் திறந்து வைக்கவே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

ரவிசங்கர் கண் திறந்ததும், விழித்திருந்த கான்ஸ்டபிள் ''என்ன சார், ஏதாவது வேண்டுமா?'' என்றார்.

''இன்ஸ்பெக்டர் எங்கே?''

''உங்கள் அப்பாவின் ரூமில் படுத்திருக்கிறார்...''

ரவிசங்கர் மூக்கை சுளித்தான். ''என்னவோ புகைகிற மாதிரி வாசனை வரவில்லை?''

கான்ஸ்டபிள் மூக்கையும் அந்த வாசம் எட்டி விட்டது.

''ஆமாம்...'' என்றார். சத்தம் கேட்டு ஜன்னல் கான்ஸ்டபிளும் முழு விழிப்பிற்கு வந்து விட்டார்.

''இன்ஸ்பெக்டரைக் கூப்பிடுங்கள்...''

கான்ஸ்டபிள் ஓடிப் போனார். பால்ராஜ் ஓடிவந்தார்.

அறைக்குள் நுழைந்ததும் நெடி தாக்கியது. ஏ.ஸி. அறை என்பதால் சாத்திய கதவுக்குள் நெடி அதிகமானது.

''எழுந்திருங்கள், ரவிசங்கர்...''

ரவிசங்கர் களைப்புடன் கண்களை மூடினான். ''என்னால் எழுந்திருக்க முடியவில்லை, இன்ஸ்பெக்டர்...'' என்றான். கை நீட்டி கட்டில் தலை மாட்டில் இருந்த நைட் லேம்ப்பை ஆன் செய்தான்.

'ஆ.. ஆ.. ஆ...' என்று அலறினான். மின்னலால் தாக்குண்டவன் போல் உடம்பு உதறியது.



பால்ராஜ் பதறினார்.

''மெயின் ஸ்விட்ச் எங்கேய்யா? ஓடு. ஓடிப்போய் ஆஃப் பண்ணு...''

கான்ஸ்டபிள்கள் பதறிக் கொண்டு ஓடினார்கள்.

பால்ராஜ் டார்ச்சை ஆன் செய்து காத்திருந்தார். மெயின் ஸ்விட்ச் அணைக்கப்பட்டு இருள் சூழ்ந்திருந்தது.

ரவிசங்கரின் உடல் துள்ளி அடங்கியது.

**வீ**டு கொள்ளாமல் ஜனம்.

சுந்தரவடிவேல் ஒருபுறம் இடைவிடாமல் அழுது கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் மிகுந்த திகைப்புடன் ரவிசங் கரின் உடலை வெறித்துக் கொண்டிருந்தார். தோள் தொடப் பட்டது. திரும்பினார்.

லேபிலிருந்து வந்த ஆட்கள்.

''ரவிசங்கரின் பெட்ரூமில் இருக்கும் மர ஸ்டாண்டில் ஒரு ஸ்டெப்-அப் டிரான்ஸ்ஃபார்மர் இருந்தது, சார். படுக்கை விளக்கிற்கு வரும் ஓயர் அதன் வழியே செலுத்தப்பட் டிருந்தது. கன்ஸீல்ட் ஒயரிங் என்றாலும் அதன் சர்க்யூட்டை முழுவதும் அறிந்தவன் செய்திருக்கிறான். 240 வோல்ட்டை ஐநூறு வோல்ட் மின்சாரமாக மாற்றி அனுப்பும் டிரான்ஸ் ஃபார்மர். லேம்ப் ஸ்விட்சில் லீக் வேறு இருந்திருக்கிறது. அதனால் தான் ஃபேட்டல் ஷாக்.. கட்டிலில் மெத்தையில் ஒரு ரப்பர் பந்து வேறு இருந்தது. அதில் தான் பாஸ்னஸ் கேஸ் கொஞ்சம் இருந்தது. பந்தை அழுத்தினால் கேஸ் ரிலீஸ் ஆகி வாசனை வந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. இரண்டு வழியில் ஏதாவது ஒரு வகையில் ரவிசங்கரைத் தீர்த்துக் கட்ட பிளான் ஆகியிருக்கிறது...''

''பெட்ரூமை செக் பண்ணிய கான்ஸ்டபிள் கூட டிரான்ஸ்ஃபார்மர் பற்றி எனக்கு எதுவும் சொல்ல வில்லையே...''

''அது வோல்டேஜ் ஸ்டெபிலைஸர் போன்ற அமைப்பில் இருக்கிறது. ஏ.ஸி. இருக்கும் ரூம் என்பதால் ஸ்டெபிலைசர் என்று நினைத்து கான்ஸ்டபிள் ஏமாந்திருப்பார்...''

''எனிதிங் எல்ஸ்?''

''ரவிசங்கர் ஷாக் அடித்து செத்துப்போன கட்டிலில் இந்தக் கவர் இருந்தது சார்...''

வெள்ளைக் கவர்.

ரோஜா சற்று கறுகியிருந்தது.

*சுந்தரவடிவேல் சமூகத்திற்கு,*

*மீரா இறந்த அதே நேரம் உன் மகன் பலியானான், பார்த்தாயா? காற்றை விட மோசமானவன் நான், எந்த அறையிலும், எந்த இடுக்கிலும் நுழைந்து விடக்கூடியவன். அடுத்த சந்திப்பு உன்னுடன்.*

*- இருதயமில்லாதவன்.*

## 20

''ஸ்டேஷனில் இருந்தால் தான் உபயோகமில்லை.. இன்றைக்கு வீட்டில் உட்கார்ந்து கொண்டே வேஸ்ட் பண்ண முடிவு செய்து விட்டீர்களா?'' - ரோஸ்லின் கூவினாள்.

''ரோஸ்லின்.. இங்கே பார்... இந்தக் கேஸ் என் மண்டையைக் குடைகிறது. கடிதம் கடிதமாக எழுதுகிறான், ரோஜா அனுப்புகிறான், அத்தனை காவலையும் தாண்டி கொலை செய்கிறான்... மே இருபத்தாறு - நாளைக்கு சுந்தரவடிவேலுக்கு நாள் குறித்திருக்கிறான். அதற்குள் அவனை கண்டுபிடித்தாக வேண்டும்.. அவனுடைய கடிதங்களையெல்லாம் சேர்த்து படித்துப் பார்க்கிறேன்.. ஏதாவது க்ளூ கிடைக்காதா என்று.. இது போலீஸ்காரங்க சமாச்சாரம்.. உன் மரமண்டையில் ஏறாது...'' பால்ராஜ் மேஜை விளக்கடியில் கடிதங்களையெல்லாம் மறுபடி படித்துக் கொண்டிருந்தார்.



''மரமண்டை எனக்கா, உங்களுக்கா? ஒவ்வொரு உயிராக கோட்டை விட்டுக் கொண்டிருப்பது நீங்களா, நானா?''

ரோஸ்லின் இடுப்பில் கை வைத்து நின்றாள். ''எங்கே பார்ப்போம் அந்தக் கடிதங்களை'' என்று வெடுக்கென்று அவரிடமிருந்து பிடுங்கினாள்.

கடிதங்களைப் படிக்கப் படிக்க அவளுக்குள் ஒரு சுவாரஸ்யம் வந்து விட்டது. பத்து முறை படித்திருப்பாள்.

''இதோ. இருக்கிறதே க்ளூ...''என்றாள். ''முதல் கடிதத்தை பாருங்கள்...''

பால்ராஜ் அவளிடமிருந்து வாங்கிப் படித்தார். ''எனக் கொன்றும் தெரியவில்லையே...''

''உங்களுக்குப் புரியாதது இந்த மரமண்டைக்குப் புரிந்து விட்டது. கடிதத்தின் ஆரம்பம் என்ன? இருதயமில்லாத டாக்டர் ரவிசங்கருக்கு கடிதத்தின் முடிவு என்ன? எழுதியவன் பெயர் - இருதயமில்லாதவன். புரியவில்லை?''

பால்ராஜின் நெற்றிப்பொட்டில் அடித்தது போல் இருந்தது.

''யூ ஆர் கரெக்ட். 'இருதயமில்லாதவன்', 'இருதயமில்லாத வனுக்கு எழுதியிருக்கிறான்... ரோஸ்லின், யூ ஆர் கிரேட்....''

அப்படியே அள்ளி அவளுக்கு ஒரு இச் கொடுத்தார்.

சட்டையை மாட்டிக்கொண்டு வெளியே பாய்ந்தார்.

சுந்தரவடிவேல் வெறித்த விழிகளுடன் வரவேற்றார்.

''சார், இருதயமில்லாதவன் என்று கடிதங்கள் எழுதியது யார் என்று கண்டு பிடித்து விட்டேன்...'' என்று பரபரத்தார் பால்ராஜ்.

''எனக்கும் தெரிந்து விட்டது'' என்றார் சுந்தரவடிவேல். ''கொரியர் சர்வீஸில் அவனிடமிருந்து எனக்கு கடைசி கடிதம் வந்து விட்டது. அதே ரோஜாப்பூவுடன்.. பார்க்கிறீர்களா?''

சுந்தரவடிவேல் அந்த வெள்ளைக் கவரை பால்ராஜிடம் நீட்டினார்.

*அன்புள்ள அப்பாவிற்கு,*

*இருதயமில்லாத ரவிசங்கர் எழுதிய கடைசிக் கடிதம்,*

*பணம் உங்கள் கண்களைப் புற்று நோய் போல் மறைத்துக் தொங்குகிறது...*

*மீராவை நான் காதலித்த போது, உங்கள் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் சம்மதம் தெரிவித்து நடித்தீர்கள். மீராவை என்னிடமிருந்து பிரிக்க எத்தனையோ சுலபமான வழிகள் உங்களுக்குத் தோன்றாமல் போனது எனக்கு அதிர்ச்சியாய் இருக்கிறது. அவளையும், அவள் அம்மாவையும் பத்மராஜன் என்ற கூலிக் கொலையாளி மூலம் தீர்த்துக்கட்டி...*

*எப்படியப்பா உங்களுக்கு மனசு வந்தது?*

*மீரா செத்ததற்கு மறுநாள் எதேச்சையாக என் ரூமில் நான் போன் எடுத்த போது நீங்கள் போனில் பேசிக் கொண்டிருந்தது கேட்டது. 'காரியத்தை முடித்தது பெரிதில்லை.. கொஞ்ச நாளுக்கு தலைமறைவாயிருங்கள்' என்று நீங்கள் பத்மராஜனிடம் பேசியது என்*



*காதில் விழுந்தது, உண்மை புரிந்தது. அதிர்ந்தேன். ஆத்திரத்தில் எதுவும் செய்யக்கூடாது என்று இரண்டு நாள் ரூமை விட்டு வெளியே வராமல் சிந்தித்தேன். மீராவை இருதயராஜ் என்று ஒரு பையன் ஒருதலைக் காதல் செய்து, மனம் ஒடிந்து தற்கொலை செய்து கொண்டான் என்று அவள் வருத்தத்துடன் சொன்னது எனக்கு நினைவு வந்தது. அவனை என் திட்டத்திற்கு கதாநாயகனாக்கினேன். புதிய கையெழுத்தில் மிரட்டல் கடிதங்களை எழுதினேன்.. பணம், பணம் என்று அலைகிறீர்களே, அந்தப் பணம் இல்லை என்று உங்கள் மகனை அனாதையாக்குங்கள் என்று மிரட்டினேன்.*

*க்ளோரோஃபாம் உபயோகித்து உங்களையும், வேலைக்காரர்களையும் மயக்கமாக்கி, உங்களை கட்டிலோடு கட்டிப் போட்டு நிமிர்த்தி வைத்தேன். வலியின் வேதனை பயத்தின் கொடூரம் உங்களுக்குப் புரிய வேண்டும் என்று நான் கொடுத்த அதிகபட்ச தண்டனை அதுதான். போலீஸ் நாயைக் குழப்புவதற்காக, அடர்த்தியான செண்ட் போட்ட சட்டை அணிந்து சமையல் ரூம் கதவையும் தாள் நீக்கி வைத்து, தோட்டத்தில் சட்டையைப் புதைத்தேன்...*

*இருதயராஜின் கையெழுத்தை வைத்து போலீஸ் ஒப்பிட்டுப் பார்க்காதவரை எனக்கு பிரச்சனை இல்லை. அவர்களுக்கு நன்றி. ஒரு முறை குரல் மாற்றி உங்களை போனில் மிரட்டினேன்... மீராவைக் கொன்ற பத்மராஜையும், வெங்கடபதியையும் என்னால் தண்டிக்க முடியாமல் இருபத்து நான்காம் தேதி சாகப் போகிறேன் என்று தான் நினைத்திருந்தேன்.. ஆனால் அவர்களை சந்திக்கும் வாய்ப்பை எனக்கு நீங்களே ஏற்படுத்தித் தந்தீர்கள். பத்மராஜனுடன் நீங்கள் போனில் பேசியதை எக்ஸ்டன்ஷன் வழியாகக் கேட்டேன். இருதயராஜின் கிராமத்திற்குப் போய்க் காத்திருந்தேன்.. என்னிடம் கறுப்பு மார்க்கெட்டில்*

*வாங்கிய ரிவால்வர். பட்சிகளை சுடுகிற மாதிரி அவர் களைச் சுட்டுத்தள்ளினேன். வெட்டிப் போட்டிருந்தால் இன்னும் மகிழ்ந்திருப்பேன்.*

*மே 24. படுக்கப் போகும் போது ஒரு சிறு ரப்பர் பந்தில் க்ளோரோஃபாம் வாயு அடைத்து எடுத்துப் போவேன். மீரா இறந்த அதே இரண்டு மணி வந்ததும் பந்தைக் காலால் அழுத்தி புகை வாசம் என்று போலீஸைக் குழப்பி, அவர்கள் சாட்சியத்தோடு அழிந்து போவேன்.. யாராலும் என்னைக் காப்பாற்ற முடியாது.*

*மீராவைத் தேடிப் போகிறேன். நான் உயிர் விடும் கதை உங்களுக்கு கடைசிவரை ஒரு உயிர் விடுகதை யாகவே இருக்கட்டும்.*

*நான் போனால் என்ன? கோடிக் கோடியாய் பணம் இருக்கிறது, சொத்து இருக்கிறது, உங்களுக்கு நூற்றுக் கணக்கான வாரிசுகளைத் தேடித் தர.*

*வரட்டுமா?*

*ஒரே ஒரு சத்தியம். உங்கள் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை.*

*அது வெறும் மிரட்டல் தான்.*

*உங்கள் மகனாகப் பிறக்க யோக்கியதை இல்லாத - ரவிசங்கர்.*

பால்ராஜ் நிமிர்ந்தார்.

சுந்தரவடிவேல் காம்போடு இருந்த ரோஜாவை முகர்ந்து வெறித்துக் கொண்டிருந்தார். கண்களில் கண்ணீர் முத்துக்கள்.

''கடிதத்தில் இருப்பதெல்லாம் உண்மைதான்... மீரா வையும், அவள் அம்மாவையும் தீர்த்துக் கட்டிய குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன்..எனக்கு எப்படியாவது தூக்கு தண் டனை வாங்கித் தருவீர்களா, இன்ஸ்பெக்டர்?''

# புதை மணல்

## 1

புது தில்லி.

மத்திய சர்க்காரின் சோம்பலான ஆறு மாடிக் கட்டிடம்.

கண்ணாடிகளில் சூரியன் தயங்கிக் கொண்டிருக்கும் முன் மாலைப் பொழுது.

பாலகணேசன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் புதைத்தார். அடுத்ததைப் பற்ற வைத்தார். டெலிபோனை அருகே இழுத்தார். மூன்று எண்களை டயல் செய்தார்.

''ராம்கோபாலை என் ஸீட்டிற்கு அனுப்பு'' என்றார்.

கதவு திறந்து ராம்கோபால் நுழைந்து சல்யூட் வைக்கும் வரை சிகரெட் புகைத்தார்.

பாலகணேசன் - மத்திய விளையாட்டுத்துறை மந்திரியின் நேரடி செக்ரட்டரி. கடந்த சில வாரங்களாக அவர் இழந்த தூக்கம் கண்களுக்குக் கீழ் கறுப்புக் கூடு கட்டியிருந்தது.

பைல்கள், உபசரிப்புகள், விசாரணைகள். மேற்பார்வைகள் என்று பிளட் பிரஷர் மாத்திரைகள் ஒரு பழக்கமாகி விட்டது. நாற்பத்தைந்து வயது. ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த அழகான மனைவி. இரண்டு மகள்கள் - பள்ளிக்கூடம் போகும் வயது. ஒருத்திக்கு சமீபகாலமாக அடிக்கடி சட்டை சைஸ் மாற்ற வேண்டி வருகிறது.

''உட்கார். ராம்கோபால்'' என்றார். மறு சிகரெட்டை சங் கிலியாகப் பற்ற வைத்தார்.

''எனி பிராப்ளம் சார்?'' ராம்கோபால் பாலகணேசனின் செல்லக்குட்டி, அவருடைய தமிழ் அஸிஸ்டெண்ட்.

''பிராப்ளமா என்று இன்னும் முத்திரை குத்திவிட முடியாத ஒரு விஷயம்... நீயே பார்...''

மேஜையில் ஒரு காகிதத்தை அவன் புறம் தள்ளினார்.

மஞ்சள் நிறத்தில் மெலிதான மொட மொடப்பான தாள்.

*பஞ்சாப்பில் இதயங்கள் வெடித்துக் கொண்டிருக் கின்றன. ஈழத்தில் தமிழர்களின் ரத்தம். நாடு எங்கும் வறட்சி. பஞ்சம்.*

*இப்போது எதற்கு விளையாட்டு விழா? சர்வதேச விளை யாட்டு விழாவில் இந்தியா பங்கு கொள்ளாது என்று பிரதம மந்திரி பட்டவர்த்தனமாக அறிவிக்க வேண்டும்.*

*மீறி -*

*இந்தியர்களை விளையாட்டு விழாவிற்கு அனுப்பினால் -*

*அவர்கள் உயிரோடு இந்தியா திரும்ப மாட்டார்கள் - எச்சரிக்கை!*

*- த.தொ.க.*

ராம்கோபால் சிரித்தான்.



''இதெல்லாம் வழக்கம்தான் சார்... இதற்கெல்லாம் கவலைப்பட வேண்டாம்... கடிதத்தை இண்டலிஜென்ஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு தள்ளிவிட்டு நிம்மதியாக இருங்கள்...''

''அது என்ன த.தொ.க.?'' என்றார் பாலகணேசன், கால் களை மாற்றிப்போட்டு.

''**தமிழ்த் தொண்டர் கழகம்** என்று பேப்பரில் எப்போதோ அடிபட்டிருக்கிறது...''

''இந்தியாவா, சிலோனா?''

''யாரென்று இதுவரை தைரியமாக சொல்லிக் கொள்ளாத ஒரு கழகம்...''

''ஒகே. இந்த லெட்டரை காப்பி எடுத்துக் கொண்டு, இண்டலிஜென்ஸ் டிபார்ட்மெண்டிற்கு அனுப்பிவிடு'' என்றார் பாலகணேசன். அடுத்த சிகரெட்டை எடுத்து.

''சார்... நீங்கள் ரொம்ப...''

''சிகரெட் பிடிக்கிறீர்கள். அது தானே? ஐ கான்ட் வித் அவுட் இட். டென்ஷன்... இண்டர்நேஷனல் ஸ்போர்ட்ஸ் ஃபெஸ் டிவல் என் கழுத்தின் மேலேயே உட்கார்ந்திருக்கிறது...''

''எங்கேயோ ஒரு அமெரிக்கத் தீவில் நடக்கப் போகும் விழாவுக்கு நீங்கள் ஏன் சார் டென்ஷன் ஆக வேண்டும்?''

''ஒன்றில்லை, இரண்டில்லை நாற்பத்தியிரண்டு பேர் போகிறார்கள். இந்தியாவிலிருந்து... காஷ்மீரத்திலிருந்து ஒரு ஆளை எடுத்தால் பாலன்ஸ் செய்ய கன்னியாகுமரியிலிருந்து ஒரு ஆளை எடுத்தாக வேண்டும். காங்கிரஸ்காரன் ஒருத்த னுக்கு செலக்ஷன் கொடுத்தால் கம்யூனிஸ்ட் பார்ட்டிஆள் ஒருத்தனுக்கு சான்ஸ் கொடுத்தாக வேண்டும். இதுதவிர... ஏய், உனக்குத் தெரியாதா இண்டியன் பாலிடிக்ஸ்? ஏன் என் வாயைக் குடைகிறாய்?''

பாலகணேசன் தலையை உதறிக் கொண்டு அந்த கடி தத்தை மறந்தார்.

கராச்சி.

பாகிஸ்தானின் தீவிரவாதிகளின் புகலிடமான ஒரு பாழ்கட்டிடம்.

சுலைமான் சிக்கன் ரோஸ்ட்டை குதப்பிக் கொண்டே பேசினான்.

"அந்த கடிதத்தைப் பார்த்துவிட்டு இந்திய அரசாங்கம் என்ன செய்யும் ஓமர்?"

"என்ன செய்யும்?" ஓமர் தன் கறுப்பான பற்களைக் காட்டி சிரித்தான். "யாரோ சிலோன்காரன் எழுதியதாக நினைத்துக் கொள்ளும். போஸ்டல் முத்திரையைப் பார்த்தால் மெட்ராஸ் என்றிருக்கும்..."

"கடிதத்தை மதிப்பார்களா என்றுதான் கேட்டேன்..."

"எந்த அரசாங்கமும் மொட்டைக் கடிதங்களை மதித்து பயப்படாது, சுலைமான் பயப்படவும் கூடாது. இந்தியா தன் விளையாட்டு வீரர்களை அனுப்ப வேண்டும். அப்போது தான் நம் திட்டம் வெற்றியடையும்..."

"இந்திய வீரர்களை ஒவ்வொருத்தராகக் கொல்லும் திட்டம்!" சுலைமான் சிரித்தான். "எதற்கும் இன்னும் இரண்டு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்புவோம்... இந்திய அரசுக்கு மட்டுமில்லை, இந்திய பத்திரிகைகளுக்கும்..."

விளையாட்டுத்துறை அமைச்சர் தன் காங்கிரஸ் தொப்பியைக் கழற்றி விசிறிக் கொண்டு, "என்னய்யா இது?" என்றார் ஹிந்தியில். அவர் மேஜை மீது அன்றைய தினசரி கள். அவற்றின் முதல் பக்கங்களில் செய்திகள் கொட்டை எழுத்துக்களில் அலறின.

**இந்திய விளையாட்டு வீரர்களுக்கு எச்சரிக்கை!**

"நேற்றே சொல்ல வேண்டும் என்று நினைத்தேன், ஐயா... இரண்டு நாட்களுக்கு முன் ஒரு மொட்டைக் கடிதம் வந்தது. த.தொ.க. என்று கீழே எழுதியிருந்த போதும், தமிழ்த் தொண்டர் கழகம் இதில் இன்வால்வ் ஆகவில்லை என்று இண்டலிஜென்ஸ் ஏஜென்ஸிகள் சொல்லிவிட்டன. உண்மை யில் த.தொ.கழகத்திற்கு இந்த சர்வதேச விளையாட்டு விழா பற்றி பூரணமாகத் தெரியாது..." பாலகணேசன் நாற்காலியில் உட்காரமல் பேசினார்.



"அதையெல்லாம் யார் கேட்டார்கள்? பேப்பருக்கு நியூஸ் கொடுத்தது யார்?" மந்திரி நிமிராமல் கேட்டார்.

"நமக்கு கடிதம் அனுப்பியவன் அவர்களுக்கும் அனுப்பி யிருக்கிறான்..."

"நான் இன்றைக்கு பார்லிமெண்ட்டில் என்ன சொல்ல வேண்டும் என்கிறாய்?"

"வழக்கமான ப்ளா ப்ளா தான்... சந்தேகப்பட்ட பலரையும் கைது செய்திருக்கிறோம்... கழகத்திற்கும் இந்த பயமுறுத்த லுக்கும் எந்த தொடர்புமில்லை.... இந்திய விளையாட்டு வீரர்கள் அத்தனை பேரின் பாதுகாப்பிற்கும் இந்திய அர சாங்கம் முழு பொறுப்பேற்கிறது.

"ரைட்.... சந்தேகப்படும் ஆட்களை நிஜமாகவே கைது செய்ய ஏற்பாடு செய்... அப்புறம் அமெரிக்கன் எம்பஸியில் எனக்கு ஒரு அப்பாயிண்ட்மெண்ட் கேள். பாதுகாப்பிற்கு இந்திய செக்யூரிட்டியைச் சேர்ந்தவர்களை ப்ளேயர்களோடு அனுப்ப அமெரிக்கா சம்மதிக்குமா என்று கேட்கிறேன்..." மந்திரி தொப்பியை அணிந்து கொண்டு எழுந்தார்.

## 2

சென்னை.

கோடி, கோடி, கோடி, கோடியே தொண்ணூற்று எட்டு லட்சத்து அறுபத்தேழாயிரத்து நாற்பத்தி மூன்று மணல் துகள்களைக் (எண்ணிப் பார்க்கவா போகிறீர்கள்?) கொண்ட மெரீனா பீச்.

கடற்கரையை ஒட்டிய உள்சாலை.

நிவேதனா குலுங்கக் குலுங்க ஓடினாள்.

நீல நிறத்தில் ஜாகிங் டிரெஸ் அழகாக இருந்தது. குதிகால்கள் குறிப்பிட்ட உயரம் வரை எழும்பி இறங்கின. மடக்கிய கைகள் நீராவி என்ஜினின் பிஸ்டன்களைப் போல முன்னே பின்னே போய் வந்தன. சாலையின் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்த மாருதிகாரை நெருங்கியதும், வேகம் குறைத்து, கடைசி இரண்டடியை காலைத் தேய்த்து நிறுத்தத் திற்கு வந்தாள்.

வாட்சில் கண் வைத்திருந்த சேதுமாதவன் நிமிர்ந்தார். சின்னதாக கை தட்டினார்.

''இம்ப்ரூவ் பண்ணிவிட்டாய், டார்லிங்...'' என்றார். ''இன்னும் கொஞ்சம் ப்ராக்டீஸ் பண்ணினாயென்றால் உனக்குத்தான் கோல்டு மெடல்...'' ''போங்கப்பா'' என்று அவர் மார்பில் மூச்சிரைத்துக் குத்திய நிவேதனாவுக்கு அழகான மூக்கு, அழகான உதடு, அழகான இரண்டு... கண்கள் 5.7' ஐம்பது கிலோ 36.5.-25-37.

அப்பா சேதுமாதவன் வீடு நிறைய பணமும், தலை நிறைய நரையும் வைத்திருந்தார். மாருதியில் மடித்து ஊன்றியிருந்த காலைக் கீழே போட்டார்.

''ஏறு, எனக்கு இன்றைக்கு போர்டு மீட்டிங் இருக்கிறது. நேரமாகிவிட்டது... என்றைக்கு செலக்ஷன் ரேஸ்?''

''அடுத்த புதன்கிழமை, மும்பையில்...''

காரில் ஏறியதும், வண்டியை ஸ்டார்ட் செய்யும் முன், பக்கத்தில் இருந்த 'இந்து'வை காஷுவலாகப் பிரித்தார்.



முதல் பக்கத்தில் இடதுபுற செய்தி அடுக்குகளில் Threat to Indian Athletes என்ற தலைப்புச் செய்தி கண்களை இழுத்துப் பிடித்தது.

இக்னீஷியனைத் திருகி அணைத்துவிட்டு செய்தியைப் படிக்க ஆரம்பித்தார்.

''நோ, நோ... என் அரசாங்கம் இதற்கு நிச்சயம் சம்மதம் கொடுக்காது'' என்றார் மிஸ்டர் ஃப்ரெட்ரிக் - அமெரிக்க அம்பாஸிடர். ''எங்கள் நாட்டின் நவீன வசதிகளைப் பற்றி அகில உலகமும் அறிந்திருக்கிறது. செக்யூரிட்டி ஏற்பாடுகளில் சளைத்தவர்களல்ல நாங்கள். ஒரு ஆண்டுக்கு (மேஜையி லிருந்து ஒரு காகிதத்தைப் புரட்டிப்பார்த்து) அறுபதுக்கு மேற் பட்ட வெளிநாட்டு தலைவர்கள் சராசரியாக வந்து போகி றார்கள். அத்தனை பேருடைய பத்திரத்திற்கும் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறோம் நாங்கள். அப்படியிருக்கும் போது, இந்திய விளையாட்டு வீரர்களுக்குப் போதிய பாதுகாப்பு கொடுக்காமலா விட்டு விடுவோம்? அதனால் உங்கள் ஆட் களை பாதுகாப்புக்கு நீங்கள் அனுப்புவதை நிச்சயம் அமெரிக்கா ஏற்காது...'' மந்திரி தொப்பியைக் கழற்றி மடியில் வைத்துக் கொண்டு, ''என்ன்ய்யா சொல்கிறாய்?'' என்றார். பாலகணேசனைப் பார்த்து.

''ஒன்றும் எதிர்த்துச் சொல்ல முடியாது, சுவாமி... நாம் அப்புறம் டிஸ்கஸ் செய்வோம்...''

''ஓகே தாங்க்யூ'' என்று அமெரிக்க தூதுவரிடத்தில் கை குலுக்கிவிட்டு புறப்பட்டார் மந்திரி.''

செகரட்ரியேட் அலுவலகத்தில் மறுபடி டிஸ்கஷன் நடந்தது.

''நாம் சி.பி.ஐ.யிலிருந்து ரகசியமாக ஆள் அனுப்புவோம்...'' என்றார் ஒரு உப மந்திரி.

''நோ, நோ... நம் அத்தனை பேருடைய மூஞ்சியும் அவர் களுக்குத் தெரியும். உளவு பார்க்கிறோம் என்று சொல்லி குறுக்கில் கழி வைத்துவிடுவார்கள்...''

''பேசாமல் அமெரிக்காவிடமே பொறுப்பை ஒப்படைத்து விட்டு கம்மென்று இருந்து விடலாம்...''

''ரிட்டையராக வேண்டிய வயதில் ஏன் இப்படி பேத்தலாக சஜஷன் கொடுக்கிறீர்கள்...''

''தென் யாராவது உருப்படியாக ஏதாவது ஒரு ஐடியா கொடுங்களேன்...''

''ஃபைனல் ப்ளேயர்ஸ் செலக்ஷன் என்றைக்கு, பால கணேசன்?''

''புதன்கிழமை...''

''இன்னும் ஐந்து நாட்கள் இருக்கின்றன...'' மந்திரி சற்று யோசனை செய்தார். ''இதுவரை அதிகம் வெளியுலகுக்குத் தெரிந்துவிடாமல் ஆரம்ப ப்ரொபேஷனராக இருக்கும் சி.பி.ஐ. இளைஞன் ஒருவனை அல்லது இருவரை தேர்ந்தெடுக் கிறோம்...''

''தேர்ந்தெடுத்து?''

''அரசு செலவில் அனுப்பிடலாம், விளையாட்டுகளை வேடிக்கை பார்க்க...''

குட் ஐடியா... ஆனால்...

''ஆனால்களை அப்புறம் யோசிப்போம்'' என்றார் மந்திரி. தொப்பியை அணிந்து கொண்டே, உடன் இருந்த மற்ற நான்கு அதிகாரிகளும் எழுந்தார்கள்.

## 3

''இதோ பார் டார்லிங், இதற்கெல்லாம் கோபித்துக் கொள்ள லாமா?''



சேதுமாதவன் நிவேதனாவின் முகவாயைப் பிடித்துக் கெஞ்சினார். ''எல்லாம் உன் ஸேஃப்டிக்காகத்தானே சொல் றேன்...''

''நோ, டாடி... டோண்ட் ஸே நோ'' அவள் திமிறி விலகினாள். ''இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு மெடல் வாங்க வேண்டும் என்று எத்தனை நாளாய் நான் பிராக்டீஸ் பண்ணுகிறேன் தெரியுமா?''

''தெரியும் கண்ணா... ஆனால் உயிருக்கே ஆபத்து என்று போட்டிருக்கிறானே - பேப்பரில்... நீ எனக்கு ஒரே மகள்... எனக்கு பயமாயிருக்காதா?''

''நான் போய்த்தான் ஆவேன்...'' நிவேதனா கான்வாஸ் கால்களை உதைத்து அடம் பிடித்தாள். ''கவர்மெண்டில்தான் போதிய பாதுகாப்பு உண்டு என்கிறார்களே, சேதுமாதவன் மகளை மட்டுமா தீவிரவாதி தாக்கப் போகிறான்?''

''ஓகே...'' என்றார் சேதுமாதவன்... ''கவர்மெண்டில் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று நேரடியாக நானே தெரிந்து கொண்டு வருகிறேன்... ஐ'ல் மீட் தி ஸ்போர்ட்ஸ் மினிஸ்டர் அண்ட் டாக் டு ஹிம்...''

''வாருங்கள் மிஸ்டர் சேதுமாதவன்... என்றைக்கு தில்லி வந்தீர்கள்?'' மந்திரி சீட்டைவிட்டு எழுந்து வரவேற்றார்.

''இன்றைக்கு காலைதான்... சேதுமாதவன் தன் தங்கப்பல் பளீரிட சிரித்தார். உட்கார்ந்தார். ''ரொம்ப பிஸி போல் இருக் கிறது?''

''அதை ஏன் கேட்கிறீர்கள்? இந்த இண்டர்நேஷனல் ஸ்போர்ட்ஸ் விவகாரத்தில் மாட்டிக் கொண்டு... அதை விடுங்கள். மெட்ராஸ் எல்லாம் எப்படி இருக்கிறது? நாலைந்து நாள் மழை பெய்ததாமே? உங்கள் பிஸினஸ் எப்படி? லைசன்ஸ் ஏதோ வாங்க வேண்டும் என்று போனமுறை சொன்னீர்களே!''

''எவ்ரிதிங் இஸ்.ஓகே... கமிட்டிக்கு மாசாமாசம் பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறேனே... வந்து சேர்ந்ததா? அப்புறம் அம்மா பெயரில் ஏதோ ட்ரஸ்ட் ஆரம்பித்து ஸ்கூல் நிதி கேட்டிருந்தீர்கள்... இருபது லட்சம் செக் கொடுத்தேன்... இந்தியாவில் எஜூகேஷனைப் பற்றி எவ்வளவு பேர் கவலைப்படுகிறார்கள்?''

''தாங்க்யூ... தாங்க்யூ... நான் ஏதாவது உங்களுக்கு செய்ய வேண்டுமா, சேதுமாதவன்...''

''சின்ன விஷயம்... எனக்கு ஒரு மகள் இருக்கிறாள்...''

''ஐ... நோ... நிரோதனா...''

''நிரோத்தும் இல்லை, கோஹினூரும் இல்லை... நிவேதனா...''

''யெஸ்... யெஸ்... நிவேதனா...''

''இந்த சர்வதேச விளையாட்டு விழாப் போட்டிகளில் அவளும் கலந்து கொள்கிறாள்... ஃபைனல்ஸில் இங்கே செலக்ட் ஆனால் அமெரிக்கா போவாள்...''

''செலக்ட் ஆனாலா? வாட் டூ யூ மீன்... அவள் ஃபைன லுக்கு வரவே வேண்டாம்... ஜீ இஸ் செலக்ட்...''

''அமெரிக்காவுக்கு அவளை அனுப்ப எனக்கு பயம், மிஸ்டர் மினிஸ்டர்.''

''ஓ... அந்த பயமுறுத்தல் கடிதம்... டோண்ட் ஓரி... நாங்கள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்... உங்கள் காதோடு வைத்துக் கொள்ளுங்கள்... சி.பி.ஐ.யைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் பத்திரிகை நிருபர்களைப் போல கூடப் போக ஏற்பாடு செய்தாகிவிட்டது...''

''யார் அந்த இளைஞர்கள்?''

''ஜோஷி அண்ட் தாக்கர்.''



''அனுப்புங்கள்... என் டாட்டருக்கு பாதுகாப்பாக நான் என் சார்பில் ஒரு இளைஞனை அனுப்பலாம் என்றிருக்கிறேன்... பிரைவேட்டாக...''

''தேவையில்லை சேதுமாதவன்...''

''ஆனால் நான் முடிவு செய்துவிட்டேன். மினிஸ்டர் அவனையும் நம் இந்திய டீமில் சேர்த்துக் கொள்ள உங்கள் அனுமதி வேண்டும்...''

''சேதுமாதவன் கேட்டு இல்லை என்று சொல்லும் நிலைமை யிலா நான் இருக்கிறேன்? ஷ்யூர்... யார் அந்தப் பையன்?''

## 4

ஃபிகிள்ஸ் ஐ அலுவலகம்.

மேஜையை அறை ஓரத்திற்கு தள்ளியிருந்தார்கள். இடறும் நாற்காலிகளை நகர்த்தி மேஜையின் மீது வைத்துவிட்டு, மொஸய்க் தரையில் சாக்பீஸால் வெள்ளைக் கோடுகள் போட்டு 'கபடிக் கபடிக் கபடிக் கபடிக்...'

ஜான்சுந்தர், நரேந்திரன் இருவரும் ஒரு பக்கம். வைஜயந்தி, அனிதா, மீரா இவர்கள் எதிரணியில்.

வைஜயந்தி தன் புடவையை இழுத்து செருகிக் கொண்டு முழு வேகத்துடன் பாய்ந்து நரேந்திரனின் சட்டையைத் தொட்டுத் திரும்பும் அந்த நேரம் பார்த்தா அறைக்கதவு பொட்டென்று திறக்க வேண்டும்?

இடுப்புகளில் கையூன்றி ராம்தாஸ் நின்றார்.

கண்களில் நெருப்புக் கொட்டினார்.

"வாட் இஸ் திஸ்!" என்று தொண்டை நரம்பு புடைக்கக் கத்தினார். "நான் கொல்கத்தா வரை போனவன் திரும்பியே வரமாட்டேன் என்று தீர்மானித்து விட்டீர்களா?"

"கபடிக் கபடி கபடிக் கபடி..."

"யூ ராஸ்கல்ஸ்... நான் கத்துகிறேன்... நீ தம் பிடித்துக் கொண்டிருக்கிறாயா?"

இல்லை, தாஸ்... ஜஸ்ட் ஒரு ரிலாக்சேஷன்..." வைஜயந்திக்கு அழகாக மூச்சிரைத்தது.

"ரிலாக்சேஷன்! ஆல் ஆஃப் யூ ஆர் டிஸ்மிஸ்ட்" ராம்தாஸ் கோபமாக அறையை விட்டு வெளியேறினார்.

உடனே அந்த அறையில் துரித கதியில் காரியங்கள் நடந்தன. மேஜையில் குடிக்க வைத்திருந்த டம்ளர் தண்ணீரைத் தரையில் கொட்டி, அவசரம் அவசரமாக சாக்பீஸ் கோடுகளை அழித்து மேஜையை இடத்துக்கு கொண்டு வந்து...

நரேந்திரன் சுருட்டி விட்டிருந்த பாண்ட்டை நீவிப் பிரித்துவிட்டு ராம்தாஸின் அறைக்குள் ஓடினான்.

"தாஸ்... உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ்..."

"நீ இன்னுமா வீட்டுக்குப் போகவில்லை? யூ ஆர் டிஸ்மிஸ்ட்" நரேந்திரன் அதை சட்டை செய்யாமல் மேஜையை சுற்றி வந்து ஏர்கண்டிஷனரை ஆன் செய்தான். மேஜையை சட்டை நுனியால் தூசி தட்டினான். ஸ்பென்ஸர் புகையிலைப் பாக்கெட்டையும், தீப்பெட்டிகளையும் எடுத்து ராம்தாஸிற்கு எதிரே வைத்தான். கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டான்.

"ஐ செட் கெட் அவுட்."

"தாஸ். இன்று காலை ஒரு போன் வந்தது..."

"என்னோடு பேசாதே."



"போன் செய்தவர் பெயர் சேதுமாதவன்... சேது ரப்பர் ஃபாக்டரியின் சேர்மேன் சேதுமாதவன்..."

"விஷயத்தைச் சொல்லிவிட்டு நீ வெளியேறு..."

"அய்... எத்தனை நேரம் தாஸ் சினிமா கதாநாயகி மாதிரி இந்த ஊடல் போஸ் கொடுக்கப் போகிறீர்கள்? அ... அ... சிரிப்பு வருகிறது பார்..."

"பிய்ந்து விடும்" என்றார் ராம்தாஸ், கண்களை உருட்டி, "விஷயத்தைச் சொல்."

"நீங்கள் வந்ததும் அவர் வீட்டில் வந்து சந்திக்கச் சொன்னார்."

"சரி, நீ போ..."

"என்னையும் கூட வரச் சொன்னார்..."

ராம்தாஸ் நிமிர்ந்து முறைத்துவிட்டு. "சரி வந்து தொலை" என்றார்.

அறை சின்னதாய் இருந்தது. சிங்காரமாய் இருந்தது.

"இதுதான் பிராப்ளம்" என்றார் சேதுமாதவன். "என் டாட்டருக்குத் துணையாக ஒரு ஆள் போக வேண்டும். அஃப் கோர்ஸ் விளையாட்டுகள் பற்றி அவனுக்கு தெரிந்திருக்க வேண்டும்..."

"நோ பிராப்ளம்..." என்றார் ராம்தாஸ்.

"உங்களுக்கு ஆகும் செலவெல்லாம் என்னுடையது. ப்ளஸ் நீங்கள் கேட்கும் ஃபீஸ்."

"ஓகே..."

"உங்கள் டாட்டரை நாங்கள் பார்க்க வேண்டுமே..."

"நிவேதனா!" என்று கூப்பிட்டார்.

நிவேதனா இரட்டைப் பின்னலை மார்புக்கு ஒன்றாகப் போட்டுக் கொண்டு துள்ளி வந்தாள்.

''மீட் நரேந்திரன்... இது ராம்தாஸ்...''

''ஹாய்!'' என்றாள் உற்சாக உருண்டையாக. ''ஏதாவது படத்தில் ஆக்ட் பண்ணுகிறீர்களா?'' என்று கண்ணடித்துக் கேட்டாள்.

''ஆயிரம் தடவை இவனிடம் சொல்லி விட்டேன். இதைப்போல ஒட்டுப் போட்ட சட்டையெல்லாம் போடாதே என்று. இப்போது உங்கள் டாட்டர் நடிகனா என்று கேட்டு விட்டாள்'' ராம்தாஸ் சிரித்தார்.

''நரேந்திரன் ஜிம்னாஸ்டிக்ஸ் எல்லாம் செய்வாராம்... ஸ்போர்ட்ஸ் ஃபெஸ்டிவலுக்கு வருகிறாராம்...''

''டாடி... எனக்குத் தெரியும்... நீங்கள் என் ஸேஃப்டிக்காக அனுப்புகிறீர்கள்... ஹீ லுக்ஸ் ஓகே... வரட்டும்'' நிவேதனா அப்பாவின் கன்னத்தில் ஒரு இச்சக் வைத்துவிட்டு, ''எனக்கு ப்ராக்டீஸூக்கு லேட்டாகிவிட்டது. வருகிறேன்'' என்று வெளியே ஓடினாள்.

## 5

''இந்தியர்கள்!''

''ஒழிக!'' என்று கத்திவிட்டு அவர்கள் உட்கார்ந்தார்கள். அந்த அறையில் சுருட்டு நாற்றமும், மலிவான சாராய நெடியும் கரைந்திருந்தன. நடுநாயகமான மேஜையில் உட்கார்ந்திருந்தவன் பொதுவான குரலில் பேசினான்.

''இந்தியர்கள் நம் எதிரிகள். இந்தியாவில் இப்போது உள்நாட்டுப் பிரச்னைகள் ஏராளம். போதாதற்கு சிலோன் தமிழர்கள் விவகாரம் வேறு. எனவே நாம் செய்யும் எந்த செயலும், பழிகளை பஞ்சாப் மீதும், ஈழத் தமிழர் மீதும் திருப்பும் என்ற நம்பிக்கையோடு நாம் செயல்படத் துவங்கி விட்டோம்... அமெரிக்கத் தீவில் நடக்கவிருக்கும் சர்வதேச விளையாட்டு விழா நமக்கு ஒரு எதிர்பாராத பரிசு. பாகிஸ்தான் தன் விளையாட்டுக் குழுவை அனுப்பப் போகிறது. அந்த விளையாட்டுக் குழுவில், மல்யுத்த வீரர்களாக கலந்து கொள்ளும் இருவரை இப்போது இங்கே அறிமுகம் செய்கிறேன் - ஓமர் மற்றும் சுலைமான்.''



ஓமரும், சுலைமானும் எழுந்து சற்றே பணிந்து கூடியிருந்தவர்களுக்கு வணக்கம் சொன்னார்கள்.

''நம் பாகிஸ்தான் பயணக் குழுவைச் சேர்ந்தவர்கள்தான் இந்த இரண்டு பேரும்... நம் குழுவின் இலட்சியம் 'இந்தியாவை அழிப்போம்'. இந்த விளையாட்டு விழாவில் பலியாகப் போவது இந்திய வீரர்கள்...''

ஓமர் தன் கோப்பையை மேஜை மீது வைத்து விட்டு தொடர்ந்தான்.

''விளையாட்டு வீரர்கள் என்ற முறையில் எங்களுக்கு அமெரிக்கா செல்ல அனுமதி கிடைத்து விட்டது. ஆனால் அங்கே நாங்கள் செயல்பட சில உபகரணங்கள் எங்களுக்குத் தேவை. அவற்றை எப்படி கஸ்டம்ஸின் கண்களை மீறி எடுத்துப் போவது என்பதுதான்...''

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம் ஓமர்... விளையாட்டு வீரர்களை ஏற்றிப் போகும் விமானத்தை ஓட்டப் போவது யார் தெரியுமா? அமர் மொகிதீன்... அவனும் நம் குழுவைச் சேர்ந்தவன் தான். எனவே முன்னேற்பாடாக இந்த ஸ்பெஷல் லக்கேஜை அவன் பொறுப்பில் ஏற்றி விடுவான்... நீங்கள் கையை வீசிக் கொண்டு போகலாம்... தீவில் உங்களுக்கு உதவ சாம்சன் மற்றும் ராபர்ட் என்று இரண்டு நீக்ரோக்கள் காத்திருப்பார்கள்...''

"எல்லாம் ஒழுங்காகத் திட்டமிடப்பட்டிருக்கின்றன..."

"இந்தியர்கள்..."

"ஒழிக!" என்று கத்திவிட்டு அவர்கள் கலைந்தார்கள்.

திங்கள் கிழமை.

மயிலாப்பூர் ஜிம்னாஸியம்.

உயரமான கூரையிலிருந்து தொங்கும் சங்கிலி வளையங்களைப் பிடித்துக் கொண்டு சிலர் ஊஞ்சலாடினார்கள். ஓரத்தில் இரண்டு மாமிச தடியர்கள் குஸ்தியில் ஈடுபட்டிருந்தார்கள். ஒற்றையடி குஷனில் சிலர் ஹை ஜம்ப் முடிந்து விழுந்தார்கள்.

ஜிம்னாஸ்டிக் செய்யும் பகுதியில் நரேந்திரன் தரையில் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தான்.

"தாஸ்! நான் அம்பேல். ஒரே ஒரு டம்ளர் ஜூஸ் கிடைக்குமா?"

ராம்தாஸ் அவனுடைய அழுக்கான உடைகளைப் பார்த்தார்.

"அரைமணி நேரமாவது பயிற்சி செய். அப்புறம் தான் தம்ளர் தண்ணீர்."

"தாஸ்... தாஸ்... ப்ளீஸ்..."

"எழுந்திரு... கமான் பாலன்ஸிங் பீமில் ஏறு..." ராம்தாஸ் கருணையே இல்லாமல் சொன்னார்.

நரேந்திரன் தலையில் அடித்துக் கொண்டான். "அன்றைக்கு நீங்கள் டிஸ்மிஸ் என்று சொன்ன போதே பேசாமல் கிளம்பியிருக்க வேண்டும். பீச்சில் சுண்டல் விற்றாவது பிழைத்துக் கொள்ளலாம்..." எழுந்தான்.

நான்கங்குலத்திற்கு அகலமாக அந்த மரக்கட்டை. அதன்மீது உட்கார்ந்தாலேயே வலிக்கும் போலிருந்தது.



அதன் மீது நிற்க வேண்டும். ஜம்ப் செய்ய வேண்டும். ஒற்றைக் கையை ஊன்றி சக்கரம் போல் சுழல வேண்டும். மெதுவாகக் காலைப் போட்டு ஏறினான். பஸ்ஸில் ஃபுட் போர்டில் தொற்றிக்கொண்டவன் போல் நின்று இரண்டு கைகளையும் இறக்கைகள் போல் விரித்து பாலன்ஸ் செய்து நின்றான்.

"நரேன்... நான் சொல்வதைக் கவனமாகக் கேள்" என்றார் ராம்தாஸ்.

"கேட்டுக் கேட்டுத்தான் இன்றைக்கு வேதாளம் போல் ஏறி நிற்கிறேனே."

"பாலன்ஸ் பீமின் அகலம் என்ன?"

"தாஸ்... என் செருப்பு அகலம் கூட இல்லை, தாஸ்..."

"நான்கங்குலம்தான் அகலம் என்று உன் மனதில் ரிஜிஸ்டர் ஆகியிருக்கிறது. அதை முதலில் அழி..."

"எச்சில் தொட்டு அழிக்கவா..."

"அந்த பீம் இதோ தரையைப் போல நான்கடி அகலம்..."

"தாஸ்! நான்கு இன்ச். நான்கடி இல்லை."

"கற்பனை செய். நான்கடி அகலம் நீ எத்தனை குதித்தாலும் பாலன்ஸ் தவறப் போவதில்லை என்று மனதில் தீர்மானமாக பலமுறை சொல்லிக் கொள். அப்புறம் பார் உன் ஆட்டத்தை."

நரேந்திரன் கண்களை மூடினான். கற்பனையில் ஆழ்ந்தான். தரையைப் போல் அகலம். குதித்தால் ஒன்றும் ஆகாது... குதித்தான்.

மிகச் சரியாக கட்டைப் பரப்பிலேயே கால் ஊன்றி பாலன்ஸ் செய்து நின்றான். மறுபடி குதித்தான். மறுபடியும் அதே

இடத்தில் அழகாக இறங்கினான். ராம்தாஸ் பைப்பைப் பற்ற வைக்கும் முயற்சியில் இறங்கினார்.

''தாஸ்... என்னை அம்போ என்று விட்டுவிட்டா போகி றீர்கள்?'' வைஜயந்தி கெஞ்சும் குரலில் கேட்டாள்.

''வேறு வழி?'' என்றார் ராம்தாஸ். ''நரேந்திரன் அத்லெட். நான் அவன் கோச்... உனக்கு என்ன ரோல் வாங்கித் தருவது நான்?

''அமெரிக்காவெல்லாம் போகிறீர்கள்... நான் வரக்கூடாதா தாஸ்?''

''பைத்தியம், அமெரிக்காவைச் சேர்ந்த தீவுதான் அது. அமெரிக்காவின் கடல் பரப்பில் பசிபிக் பெருங்கடலில் ஒரு சின்ன தீவு. இந்த சர்வதேச விளையாட்டுக்காகவே உரு வாக்கியிருக்கிறார்கள்... பாரடைஸ் ஐலண்ட் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ரஷ்யாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் வரும் ஆட்களை அமெரிக்காவிற்குள் சேர்த்துக் கொள்ள அவர்களுக்கென்ன பைத்தியமா? டைரக்டாக அந்தத் தீவில் கொண்டு இறக்கி விடுவார்கள். அங்கே ஒன்றும் நீ பார்க்கும் படியாய் இருக்கப் போவதில்லை...''

''தாஸ்... இனிமேல் நீங்கள் இல்லாத போது கபடி எல்லாம் ஆட மாட்டேன்... சமர்த்துப் பெண்ணாக நடந்து கொள் வேன்... ப்ளீஸ்...''

''அதெல்லாம் நோ என்றால் நோதான்'' என்றான் நரேந் திரன். ''நாங்கள் என்ன தீவுத்திடல் எக்ஸிபிஷனுக்கா போகி றோம், கூட உன்னையும் இழுத்துக் கொண்டு போக? அமெரிக்கா கண்ணு, அமெரிக்கா...''

''தெரியும் நீ எதற்காக என்னை டபாய்க்கிறாய் என்று... வைஜயந்தி வெடித்தாள். ''அரைகுறை கவுன் போட்டு விளையாடும் பெண்கள் பக்கம் நைசாக நீ ஒதுங்க முடியாது - நானும் கூட இருந்தால்... அதுதானே?''



''ஓகே. ஓகே'' ராம்தாஸ் இரண்டு கைகளையும் தூக்கி னார். ''நரேந்திரனுக்கு ஒரு கன்ட்ரோல் தேவைதான்... நீ என் னுடைய பிரைவேட் நர்ஸாக வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்...''

''தாஸ் என்றால் தாஸ்தான்'' வைஜயந்தி அவர் வழுக் கையில் ஒரு 'இச்சக்' வைத்தாள்.

## 6

மும்பை.

விலிங்டன் மைதானத்தின் விஸ்தீரணம்.

எண்ணூறு மீட்டர் ரேஸின் இறுதி கட்டத்தில் கலந்து கொள்ள மொத்தம் பதினாறு பெண்கள்.

நிவேதனா துடிப்பாக தன் வெள்ளைக் கோட்டின் ஆரம் பத்தில் நின்றாள்.

துப்பாக்கி உயர்த்தப்பட்டது. பாங் என்று வெடிக்கப் பட்டது. உடன், பாயும் சிறுத்தைகளைப் போல பெண்கள் ஓட ஆரம்பித்தார்கள்.

''கமான், நிவேதனா, கமான்'' நரேந்திரன் கூவினான். முதுகில் அடிபட்டான்.

''இது என்ன குதிரை ரேஸா? அங்கே ஜிம்னாஸ்டிக் போட்டி ஆரம்பமாகிவிட்டது. அதில் கலந்து கொள்ளாமல் இங்கே பெண்கள் கூட்டத்தை வேடிக்கை பார்க்க வந்து விட்டாயா? தாஸ் உன் காதைப் பிடித்து இழுத்து வரச் சொன்னார்.'' வைஜயந்தி மிளகாய் போல் வெடித்தாள்.

''நல்ல வேளை காதைத்தானே சொன்னார்!''

''என்னது!''

''ஒன்றுமில்லை, நட'' நரேந்திரன் நிவேதனா ஓடும் திசையில் ஒரு முத்தத்தை காற்றில் பறக்க விட்டான். ''டபிள் அப். நிவேதனா டபிள் அப்...''

வெற்றிக்கோடாக கட்டப்பட்டிருந்த ரிப்பனை நிவேதனா தான் முதலில் கிழித்துக் கொண்டு ஸ்லோமோஷனில் முடிவுக்கு வந்தாள்.

அங்கிருந்து நரேந்திரனை நோக்கி ஓடி வந்தாள். கப் என்று அவன் மீது பாய்ந்து கட்டிக் கொண்டாள்.

''நரேன்... உங்களால்தான் நான் ஜெயித்தேன்...''

''வி... விடு...'' நரேந்திரன் பதறிக் கொண்டு விலக்கினான். ''இவளுக்கு எதிரிலா இப்படிப் பாராட்டுவது!''

''யார் இது?''

''உன் மாமியார்'' வைஜயந்தி உர்ர் என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு ராம்தாஸிடம் ஓடினாள்.

நிவேதனா உதட்டைச் சுழித்து பழிப்பு காட்டிவிட்டு, ''நீங்கள் சொன்ன மாதிரியே என் கால்களுக்குக் கீழ் ஒரு கன்வேயர் பெல்ட் ஓடுவது போல இமாஜின் பண்ணினேன் நரேன். வெற்றிக் கம்பம் என்னை நோக்கி ஓடி வருவது போல நினைத்துக் கொண்டேன்... ஆட்டமாடிக்காக கால்களில் ஸ்பீடு வந்து விட்டது.''

''குட்... வா, ராம்தாஸ் காத்திருக்...''

நரேந்திரனின் குரலை அமுத்திக் கொண்டு அந்த சப்தம் வந்தது.

பத்து யானைவெடிகளை ஒன்றாக வெடித்தது போன்ற டமால் சத்தம். மைதானத்தின் ஒரு மூலையில் இருந்த காலரியிலிருந்து புகை கிளம்பியது. சுருண்டு சுருண்டு



மேலே ஏறியது. பார்வையாளர்கள் கெரஸின் கொட்டப்பட்ட எறும்புப் புற்றுபோல் கலைந்து பற்றி கூச்சலாக ஓடினார்கள்.

நரேந்திரன் நிவேதனாவை மறந்துவிட்டு அந்தப் பக்கம் ஓடினான். அவனுக்கு முன்னே ராம்தாஸ் ஆஜராகியிருந்தார். போலீஸ் தலைகள் சேர்ந்து கூட்டத்தை விலக்கின.

''ஆரம்பித்து விட்டான்'' என்றார் ராம்தாஸ், நரேந்திரனின் தோளில் கை போட்டு, ''அமளி அடங்கட்டும். நீ கண்களையும், காதுகளையும் ஷார்ப்பாக வைத்துக்கொள்...'' ராம்தாஸ் விலகினார்.

''என்ன ஆயிற்று நரேன்?''

''என்ன ஆயிற்று நரேன்?''

''இரண்டு பேரும் வந்து விட்டீர்களா? ஓகே. சண்டை போடாமல் கேளுங்கள் குண்டு வெடித்து விட்டது.''

''ஐயோ!''

''எத்தனை பேர் அவுட்?''

''காலியாயிருந்த பகுதியில்தான் வெடித்திருக்கிறது. உயிர்ச்சேதம் இல்லை. சொன்னபடி தொழிலில் இறங்கி விட்டார்கள் என்ற எச்சரிக்கையைக் கொடுக்கத்தான் இந்த டமால்.''

''நம்ம ட்ரிப் கேன்ஸலா?''

''நோ, நோ... பூகம்பமே வெடித்தாலும் நாம் சொய்ய் என்று கிளம்புகிறோம்...'' என்று நரேந்திரன் கையால் விமானம் விட்டு காண்பித்தான்.

கையிலிருந்த ரிப்போர்ட்டிலிருந்து தலையை நிமிர்த்தினார் மந்திரி.

''குண்டுக்கு எத்தனை பவர். எத்தனை சதுர அடிகளை சிதறடித்தது - இதெல்லாம் யார் கேட்டது? குண்டு வைத்தது யாரப்பா?''

''இம்மீடியட் எவிடென்ஸ் எதுவும் கிடைக்கவில்லை. மினிஸ்டர் சார்...'' என்றான் ஜோஷி. ''ஒரு சின்ன கிட்பாகில் வெடியை வைத்திருக்க வேண்டும். பையின் கான்வாஸ் கிழிந்து சிதறியிருந்தது....''

''ஓகே... இங்கே இந்தியாவில் நான் ஃபாலோ அப் பண்ணிக் கொள்கிறேன்... அமெரிக்கத் தீவிலாவது கொஞ்சம் அலர்ட்டாக இருங்கள்...''

''யெஸ் சார்...''

''நீங்கள் இரண்டு பேரும் எந்த ஃப்ளைட்டில் கிளம்பு கிறீர்கள்?''

''நாளைக்கு, அப்புறம் மினிஸ்டர் சார்... இன்றைக்கு ஒரு ஆள் சந்தேகப்படும்படியாய் இருந்தான்...''

''வாட்! யார் அது?''

''ஒரு மதராஸி... அருமையாக ஜிம்னாஸ்டிக் வேலையெல் லாம் செய்கிறான். அவன்கூட ஒரு ஆள் அவனுடைய குருபோல் இருந்தான்...''

''சந்தேகப்பட என்ன மேன்?''

''மெட்ராஸ் ஆட்களைக் கேட்டோம்... இதுவரை எந்த விளையாட்டுகளிலும் அந்த ஆளை இதற்கு முன் பார்த்த தில்லை. திடீரென்று வந்து ஒட்டிக் கொண்டிருக்கிறார் என்றார்கள்...''

''லீவ் ஹிம்... அவன் பெயர் நரேந்திரன். அவன் வருவது எனக்குத் தெரிந்துதான்... உண்மையில் அவன் உங்களுக்கு உதவியாகக் கூட இருப்பான்...''

''வெடித்து விட்டது!'' என்றான் சுலைமான். சொல்லி விட்டு ஓமரைத் தோளோடு அணைத்து நிமிர்ந்தான். ''ஏய், என்ன இது? புதுசாய் ஏதோ வாசனை வருகிறது உன்னிடம்!''



ஓமர் தன் சட்டைப் பையிலிருந்து அரை விரல் நீளத் திற்கிருந்த ஒரு வண்ண பாட்டிலை எடுத்துக் காண்பித்தான். ''இந்த தோஸ்த்தான் அந்த வாசனைக்குக் காரணம். தலைவலித் தைலம்...''

''தைலமா! செண்ட் போல் வாசனை அடிக்கிறது?''

''ஸ்பெஷல் தைலம். சிங்கப்பூரில் தயாராகிறது. இரண்டு துளித் தைலம் போட்டால் போதும் பயங்கரத் தலைவலிகூட பறந்துவிடும். பார், நான் ஏதோ விளம்பர வாசகம் போல் பேசு கிறேன்...'' ஓமர் சிரித்தான். தைல பாட்டிலை பாக்கெட்டில் வைத்தான். ''அடிக்கடி தலைவலி வருகிறது. எனவே இந்த தோஸ்த்தை எப்போதும் கைவசம் வைத்திருக்கிறேன்...''

''இந்தியாவுக்கு நிறைய ஸ்டாக் அனுப்பு... அவர்களுக் குத்தான் இப்போது தலைவலி ஆரம்பித்து விட்டது.'' சுலைமான் புன்னகைத்தான். ''நம்முடைய ஆள் வைத்த வெடி கவர்மெண்ட்டை ஆட வைத்துவிட்டது. தமிழ்த் தொண்டர் கழகத்தைச் சேர்ந்த ஏராள மனிதர்களை சந்தேகக் கேஸில் உள்ளே வைத்திருக்கிறார்கள், பாவம்.''

''நாம் பாரடைஸ் தீவுக்குப் போனதும், அந்த தலைவலி இன்னும் பூதாகரமாய் ஆகப் போகிறது'' ஓமர் தொடைகளில் தட்டிக் கொண்டு சிரித்தான்.

## 7

விமானம் சான்ஃபிரான்ஸிஸ்கோவின் நவீன விமான நிலையத்தில் தயங்கிவிட்டு புறப்பட்டது. வெள்ளை மேகங் களைக் கிழித்துப் பறந்தது. ஹவாய்த் தீவுகளை நோட்ட மிட்டது. பாரடைஸ் தீவில் அகாலமாய் இரவு மூன்று மணிக்கு இறங்கியது.

வானத்தில் விமானம் வட்டமிடும் போதே கண்ணாடி ஜன்னல்கள் வழியே தீவு மின்சார நெக்லஸ் போட்டிருந்தது. அதன் மினு மினு கடற்கரைகளில் வர்ண வர்ண சாமியா னார்கள்.

இரவைப் பகலாக்கும் வெள்ளை விளக்குகளின் மத்தியில் நாமம் போட்டது போல் ரன்வே. காற்றின் திசையை அனு சரித்து அந்த விமானம் ரன்வே நம்பர் மூன்றில் இறங்கியது.

உடன் காத்திருந்த ஜீப்கள் விமானத்திடம் பால் குடிப் பதுபோல் வந்து நின்றன. மூடுபாலம் நகர்ந்து விமான வாயிலை முத்தமிட, ஆட்கள், அவர்களின் பாகேஜ்களுடன் இறங்கினர். இறக்கப்பட்டனர். எளிமையான கஸ்டம்ஸ் பரிசோதனைகள், பேப்பர்கள் சரிபார்க்கப்பட்டு வெளியே காத்திருந்த பஸ்களில் ஏற்றப்பட்டார்கள்.

பஸ்கள் பெரிய பெரிய கண்ணாடிகளோடு, பெண் டிரை வர்களோடு வாய் நிறைய சிரிப்புகளோடு புத்தம் புது தார் சாலைகளில் வழுக்கி வெளியேறின. திட்டமிட்ட பாதையில் விரைந்து ஹோட்டல்களை அண்டின.

ஹோட்டல்களில் இந்தியர்களை வரவேற்க ஸ்பெஷல் குழு காத்திருந்தது. ஆளுக்கொரு சின்ன சந்தன மாலை யிட்டு நெற்றியில் கோணலாக குங்குமம் இட்டு அவரவர் அறைகளுக்குள் கொண்டு விடப்பட்டார்கள்.

''தாஸ், எனக்கு எங்கே படுக்கை? வைஜயந்தியின் ரூமிலா, நிவேதனாவின் ரூமிலா?'' நரேந்திரன் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு கேட்டான்.

''வாசலில் நீட்டி பார்த்துக் கொண்டு நிற்கிறானே, ஒரு நீக்ரோ - அவன் ரூமில்'' என்றார் ராம்தாஸ்.

''ஐயையோ!'' நரேந்திரன் பாய்ந்து அறைக்கதவை சாத்திக் கொண்டான்.



''கொஞ்சம் நேரம் தூங்குங்கள்'' என்றார் ராம்தாஸ். பெண் களிடம் நரேந்திரன் சாத்திய கதவைத் திறந்து உள்ளே நுழைந் தார். ''என் தலையெழுத்து - நான் உன்னுடைய ரூம்மேட்.''

அறையில் குளிரை எதிர்த்து ஹீட்டரின் ர்ர்ர்ர். ராம்தாஸ் கோட்டையும், ஷுக்களையும் கழற்றி விட்டு, மெத்தையில் ஏறிப் படுத்தார்.

அதுசரி, அந்த ஏர்ஹோஸ்டஸிடம் என்ன வழிந்து கொண் டிருந்தாய் நீ?''

''சொன்னால் கோபித்துக் கொள்வீர்கள் தாஸ்.''

''இல்லை. சொல்.''

''உங்களைக் காட்டி, 'கூடவே உங்கள் சமையல்காரரை யும் அழைத்து வர பர்மிஷன் வாங்கியிருக்கிறீர்களா?' என்று என்னைப் பார்த்து கிண்டலாகக் கேட்டாள் தாஸ்...''

''சமையல்காரன்! இது அவள் டயலாக்கா இல்லை. உன் சொந்தச் சரக்கா?''

''ஆஞ்சநேயர் சத்தியமாக அவள் சொன்னது.தாஸ்...''

''நீ என்ன பதில் சொன்னாய்?''

''ஒரு காபி கூட ஒழுங்காகப் போடத் தெரியாது, அவரைப். போய் சமையல்காரர் என்று கேட்கிறாயே, அவர் என் கோச் என்று பெருமையாக சொல்லிக் கொண்டேன், தாஸ்.''

''இரண்டு நாளாய் தூங்காதது உன் மூளையைக் கலக்கி யிருக்கிறது என்று நினைக்கிறேன்... கொஞ்சம் நேரம் தூங்கு'' ராம்தாஸ் போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டார்.

அதே ஹோட்டல். கீழ்த்தளத்தில் ஒரு அறையில் சுலை மானும், ஓமரும் விழித்திருந்தார்கள்.

''இந்தியர்கள் வந்து இறங்கி விட்டார்கள்.''

"ஆம். மொத்தம் நாற்பத்தைந்து பேர்."

"செக்யூரிட்டி ஏற்பாடுகள் பலமாயிருக்கின்றன..." "என்ன பெரிய செக்யூரிட்டி!" ஓமர் சிரித்தான். "எந்த அறைக்குள் நுழைய வேண்டும் சொல். நுழைந்துக் காட்டுகிறேன்..."

"நாளைக்கு ஹைஜம்ப் போட்டியில் கலந்து கொள்ளப் போகும் தர்ஷன்சிங்கின் அறை. ரூம் நம்பர் செவன்ட்டீன்."

"வா போவோம்."

இருவரும் எழுந்தார்கள். அறைக்கதவைத் திறந்து மெல்ல வெளிப்பட்டார்கள்.

தூரத்தில் நீல சீருடை போட்ட ஒரு அமெரிக்க காவலாளி கவுண்ட்டரில் போனில் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். நிழலோடு ஒதுங்கி இவர்கள் நடந்தார்கள். ஒவ்வொரு அறையாகக் கணக்கிட்டு முதுகைத் தேய்த்து நடந்து ரூம் எண் பதினேழு வந்ததும் நின்றார்கள்.

ஓமர் பெல்ட்டிலிருந்து ஒரு நீளமான இரும்புக் குச்சியை எடுத்து அறைப்பூட்டைக் கொஞ்சம் நோண்டினான்.

க்ளிக்.

கதவு திறந்து கொண்டது.

முட்டை ஓடைக் கையாள்வது போல் கதவை மெல்லத் தள்ளினான். விரல் நீள டார்ச்சை தயாராய் வைத்துக் கொண்டான்.

கட்டிலில் சிங் அதற்குள் குறட்டைகளில் இறங்கியிருந்தான்.

ஓமர் தரையில் உட்கார்ந்து, கட்டிலுக்கடியிலிருந்து சிங்கின் தோள் பையை வெளியே இழுத்தான். அதன் ஜிப்பை விடுவித்து உள்ளே கை விட்டு, டிராக் ஷூக்களை எடுத்தான். அடியில் ஆணித்தலைகள் பதித்த கான்வாஸ் ஷூக்கள்.



கையிலிருந்த கத்தியால் ஷூவின் அடியில் ஒரு கீறல் போட்டு, ரப்பர் பாகத்தை உரித்தான்.

சுலைமான் தன் பாக்கெட்டிலிருந்து பட்டையாக அரை ஸ்லைஸ் பிரெட் அளவிற்கு இருந்த ஒரு வஸ்துவை எடுத்து நீட்டினான். ஓமர் அதை அந்த ஷூ பிளவில் வைத்தான்.

பாட்டரி சக்தியில் ஒரு எலக்ட்ரானிக் கடிகாரம் சத்தமில்லாமல் மணி 4.55 என்று பச்சைக் கண் சிமிட்டியது.

ஓமர் வேறு ஒரு விசையை அழுத்தி காலை 9.30 என்று நேரத்தை அமைத்தான். அந்த கடிகாரத்தின் மீது உயர்ரக பசை தடவப்பட்டிருக்க, பிரித்த ரப்பர் பகுதியை அதன் மீது வைத்து அழுத்த பச்சக் என்று ஒட்டிக் கொண்டது.

இப்போது அந்த கடிகாரம் ஷூவின் அமைப்பிற்குள் முற்றிலும் ஒளிந்துவிட, மெலிதான வீக்கம் மட்டுமே தெரிந்தது.

திருப்தியோடு சிரித்துக் கொண்டான். ஷூக்களை பழையபடி அந்த பையில் போட்டு கட்டிலுக்கடியில் தள்ளினான்.

"வா, போய் விடுவோம்" என்று சுலைமானுக்கு சைகை செய்தான்.

பாரடைஸ் தீவில் சூரியன் பூ மத்தாப்பு போல் வெளிச்சத்தை அவிழ்த்து விட்டான். மேகக் கந்தல்கள் வழியே வடிகட்டப்பட்டு ஸோலார் கதிர்கள் அந்த தீவின் ரம்மியத்தைக் குளிப்பாட்டின.

தீவின் கிழக்கு மூலையில் இருந்த உயரமான டவர் கட்டிடத்தின் வாசலில் அந்த ஜீப் சர்ர்ர் என்று வந்து நின்றது.

லெஃப்ட்டினன்ட் நெல்சன் ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினான். முப்பத்து நான்கு வயது. பிரத்யேகமான உயரம். எழுபத்தி இரண்டு கிலோ. விறைப்பான நடை. காரிடாரில் நடந்து கண்ணாடி தள்ளுகதவைத் திறந்து, அட்டென்ஷனுக்கு வந்தான்.

மேஜைக்குப் பின்னே உட்கார்ந்திருந்த மார்ட்டின் நிமிர்ந்தார்.

"குட் மார்னிங் நெல்சன்."

''எல்லா நாடுகளும் வந்தாயிற்றா நெல்சன்?''

''ஸாம்பியா மற்றும் ஸ்ரீலங்கா தவிர...''

''பாதுகாப்பு ஏற்பாடுகள்?''

''அந்தந்த நாட்டின் தூதுவரின் அனுமதிச் சீட்டு வைத்திருந்த விளையாட்டு வீரர்களை மட்டும்தான் தீவுக்குள் அனுமதித்திருக்கிறோம். நான்கு பேரிடம் குறிப்பிட்ட சீட்டு இல்லை என்று சான்ஃபிரான்ஸிஸ்கோவிலேயே நிறுத்தி வைத்திருக்கிறோம்.

''எல்லார் மீதும் கவனம் வை. முக்கியமாய் இந்தியர்களை அவர்களைத் தாக்கப் போவதாகத்தான் பயமுறுத்தல்...''

''எஸ் மார்ட்டின்.''

''உன் ஷிஃப்ட் மறுபடியும் மதியம் இரண்டு மணிக்கு. அதுவரை ஓய்வெடு, போ...''

''மார்ட்டின், ஒரு விஷயம்... விளையாட்டு கிராமம் என்று ஒன்றை அமைத்திருக்கிறோமே. அங்கே தானே அத்லெட்களை தங்க வைப்பதாக ஏற்பாடு? அப்புறம் எதற்காக இந்த ஹோட்டல்கள்?''

''ஹோட்டல்கள் இரண்டு நாட்களுக்கு மட்டும் தான். நம் டாக்டர் செக்கப் செய்து எந்தவித தொற்று நோயும் இல்லை என்று ஊர்ஜிதம் செய்த வீரர்களை மட்டும் வில்லேஜிற்குள் அனுமதிக்கும் படி உத்தரவு. எய்ட்ஸ் பிராப்ளம்... ஓகே, நீ போ...''

''நெல்சன் நகர்ந்ததும், மார்ட்டின் அன்றைய அட்டவணையை எடுத்துப் பார்த்தார்.

| TIME | GAME | VENUE |
|---|---|---|
| 8.30 | SWIMMING | LINCON STADIUM |
| 8.30 | HOCKEY | NIXON STADIUM |
| 9.00 | ATHLETICS (1) | KENNEDY STADIUM |
| 9.00 | ATHLETICS (2) | ROOSEVELT STADIUM |
| 9.30 | LAWN TENNIS | DONALD STADIUM |
| 9.30 | TABLE TENNIS | MICKEY STADIUM |



என்று பட்டியல் நீண்டது.

எல்லாம் இதுவரை ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது இதுவரை!

எந்த விளையாட்டைப் போய் வேடிக்கை பார்க்கலாம் என்று சற்று நேரம் யோசித்தனர்.

கென்னடி ஸ்டேடியத்தில் நடக்கும் ஹை ஜம்ப் ப்ரிலிமினரிப் போட்டிக்குப் போகலாம் என்று தீர்மானம் செய்தார்.

நரேந்திரன் நீளமான சோம்பலை உதறி எழுந்த போது, ராம்தாஸின் படுக்கை காலியாக இருந்தது.

எழுந்து, பல்தேய்த்து, காபி என்ற பெல்லை அழுத்தினான். பால் கலக்காத காபி வெள்ளி கூஜாவில் வந்தது. கப்பை அவன் காலியாக்கிய நேரம் கதவு திறந்து ராம்தாஸ் நுழைந்தார்.

''தாஸ் எங்கே போய் விட்டீர்கள். அதுவும் வெறும் பனியனோடு?''

''மொட்டை மாடிக்கு... மார்னிங் எக்ஸர்ஸைஸ்'' ராம்தாஸ் உடம்பு வியர்வையை பெரிய டர்க்கி டவலால் துடைத்துக் கொண்டே சொன்னார்.

''ரூமுக்குள்ளேயே எனக்கு குளிர் தொடையை நடுக்குகிறது. மாடியில் போயா எக்ஸர்ஸைஸ் செய்தீர்கள்!''

Zooவிலிருந்து தப்பித்த மிருகத்தைப் பார்ப்பது போல் பார்த்தான்.

''க்விக், கிளம்பு. கொஞ்சம் பிராக்டீஸ் பண்ணி விட்டு வந்த பிறகுதான் பிரேக்ஃபாஸ்ட்'' என்றார் ராம்தாஸ்.

நரேந்திரன் மூக்கால் அழுது கொண்டே டிரெஸ் மாற்றினான்.

ரன்னிங் டிராக்கில் நிவேதனா தம்தம் என்று ஓடினாள். வைஜயந்தி வாட்ச் பார்த்து கையசைத்தாள்.

சற்று தூரத்திலிருந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த ஆட்களை அவள் கவனிக்கவில்லை.

''இரண்டு குட்டிகளையும் பார். டிராக் சூட்டில் தள தளவென்று இருக்கின்றன. உனக்கு ஒன்று, எனக்கு ஒன்று'' என்றான் சுலைமான்.

''இண்டியன் கேர்ள்ஸ். நாமும் அனுபவித்தது மாதிரி இருக்கும். இந்தியர்களை தீர்த்துக் கட்டியது போலவும் இருக்கும்... நாளைக்கு வைத்துக் கொள்வோம்... அதற்குள் எப்படியும் அவர்கள் அத்லெட்ஸ் வில்லேஜிற்குள் வந்து விடுவார்கள்'' என்று ஆமோதித்தான் ஓமர்.

''சரி, மணி ஒன்பது ஆகிறது. இன்றைய ஹைஜம்ப் விளையாட்டுக்களை நாம் மிஸ் பண்ணக்கூடாது. வா...'' என்று ஓமரை இழுத்தான் சுலைமான்.

''தாஸ், நாம் எந்த விளையாட்டை வேடிக்கை பார்க்கப் போகலாம்?'' வைஜயந்தி சிணுங்களாய்க் கேட்டாள்.

''ஆஸ் யூ ப்ளீஸ்...'' ராம்தாஸ் தோள்களை அமெரிக்கப் பாணியில் குலுக்கிவிட்டு ஜாம் தடவிய ரொட்டித் துண்டத்தை வாயில் திணித்தார்.

''போல்வால்?''

''அதென்ன போல்வால் குதிரைவால் போல?''

''ஐயோ, உன் ஸீரோ ஐ க்யூவை இங்கே காட்டாதே நரேன்... ஒரு குச்சியை வைத்துக் கொண்டு ஹை ஜம்ப் செய்வார்களே, பார்த்ததில்லை? அது தான் போல்வால்...''

''எங்கே நடக்கிறது இப்போது?''

''கென்னடி ஸ்டேடியம்... இன்னும் ஐந்து நிமிடத்தில் பஸ் புறப்படுகிறது...''



## 8

கென்னடி ஸ்டேடியம்.

சுமார் இருபதாயிரம் பேர் ஒரே சமயத்தில் அமர்ந்து பார்க்க வசதி. முட்டை வடிவ கிரவுண்டு பரப்பை மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தது.

''ஹை ஜம்ப். லாங் ஜம்ப். போல்வால்.

வீரர்களும், வீராங்கனைகளும், தத்தம் கோச்களிடத்தில் கடைசி நிமிட கீதோபதேசம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். விளம்பரக்காரர்கள் பெயரை அச்சிட்ட டவல்களால் வியர்வையை துடைத்துக் கொண்டார்கள். போட்டிகளுக்கு தயாரானார்கள். ப்ரிலிமினரியில் வெற்றி பெற்றால்தான் ஸெமிஃபைனல் எல்லாம்!

தர்ஷன்சிங் கண்களை மூடிக் கொண்டான். சீக்கிய கடவுள்களை பிரார்த்தனை செய்தான். தான் தாண்ட வேண்டிய உயரத்தை தூரத்திலிருந்து பார்த்தான். அந்த உயரக் குறுக்குக் கழியைத் தாண்டியதும் அதன் பின்னால் இருந்த இரண்டரை அடி உயர ரப்பர் குஷனில் தான் மெத்தென்று இறங்கும் போது, ஸ்டேடியத்தின் கிளம்பப் போகும் கர கோஷத்தை நினைத்தான். இந்தப் போட்டியில் புது உலக ரிக்கார்டு படைக்கப் போகிறேன் என இந்தியாவிற்கு புகழை வாங்கித் தரப் போகிறேன்...

ஷூவைத் தரையில் உதைத்துக் கொண்டான்.

வலது காலை விட இடது காலை ஷூ சற்று மாறுபட்டிருந்தது போல் இருந்தது. எதுவாயிருந்தாலும் போட்டி முடிந்த பின்தான் பார்க்கப் போகிறேன்.

ஸீக்கோ நிறுவனத்தினர் அமைத்திருந்த பிரம்மாண்ட கடிகாரம் எலெக்ட்ரானிக் உபயத்தில் 9.28 AM என்று பளிச்சிட்ட போது, தர்ஷன்சிங்கின் பெயர் கூப்பிடப்பட்டது.

பன்னிரண்டு அடி உயரக் கம்பை எடுத்துக் கொண்டான். அதன் நுனியில் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு, இருபதடிகள் வேகமாக ஓடினான். கம்பை சட்டென்று தரையில் ஊன்றி, உடலைத் தூக்கினான். கம்பு நாணேற்றப் பட்ட வில்லைப்போல் வளைந்து அவனை அந்தரத்தில் தாக்கியது.

தர்ஷன்சிங்கின் உடல் பூமியிலிருந்து பன்னிரண்டரை அடி உயரத்தில் இருந்த போது, ஒரு தீபாவளி வெடிபோல அந்தரத்தில் வெடித்தான். அவனுடைய இடது கால் தனியே கழன்று வட்டமடித்து சிதறியது. அவனுடைய அலறல் ஸ்டேடியத்தை உலுக்கியது. மிகுந்த பொருட்செலவில் அமைந்திருந்த ரப்பர் குஷன் மீது சிதறினான். பெயிண்ட் டப்பாவைக் கை தவறவிட்டது போல் ரத்தம் பூப்பூவாய்ப் பரவியது.

தர்ஷன்சிங் தரையைத் தொட்டபோது, நினைவுகள் இழந்திருந்தான்.

ஸ்டேடியம் மொத்தமும் இரண்டு கால்களில் எழுந்து நின்றது.

எலிக்குஞ்சைப் பார்த்துவிட்ட காகத்தின் வேகத்தோடு எங்கிருந்தோ ஒரு ஆம்புலன்ஸ் அலறிக் கொண்டு வந்தது. தர்ஷன்சிங் அள்ளப்பட்டான். சீருடை அணிந்த போலீஸ் வீரர்கள் அவசர மனித சங்கிலி அமைத்து பிரதேசத்தை வளைத்துக் கொண்டார்கள். காட்சியைக் கண்டு மயக்கமாகி விட்ட பெண்கள் காலரியிலிருந்து அகற்றப்பட்டார்கள்.

ராம்தாஸ் நரேந்திரனின் தோளில் தட்டினார்.



"நம் மூக்குக்குக் கீழேயே மறுபடியும் வெடித்து விட்டார்கள்... வைஜ், நீ நிவேதனாவை அழைத்துக் கொண்டு ரூமுக்குத் திரும்பு. நானும் நரேனும் இதைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்துவிட்டு வருகிறோம்..."

வெளுத்துப் போயிருந்த முகத்துடன் நிவேதனா வைஜயந்தியின் கையை ஆதரவுக்காகப் பிடித்துக் கொண்டு காலரிப் படிகளில் இறங்க ஆரம்பித்தாள்.

'PRESS' என்று போட்டிருந்த பகுதியில் ஜோஷி துடிப்பாயிருந்தான். கண்களில் பைனாக்குலரைப் பொருத்திக் கொண்டு கூட்டத்தை ஆராய்ந்தான். ஒவ்வொரு முகமாக, ஒவ்வொரு முகமாக.

விபத்து நடந்தவுடன் வினாடி கூட வீணாக்காமல் ஆராய்ந்தால்தான் ஏதாவது பிரேக் அவனுக்கு கிடைக்கலாம்.

ஜோஷி மிக ஆர்வமாக, மிகத் துடிப்பாக எதிர்பார்த்த அந்த பிரேக் அவனுக்கு எதிர்காலரியில் கிடைத்தது.

இரண்டு ஆசாமிகள் அத்தனை ஆரவாரத்திலும் அதிக சலனமில்லாமல் நிதானமாக இறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் அதிர்ச்சிக்கு பதிலாக மெலிதான திருப்தி.

ஜோஷியின் எச்சரிக்கை மணி மண்டைக்குள் வீய்ங் வீய்ங் என்று அடித்தது.

தாக்கர், இந்தியர்கள் பங்கு கொள்ளும் இன்னொரு ஸ்டேடியத்தில் இருந்தான். அவனுக்காகக் காத்திருப்பது முட்டாள் தனம்.

அந்த இருவரையும் கவனிக்க ஜோஷி முடிவு செய்தான். பைனாக்குலரைத் தோளில் தொங்க விட்டு படிகளில் சரிந்து இறங்கினான்.

ஸ்டேடியத்தை விட்டு வெளிப்பட்டார்கள்.

இருபதடி இடைவெளிவிட்டு ஜோஷி தொடர்ந்தான்.

கொண்டையில் நீல விளக்கு சுழல விட்டு, சைரன் களுடன் சில போலீஸ்கார்கள் கடந்து போயின.

ஸ்டேடியத்தின் நாக்கு போல நீண்டிருந்த பிரதான தார் சாலையிலிருந்து பல தெருக்கள் பிரிந்தன.

அவர்கள் நுழைந்த தெருவில் ஜோஷியும் நுழைந்தான்.

பம்பரோடு பம்பர் முத்தமிட்டு கார்கள் வரிசையாக நின் றிருக்க, கடைவீதியில் செல்வந்தர்கள் தத்தம் மனைவிகளின், சமயத்தில் பிற மனைவிகளின் காதல் தடவிய தொந்தர விற்கு தங்கள் பர்ஸ்களை இழந்து கொண்டிருந்தார்கள்.

விளையாட்டை வேடிக்கை பார்க்க உலக நாடுகளி லிருந்து வந்து குவியும் மனிதர்களின் டூரிஸ்ட் ஆர்வங்களைத் தூண்டி விடுவதற்காகவே, பாரடைஸ் தீவில் அத்தனை சபலங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

கையையும், கழுத்தையும் நுழைக்கக் கூடிய துளைகளைத் தைத்து விட்டால், எழுபது கிலோ அரிசியை மூட்டை கட்ட லாம் போன்ற அளவுகளில் ஸ்போர்ட்ஸ் பனியன்கள், ஷூக் கள், ஜாக்கெட்டுகள், ஹாக்கி மட்டைகள், டென்னிஸ் ராக் கெட்கள்.

பெண்களுக்கான ஸ்ப்ரே செண்ட், லிப்ஸ்டிக் சமுத்திரம்.

ஒரு கடையில் சில பையன்களின் எலெக்ட்ரானிக் திரு கல்களுக்குக் கட்டுப்பட்டு வீடியோ விளையாட்டில் ராட் சஸர்களும், தேவர்களும் ஏராள இரைச்சல்களோடு யுத்தத் தில் இருந்தார்கள்.

மீட்டர் போட்ட ஒன்றிரண்டு டாக்ஸிகள் காலியாக விரைய, அந்த இருவரும் குறுக்கு சந்து ஒன்றில் புகுந்ததை ஜோஷி கவனித்தான்.



இன்னும் சற்று தூரத்தில் கடற்கரை.

கடற்கரை பாவென்று திறந்து போட்ட முதுகுபோல் பரந் திருந்தது. அங்கே அவர்களை நிழலாய் தொடர்வது கஷ்டம்.

கடற்கரைக்கு சாலை திரும்பும் இடத்தில்தான் அந்த ஹோட்டல் இருந்தது. ஜோஷியும், தாக்கரும் தங்கியிருந்த ஹோட்டல்.

ஜோஷி அந்தக் கட்டிடத்திலிருந்து சற்று விலகி அவர் களைக் கவனித்தான். கடற்கரை மணலில் நடந்து தூரத்தில் கரையோரம் தாண்டிக் கொண்டிருந்த ஒரு படகை நோக்கி அவர்கள் நடந்தார்கள்.

ஜோஷிக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. ரிவால் வர் ஹோட்டல் ரூமிலேயே இருந்தது. அது கையில் இருந் தால் ஒரு தைரியம். அவர்கள் படகில் குதித்து ஏறியதும், அவசரமாக ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

ஐந்து நிமிடங்களுக்குப் பின் அவன் ஹோட்டலிலிருந்து வெளிப்பட்டபோது, ரிவால்வர் இடுப்பில் பத்திரமாக இருந்தது.

அமுக்கான கடற்கரை அனாதையாக வெயிலில் காய்ந்தது.

ஜோஷி கூடியவரை இயல்பாக நடப்பது போல் நடந்தான். நேர்ப்பாதையில் போகாமல் ஒரு அரை வட்டம் போட்டு அந்த படகை நெருங்கினான். படகு மெல்ல தண்ணீர் கட்டளை யிட்டபடி அசைந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தான்.

பசிபிக் பெருங்கடலின் அடக்கமான இரைச்சல், மற்றபடி நிசப்தம்.

படகின் விளிம்புப் பலகையைப் பிடித்து ஜம்ப் செய்து ஏறினான். படகு நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே

எண்ணெய்ப் பிசுக்கு. கிரீஸின் அழுக்கு. சில காலி டிரம்கள். பழுதாகிவிட்ட என்ஜின் திறந்து துருப்பிடித்து கிடந்தது. பெரிய படகு.

ஜோஷி பலகையில் சப்தம் செய்யாமல் நடந்தான்.

இருபதடி தள்ளி மரக்காபின். அதிலிருந்து கசியும் மெல்லிய குரல்கள்.

ஜோஷி காபினின் ஜன்னலை அண்டினான். சாத்திய கதவில் காதை வைத்தான். சட்டென்று அந்தக் கதவு திறந்தது. இரண்டு கைகள் அவன் முகத்தை அப்படியே பிடித்தன. விலுக்கென்று உள்ளே இழுத்தன.

ஜோஷி திமிறினான். தன் ரிவால்வரை உயர்த்தினான். உயர்த்திய கையை ஓமர் வெட்டினான். ஜூடோ வெட்டு. கை தொய்ந்து போக, ரிவால்வர் மரத்தரையில் தத் என்று விழுந்தது. ஜோஷி மண்டையை ஓமரின் நெஞ்சில் மோதினான். ஓமர் சட்டைப்பையில் வைத்திருந்த தலைவலித் தைலம் உடைந்து உடல் எங்கும் பரவ, ஓமர் ஆக்ரோஷமானான். ஜோஷியின் கைகளை கப்பென்று மடக்கி, பின்புறம் இழுத்துப் போய் அவன் நடுமுதுகில் முழங்காலை வைத்து அழுத்தம் கொடுத்தான்.

சுலைமான் ஜோஷியின் தலைமுடியைக் கொத்தாகப் பற்றி முழு வேகத்துடன் தரையில் மோதினான்.

ஜோஷியின் மூக்குத் தண்டு காரெட் போல் நசுங்கியது. தக்காளி போல் பிதுங்கியது ரத்தம். உதடு கிழிந்து, பற்கள் இடம் பெயர்ந்து... மறுபடியும் ரத்தம்.

''யார் நீ?'' என்றான் ஓமர். ஜோஷியின் தலையை உலுக்கி நிமிர்த்தி. ''எங்களை வேவு பார்க்கும்படி யார் உன்னை அனுப்பினார்கள்?''

ஜோஷி பதில் சொல்லாமல் மறுப்பாக தலையை அசைத்தான்.



உடன் முதுகுத் தண்டு முறிக்கப்பட்டது போல் வலி.

''சொல்... யார் நீ?''

''சாதாரண பத்திரிகை ரிப்போர்ட்டர்'' என்றான் ஜோஷி ரத்தத்தைத் துப்பி.

''பொய்! நீ வேவு பார்க்க அனுப்பப்பட்டவன். இல்லாவிட்டால் உன்னிடம் துப்பாக்கி எதற்கு?'' ஓமர் இன்னும் கொஞ்சம் அழுத்தினான். ''கமான், உன்னுடன் இன்னும் யார் யார் வேவு பார்க்க வந்திருக்கிறார்கள்?''

''யா... யாரும் இல்லை...''

ஓமர் விருட்டென்று ஜோஷியின் கைகளைப் பின்னே உலுக்கி இழுத்தான். ''இன்னும் ஒரு ஆள். ஒரே ஒரு ஆள் தான்...'' என்று அலறினான் ஜோஷி. ''அவன் பெயர் தாக்கர்.''

சுலைமான் தன் கைக்குட்டையை உதறி சுருட்டினான். ஜோஷியின் கழுத்தில் போட்டான். இறுக்க ஆரம்பித்தான்.

''ஜோஷியின் தலை கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து அப்புறம் பட்டென்று தொய்ந்தது.

மார்ட்டின் முகம் சிவந்திருந்தார்.

மெஷின் துப்பாக்கி போல படபடவென்று டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார்.

''யெஸ்... நானே என் கண்களால் பார்த்தேன்... அவன் அந்தரத்தில் வெடித்ததை, குண்டு அவன் காலில் பொருத்தப்பட்டிருக்கலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்...

தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்ட நெல்சன் அதே அறையில் நகத்தைக் கடித்துத் துப்பினான். போலீஸ்காரர்களின் விசாரணை ரிப்போர்ட்களைப் படித்தான். டாக்டர்களின் கருத்தைப் படித்தான்.

'இறந்து போன தர்ஷன் சிங் இடது பாதத்தில் அணிந்திருந்த ஷூவிற்குள் தான் டைம்பாம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். மிக மெலிதான எலக்ட்ரானிக் கடிகாரம் இணைத்த வெடி குண்டு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வெடியின் அதிர்ச்சியே தர்ஷன்சிங்கின் உயிர் பிரியக் காரணம் என்று இந்த மருத்துவக் குழு கருத்து தெரிவிக்கிறது.'

மார்ட்டின் ரிசீவரை எறிந்துவிட்டு தன் இருக்கையில் தொய்ந்து உட்கார்ந்தார்.

''நெல்சன்... பிரச்சனை நியூட்ரான் பாம் போல் வெடித்து விட்டது. அதற்குள் வெள்ளை மாளிகையிலிருந்து போன். டெலக்ஸ்... நீங்களெல்லாம் என்ன காலரியில் உட்கார்ந்து கைதட்டவா போனீர்கள் என்று நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல் கேட்கிறார்கள்... குண்டு வைத்த ஆட்களை இன்று மாலைக்குள் என் காலடியில் கொண்டு வந்து நீ போட வேண்டும்...'' மார்ட்டின் கையைக் குவித்து ஆத்திரத்தோடு மேஜையில் குத்தினார்.

மேஜையில் இருந்ததெல்லாம் ஒரு முறை துள்ளி உட்கார்ந்தன.

கதவு இரண்டு முறை தட்டப்பட்டது. திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன் கழுத்தில் காமிரா ஃப்ளாஷுடன் தொங்கியது.

''நோ...'' மார்ட்டின் துர்வாசர் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''நியூஸ் ரிப்போர்ட்டர்களுக்கு கொடுக்குமளவு எதுவும் கண்டு பிடிக்கவில்லை... ப்ளீஸ் போய் விடுங்கள்.''

நெல்சன் எழுந்து அந்த நியூஸ் ரிப்போர்ட்டரை நெருங்கினான். தன் சிகரெட் பாக்கெட்டை நீட்டினான்... ''மாலையில் வாருங்களேன், ஏதாவது சொல்ல முடிகிறதா பார்ப்



போம்...'' என்று நட்பாகத் தோளில் கை வைத்து வாசல் வரை தள்ளிக் கொண்டு போனான்.

''ஷ்யூர்? ஈவினிங் நிச்சயம் நியூஸ் தர வேண்டும்'' என்று புலம்பிக் கொண்டே அந்த ஆள் விலகியதும். எதிரே வந்து நின்ற ஆட்களை நிமிர்ந்து பார்த்தான்.

''யெஸ்?''

''என் பெயர் ராம்தாஸ்...'' என்றார் ராம்தாஸ்.. பைப்பை ஊதிக் கொண்டே...'' இது நரேந்திரன்... நாங்கள் இந்தியாவிலிருந்து வருகிறோம்.

''அதுதான் கறுப்பு மூஞ்சியைப் பார்த்ததும் தெரிகிறதே, என்ன வேண்டும் உங்களுக்கு?'' நெல்சன் குரைத்தான்.

''மரியாதையாகப் பேசு பிரதர்'' நரேந்திரன் உஷ்ணமாகச் சொன்னான். ''எங்கள் ஆள் ஒருவன் வெடித்துச் சிதறினானே, அது பற்றி விசாரிக்க வந்திருக்கிறோம்...''

''நீங்கள் யார் எங்களை விசாரிக்க?''

''நாம் கொஞ்சம் பொறுமையாகப் பேசுவோமா?'' ராம்தாஸ் நெல்சனிடம் மிருதுவாகச் சொன்னார். ''நாங்கள் இந்திய வீரர்களின் பாதுகாப்புக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம்... இன்றைக்கு நடந்த விபத்து பற்றி டாக்டர்களின் ரிப்போர்ட்டும், நிபுணர்களின் கருத்தும் கிடைத்தால் எந்த ரீதியில் ஆராய்வது என்று எங்களுக்கு திட்டமிட வசதியாயிருக்கும்.''

''இந்திய நாய்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது என்பதே ஒரு வேண்டாத வேலை. இதில் உங்கள் கேள்விகளுக்கு பதிலளித்து நேரத்தை வீணடிக்க எனக்கு விருப்பமில்லை...''

''மிஸ்டர், மரியாதையாகப் பேசுங்கள்...''

''பேசாவிட்டால் என்ன செய்து விடுவாய்? கெட் லாஸ்ட் யூ பிக்ஸ்.''

''தாஸ். நம்மைப் பன்றி என்று திட்டுகிறான்...''

''இனிமேல் திட்டமாட்டான். இல்லை நண்பா?'' ராம்தாஸ் நெல்சனின் கழுத்தில் கையை நெக்லஸ் போல் வைத்து ஒற்றை விரலால் அழுத்தினார்.

அலறுவதற்காக, புலம்புவதற்காக நெல்சன் வாயைப் பெரிதாகத் திறந்தான். திறந்து திறந்து மூடினான். ஒரு இருமல் சத்தம் கூட வரவில்லை. கிலி பாய்ந்த கண்களால் ராம்தாஸைப் பார்த்தான்.

நரேந்திரன் ஆச்சரியம் மிகுந்த கண்களால் ராம்தாஸைப் பார்த்தான். ''தாஸ், என்ன செய்தீர்கள் அவனை?''

''அவன் தொண்டைக்கு ரெஸ்ட் கொடுத்திருக்கிறேன்...''

''தாஸ்... எப்படி தாஸ்... ஒற்றை விரலால் அழுத்தி... வர்மக் கலையா தாஸ்?''

''அது என்ன கலை என்று உனக்கு எதற்கு? இவனால் உபயோகமில்லை. வா, போவோம்...''

''தாஸ், இது டெம்பரரிதானே? இல்லை பர்மனென்ட்டாக ஊமையாக்கி விட்டீர்களா?''

''டெம்பரரியாக செய்யத்தான் நினைத்தேன்... ஆனால் அந்த ஆள் பொல பொல என்று புலம்பியதில் என் கான்ஸன்ட்ரேஷன் தவறியிருந்தால் அது என் தப்பில்லை...''

நெல்சன் தொண்டையை அழுத்திக் கொண்டு பல முயற்சிகள் செய்தன. ஊம் ஹூம், குரல் வரவே இல்லை.

''உன் கை சும்மா இருந்தால் யாரிடமாவது போய் புகார் எழுதினாலும் எழுதுவாய்...'' ராம்தாஸ் நெல்சனின் கையைப் பிடித்து சொடுக்கு எடுத்தார். அவன் உதறிக் கொண்டான். ஆனால் அதற்கப்புறம் விரல்கள் மடங்கவே இல்லை.''



''என்ன சத்தம் அங்கே?'' என்று கேட்டுக் கொண்டே மார்ட்டின் வெளியே எழுந்துவர, ராம்தாஸும், நரேந்திரனும் நிழலில் கலந்தார்கள்.

## 9

அன்றைக்கு மாலை, லிங்கன் ஸ்டேடியத்தில் வரவேற்பு ஊர்வலம். எல்லா நாட்டிலிருந்தும் ஆட்கள் வேஷம் கட்டி விதவிதமாய் டான்ஸ் ஆடினர். மனிதத் தலைகள் டிஸைன் போட்டு டி.வி. காமிராக்கள் வழியே உலகெங்கும் கைதட்டல்கள் வாங்கின. அமெரிக்க ஜனாதிபதி தன் மனைவியுடன். முகமெங்கும் சுருக்கங்களுடன் கைதட்டி சந்தோஷத்தைக் காட்டினார்.

''வைஜ. வாயேன்... நாமும் மைதானத்தில் இறங்கி ஒரு காம டான்ஸ் ஆடிக் காட்டுவோம்...'' நரேந்திரன் வைஜயந்தியின் ஸல்வாரைப் பிடித்து இழுத்தான்.

''வ்வாட்! என்னை காம டான்ஸ் ஆடக் கூப்பிட உனக்கு எத்தனை தைரியம்?'' வைஜயந்தியின் உதடுகள் படபடவென்று துடித்தன.

''ஸ்ஸ்... காமன் டான்ஸ் என்றேன்... அதாவது பொதுவான நடனம்.''

''யூ ஆர் ரியல்லி நாட்டி!'' நிவேதனா மனம் விட்டுச் சிரித்தாள்.

மைதானத்தில் ஆப்ரிக்க பிளேயர்கள் உடம்பு முழுக்க பெயிண்ட் அடித்துக் கொண்டு, காமா சோமாவென்று உடம்பைக் குலுக்கினார்கள். இந்தியர்கள், சுப்புடு எப்படியும் இங்கே வரவில்லை என்ற தைரியத்தில், கைக்கு வந்த

அபிநயம் செய்து பரதநாட்டியம் ஆடினார்கள். ரஷ்யர்கள் கோந்து போட்டு கட்டை விரலை மட்டும் பூமியோடு ஒட்டிக் கொண்டதுபோல் சுழன்று சுழன்று பாலே என்றார்கள்.

கீழ்வரிசையிலிருந்து யாரோ நரேந்திரனின் பாண்ட்டைப் பிடித்து இழுத்தார்கள், குனிந்து பார்த்தான்.

இந்திய முகம், மெலிதான மீசை வைத்து, தலையை மிலிட்டிரி கிராப் வைத்த இளைஞன்.

''மிஸ்டர் நரேந்திரன்?'' என்றான் மெல்லிய குரலில்.

''நானேதான்.''

''உங்களுடன் பேச வேண்டுமே?''

''நீங்கள்?''

''என் பெயர் தாக்கர்.''

''சேதுமாதவன் சொன்னாரே, சி.பி.ஐ.யிலிருந்து இரண்டு பேர் வருவதாக.. இவனாய் இருக்கும்... போய் வா'' என்றார் ராம்தாஸ் கிசுகிசுப்பாக.

நரேந்திரன் தன் பெல்ட்டுக்குப்பின்னே செருகிய ரிவால்வரைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வைஜயந்தியை சோகமாகப் பார்த்தான்.

''வைஜ்... ராத்திரி உன் ரூமுக்கு வந்து...''

''ஏய்!''

''குட்நைட் சொல்வேன் என்று செல்ல வந்தேன்...'' நரேந்திரன் மனிதர்களை அதிகம் மிதிக்காமல் மெதுவாக காலரி வரிசைகளில் தாக்கருக்குப் பின்னே இறங்கினான். நடு வழியில் நிற்க வேண்டி வந்தது.

''டோண்ட் டிஸ்டர்ப்'' என்று ஒரு அமெரிக்க குண்டு மாது பாதையை விட்டு நெளிய மறுத்தாள்.



நரேந்திரன் வாயருகே கையைப் பொத்திக் கொண்டு 'உவ்வே' என்று ஒரு ஒலி கொடுத்ததும், மேலே வாந்தி எடுத்துவிடப் போகிறான் என்ற பயத்துடன் சட்டென்று விலகிக் கொண்டாள்.

''தாங்க்யூ'' என்று நரேந்திரன் சிரித்தான். அவள் கன்னத்தை ஒற்றை விரலால் தட்டிவிட்டு தொடர்ந்தான்.

லிங்கன் ஸ்டேடியத்தின் பலூன் அமளிகளை விட்டு வெளியே வந்ததும், தாக்கர் நின்றான்.

''பீர் சாப்பிடலாமா?''

''லாமே'' என்றான் நரேந்திரன்.

எதிரே நியானடித்து கூப்பிட்ட பாருக்குள் நுழைந்தார்கள். அடக்கி வைத்த வெளிச்சம். நான்கைந்து தொப்பி மனிதர்கள். டி.வி.யில் ஸ்டேடியத்தின் அதே வர்ண நிகழ்ச்சிகள்.

மேஜையில் உட்கார்ந்ததும் இரண்டு பீர்களுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, தாக்கர் ஆரம்பித்தான்.

''எனக்கு கவலையாக இருக்கிறது...''

''என்ன கவலை?''

''நானும், ஜோஷி என்பவனும் சேர்ந்துதான் இங்கே வந்தோம்...''

''ஐ நோ தட்.''

''காலையில் இருவரும் பிரிந்தோம். வேறு வேறு ஸ்டேடியங்களைக் கண்காணிக்க. மதியம் லன்ச்சுக்கு ஹோட்டல் ரிவேராவில் சந்திப்பதாக ஏற்பாடு. ஆனால் ஜோஷி வரவில்லை.''

''பசித்திருக்காதோ என்னவோ?''

''அதற்கப்புறம் காலையில் பார்த்த விவரங்கள் பற்றி உட்கார்ந்து அலசுவதாக இருந்தோம் எங்கள் ரூமில். அரை

மணிக்கு முன்பு வரை ஜோஷி வரவேயில்லை... காலையில் கென்னடி ஸ்டேடியத்தில் வெடி விபத்து நடந்தபோது ஜோஷி அங்கேதான் இருந்திருக்க வேண்டும். அப்புறம் அவன் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டேனோ என்று எனக்கு யோசனையாயிருக்கிறது. அவசரம் என்றால் உங்களையும் உதவிக்கு கூப்பிட்டுக் கொள்ளலாம் என்று எங்களிடம் சொல்லப்பட்டிருந்தது..."

நரேந்திரன் பீர் கோப்பையை நகர்த்திவிட்டு நிமிர்ந்தான்.

"ஒரு வேளை ஜோஷி எதையாவது தேடிக் கொண்டு போயிருந்தால்?"

"போன் செய்து ஒரு மெஸேஜ் கூடவா கொடுத்திருக்க மாட்டான்?"

"நியாயமான சந்தேகம்தான்... இந்த தீவில் இன்றைய தேதியில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான ஆட்கள்... எங்கே என்று தேடுவது? போலீஸில் புகார் கொடுத்து விட்டால்?"

"நோ... ஜோஷியின் பின்னணியை ஆராய்ந்து அவன் சி.பி.ஐ.யைச் சேர்ந்தவன் என்று கண்டு பிடித்தால் தகராறு. அமெரிக்கா ஆரம்பத்திலேயே நம் செக்யூரிட்டிக்கு மறுப்பு சொன்னது..."

"ஓகே... ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்... ஜோஷியும், நீங்களும் எங்கே சந்திப்பதாக ஏற்பாடு?" நரேந்திரன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

"ரிவேரா ஹோட்டலில். அப்புறம் ஹோட்டலில் எங்கள் ரூமில்."

"வாருங்கள். உங்கள் ரூமுக்குப் போவோம். ஒருவேளை இந்நேரம் அங்கே வந்து உட்கார்ந்திருக்கப் போகிறார்!"

இருவரும் எழுந்தார்கள்.



"நாம் சேர்ந்து போக வேண்டாம். ஹோட்டல் ஏன்ஜல். ரூம் 204. அரை மணி நேரம் கழித்து நீங்கள் வாருங்கள்..." தாக்கர் முதலில் வெளியேறினான்.

ஹோட்டல் ஏன்ஜல்.

விமான நிலையத்தில் இருப்பது போல பெரிய லவுன்ஜ். லவுன்ஜில் ஒரு ஓரமான இருக்கையில் உட்கார்ந்திருந்தவன் கையிலிருந்த டைம்ஸ் பத்திரிகையை சுவாரஸ்யமில்லாமல் புரட்டிக் கொண்டிருந்தான். உட்கார்ந்த நிலையிலேயே அவன் மகா உயரம் என்று தெரிந்தது. நீக்ரோக்கள் வம்சத்தில் பிறந்து, கெட்ட காரியங்களுக்காகவே பழக்கப்படுத்தப் பட்டவன் போலிருந்தான். சிகரெட்டை விழுந்து விடுவது போல் உதட்டு நுனியில் வைத்திருந்தான்.

அவனுக்கு அடுத்ததாய் உட்கார்ந்திருந்தவன் இவனைப் போலவே உயரம். நீக்ரோ கெட்ட காரியங்கள்.

"சாம்சன். இந்த ஹோட்டல்தானே?"

"ஹோட்டல் ஏன்ஜல் என்றுதான் சொல்லப்பட்டது. ராபர்ட். நான் ரிசப்ஷனில் விசாரித்து விட்டேன்... தாக்கர் என்ற இந்திய ரிப்போர்ட்டரின் ரூம் 240 அறை பூட்டிக் கிடக்கிறது."

"அவன் வரும் வரை நாம் காத்துக் கிடக்க வேண்டும்."

"அதற்குத்தான் நமக்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரிசப்ஷனை கவனித்துக் கொண்டிரு. 204ம் ரூமுக்கு யாராவது சாவி வாங்கினால் நாம் உடனே தயாராகிறோம்."

அவர்கள் இரண்டு பேரும் தனக்காகக் காத்திருப்பதை அறியாமல் தாக்கர் நடந்து ரிசப்ஷனை நெருங்கினான்.

"ரூம் நம்பர் 204, ப்ளீஸ்" என்றான்.

சரியாக முப்பது நிமிடங்கள் தள்ளி நரேந்திரன் அதே ஹோட்டலில் நுழைந்தான். எலிவேட்டர் பொத்தானை அமுத்தி காத்திருந்தான். லிஃப்ட் கதவு திறந்து அவன் மீது

மோதிக் கொண்டு வெளியேறிய நீக்ரோக்களை 'தடியன் களா' என்று தமிழில் சபித்தான். லிஃப்ட்டில் ஏறி இரண்டாவது மாடியில் இறங்கிக் கொண்டான்.

204 சாத்தியிருந்தது.

அழைப்பு மணியை அழுத்திவிட்டு காத்திருந்தான்.

ஒன்று, இரண்டு, நான்கு... பத்து... பன்னிரண்டு... இருபது... கதவு திறக்கவில்லை. மறுபடி அழுத்தினான். பதிலில்லை.

சந்தேகம் வந்தது. காரிடாரில் நடமாட்டம் இல்லை என்பதை கவனித்து, பாண்ட் பாக்கெட்டிலிருந்து தன் தேனிரும்பு சாவியை எடுத்தான். உதட்டுக்குள் விசிலடித்துக் கொண்டே திருகித் திருகி...

க்ளிக்,

பூட்டு திறந்தது, கதவுக் குமிழைத் திருகி உள்ளே நுழைந்தான். உடன் விறைத்தான்.

அறை அலங்கோலமாயிருந்தது. ராட்சஸப் புயல் வீசி விட்டு விலகியது போல் பெட்டிகள் திறந்து கிடந்தன. மேஜை கவிழ்ந்திருந்தது. கட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது. பாத்ரூமில் தண்ணீர் ஒழுகும் ட்ரிப் ட்ரிப் ட்ரிப்.

நரேந்திரன் பாய்ந்து பாத்ரூம் கதவைத் திறந்தான்.

குளியல் தொட்டியில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அந்த தண்ணீரின் வழியே தாக்கர் தெரிந்தான்.

நாக்கு வெளியே மெலிதாகத் துருத்தியிருந்தது. கண்கள் இரண்டும் உயிரில்லாமல், உறுத்தலில்லாமல் பாத்ரூம் கூரையை வெறித்துக் கொண்டிருந்தன. தாக்கர் சத்தியமாக செத்துப் போயிருந்தான்.

நரேந்திரன் அந்தச் சூழ்நிலையை மெதுவாக மனதில் வாங்கிக் கொண்டான்.



அரை மணி நேரத்திற்குள்ளாக கொலை.

வந்தது யாராயிருந்தாலும், அதை ஒளித்து மூடும் எண்ணம் இருந்திருக்கவில்லை. அறையைக் கலைத்துப் போட்டது போட்டபடி போயிருக்கிறார்கள்.

நரேந்திரன் டெலிபோனை நெருங்கினான். எடுத்துப் பேசுமுன் தயங்கினான். காலையில் அமெரிக்க பாதுகாப்புப் படை அதிகாரி எப்படி நடந்து கொண்டார்? இப்போது எப்படி நடந்து கொள்வார்கள்?

நீ யார்? பூட்டிய அறைக்குள் எப்படி நுழைந்தாய்? உனக்கும் இந்த தாக்கருக்கும் என்ன தொடர்பு?

கேள்விகள் ஒரு பக்கம். அடுத்த கணத்திலிருந்து அவனை நோட்டமிட அவன் நடவடிக்கைகளை கண்காணிக்க ஏற்பாடு நடக்கும். இந்தியாவிற்குத் திருப்பி பார்சல் கட்டி அனுப்பினாலும் அனுப்பி விடுவார்கள்.

டெலிபோனிலிருந்து விலகினான்.

அறையை அங்குலம் அங்குலமாக ஆராய ஆரம்பித்தான்.

துணிகள், கால்குலேட்டர் அமைப்பில் டெலிபோன் ஒன்று, மெல்லிய உடம்போடு காமிரா. ஒரு மினி டேப்ரிக்கார்டர், பேனாக்கள், பேப்பர்கள்... பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் என்ற போலி சான்றிதழ்கள்...

உருப்படியாய் வேறு எதுவும் இல்லை...

நரேந்திரனின் பார்வை நின்றது. கதவின் உள்புறம் கால் துடைக்கும் சணல் மேட் கவிழ்ந்திருந்தது. அவசரமாகக் கவிழ்த்தது போலில்லாமல் கவனமாக கவிழ்த்துப் போட்டது போல் இருந்தது. நெருங்கி அதை நிமிர்த்தினான். அதனடியில் நான்காய் மடித்து ஒரு காகிதம் இருந்தது. ஹோட்டல் லெட்டர்பேட் காகிதம். ஒவ்வொரு ரூமிலும் உபயோகத்திற்கு வைக்கும் காகிதம்.

சந்தேகம், இரண்டு பேர். படகுக்குள் போயிருக்கிறார்கள். நானும் போகிறேன். முடிந்தால் நீயும் வா.

- ஜோ.

நரேந்திரன் அந்த காகிதத்தை வைத்துக் கொண்டு சற்று நேரம் விழித்தான். ஜோ... ஜோ என்றால் ஜோஷி?

திடீரென்று ரூம் டெலிபோன் ஒலிக்க ஆரம்பித்தது.

இதற்கு மேல் இங்கே இருந்தால் ஆபத்து. நரேந்திரன் அந்த காகிதத்தை பாண்ட் பையில் செருகிக் கொண்டான். அறைக் கதவை அங்குலம் திறந்து எட்டிப் பார்த்தான். காரிடர் இன்னும் பாலைவனமாக இருக்க, விருட்டென்று வெளி யேறினான்.

## 10

ஹோட்டலுக்கு அவன் திரும்பியபோது, வாசலில் ஒரு பெரிய அறிவிப்புப் பலகை.

**விளையாட்டு வீரர்கள் காலை ஏழு மணிக்கு மருத்துவ பரிசோதனைக்கு தயாராயிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

ரூமில் ராம்தாஸ் கட்டிலில் உட்கார்ந்து முழங்கால் வரை போர்வையால் மூடிக்கொண்டு பைப்பை இழுத்துக் கொண் டிருந்தார்.

''என்ன நரேன்? எனி டெவலப்மெண்ட்ஸ்?''

''எழுந்து நிற்க முடியுமா தாஸ்?''

''எதற்கு நரேன்?''



''ஒரு நிமிஷம் மௌனமாய் நில்லுங்கள் தாஸ். அந்த தாக்கரின் ஆத்மா சாந்தியடைய...''

''யூ மீன் - தாக்கர் இறந்து விட்டான்?''

''கொல்லப்பட்டு விட்டான்.''

''மை காட்...''

நரேந்திரன் தன் அனுபவத்தை வரி வரியாகச் சொன்னான்.

''தாஸ், இந்த லெட்டர் கால் துடைக்கும் டோர் மேட் டிற்குக் கீழே கிடந்தது...?''

ராம்தாஸ் அந்த காகிதத்தைப் படித்தார். ''இப்போது ஒரு மாதிரி எல்லாம் புரிகிறது...''

''எனக்கும் ஒன்றும் புரியவில்லை, தாஸ். ஜோ என்றால் ஜோஷி?''

''கரெக்ட். காலையில் அந்த விபத்து நடந்த பிறகு. ஜோஷிக்கு ஏதோ சந்தேகம் வந்து இரண்டு பேரைத் தொடர்ந் திருக்கிறான். அவர்கள் கடற்கரைப் பக்கம், ஏதோ படகுக்குள் புகுந்திருக்கிறார்கள். ஜோஷி அவர்களைத் தொடரு முன், தாக்கருக்கு ஒரு மெஸேஜ் விட்டிருக்கிறான். டோர் மேட்டை கவிழ்த்துப் போட்டால் அது தாக்கரின் கவனத்தை நிச்சயம் கவரும். அதற்குக் கீழேயிருக்கும் இந்தக் கடிதத்தைப் படிப்பான் என்று ஜோஷி நினைத்திருக்கக் கூடும்.''

''ஆனால் இந்த மாங்காய் மடையனுக்கு இது புரிய வில்லை. டோர் மேட்டை கவனித்திருக்க மாட்டான் போலி ருக்கிறது. தட்ஸ் ஓ.கே. நாமென்ன செய்கிறோம், தாஸ்?''

''இந்த இருட்டில் போட்டைத் தேடிப் போகலாம் என் கிறாய்?''

''வெளிச்சத்தில் போனால் தான் ஆபத்து. தாஸ் நாளைக்கு மார்னிங் மெடிக்கல் செக்கப் வேறு இருக்கிறதாமே...''

''ஆமாம். அது முடிந்து நம்மை அத்லெட்ஸ் வில்லேஜில் கொண்டு விட்டு விடுவார்கள்... இன்றைக்கு இரவு தான் வசதியானது... சாப்பிட்டு விட்டு கிளம்புவோம்...

அழைப்பு மணி டிங் டிடிங்கியது.

''யார் பார் நரேன்.''

கதவு திறந்ததும் அடையாள அட்டை காட்டினார்கள்.

''போலீஸ், தாஸ். நம் லக்கேஜை ஆராய வேண்டுமாம்...''

''தாராளமாக நீங்கள் எங்கள் பொருட்களை சோதனை செய்யலாம்'' என்றான் ஓமர். எதிரே நின்ற போலீஸ்காரரிடம்.

''ஸாரி, எங்களைத் தவறாக எண்ண வேண்டாம். இன்றைக்கு கென்னடி ஸ்டேடியத்தில் விபத்து நடந்ததில்லையா? அதன் தொடர்பாக எல்லா அறைகளையும் செக் செய்து கொண்டிருக்கிறோம்...''

''செய்யுங்கள் செய்யுங்கள் இங்கே உங்களுக்கு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை'' என்றான் சுலைமான், 'இங்கே' யில் கூடுதலாக அழுத்தம் கொடுத்து. ''ஆனால் கொஞ்சம் விரைவாக உங்கள் ஆராய்ச்சியை முடித்துக் கொள்ளுங்கள். நாங்கள் வெளியே கிளம்பிக் கொண்டிருக்கிறோம்...''

சாலையில் போக்குவரத்து சுத்தமாய் இல்லை. மார்ச் மாதத்து ஆகாயம் மேகங்களில்லாமல் நட்சத்திரங்களைக் கொட்டி வைத்திருந்தது. மிக இதமான சில்லிப்பு காற்றில் சேர்ந்திருந்தது.

ராம்தாஸ் தொளதொளவென்று சில்க் ஜிப்பாவும், பைஜாமாவும் அணிந்திருந்தார். நரேந்திரன் தன் பங்குக்கு கறுப்பு பனியன் போட்டு, தலையை மூடி ஒரு கறுப்புக் குல்லா அணிந்திருந்தான். இருவரும் கைகளைப் பின்னே கட்டி சின்ன இடைவெளி கொடுத்து நடந்தார்கள்.

உயர உயரமான கட்டிடங்கள். அவற்றின் நியான் விசாரிப்புகள். அதுவும் அந்த கடைசிக் கட்டிடம்!

STEP IN FOR ALL YOUR NIGHT NEEDS.



''தாஸ்!'' நரேந்திரன் அவர் கையைப் பிடித்து நிறுத்தினான். ''அவசரமில்லை என்றால் அந்த பில்டிங்கிற்கு ஒரு நடை போய் வந்து விடலாமா? அதென்ன தாஸ் NIGHT NEEDS?''

''ஒரு சிஷ்யன் குருவிடம் பேசுகிற பேச்சா இது?'' ராம்தாஸ் அவன் கையை உதறினார். ''நைட் நீட்ஸ் என்றால் என்ன என்று என்னிடமே கேட்கிறாயா, ராஸ்கல்? மெத்தை, தலையணை, கொசுக்கடி மருந்து, தூக்கம் வராவிட்டால் மண்டையிலேயே அடித்து தூங்க வைக்க ஒரு குண்டாந்தடி இது தான் நைட் நீட்ஸ்.''

எதிரே விரைந்த மோட்டார் சைக்கிளில் இடது காதில் மட்டும் வளையம் மாட்டிய ஜீன்ஸ் இளைஞர்கள் நரேந்திரனைப் பார்த்து முத்தம் பறக்க விட்டார்கள்.

பீச் ரோடு என்று பலகை காட்டிய சாலையில் நுழைந்தார்கள். நாகரீக மகோன்னதங்களில் கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டில் சாலை விளக்குகள் பச்சை, சிகப்பு சிக்னல்கள் காட்டின. மருந்துக் கடையும், பீர் கடையும் திறந்திருந்தன. அஜாக்கிரதையான உயரத்தில் ஒருவன் எலெக்ட்ரிக் தோரணம் கட்டிக் கொண்டிருந்தான்.

கட்டிடங்களிலிருந்து விலகியதும் பீச். அதே அழுக்கான கடற்கரை. காற்றில் சில் கூடியிருந்தது. தூரத்து அலைகளில் அந்த படகு அனாதைக் குழந்தை போல் இன்னும் தலையாட்டிக் கொண்டிருந்தது.

''தாஸ், அதோ அந்த படகாயிருக்கும்...''

''எதற்கும் துப்பாக்கியை ரெடியாக வைத்துக் கொள்.''

''நீங்கள் இருக்கும்போது, எனக்கு பயமெதற்கு தாஸ்?''

மணலில் கால் பதியப் பதிய நடந்தார்கள். திடீரென்று முகத்தில் டார்ச்சின் வட்ட வெளிச்சம்.

''ஹேய் ஹூ ஆர் யூ?'' என்று கால்களைப் பரப்பிக் கொண்டு ஒரு போலீஸ்.

''ஸ்விம்மிங் போகிறோம்...''

''நீச்சலா! இந்த அகாலத்திலா? அங்கே இருட்டு, சுறா மீன்கள் ரெஸ்ட் எடுக்க கரையோரம் வரலாம்... ஜாக்கிரதை...''

நடந்தார்கள்.

படகை நெருங்கியதும் நின்றார்கள். சற்று நிதானித்து விட்டு, ஒன், டூ, த்ரீ ஜம்ப்.

நரேந்திரன் முதலில் ஏறினான். ராம்தாஸைக் கை கொடுத்து ஏற்றி விட்டான். கையை உதறிக் கொண்டான்.

''தாஸ், எனக்கு ரொம்ப நாளா ஒரு சந்தேகம். நீர் யானை எவ்வளவு வெயிட் இருக்கும் என்று. இன்றைக்கு தீர்ந்தது.''

''அடி ஜோட்டாலே'' என்றார் ராம்தாஸ் கிசுகிசுப்பான குரலில். தன்கையில் இருந்த பென் டார்ச்சை உயிர்ப்பித்தார். படகை அலச ஆரம்பித்தார்கள்.

''கண்டெம் பண்ணிய போட் போலிருக்கிறது. நரேன்... எலிகள், காலிடிரம்கள், கொஞ்சம் கயிறு, திறந்து போட்ட என்ஜின்... இங்கே என்ன இருக்க முடியும்?''

ஒவ்வொரு அங்குலமாக பார்த்துக் கொண்டே மரக்காபினுக்குள் வந்தார்கள். நுழைந்தவுடன் நரேந்திரன் மூக்கைப் பொத்திக் கொண்டான்.

''யாரோ செண்ட் பாட்டிலைக் கீழே கொட்டி விட்டார்கள் தாஸ்...''

''மடையா, செண்ட் இல்லை. கோல்டன் ஆயில்.''

"தங்க எண்ணெய்? அது என்ன கெரஸினா, பெட்ரோலா தாஸ்?"



''மறுபடியும் மடையா... கோல்டன் ஆயில் என்பது தலைவலித் தைலம்... சிங்கப்பூர் தயாரிப்பு...'' ராமதாஸ் வேட்டை நாய் போல் மூக்கை உறிஞ்சிக் காட்டினார். கீழே மரப்பலகையில் அவர் பார்வை நின்றது. ''இங்கே பார், கோந்து கொட்டி வைத்த மாதிரி... ரத்தத் திட்டு... காலையில் கைகலப்பு இங்கே நிச்சயம் நடந்திருக்கிறது... கைகலப்பில் ஒருத்தன் ரத்தம் சிந்தியிருக்கிறான்... ஒருத்தன் கோல்டன் ஆயில் பாட்டிலை உடைய விட்டிருக்கிறான்...''

''ஸோ, வில்லனுக்கு தலைவலி அடிக்கடி வரும் என்கிறீர்கள்...''

வரலாம் என்கிறேன்...

''அடடா, ஜூனியரை அழைத்து வராமல் போய் விட்டோமே, தாஸ். கூட்டத்தில் விட்டால், லட்சம் லட்சமான ஆசாமிகளில் யார் யார் அந்த தைலத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று சட்டையைப் பிடித்து இழுத்து வந்துவிடும்...''

''ஏன் நீயே அந்த வேலையை செய்யேன்...''

''சமயம் பார்த்து காலை வாரி விடுவீர்களே...''

படகின் மற்ற துருப்பிடித்த ஆணிகள் வரை நுணுக்கமாக ஆராய்ந்தும் வேறு எதுவும் கிடைக்கவில்லை.

''ஜோஷி எங்கே தாஸ்?''

''என் யூகம் சரியாக இருந்தால், இந்நேரம் அவன் சுறா மீன்களுக்கு டின்னர் ஆகியிருப்பான்.''

## 11

போலீஸ் கார்கள் வீய், வீய், வீய் என்று அலறிக் கொண்டு வந்தன மணல் வெளிக்கு வெளியே நின்றன.

போட்டோ ஃப்ளாஷ் காகிதம் பல ரிப்போர்ட்டர்கள் ஈக் களைப் போல் சேர்ந்து விட்டார்கள்.

என்னதான் நாகரீகமும், விஞ்ஞானமும் மெஜாரிட்டியில் இருந்தாலும், வேடிக்கை பார்க்கும் ஆர்வம் மனிதனின் அடி ரத்தத்தில் கலந்திருக்கிறது என்ற கொள்கையை பரப்புவது போல் அத்தனை ஜாதி மனிதர்களும் கூடியிருந்தார்கள்.

பசிபிக் அலைகள் மோதும் அந்த கடற்கரையின் கரு மணல் கூடிய திட்டில் ஒரு உடல் ஒதுங்கியிருந்தது.

ஆண் உடல்.

தலையும், பாதி உடலும் பிய்த்து கிழிக்கப்பட்டு (சுறாவின் வேலை) மிச்சம் மட்டும் ஒதுங்கிய உடல்.

மார்ட்டின் தன் அடிவயிற்றில் குடல் சுருங்குவதை உணர்ந்தார். போலீஸ் வியூகத்தினுள் நடந்து உடலருகே குனிந்தார்.

இடது கை இருந்தது. கையில் வாட்ச் இருந்தது.

எச்.எம்.டி. வாட்ச். தண்ணீரில் ஊறி கண்ணாடித் தடுப் புக்குள் பனி படர்ந்திருந்த போதும், தன் செயல் இழக்காமல் ஓடிக் கொண்டிருந்த இந்திய வாட்ச். கட்டிய சங்கிலியில் J.J.J. என்ற எழுத்துக்கள் கோர்த்திருந்தன.

''ஸம் இண்டியன்'' என்றார் மார்ட்டின்.

''கேப்டன்... நேற்றிரவு இரண்டு இந்தியர்கள் இங்கே குளிக்க வந்தார்கள்...''

''சொல்... சொல்... அவர்கள் முகம் உனக்கு நினை விருக்கிறதா?''

''இருட்டில் எந்த அடையாளமும் தெரியவில்லை. அவர்கள் ஆங்கிலம் பேசிய விதத்தில் இந்தியர்கள் என்று யூகித்தேன். ஒருவன் இளைஞன்... மற்றவர் சற்றே மூத்தவர்...''



''கேப்டன்...'' போலீஸ் காரிலிருந்து அழைப்பு. ''மெஸேஜ் ஃபார் யூ..''

மார்ட்டின் மணலில் நடந்து ரிசீவரைப் பிடுங்கி ''யா?'' என்றார்.

ஹோட்டல் ஏஞ்ஜலில் பூட்டிய அறை ஒன்றில் நடக்கக் கூடாதது நடந்து விட்டது...''

''என்ன அது? சொல்லித் தொலையுங்கள்...''

''கொலை... இன்னும் ஒரு கொலை... இறந்தவன் மறு படியும்... இந்தியன்?''

''ஜீஸஸ்?'' என்றார் மார்ட்டின்.'' ஹெட்க்வாட்டர்ஸுக்கு கனெக்ஷன் கொடு... ஹலோ... கேப்டன் மார்ட்டின் பேசு கிறேன்... நெல்சன் என்ற லெஃப்ட்டினன்ட் நேற்றைக்கு புது நோயால் தாக்கப்பட்டு, பேச்சு செயலில்லாமல் ஆஸ்பத் திரியில் கிடக்கிறான்... எனக்கு உடனடியாக வேறு திறமை யான ஆட்கள் தேவை... உடனடியாக?'' என்று ரிசீவரை அறைந்து சாத்தினார்.

''நெக்ஸ்ட்?''

கதவைத் தள்ளித் திறந்து நரேந்திரன் நுழைந்தான்.

டாக்டர் ஆண்ட்ரூஸ் என்று மேஜையில் பிளாஸ்டிக் போர்டுக்கு பின்னே வழுக்கை விழுந்து மெல்லிய பிரேமில் கண்ணாடி அணிந்த பிரவுன் நிறத்தில் தலைமுடி வைத் திருந்த மனிதர் நிமிர்ந்தார்.

''யுவர் பேப்பர்ஸ்?'' என்றார் பேப்பர்களை ஆராய்ந்து, ஒரு தும்மலை விடுதலை செய்தார்.

''ஜிம்னாஸ்டிக்ஸ்? சரி கழற்று...''

''டாக்டர்...?''

''கழற்று பிரதர்... மெடிக்கல் செக்கப் செய்ய வேண்டும்...''

"லேடி டாக்டர் யாரும் இல்லையா?" நரேந்திரன் சிரிக்காமல் கேட்டான்.

வைஜயந்தியும், நிவேதாவும் டிராக்கில் இருந்தார்கள்.

ஒவ்வொரு முறை ஓடும்போதும், சென்ற முறையைவிட 005 வினாடிகள் இம்ப்ரூவ் செய்தாள் நிவேதனா.

ராம்தாஸ் ரூமில் தன் பைப்பை குடைந்து கொண்டிருந்தார்.

இன்னும் பத்து நிமிடங்களில் அத்லெட்ஸ் வில்லேஜ் புறப்படத் தயாராயிருக்கச் சொல்லி ரூம் ரூமாக வந்து சொல்லி விட்டுப் போயிருந்தார்கள். எல்லாவற்றையும் அவசரமாக பாக் செய்துவிட்டு, நிதானமாக பைப்பைக் குடைவதில் ஒரு தனி குஜியே இருக்கிறது என்று ராம்தாஸ் சத்தியம் செய்யத் தயார்.

கதவைத் திறந்து கொண்டு நரேந்திரன் நுழைந்தான்.

"தாஸ்... அந்த டாக்டர் ரொம்ப மோசம்..." கன்னம் சிவந்திருந்தான். கோபமா, வெட்கமா தெரியவில்லை.

"என்னை அவன் இரண்டே ஸெகண்டில் செக்கப் செய்து போகலாம் என்று சொல்லி விட்டான் நரேன்."

"எப்படி தாஸ்?" ராம்தாஸ் நரேந்திரனின் கழுத்தை பிடித்து பட்டென்று ஒருபுறமாய்த் திருப்பி நிறுத்தினார். கையை எடுத்துக் கொண்டார். "இந்த மாதிரி டாக்டரைத் திருப்பினேன். முதலில் கழுத்தை சரி செய்து கொண்டு அப்புறம் என்னை செக்கப் செய்யுங்கள் என்றேன்."

நரேந்திரன் கழுத்தை வளைத்து வளைத்து முயற்சி செய்தான். ஊம் ஹூம்... கழுத்தை அசைக்க முடியவில்லை... "தாஸ், தாஸ்..." என்று புலம்பினான். "பெண்கள் காலரிப் பக்கமாகத் திருப்பி நிறுத்துங்கள் தாஸ்... இங்கே வேண்டாம்..." என்றான்.



ராம்தாஸ் அவன் முகத்தைப் பிடித்து விலுக்கென்று பழைய படி திருப்பினார். "பார்ப்பதற்கு நேரமாகி விட்டது. கிளம்பு..."

அத்லெட்ஸ் வில்லேஜ்.

பெயரில் தான் கிராமம் இருந்தது. நவீன மாளிகைகள். காட்டேஜ்கள் என்று செல்லமாகக் கூப்பிடக்கூடிய சின்னச் சின்ன வீடுகள், பஸ்ஸிலிருந்து இறங்கியதும் டெலிவிஷன் பெட்டி போன்ற அமைப்பில் பெயர், வயது, விளையாட்டு விவரம் எல்லாம் பதிவு செய்து அந்த மெஷின் துப்பிய அடையாள அட்டையைக் கொடுத்தார்கள். நான்கு சுறுசுறுப்பு போலீஸ்காரர்கள் லக்கேஜை தையல் பிரித்து பார்க்காத குறையாக ஆராய்ந்தார்கள். ஆபத்தான அயிட்டம் எதுவும் இல்லை என்று நிச்சயம் செய்து கொண்டு அனுமதித்தார்கள்.

A, B என்று வரிசை எண்ணிட்டு குடில்கள். ராம்தாஸ் நரேந்திரனுக்கு B-3, வைஜயந்தி, நிவேதனாவிற்கு B-4, வில்லேஜை விட்டு வெளியே போகும்போது மறக்காமல் அந்த அடையாள அட்டையை எடுத்துப் போகும்படி எச்சரிக்கப்பட்டார்கள். விளையாட்டு வீரர்களைத் தவிர வேறு எவருக்கும் அனுமதி இல்லை என்று பிரம்மாண்ட அறிவிப்பு வைத்தார்கள்.

அறை சின்னதாய் சொகுசாய் இருந்தது. கான்க்ரீட்டில் நிரந்தரக் கட்டில்கள். கால் மிதிக்க் கார்ப்பெட். இண்டர்காம் வசதி. போர்ட்டபிள் டெலிவிஷன். பாத்ரூமில் சுடுநீரா. குளிர் நீரா என்று விருப்பம் கேட்கும் குழாய்கள். ஜன்னல் வழியே பச்சை, தூரத்து கடல் நீலம்.

"நரேன், பிராக்டீஸிற்குக் கிளம்பு."

"குருவே, கொஞ்சம் நேரம் ரெஸ்ட் கிடையாதா?"

"கிளம்புடா படவா..."

ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி செய்யும் கூடத்தில் கூட்டம் ததும்பியது.

ஸைட் ஹார்ஸ், லாங் ஹார்ஸ், பாலன்ஸ் பீம், பேரலல் பார்ஸ் என்று ஜப்பான் குள்ளர்களும், சைனா குள்ளர்களும் பயிற்சி செய்து வியர்த்திருந்தார்கள்.

''ஜிம்னாஸ்டிக்ஸ் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா நரேன்?''

''தாஸ், எக்ஸர்ஸைஸ் போதாது என்று இந்த ரம்பம் வேறா?''

''பையா, கிரேக்கத்தில் ஜிம்னாஸின் என்றால் உடற் பயிற்சி என்று அர்த்தம் - அதுவும் நிர்வாணப் பயிற்சி என்று...''

ஐயோ தாஸ் உண்மையான அர்த்தப்படி செய்ய மாட்டார்களா?''

சத்தமாய்ப் பேசினால் உதைபடப் போகிறாய்...''

''தாகமாயிருக்கிறது. தாஸ்...''

''இரண்டு நிமிடம் செய்வதற்குள் பசி, தாகம்... சரி, வா, கேண்ட்டீனுக்குப் போகலாம்...

கேண்ட்டீனில் டோக்கன் வாங்க கியூவில் நின்றிருந்த போது, நரேந்திரனின் நீளமான மூக்கு துடித்தது. ஆழமாய் சுவாசத்தை இழுத்தான்.

ஆமாம், ஆமாம், ஆமாம், அதே வாசனை தான். கோல்டன் ஆயில் தைலம்.

நரேந்திரனிலிருந்து இரண்டு ஆட்கள் பின்னே இருந்த ஓமர், நரேந்திரனிடம், ''பிரதர், கியூ நகர்ந்து விட்டது. நக ருங்கள்'' என்றான்.

வராட் வ்ராட் என்றிருந்த கோதுமை வஸ்துவை கடித்துக் கொண்டே, ''தாஸ், அந்த நீலச்சட்டை தான் நாம் தேடும் பட்சி என்று நினைக்கிறேன்'' என்றான் நரேந்திரன்.



ராம்தாஸ் கண்களை அதிகம் உயர்த்தாமல் ஓமரைப் பார்த்தார்.

''பாகிஸ்தான் குழுவைச் சேர்ந்தவன்... மல்யுத்தப் போட் டிக்கு ஆஜராகிறான்'' என்றார்.

''உங்களுக்கு எப்படி தாஸ் தெரியும்?''

''பை சான்ஸ், டாக்டரிடம் செக்கப் போன போது, அவர் மேஜையில் இவனுடைய பேப்பர்ஸ் இருந்தன - போட்டோ வுடன்...

''பெயர் தாஸ்?''

என் நினைவு சரியாக இருந்தால் - ஓமர். அவனுடைய காட்டேஜ் எது என்று கண்டுபிடி... ஒரு ராத்திரி ரவுண்ட் அப் அடிப்போம்...''

''போச்சு... தாஸ், இரண்டு குரங்கும் வந்து விட்டது...''

வைஜயந்தியும், நிவேதனாவும் தத்தம் பிளேட்களுடன் வந்து எதிரே உட்கார்ந்தார்கள்...''

''தாஸ்.. இன்றைக்கு நிவேதனா சூப்பராய் ஓடினாள். எண்ணூறு மீட்டர் - நூற்றிப் பதினெட்டு வினாடிகள்...''

''அவள் ஓடியதற்கு உனக்கு ஏன் மூச்சிறைக்கிறது, வைஜ்?''

''அதுவும் அழகாக... சங்க காலக் கவிஞன் சொன்ன வளர் இளவள கொங்...''

''நரேன்!''

''காவலோடுதான் வந்திருக்கின்றன, நம் சிட்டுக் குருவிகள்'' என்றான் ஓமர். நண்டு கட்லெட்டை வாயில் மென்று கொண்டே. அவன் பார்வையை தன் பார்வையால் தொடர்ந்த சுலைமான் நிவேதனாவையும், வைஜெயந்தியை யும் கண்களால் வருடினான்.

''என்ன இருந்தாலும், இந்த மசால் தோசைப் பெண்கள் ரொம்ப அழகு!'' சுலைமான் சப்புக் கொட்டினான்.

''இன்று மாலை?''

''வேண்டாம்... இன்றைக்கு சாம்சனுடன் மீட்டிங் இருக்கிறது... மிக அவசியமான மீட்டிங்... நாளைக்கு மாலை நம் வலையை விரிக்கிறோம்... அதற்கு முன் குருவிகள் எப்போது துணையில்லாமல் தனியே உலாவுகின்றன என்பதை கவனித்து வை...''

''இன்றைக்கு எதுவும் ஆக்ஷன் இல்லையா?''

''இல்லை.. அத்லெட்ஸ் வில்லேஜிற்குள் நுழையும்போது, லக்கேஜை தர்ரோவாக செக் செய்கிறார்கள் என்று நம் அயிட்டத்தையெல்லாம் வேறு இடத்திற்கு மாற்றியாகி விட்டது...''

''எந்த இடத்திற்கு?''

''சாம்சன் சொல்வான்.''

கண்ணாடி மேடை. கலர் பல்புகளின் சிருங்கார நடனத்திற்கு நடுவே அந்த பெண் ஆடிக் கொண்டிருந்தாள். மலிவான இச்சையைத் தூண்டும் ஆதிவாசி நடனம். மேலே அணிந்திருந்த ரிப்பனும், இடையில் அணிந்திருந்த பட்டைப் புலித் தோலும் அபாயகரமாய் ததும்பிக் கொண்டிருக்க, அந்த அறையில் தர்மாமீட்டர் வெடித்து விடும் நிலையில் இருந்தது.

சாம்சன் தன் கோப்பையை உறிஞ்சாமல் கடகடவென்று தொண்டையில் சரித்துக் கொண்டான்.

''டெலிவிஷன், நியூஸ் பேப்பர் எல்லாவற்றிலும் ஸ்போர்ட்ஸ் விவரங்களை விட கடற்கரையில் கண்டெடுத்த பிணத்திற்கு தான் பப்ளிஸிடி.... போதாததற்கு ஹோட்டல் ரூமில் இன்னொரு இந்தியப் பிணம்... அமெரிக்கப் போலீஸ் சிலோன் பிளேயர்களை நிழல் போல் தொடர்ந்து கொண்டிருக்கிறது...'' என்றான் ராபர்ட், மெல்லிய சிரிப்பினூடே.

''ஆனால் அமெரிக்கப் போலீஸ் கோபமாயிருக்கிறது - காயப்பட்டு விட்டதால், ஆக்ரோஷமாய் கண்களைத் திறந்து வைத்திருக்கிறது...



''அதனால்தான் நமக்கு இன்றைக்கு ரெஸ்ட் டே'' என்றான் ஓமர்.

''நாளைக்கு?''

''நாளைக்கு ஃபுட்பால் மேட்ச் இருக்கிறது. இந்தியா விற்கும் அர்ஜெண்டினாவிற்கும்... உதைக்கப் போகும் ஃபுட்பால்... அதில் இருக்கிறது சூட்சுமம்...''

''வெடிகுண்டு?''

''ஆம்... அஃபீஷியல் பந்தை எடுத்து விட்டு சாமர்த்தியமாக இந்தப் பந்தை மாற்ற வேண்டும்...''

''பந்து ரெடியா?''

''ரெடி... ஆனால் இந்த நிமிடம் வரை பந்து தீவில் இல்லை...''

''ஓமர், எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள், சொல்லுங்களேன்.''

சாம்சன் இடையில் புகுந்து சிரித்தான். ''அழைத்துப் போகிறேன் இன்றிரவு... இப்போதைக்கு இந்த ஆட்டத்தை ரசி... என்று நடனமாடிக் கொண்டே டேபிளருகே வந்த அந்தப் பெண்ணை மடியில் இழுத்துக் கொண்டான். விஸ்கியை கடகடவென்று சரித்துக் கொண்டான்.

''சாம்சன், அதிகம் குடிக்காதே... நமக்கு இரவு வேலையிருக்கிறது'' ராபர்ட் அந்தக் கோப்பையைப் பிடுங்கினான்.

## 12

ராம்தாஸ் முந்தின நாள் அணிந்த அதே பைஜாமா, ஜிப்பா...

நரேந்திரன் கறுப்பு பனியன்.

வில்லேஜை விட்டு வெளிப்பட்டார்கள்.

விளையாட்டு வீரர்களை ஸ்டேடியங்களுக்கு அழைத்துச் செல்லும் இரட்டை பஸ் நிழலாய் நின்றிருந்தது.

''நமக்கு இன்றைக்கு ஜாகை இங்கே'' என்றார் ராம்தாஸ். சொல்லிவிட்டு பஸ்ஸின் அடியில் படுத்தார். நகர்ந்து காணாமல் போனார். அக்கம் பக்கம் பார்த்துவிட்டு நரேந் திரனும் அதே செய்தான்.

டீஸல் வாசனை. க்ரீஸ் தீற்றல். மற்றபடி இடம் சுகமாகத் தான் இருந்தது. புல் மெத்தையில் புரண்டு, ''தாஸ், வரும்போது டார்ட்டாய்ஸ் வத்தி கொண்டு வந்திருக்கலாம்... எக்கச்சக்க கொசு...''

''ஷ்... கவனி...''

இப்போது வில்லேஜ் கேட்டில் தங்கள் பாஸ்களைக் காட்டி விட்டு, ஓமரும், சுலைமானும் வெளிப்பட்டார்கள்.

பிளேயர்களின் உபயோகத்திற்காக வைத்திருந்த சைக்கிள் களில் இரண்டை எடுத்துக் கொண்டார்கள். இருட்டில் கலந்தார்கள்.

ராம்தாஸும், நரேந்திரனும் வளையிலிருந்து வெளிப் படும் நண்டுகளைப் போல வெளியே வந்தார்கள்.

நரேந்திரன் ஓட்டமாய் ஓடி கேட்டில் அட்டை காட்டி இரண்டு சைக்கிள்களை எடுத்து வந்தான்.

''தாஸ், இரண்டு சக்கரம் தான் இருக்கிறது, உங்களைத் தாங்குமா?''

ராம்தாஸ் சைக்கிளில் ஆரோகணித்தார். இரண்டு மிதி. தெருமுனை திரும்பி விட்டார். அவருடைய வேகத்துக்கு ஈடுகொடுக்க நரேந்திரனால் முடியவில்லை.



தெருக்கள், வீதிகள், சந்துகள், திருப்பங்கள், சைக்கிள்கள் சத்தமில்லாமல் சைக்கிள்களைத் தொடர்ந்தன. கிட்டத்தட்ட ஆறு கிலோ மீட்டர்.

தீவின் வடக்குப் பகுதி. சற்றே கானகத்தனமான அடர்த்தி யான இருள் மரங்கள். மண் பாதை.

ஓமரும், சுலைமானும் அந்தப் பாதையில் நுழைந்ததும், ராம்தாஸ் சைக்கிளை நிறுத்தினார். நரேந்திரனையும் நிறுத்தச் சொன்னார்.

''சைக்கிள் விளக்கை அணைத்துவிடு. இருட்டில் எந்த கண்கள் எங்கேயிருந்து பார்க்குமோ?''

சைக்கிள்களை மரங்களின் பின்னே சாய்ந்து விட்டு இருவரும் ஒளிந்து ஒளிந்து நடந்தார்கள்.

மரங்களின் அடர்த்தி குறைந்து சற்றே தெளிவாயிருந்த பிரதேசத்தில் சாம்சனும், ராபர்ட்டும் நின்றிருந்தார்கள்.

''எல்லாம் தயாரா?'' ஓமர் கேட்டான்.

''எல்லாம் தயார்'' சாம்சன் முதுகில் சுமந்த சுமைப் பையைக் காட்டினான்.

மரங்களினூடே டார்ச் அடித்து நடந்தார்கள். சற்று தூரத்தில் மரங்கள் விலகி சடாரென்று முடிந்து போக, எதிரே கடற் கரை, வெகு அருகே சமுத்திரம்.

நின்றார்கள்.

சாம்சன் முதுகுப் பையைக் கீழே வைத்துத் திறந்தான். உள்ளேயிருந்து மஞ்சள் நிறத்தில் ரெயின் கோட் போல் பளபளப்பாயிருந்ததை எடுத்தான். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு செட்கள்.

''டைவர்ஸ் சூட்'' என்று நரேந்திரனின் காதில் முணு முணுத்தார் ராம்தாஸ். ''கடலுக்குள் இறங்கப் போகிறார்கள் போலிருக்கிறது...''

அவர்கள் உடம்போடு பொருந்தும் அந்த நீர் உடையை அணிந்து மார்பில் ஸிப் இழுத்து மூடிக் கொண்டார்கள். தலையில் கண்ணாடி முகத்துடன் இருந்த டார்ச் பொருத்திய ஹெல்மெட்களை அணிந்தார்கள். அலைகளில் நடந்து காணாமல் போனார்கள்.

''தாஸ்... அவர்கள் எங்கேயோ போகிறார்கள்...''

''பெரிய கண்டு பிடிப்பு... எப்படியும் காற்றடித்த சைக்கிள் களை வைத்துக் கொண்டு நாம் தொடர முடியாது... இங்கேயே காத்திருக்க வேண்டியதுதான்...''

''தாஸ், நான் ஓடிப்போய் வைஜெயந்தியையும்... நிவே தனாவையும் அழைத்து வந்து விடட்டுமா... ஒரு கம்பெனிக் காகத்தான்...''

''எங்கேயும் போக வேண்டாம். சாப்பிட்டது எனக்குத் தூக்கம் வருகிறது... அவர்கள் வந்தவுடன் எழுப்பு...'' ராம்தாஸ் மரத்தில் சாய்ந்து கொண்டார்.

''காவல்காரன் உத்யோகத்திற்கா கடல் கடந்து வந்தேன்?''

''என்ன முணுமுணுக்கிறாய்?''

''நீங்கள் தூங்குங்கள் என்றேன்...''

நரேந்திரன் சும்மா இருக்கப் பிடிக்காமல் எழுந்தான். மரங்களின் சரசரப்பினூடே நடந்தான். ஈரமான காற்றை நெஞ்சு நிறைய இழுத்தான். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான். நுரையீரல்களை சூடாக்கிக் கொண்டான். எங்கேயோ ஒரு வினோத பட்சி அலறியது. இன்னொரு பட்சி சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டது.

நரேந்திரன் தலைக்கு மேல் ஏதோ நிழல் உணர்ந்து நிமிர்ந்தான். இத்தனை தாழ்வாக ஒரு மரக்கிளையா? அந்த மரக்கிளை பொத்தென்று அவிழ்ந்து அவன் மீது விழுந்தது.



கிளை இல்லை. மலைப்பாம்பு.

நரேந்திரன் சுதாரித்துத் துள்ளுமுன் சரசரவென்று அவன் கால்களைப் பற்றியது. கயிறு போல் சுற்றியது. நரேந்திரன் அவசரமாக தன் கையில், இருந்த சிகரெட்டால் அதைச் சுட்டான். சிகரெட் அணைந்து போனதே தவிர, அது அலட்ட லில்லாமல் நரேந்திரனின் இடுப்பு, மார்பு, கைகள் என்று ஒவ்வொன்றாய் வளைக்க ஆரம்பித்தது.

நரேந்திரன் உடலை வளைத்தான் நெளிந்தான். இடுப்பி லிருந்து தன் ரிவால்வரை உருவ எத்தனித்தான். கையே சிறைப்பட்டிருக்க, எதுவும் இயலாமல், கிலி நெஞ்சை தாக்க, ''தாஸ்... தாஸ்...'' என்று குரல் கொடுத்தான்.

மலைப்பாம்பு டிஸைன் போட்ட தன் உருட்டு உடலை கயிறு போல சுழற்றி நரேந்திரனை இறுக்க ஆரம்பித்தது. பிளவுபட்ட தன் நாக்கைத் துருத்திக் காட்டி பழித்தது.

ராட்சஸ கரும்பு மெஷினில் கொடுக்கப்பட்டது போல் நரேந்திரன் உணர்ந்தான். பதறினான். நிமிர்ந்தான்.

எதிரே டார்ச் வட்டம். ராம்தாஸ் நின்றிருந்தார்.

''அடப்பாவி... பாம்பிடம் போய் காதல் செய்து கொண் டிருக்கிறாயே'' என்றார். இரண்டே குதியில் நரேந்திரனை நெருங்கினார். ''இந்தா இதைப்பிடி'' என்று டார்ச்சை நீட்டி, ''ஐம் ஸாரி'' உன் இரண்டு கையும் காணவில்லை. இல்லை? நானே பிடித்துக் கொள்ள வேண்டியது தான்...'' டார்ச்சை கால்களால் கவ்விக் கொண்டார். ஜிப்பாவை முழங்கை வரை மடித்துக் கொண்டார்.''

''கண்ணா... நரேனை விட்டு விடும்மா...'' என்றார் மலைப் பாம்பிடம். அது நரேந்திரனின் தோள் வரை ஏறியிருக்க, நரேந்திரன் நிற்க முடியாமல் மரத்தில் சரிந்தான்.

ராம்தாஸ் மலைப்பாம்பின் கழுத்தருகே இரண்டு கைகளாலும் வளைத்துப் பிடித்தார். 'ஒன், டூ, த்ரீ..' என்றார். மட்டக் என்று ஒரு சப்தம். பாம்பு தலையை உதறிக் கொண

டது. வேதனையுடன் சிலிர்த்தது. 'ஃபோர், ஃபைவ், சிக்ஸ்' மலைப்பாம்பின் நடு உடம்பில் இரண்டு விரல்களை அழுத்தினார். பாம்பு சட்டென்று அவிழ்த்துப் போட்ட சட்டை போல், நரேந்திரனிடமிருந்து நழுவியது. கீழே கயிற்றுச் சுருள் போல் விழுந்தது.

நரேந்திரன் உடம்பை உதறிக் கொண்டு அந்த சுருளுக்கு வெளியே குதித்தான். தன் ரிவால்வரை எடுத்தான்.

''இது தானே வேண்டாமென்கிறது? செத்த பாம்பை அடிக்கிறாயே.''

ராம்தாஸ் சிரித்துக் கொண்டே இரண்டு கைகளாலும் பயில்வான் போல் மலைப்பாம்பைத் தூக்கித் தலையை சுழற்றி தூர அடித்தார்.

''தாஸ்... எப்படி தாஸ்... எப்படி தாஸ்...''

''பையா, சமயம் வரும்போது சொல்லித் தருகிறேன். இப் போது கொஞ்சம் தூங்கவிடு...'' ஒன்றுமே நடக்காதது போல் தன் மரத்தடிக்குத் திரும்பி உடம்பைச் சாய்த்துக் கொண்டார்.

பன்னிரண்டு நிமிடங்கள்.

கடற்கரையில் தளக்புளக் என்று சத்தம்.

ராம்தாஸ் ஸ்விட்ச் போட்டாற்போல நிமிர்ந்தார்.

ஈர உடைகளுடன் அந்த நான்கு பேரும் வெளிப்பட்டு நடந்தார்கள்.

உயரமாயிருந்த கறுப்பனின் கையில் இருந்ததை ராம்தாஸ் கவனித்தார்.

பாலிதீன் கவர் போட்டு ஒரு கால்பந்து. கறுப்பும், வெள்ளையும் திட்டுத் திட்டாக டிஸைன் போட்ட கால்பந்து. அதன் மத்தியில் I.S.F. என்ற மூன்று எழுத்துக்கள்.

'International Sports Festival' என்று முணுமுணுத்தார் ராம்தாஸ்.



''தாஸ், அவர்களை இப்போதே மடக்கலாமா?''

''வேண்டாம்... தண்ணீருக்குள் எங்கே போனார்கள், எதற்குப் போனார்கள் என்பதை முதலில் கண்டு பிடிக்க வேண்டும்... இன்றைக்கு ஆட்டம் இத்துடன் க்ளோஸ்...''

சைக்கிள்களைத் திருப்பி விட்டு இருட்டில் காட்டேஜ் நோக்கி நடந்தார்கள். விளக்குகள் வைத்து பால் வண்டிகள், நடமாடும் ஃபாஸ்ட் ஸ்நாக்ஸ். பாலிதீன் கவரில் போட்ட தக்காளி ஸ்லைஸ்கள்.

பொதுத் தொலைபேசிக் கூண்டுக்குள் நுழைந்தார் ராம்தாஸ். அமெரிக்கச் சில்லரையைத் தொண்டையில் வாங்கிக் கொண்டு கனெக்ஷன் கொடுத்தது மெஷின்.

''கேப்டன் மார்ட்டின்'' என்றது எதிர்முனை அதிகாரம்.

''ஹெலோ கேப்டன்... இந்தியர்களுக்கு எதிராக இன் னொரு சதி... நாளைக்கு கால்பந்து விளையாட்டில் ஜாக் கிரதையாயிருங்கள்... முக்கியமாய் ஆட்டத்திற்கு பயன்படும் அஃபீஷியல் பந்து... அதில் வெடிகுண்டு இருக்கலாம்...''

''யார் நீ?''

''ஒரு உண்மையான இந்தியன்'' என்று ரிசீவரை வைத் தார் ராம்தாஸ்.

## 13

நிக்ஸன் ஸ்டேடியம்.

அரை லட்சத்திற்கும் அதிகமான கால்பந்து விசிறிகள், காலப் பலகைகளின் முனைகளில் உட்கார்ந்திருந்தனர்.

இந்திய அணியும், பெருமிதம் ததும்பும் அர்ஜெண்டினாவின் சாம்பியன்களும் பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டு ஆட்டம் துவங்கி விட்டது.

நூறடிகளுக்கு ஒரு போலீஸ் நின்று கூட்டத்தைத் துருவிக் கொண்டிருந்தது. அமெரிக்கா போன்ற சுதந்திர தேசத்தில் அதற்கு மேல் கட்டுப்பாடுகள் விதித்தால், யாராவது ஒரு குடிமகன் பொழுது போகாமல் கோர்ட் வரை இழுத்தடிப்பான் என்ற பயம் மார்ட்டினுக்கு.

மார்ட்டினே முன்நின்று விளையாட்டுக்கு பயன்படவிருந்த நான்கு பந்துகளையும் பரிசோதித்து விட்டு அனுமதித்திருந் தார். இருந்தாலும் இப்போது ஆட்டம் துவங்கியதும், நகத்தைக் கடிக்கத் துவங்கிவிட்டார்.

ஆட்டம் ஆரம்பித்து பதினேழாவது நிமிடம் முதல் கோல் விழுந்தது. இந்தியாவின் ரன்பீர்சிங் அடித்த பந்து. ப்ளேயர் கள் குரங்குகளைப் போல ஒருவர் மீது ஒருவர் தொற்றிக் கொண்டு சந்தோஷக் கூச்சலுடன் அடுத்த கட்ட ஆட்டம் ஆரம்பித்தது.

அர்ஜென்டினாவின் மல்லியானா எனும் ப்ளேயர் அதிகம் வியர்த்தான் விடிகாலையில் அவனுடைய காட்டேஜிற்கு வந்து இரண்டு கறுப்பர்கள் ஐந்தாயிரம் டாலர்களைக் கொடுத்திருந்தார்கள்.

விளையாடும் போது, கே. ஸ்டாண்டில் வந்து விழும்படி ஒரு முறையாவது பந்தை அடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஃபுட்பாலை தங்கள் கையால் தொட்டுக் காட்டுவ தாக யாரிடமோ பந்தயம் கட்டியிருப்பதாச் சொன்னதை மல்லியானா நம்பிவிட்டான்.

பந்து அவனிடம் தோதாக வந்து சேர்ந்தவுடன் முழு பலத்தை பிரயோகித்து எட்டி உதைத்தான். பந்து பறந்து போய், கே ஸ்டாண்டில் இறங்கியது.

சாம்சன் சற்றே எகிறி அந்தப் பந்தைப் பிடித்தான். பிடித்த பந்தை வேண்டுமென்றே தவற விட்டான். பந்து இப்போது காலரிப் பலகைகளின் இடைவெளியில் நழுவ, அடுத்த வரிசையிலிருந்து கைநீட்டி பந்தைப் பிடித்து வெளியே இழுத்தான் ராபர்ட். மைதானத்திற்குள் தூக்கி எறிந்தான்.



ரெஃப்ரியின் விசிலுடன் ஆட்டம் மறுபடியும் ஆரம்பிக்க, சாம்சனும், ராபர்ட்டும் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந் தார்கள். தொப்பியை இழுத்து, முகத்தை பாதி மூடிக் கொண்டு காலரியில் இறங்கினார்கள். வெளியேறினார்கள்.

ஆட்டம் ஆரம்பித்து இருபத்தி எட்டு நிமிடங்கள் ஆகி விட்டன என்று எலக்ட்ரானிக் கடிகாரம் வெளிச்சம் கூட்டிக் காட்டியது.

இந்திய கோல்கீப்பர் உஷாராயிருந்தான். பந்து அர்ஜன்டினா வீரர்களின் லாகவமான கால்களுக்கிடையில் மந்திரம் போட்டது போல் சுழன்று சுழன்று கோல்போஸ்ட்டை நெருங் கிக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட உஷார்.

பந்தை யாரோ எட்டி உதைக்க, அது ராக்கெட் போல் கோல்போஸ்ட்டை நோக்கி பறந்து வந்தது. இந்திய கோல் கீப்பர் ஸோந்தி காற்றில் தாவி, எதிர் வந்த பந்தை மார்பில் வாங்கி அப்படியே காதலிபோல் கட்டிப் பிடித்தான். ஸ்டே டியம் ஹோவென்று கூச்சலிட்டபோது,

அந்த ஃபுட்பால் வெடித்தது.

ஸோந்தியின் உடம்பை நிமிஷமாய் சிதைத்து மைதானத் தின் அந்தப் பகுதியில் மழைபோல் சிதறடித்தது.

மார்ட்டின் தன் நெஞ்சு தடக் என்று துடிக்க அதிர்ந்தார்.

டெலிவிஷன் காமிராக்கள் ஆறு ஆங்கிள்களில் ஸ்லோ மோஷனில் அந்த விபத்தை மில்லி மீட்டர் மில்லிமீட்டராக உறைய வைத்து உலக முழுவதும் பறைசாற்றின.

அமெரிக்க ஜனாதிபதியில் ஆரம்பித்து, தமிழ் நாடு விளையாட்டுத்துறை அமைச்சர் வரை எல்லோரும் அதிர்ச்சி யும், அனுதாபமும் தெரிவிக்க தங்கள் பி.ஏ.க்களை அழைத் தார்கள்.

''ஸ்விம் ஸூட்டா?'' என்று கேட்டான் கடைக்காரன்.

''இல்லை. டைவிங் சூட்.. சின்ன ஆக்ஸிஜன் ஸிலிண்டர் பொருத்திய அக்வா-லங் மாடல்'' என்றார் ராம்தாஸ்...

''டீப் வாட்டர் டைவிங் கூட இந்த போட்டிகளில் இருக் கிறதா என்ன?'' கடைக்காரன் ராம்தாஸை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே டைவிங் சூட்களை எடுத்துக் கொடுத் தான். டாலர் கணக்கில் விலை சொன்னான். ''நான் கடையில் இதை வைத்த போது, சத்தியமாய் விற்பனையாகும் என்று நினைக்கவில்லை. ஆனால் போன வாரம் நான்கு, இன்றைக்கு இரண்டு சூட்கள் விற்றிருக்கின்றன'' என்று யேசுவுக்கு சிலுவை இட்டு, நன்றி சொன்னான். ''வேறு என்ன கேட்டீர்கள்? தண் ணீர்த் துப்பாக்கியா? லைசன்ஸ் இருக்கிறதா உங்களிடம்?''

''சியர்ஸ்.''

நான்கு பேரும் கோப்பைகளை மோதிக் கொண்டார்கள்.

''சாம்சன், நான் கேட்டதற்கு நீ பதிலே சொல்லவில் லையே?'' என்றான் சுலைமான்.

''என்ன கேட்டாய்?''

''ஒதுக்குப்புறமாய் ஏதாவது இடம் கிடைக்குமா என்று?''

''இந்த தீவே சென்ற இரண்டு வருடங்களாகத்தான் நிர்மாணிக்கப்பட்டது... இதில் ஒதுக்குப்புறமாய்... வெல்... நேற்றைக்குப் போனோமே காட்டுப்பகுதி... அங்கே உள்ள ஒரு மரவீடு இருக்கிறது.. எதற்கு கேட்கிறீர்கள்?''

''இன்று மாலையை நாங்கள் இருவரும் சந்தோஷமாகக் கொண்டாட.''

''கால்கேர்ள்ஸ்?''

''காசு கொடுத்தால் வரும் பெண்களிடம் என்ன த்ரில் இருக்கிறது? இரண்டு இந்தியப் பெண்களுக்கு குறி வைத்திருக்கிறோம்.. அவர்களை...''

''நீங்கள் சுயநலவாதிகள்...''

''நோ.. உனக்கும் ராபர்ட்டுக்கும் சான்ஸ் உண்டு... அந்தப் பெண்களை எப்படியும் உயிரோடு திருப்பி அனுப்பும் எண் ணம் எங்களுக்கில்லை.... அந்தப் பெண்களோடு துணை யாக இரண்டு ஆண்கள் இருந்தார்கள்... அவர்களைத் தான்...''



''நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்'' என்று சந்தோஷ மாகச் சொன்னான் ராபர்ட். ''ஆல் தி பெஸ்ட்...''

''தாஸ், ப்ளஸ் தாஸ்'' வைஜயந்தி ராமதாஸின் ஷேவ் செய்யப்படாத தாடையைப் பிடித்துக் கெஞ்சினாள்.

''போனமுறை அமெரிக்கா வந்த போதும் நரேன் அர்ஜென்ட்டாகத் தள்ளிக் கொண்டு போய் விட்டான். இந்த தடவையாவது ஷாப்பிங் போகலாம் தாஸ்...''

''எனக்கும் நரேனுக்கும் வேலை இருக்கிறது, கண்ணா.. நீ வேண்டுமானால் நிவேதாவுடன் போய் வாயேன்... பட் ரிமம்பர், நாளைக்கு அவள் ஃபைனல்ஸில் கலந்து கொள் கிறாள்...''

''ஓ, தாங்யூ.. தாங்யூ...'' என்று வைஜயந்தி உணர்ச்சி வசப்பட, ராம்தாஸ் அவசரமாகத் தன் வழுக்கையை மூடிக் கொண்டார்.

கடையில் பார்த்ததெல்லாம் ஆச்சரியமாக இருந்தது.

ரிமோட்டில் இயங்கும் பொம்மை விமானம். அதிலிருந்து பாரசூட்டில் குதிக்கும் பொம்மை மனிதன். வீடியோ கேம்கள். காதுக்கும், கழுத்துக்கும் அலங்காரம் செய்ய வெள்ளியில் தினுசு தினுசான தோடு, நெக்லஸ் வகையறாக்கள். சங்கீத மாய் அலாரம், எழுப்பும் டைம்பீஸ்கள். இரண்டு விரல் நீளத் திற்கு இருந்தாலும் கார் விளக்கைப் போல பளீரிடும் டார்ச்.

எதை வாங்குவது? எதை விடுவது?

வைஜயந்தி சில பொம்மை அயிட்டங்களும், நிவேதனா சில டிரெஸ் ஆச்சரியங்களும் வாங்கி திணித்துக் கொண்டு வெளிப்பட்டார்கள்.

''மேடம்...'' சுலைமான் பவ்யமாக நின்றான்.

''எங்கள் கடைக்கு நீங்கள் நிச்சயம் விஜயம் செய்ய வேண்டும்.''

''நோ.. தாங்க்ஸ்...''

''அப்படிச் சொல்லாதீர்கள் மேடம்.. ஏஷியாவிலிருந்து வந்தவர்களே எங்களை ஆதரிக்கா விட்டால் நாங்கள் எங்கே போவோம்? மிக அற்புதமான சில ஸாரிகள் பத்து டால ருக்கும், பதினைந்து டாலருக்கும் உங்களுக்காகக் காத்திருக் கின்றன... வந்துபாருங்கள்.. பிடிக்கவில்லையென்றால் அரை செ.மீ. துளி கூட வாங்க வேண்டாம்...''

''பார்க்கலாமே வைஜ்...''

வைஜயந்தி சற்றே தயக்கத்தோடு, புடவை என்ற ஆர்வத்தோடு 'சரி' என்றாள்.

''இதோ இந்த வழி மேடம்...''

சுலைமான் இரண்டு கடைகளுக்கு நடுவே இருந்த சந்தில் நடக்க, அவர்கள் விசுவாச ஆட்டுக்குட்டிகளாக தொடர்ந்தார்கள்.

வெளிச்சம் எட்டாத இடத்திற்கு வந்ததும் சுலைமான் சடாரென்று திரும்பி எதையோ புஸ்புஸ் என்று பீய்ச்ச, வைஜயந்தியும், நிவேதனாவும் சொய் சொய் என்று மயங்கித் தள்ளாடி, கையிலிருந்த பார்சல்களை நழுவ விட, தயாரா யிருந்த கார்க்கதவு திறந்து ,அவர்களை உள்ளே வாங்கிக் கொண்டது.

## 14

**சா**ம்சன் சூயிங்கத்தைத் துப்பினான்.

''மை காட்! அவர்கள் அந்த காட்டுப்பக்கம்தான் போகி றார்கள்'' என்றான். ராபர்ட் கவனித்தான்.

அவர்களுக்கு இருபது மீட்டர் முன்னே ராம்தாஸூம், நரேந்திரனும் வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

''அவசரப்படாதே.. எங்கே தான் போகிறார்கள்.. பார்ப்போம்.''

தொடர்ந்தார்கள் - ரகசியமாக.



ராம்தாஸ் திரும்பிப் பார்க்காமல் சொன்னார்.

''நரேன், நம்மை யாரோ பின் தொடர்கிறார்கள் என்று நினைக்கிறேன்...''

நரேந்திரன் திரும்பிப் பார்த்தான்.அவன் கால்களுக்கிடை யில் புகுந்து ஒரு முயல் ஓடியது. வேறு யாரும் கண்களில் தென்படவில்லை.

''முயல் தாஸ்.. வெறும் முயல்'' என்று சிரித்தான்.

கடற்கரையில் நுழைந்து, அவர்கள் டைவிங் டிரெஸ்ஸை மாட்ட ஆரம்பித்ததும், ''சாம்சன், அவர்களைப் பார்.. நம் ரகசியங்களை அறிந்தவர்கள் போலக் கிளம்புகிறார்கள்.. வா, அவர்களை மடக்குவோம்..'' என்று ராபர்ட் பதறினான்.

''இங்கே வேண்டாம்.. பசிபிக் கடலின் மடியில் அவர் களுக்கு சமாதி கட்டுவோம்.. ஓடு.. ஓடிப்போய் நம் உடை களை எடுத்துவா...''

''கொஞ்சம் டைட்டாக இருக்கிறது, நரேன்... தப்பான இடங்களில் கடிக்கிறது'' ராம்தாஸ் அந்த மஞ்சள் உடையை அங்கங்கே நீவிக் கொண்டார். ஹெல்மேட்டை அணிந்து மூச்சுக் குழாயைப் பொருத்திக் கெண்டார்.

''எனக்கு ஏற்கனவே எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது, தாஸ்'' நரேந்திரன் வேக வேகமாக உடையை பொருத்திக் கொண்டான்.

இருவரும் தண்ணீரில் சற்று தூரம் நடந்து சடாரென்று குதித்து நீந்த ஆரம்பித்தார்கள்.

கடல் தண்ணீரின் விசை, அலைகளின் பாய்ச்சல் இரண் டும் அவர்களை மேலே தள்ள, அதை மீறி தண்ணீருக்குள் இறங்குவது கஷ்டமாக இருந்தது. ஹெல்மெட்டின் டார்ச் வெளிச்சம் மஞ்சளாக தண்ணீரில் கிழித்தது. ஆரம்பத்தில் சில கரையோரக்குப்பைகள், அப்புறம் சிறு மீன்கள், சிறு நண்டு வகைகள் எல்லாம் எதிர்ப்பட்டன. ஒதுங்கின.

கைகளில் அணிந்த துடுப்பு போன்ற கிளவுஸ், கால்களில் அணிந்த பட்டையான ஷூக்கள் இவற்றை நீரில் அடித்து

சுலபமாக இறங்க முடிந்தது. இருவரும் பிரிந்து விடாமல் ஒருவர் பின் ஒருவராக நெருக்கமாக நீந்தினார்கள். அவர்களுடைய சுவாசம் காற்றுக் குமிழ்களாக விடுதலையானது.

கிட்டத்தட்ட நூறடி ஆழம் வந்ததும் மணல் சரிந்து உள்வாங்கியிருந்தது. பாசி படர்ந்த பாறைகளில் ஆக்டோபஸ் குடும்பம் ஒன்று சிவனே என்று கை விரித்து உட்கார்ந்திருந்தது. பாசிக் கொடிகள் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டிருந்த ஒரு பாறையை சுட்டிக் காட்டினார் ராம்தாஸ்.

கைகளையும், கால்களையும் அசைத்து தவளைகள் போல் அந்த இடத்திற்கு போய் நிமிந்தார்கள்.

நரேந்திரன் குனிந்து அந்தப் பாறையை நெம்பினான். அடுத்த பாறையில் காலை ஊன்றிக் கொண்டு அழுத்தம் கொடுத்து தூக்கினான்.

பாறை நகர்ந்து, முதலில் சில காற்றுக் குமிழ்கள் ரிலீஸாயின. சின்னச் சின்ன குமிழ்வாய்களைத் திறந்து மூடி, திறந்து மூடி சில தங்க மீன்கள் தப்பித்து ஓடின.

ராம்தாஸ் தன் நெற்றி டார்ச்சை கோணம் மாற்றி அங்கே வெளிச்சமடித்தார். பார்த்த காட்சி விசித்திரமாயிருந்தது.

ஒரு ராட்சஸப் பாலிதீன் கவரில் சில அயிட்டங்கள் பார்சல் செய்யப்பட்டிருந்தன.

எல்லாம் விளையாட்டுப் பொருள்கள்.

ஸ்போர்ட்ஸ் ஷூக்கள், வாலி பால்கள், ஜாவலின் த்ரோவில் பயன்படும் இரும்பு வட்டங்கள், ஹாக்கி மட்டைகள், டென்னிஸ் பந்துகள், ஃபுட்பால்கள். ஸ்போர்ட்ஸ் கிட்கள்.

'எல்லாம் வெடிகுண்டுகள்...' என்று ராம்தாஸ் கையால் வெடிப்பது போல் சைகை செய்தார்.

நரேந்திரன் அந்தப் பாலிதீன் மூட்டையை அசைத்துப் பார்த்தான். பாரம் நகராமல் இருக்க, சில கற்கள் சுமையாக வைக்கப்பட்டிருந்தன.



'வேண்டாம் விட்டு விடு' என்று சைகை செய்தார் ராம்தாஸ். அந்த பாறையை பழையபடி நகர்த்தி பாலிதீன் கவரை மறைத்தனர்.

'வா போவோம்' என்று திரும்பினார். உடன் கால் பிடித்து இழுக்கப்பட்டார்.

சாம்சன் விளக்கைப் போட்டுக் கொள்ளாமலே நீந்தி வந்திருந்தான்.

ராம்தாஸின் முதல் அதிர்ச்சி, சுறாமீனிடம் சிக்கி விட்டோம் என்று.

குனிந்து அது மனிதன் தான் என்று பார்த்ததும் பெருமூச்சை ஏகக் காற்று குமிழ்களாக வெளிப்படுத்தினார்.

இன்னொரு புறம் ராபர்ட் நரேந்திரனை சுற்றிப் பிடித்து தன் கத்தியை உருவியிருந்தான்.

நரேந்திரன் தண்ணீரில் அப்படியே வயிறு மடக்கி, ராபர்ட்டின் பிடியிலிருந்து நழுவினான். தண்ணீரில் விசையில் ராபர்ட்டால் முழு வேகத்தோடு செயல்பட முடியாமல் போக, நரேந்திரன் தன் வலது கை கிளவுஸை விடுவித்தான்.

மஞ்சள் சூட்டின் பையிலிருந்து துப்பாக்கியை உருவினான்.

தண்ணீரில் பத்தடி தூரம் வரை நிச்சயமாக சுடக்கூடிய ஸ்பெஷல் துப்பாக்கி.

நரேந்திரன் விசையை இழுத்தான்.

வெளிப்பட்ட தோட்டா சுழன்று தண்ணீரைக் கிழித்து பிரயாணம் செய்து ராபர்ட்டை தாக்கியது. ராபர்ட் மிக சாதுர்யமாக நகர்ந்து ஒதுங்க, அவனுடைய தோளில் உரசி மஞ்சள் உடையைக் கிழித்தது. கத்தி நழுவியது.

ராபர்ட்டின் ஹெல்மேட் கூண்டுக்குள் அவன் விழிகள் பயத்தில் விரிவது தெரிந்தது. அவன் அவசரமாகத் தன் திசை மாற்றி தப்பித்து நீந்த முயற்சிக்க, நரேந்தின் மறுபடி சுட்டான்.

இந்த முறை தோட்டா ராபர்ட்டின் இடது தொடைக்குள் செருகிக் கொள்ள, ராபர்ட் துடித்து மேலே எழும்பலானான். இனி அவன் ஓடி விட முடியாது என்ற நம்பிக்கையுடன் நரேந்திரன் அடுத்த சண்டையை கவனித்தான்.

ராம்தாஸூம் தன் வலது கையுறையை விலக்கியிருந்தார்.

சாம்சன் மிக ஆக்ரோஷமாக அவர் ஹெல்மெட்டைப் பிடித்து இழுத்தான். ராம்தாஸ் இரண்டு விரல்களை உயர்த்தி அவன் ஹெல்மெட்டில் அடித்தார்.

ட்ரில்லிங் மெஷின் வைத்து துளை போட்டது போல் கண்ணாடித்தடுப்பில் ஓட்டைகள் விழ, அதனூடே விரல் களைச் செலுத்தி சாம்சனின் மூக்குத் தண்டைப் பிடித்து அழுத்தினார்.

மூச்சுக் குழாயையே அறுத்து விட்டது போல் சாம்சன் துடித்து கை கால்களை உதற, ராம்தாஸ் இரண்டு விரல் களால் அவன் மார்பில் ஓங்கி அடித்தார். அவன் அப்படியே தொய்ந்து துவள, அறுந்த வாழையிலையை இழுப்பது போல் அவனுடைய ஒற்றைக்கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மேலே ஏற ஆரம்பித்தார். நரேந்திரன் அவரை வேகமாகத் தொடர்ந்தான்.

மேலே கடற்கரையின் விளிம்பில் ராபர்ட் மேற்கொண்டு நகர முடியாமல் குப்புற அடித்துக் கிடந்தான்.

நரேந்திரன் ஹெல்மெட்டைக் கழற்றிவிட்டு அவனைப் புரட்டினான்.

''எங்கே உன் கூட்டாளிகள்?'' என்று துப்பாக்கியை அவன் வாய்க்குள் நுழைத்தான்.

''அதோ.. அங்கே... அந்த மரவீட்டில்'' ராபர்ட் அவசர மாகச் சொன்னான்.

நரேந்திரன் துப்பாக்கியைத் திருப்பி பட்டீரென்று அவன் முகத்தில் அடித்தான்.



ராம்தாஸ் சாம்சனைக் கீழே போட்டார்.

''எங்களை நீங்கள் எதுவும் செய்து விட முடியாது'' சாம்சன் வேதனையுடன் கோபமாகப் பேச முயன்றான். ''ஏனென்றால் உங்கள் பெண்கள் எங்கள் ஆட்களிடம் மாட்டியிருக்கிறார்கள்.''

''எங்கே?'' ராம்தாஸ் மறுபடியும் அவன் மூக்குத்தண்டை அழுத்தினார்.

''அதோ.. அதோ... அந்த மர வீட்டில்...''

## 15

**வை**ஜயந்திக்குத்தான் முதலில் விழிப்பு வந்தது. உடனே பளிச் என்று எழுந்து உட்கார்ந்து விடாமல், கண்களை மட்டும் கொஞ்சமாகத் திறந்து, சூழ்நிலையை கிரகித்தாள்.

மின்சார சப்ளை இல்லாத ஒரு மரக் குடில். உடைந்து போன ஒரு மேஜை மீது செங்குத்தாக நிற்கும் மெழுகுவர்த்தி, நினைவு வந்ததும் அவளுக்கு உறைத்தது அந்த அறையில் பரவியிருந்த நெடி. சிங்கப்பூர் தலைவலித் தைலத்தின் நெடி.

மெழுகுவர்த்திக்கு சற்று தள்ளி இரண்டு ஆசாமிகள் நின்று கொண்டிருந்தார்கள். சிகரெட் பிடித்துக் கொண்டு, கொஞ்சம் பதட்டத்தோடு.

வைஜயந்தி கிடந்தது, தரையில். அவளுக்கு கால்களைக் காட்டிக் கொண்டு வேறு ஒருகோணத்தில் நிவேதனா. நிவே தனா இப்போது நெளிந்தாள். ஐயோ, தடாலென்று எழுந்து விடப் போகிறாளே என்று வைஜயந்தி பயந்து கொண்டிருக்க நிவேதனா தடாலென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''பட்சி எழுந்து விட்டது'' என்றான் ஓமர். கைகளை இடுப்பு களில் ஊன்றிக் கொண்டு மெல்ல நெருங்கி வந்தான்.

வைஜயந்தி கண்களை உருட்டி வாசல் எந்தப் பக்கம் என்று பார்த்தாள். ஆகாயத்தின் அழுக்கு நீலத்தை செவ்வ

மாகக் காட்டிக் கொண்டு, கதவில்லாத வாசல் திறந்திருக்க, அங்கே வழியை மறித்துக் கொண்டு சுலைமான் நின்றிருந்தான்.

வைஜயந்தி வெகு வேகமாக சிந்தித்தாள்.

ஓமரைப் பார்த்துவிட்டு நிவேதனா அலறினாள். அப்படியே தரையில் கை ஊன்றி பின்னால் பயத்துடன் நகர்ந்தாள்.

ஓமர் ஒரு கையை நீட்டி அவள் கன்னத்தைத் தொட்டான். நிவேதனா பதறி விலகினாள். ஓமர் சிரித்துக்கொண்டே இரண்டாவது கையையும் எடுத்து அவள் தோளில் வைத்து சட்டை விளிம்பில் கையை விட, வைஜயந்தி துள்ளி எழுந்தாள். எழுந்த வேகத்தில் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியை அள்ளி அப்படியே ஓமரின் முகத்தில் தேய்த்தாள்.

முதலில் நெருப்புச் சுடர். அப்புறம் உருகியிருந்த சூடான மெழுகு இரண்டும் ஓமரை எதிர்பாராமல் சுட,அவன் தன்னிச்சையாக கைகளிலிருந்து நிவேதனாவை விடுவித்து இரண்டடி பின்னே நகர்ந்தான்.

மெழுகுச் சுடர் அணைந்து விட, அறையில் இருள், இருளோடு சேர்ந்து குழப்பம்.

ஓமர் நிவேதனா மேல் பாய, நிவேதனா ஒதுங்கி வாசல்புறம் ஓட, பதட்டத்தில் சுலைமான் உள்ளே தாவி வந்து, வைஜயந்தி நீட்டிய காலில் இடறி சாஷ்டாங்கமாக குப்புற அடித்து விழுந்தான்.

''ஓடு.. நிவேதனா.. ஓடி விடு...'' வைஜயந்தி குரல் கொடுத்தாள். கையில் கிடைத்த மரக்கட்டையால் பூரானை அடிப்பது ;போல் கீழே கிடந்து இருவரையும் அடித்தாள். வாசல் வழியே வெளியே பாய்ந்தாள்.

நிவேதனா ஒற்றையடிப் பாதையில் சருகுகளை மிதித்துக் கொண்டு இருட்டில் ஓடினாள். எதன் மீதோ மோதி நின்றாள்.

ராம்தாஸ்!

அப்படியே நிவேதனாவை நெஞ்சில் சாய்த்துக் கொண்டார். மணிக்கட்டில் இருந்த வாட்சைத் திருப்பிக் காட்டினார்.



''நூறு செகண்ட்தான்... உலக ரெக்கார்டையே உடைத்து விட்டாய்.. இதே வேகத்தில் நாளைக்கு டிராக்கில் ஓடு.. உன்னை பீட் பண்ண யாராலும் முடியாது.''

வைஜயந்தியும் வாசல் வழியே வெளியே பாய, ஓமர் அவள் பின்னே பாய்ந்து தலைமுடியைப் பிடித்தான்.

பிடித்த கையில் சட்டக் என்று ஒரு வெட்டு விழுந்தது.

''பிரதர், முதலில் எனக்கு பதில் சொல்லிவிட்டு அப்புறம்... அப்புறம் எங்கள் குலப் பெண்டிரைத் துரத்து...''

ஓமர் நரேந்திரனை தன் வழியிலிருந்து பிய்த்து எறிய முற்பட்டான். நரேந்திரன் இருட்டில் தேடி தன் முஷ்டியைக் குவித்து மேலே பாய்ச்சினான். மோதிரம் அணிந்த அந்தக் கை மிகச் சரியாக ஓமரின் முகவாயை மோதியது. ஓமரின் தலை பின்னே எறியப்பட்டு தடுமாறி வீட்டிற்குள்ளேயே ரிவர்ஸில் நுழைய, நரேந்திரன் தன் வலது காலைத் தூக்கி காற்றில் உதைத்தான்.

ஓமர் விலகி உருண்டு நரேந்திரனின் காலைப் பற்றி இழுத்தான். இழுத்த வேகத்திலேயே அந்த காலை மடக்கி தன் கையால் அழுத்திக் கிடுக்கிப் பிடி போட்டான். நரேந்திரன் திமிறி தன் முழங்கையை பக்கவாட்டில் செலுத்தி ஓமரின் மூக்கைத் தாக்கினான். ஓமரின் கறுப்புப் பற்கள் இரண்டு இடம் பெயர்ந்தன.

அதற்குள் நரேந்திரனின் மீது பின்புறமிருந்து பாய்ந்தான் சுலைமான் அப்படியே தன் பாரத்தால் அழுத்தினான்.

நரேந்திரன் இரண்டு பேருக்கும் நடுவில் பிரெட் துண்டங்களுக்கு நடுவே தடவப்பட்ட ஜாம் போல் நசுங்கினான்.

சற்றே ஒருக்களித்து, தன் பாக்கெட்டில் இருந்து பளிச் சென்று துப்பாக்கியை உருவினான். ஓமரின் நெற்றிப் பொட்டில் அழுத்தினான்.

''விலகுகிறீர்களா, சுட்டு விடவா?''

சுலைமான் இரை பிடுங்கப்பட்ட சிறுத்தையின் ஆத்திரத்தோடு, இயலாமையோடு எழுந்திருக்க, ராம்தாஸ் அவன்

சட்டைக் காலரைப் பிடித்து பின்புறம் உலுக்கி இழுத்தார். கன்னத்தில் தன் கையை வேகமாக வீசினார்.

''நட நைனா, டேஷனுக்குப் போலாம்'' என்றார்.

''அப்படியா?''

''அப்படியா?''

''அப்படியா?''

''அப்படியா?''

மார்ட்டினுக்கு வேறு எதுவுமே பேசத் தோன்றவில்லை. மெஸ்மரைஸ் செய்யப்பட்ட மான்குட்டி போல ராம்தாஸ் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டார்.

''அதனால் இந்த நான்கு பேரையும் உள்ளே தள்ளி இன்னும் பத்து போடு போடுங்கள்.. இன்னும் யார் யார் இதில் இன்வால்வ்டு என்று கண்டுபிடியுங்கள்.. இப்போதைக்கு ஒரு சப்மரைனுக்கு ஏற்பாடு செய்யுங்கள். தண்ணீருக்கடியில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் அத்தனை வெடி குண்டு களையும் கைப்பற்றுங்கள்.. போலீஸ் போகும் போது கூடவே பத்திரிகை ரிப்போர்ட்டர்களையும் அழைத்துப் போங்கள்...''

''ரிப்போர்ட்டர்ஸ் எதற்கு?''

''அத்தனை பேப்பர்களிலும் இந்த செய்தி முதல் பக்கத் தில் கொட்டை எழுத்தில் வந்தால்தான் ப்ளேயர்கள் தைரிய மாக நாளைக்கு மைதானத்தில் இறங்குவார்கள்.. அத்தனை நாடுகளும் அமெரிக்கப்போலீஸின் அபாரமான திறமையைக் கண்டு மூக்கில் விரல் வைக்கும்...''

''நான்.. நான் எப்படி உங்களுக்கு நன்றி...''

''ஒரு வழி இருக்கிறது.. ஆஸ்பத்திரியில் இருக்கும் லெஃப்டினன்ட் நெல்சனைப் பார்ப்பதற்கு எனக்கு அனுமதி கொடுங்கள், போதும்...''

நவீன ஆஸ்பத்திரி.



நோயாளிகளை வினாடிக்கு வினாடி கவனித்துக் கொள்ள கம்ப்யூட்டர்கள். தூய்மை, சுத்தம், சுச்சிதம்.

நெல்சனின் கையில் பிளாஸ்டர்கள் ஒட்டி, சதைக்கு க்ளிப் கள் போட்டு, அந்த க்ளிப்களின் முனைகளில் மெல்லிய பாரங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. சுளுக்கை எடுத்து விடும் முயற்சி.

ராம்தாஸைப் பார்த்ததும் நெல்சனின் கண்கள் கிலியில் அகலமாக விரிந்தன.

ராம்தாஸ் சிரித்தார். ''ஹலோ, நண்பரே, இந்தியப் பன்றி வந்திருக்கிறேன்..'' குனிந்து நெல்சனின் கழுத்தில் கைவைத்து வருடினார். மளுக் என்று ஒரு நரம்பை அழுத்தினார்.

நெல்சனின் தொண்டையிலிருந்து இருமல் ஒன்று வெளிப்பட்டது.

''யூ.. யூ..'' என்றான், கண்களில் நீர் தளும்ப.

''அவசரப்படாதீர்கள்.. கையையும் சரிப்படுத்த முடிகிறதா, பார்ப்போம்.''

வலிக்க வலிக்க பிளாஸ்டரைப் பிடுங்கினார். நெல்சனின் கையை எடுத்து தன் கையில் வைத்துக் கொண்டார். பெண் கையை வருடுவது போல் வருடி ஒற்றை நரம்பைத் தேர்ந்து தட்டிக் கொடுத்தார்.

நெல்சன் நம்ப முடியாமல் விரல்களை உதறிக் கொண் டான், விரித்து விரித்து மூடினான்.

''ஸோ இந்திய நாய்க்கு வைத்தியமும் தெரியும்.. போங் கள்.. உங்கள் சேவைக்காக கேப்டன் மார்ட்டின் காத்துக் கொண்டிருக்கிறார்...''

ராம்தாஸ் தன் பைப்பை எடுத்து பற்ற வைப்பதில் ஈடு பட்டார்.

**ரூஸ்வெல்ட் ஸ்டேடியம்**

எண்ணூறு மீட்டர் எல்லோரையும் ஜுரம் பீடித்திருக்க, ஒன்பதாம் ட்ராக்கில் நிவேதனா, நீல பனியன், வெள்ளை

ஷார்ட்ஸ் அணிந்து நிற்காமல் குதித்து கால்களை தயார் செய்து கொண்டிருந்தாள்.

கொஞ்சம் நெர்வஸாகத் திரும்பிப் பார்த்தாள்.

நரேந்திரன் காற்றில் ஒரு முத்தத்தைப் பறக்க விட்டு, கட்டை விரலை உயர்த்தி காட்டி, 'வெற்றி உனக்குத்தான்' என்று வாயசைத்தான்.

அந்தக் கட்டைவிரலை அப்படியே பிடித்து வளைத்தாள் வைஜயந்தி, ''வாழ்த்த வேண்டியதுதான்.. அதற்காக முத்தமா?'' கண்களில் கனல் பறந்தது.

''சேச்சே.. நீ எல்லாவற்றையும் தப்பாகப் புரிந்து கொள்கிறாய்.. இது குரு தன் சிஷ்யைக்குக் கொடுக்கும் பாசமுத்தம்...''

துப்பாக்கி வெடித்து அத்தனை பெண்களும் பாய்ந்து ஓடினர்.

''நிவேதனா... நிவேதனா.. டபுள் அப்.''

ஆச்சரியம்.. அத்தனை போட்டிகளையும் முறியடித்து, நிவேதனா முன்னேறி நூற்றி இரண்டு நொடிகளில் வெற்றி ரிப்பனை மோதிக் கிழித்தாள்.

இந்திய டெலிவிஷனில் பார்த்துக் கொண்டிருந்த சேதுமாதவன் ஓடிப்போய் டீ.வி. திரைக்கு முத்தம் கொடுத்தது நிவேதனாவுக்கு தெரியாது.

நிவேதனா ஓடி வந்து... ஓடி வந்து ராம்தாஸைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள்.

''சே, பெண்களே மோசம்... குருதட்சணையை யாருக்கோ கொடுத்து விடுகிறார்கள்'' நரேந்திரன் பொறாமைக் கண்களால் ராம்தாஸைப் பார்த்தான். ராம்தாஸ் கையை நீட்டி நரேந்திரனின் தோளில் பட்டென்று தட்டினார்.

''தாஸ், என்னை ஏன் அடிக்கிறீர்கள்?''

''ச்சே, நீ எல்லாவற்றையும் தப்பாகப் புரிந்து கொள்கிறாய், நரேன். இது குரு தன் சிஷ்யனுக்கு செல்லமாகக் கொடுக்கும் தட்டு'' என்றார், ராம்தாஸ் சிரித்துக் கொண்டே.

*

# பெயர்? முகவரி? அன்பு!

## 1

ரங்கராஜன் மல்லாந்திருந்தான். அவன் கண்களில் நீர் பொங்கிப் பொங்கி இரு விழியோரங்களிலும் சூடாக இறங்கி காதுகளை நனைத்தது. மனம் கடல் அலை போல் இரைச்சல் போட்டுக் கொண்டே இருந்தது. மனதின் இரைச்சலை அவனால் தாங்க முடியவில்லை?

டேய் ரங்கா. உன்னை மாதிரி ஒரு ஏமாளியை உலகத்தின் எந்த மூலையில் தேடினாலும் பார்க்க முடியாதுடா. டேய் ரங்கா, உன்னை மாதிரி ஒரு இளிச்சவாயன் எங்கே தேடினாலும் கிடைக்கமாட்டாண்டா.

இரைந்த மனதை சமாதானப்படுத்தும் பொருட்டு ரங்கராஜன் நெஞ்சை ஒரு முறை நீவி விட்டுக் கொண்டான். மனம் என்ன மார்புப் பகுதியிலா இருக்கிறது? அவன் தேய்த்து விட்டவுடன் சமாதானம் ஆகிவிட.

அது பாட்டிற்குத் தன் இரைச்சலைத் தொடர்ந்தது.

ரொம்ப நாட்களாகவே ரங்கராஜன் யோசித்ததுதான் இன்று செயல்படுத்தத் தீர்மானித்திருந்தான். அதனால் இரவு முழுக்கத் தூங்கவில்லை. நன்றாகத் தூங்கினால் பொழுது விடிந்த பின்பும் அவன் தூக்கம் கலையப் போவதில்லை. முதுகின் மேல் சுள்ளென்று வெயில் தைப்பதைப் பார்த்து விட்டு அம்மா பதைத்துப் போய் வந்து எழுப்பிய பின்தான் அவன் எழுந்து கொள்வான். அம்மாதான் எழுப்பியவள் என்று தெரிந்தால் அவன் உடல் கூசும். உள்ளம் கூசும். இவ்வளவு நேரம் தூங்கிவிட்டத் தன்மீது கோபம் வரும். மறுப்படி ஒருநாள் அவனுடைய கட்டுப்பாட்டிலேயே இல்லாமல் கழிந்து விடும்.

''ரங்கா. மாத்தூர் குத்தகைக்காரன் கிட்டேயிருந்து பணம் வரலை. போய் என்னன்னு விசாரிச்சிட்டு வா. அவனுக்கு ஒடம்பு கிடம்பு சரியில்லேன்னா குத்தகைப்பணம் அது இதுன்னு கேட்டுடாதே. சமய சந்தர்ப்பம் பாத்துக்கோ. போற வழில ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கிக்கோ. பழத்தை கும்பகோணத்திலயே வாங்கிக்கோ. அங்க விலை கொஞ்சம் கொறைச்சலா இருக்கும்.''

''சரிம்மா.''

''டேய். ரங்கா. உரமூட்டை தீந்து போச்சாமே. அந்த வேலு வந்து சொல்லிட்டுப் போறான். நேத்தே உன்கிட்ட சொன்னா னாமே. மறந்து போச்சா? மொதல்ல போய் டவுன்லேர்ந்து அதை வாங்கிட்டு வந்துடு.''



''சரிம்மா.''

''டேய் ரங்கா. இன்னிக்கு நான் தாராசுரத்துக்குப் போக ணும். என்னால உம் பின்னாடி எல்லாம் சைக்கிள்ல ஏறிவர முடியாது. சின்னானை வண்டி கட்டச் சொல்லு. மாட்டுக்கு லாடம் கட்டணும்னு சொன்னானே அவன் கட்டிட்டானான்னு கேளு. இல்லேன்னா மொதல்ல அதைப் பார்க்கச் சொல்லு.''

''சரிம்மா.''

''பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்லேர்ந்து பூச்சி மருந்து தெளிக்கறவன் வரேன்னு சொன்னான். ஆளைப் பார்க்கவே முடியலையேடா ரங்கா. சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போய் ஒரு மிரி மிரிச்சி எட்டிப் பாத்துட்டு என்னன்னு கேட்டுட்டு வாயேன்.''

''சரிம்மா.''

''சாந்தாவுக்கு ரவிக்கை தைக்கக் குடுத்து ஒரு வார மாகுதுடா. இன்னும் அந்த ஏட்டு வீட்டுப் பொம்பளை ரவிக்கை தச்சிக் கொண்டு வரா. ம்ஹ்ம். என்னன்னு கேளு. அப்படியே அவளோட அத்தை பேரன் கல்யாணம் நல்லா நடந்ததான்னு விசாரிச்சிட்டு வந்துடு. நீ விதை வாங்கப் போனேல்ல? அதாண்டா தஞ்சாவூருக்கு. அன்னிக்குத்தான் கல்யாணம் நடந்திச்சி. எஸ்.ஆர்.ஜி.யில, நீ அவசர வேலையா தஞ்சாவூர்க் கலெக்டரைப் பாக்கப் போயிட்டேன்னு சொல் லிட்டு வந்திருக்கேன். சமயத்துக்கு ஏத்தமாதிரி நடந்துக்கோ. அவங்க வீட்ல டீதான் குடுப்பாங்க. 'எனக்கு எங்கம்மா போடற காபிதான் பிடிக்கும்னு' நொள்ளை சொல்லிட்டு வந் துடாதே. டீயை வாங்கிக் குடிச்சிட்டு வந்துடு. வீட்டுக்கு வந்தா நான் ஒனக்கு நல்ல காபி போட்டுத் தரேன். நம்ப வீட்டு ஆம்பிளைங்க யாரும் கல்யாணம் விசாரிக்க வல்

லேன்னு நாளைக்கு யாரும் பாட்டு பாடிரக்கூடாது. என்ன ஞாபகத்துல இருக்கா?''

''சரிம்மா.''

பொழுது விடிந்தால் ரங்கராஜனின் நேரம் இப்படித்தான் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கும். அம்மா சொன்னதை மறுக்க முடியாது. அம்மா சொன்னதை நிறைவேற்றாமல் அவனால் எங்கேயும் போக முடியாது. அவள் சொன்னதை யெல்லாம் செய்து முடித்து விட்டு வரவே இரவு பத்து பத்தரையாகி விடும். பிற்பகலில் ஒருமுறை எப்படியாவது நடுவில் நேரம் பண்ணிக் கொண்டு வீடு வந்து அம்மா செய்து போடுவதை சாப்பிட்டு விட்டுப் போயிருப்பான். ராத்திரி வீட்டுக்கு வரும்போது வயிற்றில் பசித்தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும். அம்மாதான் சுடச்சுட சாதம் பரிமாறுவாள். ராத்திரி நேரத்தில் கூட உருளைக்கிழங்கு கறி, வாழைக்காய் கறி, பச்சை மொச்சை மசாலா என்று ஏதாவது ஒரு நாக்கில் நீர் சொட்ட வைக்கும் ஐட்டம் இருக்கும். நாக் கையும், மனதையும், வயிற்றையும் திருப்தி செய்ய அளவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே சாப்பிடுவான். கெட்டியான தயிர். மாவடு இல்லாவிட்டால் ஆவக்காய். இல்லாவிட்டால் எலுமிச்சை, நார்த்தங்காய், மோர் மிளகாய். வத்தக்குழம்பு.

சாப்பிட்டு முடித்தால் எழுந்து கொள்ளக் கூட உடம்பு சிரமப்படுத்தும். முற்றத்திற்கு வந்து கையலம்புவதற்குள் கண்கள் செருகும். அம்மா அவனை வயல் வரைக்கும் ஒரு நடை போய் வரச் சொல்வாள். அவனுக்கு அது ஒன்றுதான் பிடிக்காத விஷயம். இருந்தாலும் சின்ன வயதில் இருந்தே அம்மா சொன்னதற்கு மறுபேச்சு சொன்னதில்லை. அதனால் வயல் வரை போவான். தண்ணீர் சரியாய்ப் பாய்ந்திருக் கிறதா? பார்ப்பான். அறுவடை நேரம் என்றால் காவல்காரன் தூங்காமல் விழித்திருக்கிறானா? பார்த்து விட்டு எப்படி



வீட்டுக்கு வந்து சேருவான் என்றே அவனுக்குத் தெரியாது. வீட்டுக்கதவு திறந்திருக்கும். உள்ளே நுழைவான். கூடத்தில் பாய் விரித்திருக்கும். கால்களைக் கழுவக்கூட முடியாது. தொப்பென்று பாயில் விழுவான். மறுநாள் அம்மாதான் அவன் முதுகு வெயில் பார்த்துத் தட்டி எழுப்ப வேண்டியிருக்கும். அம்மா கைதொட்டு எழுப்பி விட்ட கூச்சத்துடன் அன்றைய பொழுது துவங்கிவிடும்.

* * *

அதனாலேயே ரங்கராஜன் இரவு முழுக்கத் தூங்க வில்லை.

'கொக்கோ ஓ ஓ கோய்' என்று ஒரு சேவல் கத்தியது. விடிகாலைச் சேவல் கொக்கரக்கோ ஓ என்றுதான் கத்தும். ரங்கராஜனுக்கு சேவல் கூவும் என்று கூட நினைக்கத் தோன்றவில்லை. இன்னும் விடிகிற நேரம் வரவில்லை. எழுந்து கொண்டான். சுவர்க்கோழி ஒன்று அல்லது இரண்டு அல்லது நூறு இடைவிடாமல் ரீங்கரித்துக் கொண்டிருந்தது.

கூடத்துச் சுவரில் ஒரு மண்ணெண்ணெய் சிம்னி விளக்கு மாட்டப்பட்டிருந்தது. அதனுடைய குஞ்சுத்தழல் அவ்வப்போது நடுங்கிக் கொண்டிருந்தது. ரங்கராஜனின் நிழல், அவனுக்குப் பின்னால் மிகப் பெரியதாய் அரக்கன் உடல் போல் கூடம் முற்றம் என்று வீடு முழுவதும் பரந்து நீண்டிருந்தது.

கூடத்தைப் பார்த்தான். அவன் படுக்கைக்குச் சற்றுத் தள்ளி அம்மா படுத்துக் கொண்டிருந்தாள். தூங்கும் போது கூட அம்மா அழகாக இருந்தாள். ஒற்றை நாடி சரீரம். நன்றாகத் திரண்ட கழுத்து, கை, கால். அம்மாவின் முகத்தில் எப்போதும் போல் புன்சிரிப்பு. அம்மாவிற்கு நாற்பது வயது

இருக்கலாம். இருந்தும் தலை நரைக்கவில்லை. பிசிராந்தை யாரின் வழித்தோன்றலாய் இருப்பாள். மூக்குத்தியில் ஏதோ ஒரு வெளிச்சக்கதிர் பட்டு, கல் மின்னியது. கதிரை நிறப்பிரிகைத் தத்துவத்தில் பல நிறக்கோடுகளாக்கிச் சிதறி அடித்தது. நெற்றியில் அம்மா ஒரு கருந்திலகம் வைத்துக் கொண்டிருந்தாள். இழவு வீட்டில் பத்துநாள் தீட்டை ஒற்றியிருக்கும் பெண்களும், திண்ணையில் மூன்று நாட்கள் உட்காரும் பெண்களும்தான் அந்த ஊரில் கருந்திலகம் இடுவது வழக்கம். அம்மாவிற்கு என்ன? ஏன் இந்த கருந்திலகம்?

ரங்கராஜன் கேட்டதில்லை. அம்மாவை எதிர்த்துக் கேட்டால் அம்மா என்ன சொல்லி விடுவாளோ என்ற பயம் அவன் வாயை அடைத்துவிட்டது. அம்மாவிற்குப் பக்கத்தில் சாந்தா படுத்திருந்தாள். இளமையின் வாசலில் நின்றிருந்தாள். விடிகாலை நேரத்தில் தங்க இதழ்களால் விரிக்கும் மலர்களை நினைவு படுத்தினாள். அவளது தூக்கத்திலும் அவளது ஆடை ஒரு நேர்த்தியுடன் அவளை மூடி இருந்தது. சில பெண்களைப் பார்க்கும்போது ரங்கராஜனுக்கு அருவெறுப்பு தான் வரும். வாயோரம் எச்சில் வழிந்து வெள்ளை மாவுக் கோடு தெரிய, தாடகைகள் உறக்கத்தில் ஆழ்ந்த மாதிரி. ச்சீ. ச்சீ... பெண்கள் இப்படியா உறங்குவார்கள்?

சாந்தாவை அப்படியெல்லாம் நினைக்கத் தோன்ற வில்லை. கம்பீரமாய் இருந்தாள். அவள் மேல் ஆசை கொள்ள வைத்தாள். ஆனால் ரங்கராஜன் ஒரு பொழுதும் தன் ஆசையை வெளிப்படுத்தியதில்லை. அவமானப்படாமல் இருக்க வேண்டும் என்றால் ஆசையையெல்லாம் புதைத்துத் தான் ஆக வேண்டும்.



''ம்ஹ்ஹ்ம்.''

ரங்கராஜனிடமிருந்து ஒரு நெடிய மூச்சு வெளிப்பட்டது. இனிமேல் அம்மாவிற்கு சாந்தாதான் துணை. அதாவது அவள் கல்யாணம் முடித்துக் கொண்டு போகும் வரை. அப்புறம் அம்மா!

அம்மா அப்படி ஒன்றும் தனியாகிவிட மாட்டாள். அம் மாவைப் பார்த்துக் கொள்ள ஆள் இருக்கிறது. சாந்தாவிற்கு நல்ல பாதை அமைத்துக் கொடுக்க ஆள் இருக்கிறது. அந்தத் தைரியம் தான் அவனை வீட்டை விட்டுக் காலை வெளியே எடுத்து வைக்கச் சொல்லியிருக்கிறது.

என்ன இருக்கிறது இந்த வீட்டில்? ஆணியடித்த மாதிரி இங்கேயே இருக்க? அவன் இருக்கிறானா இல்லையா என்று கவனிக்க யார் இருக்கிறார்கள்? இந்த வீட்டில் இருந்து ஒரு உழவு மாடு வாழ்க்கை வாழ்வதை விடவும் எங்கேயாவது போய் விடலாம்.

ஏதோ ஒரு இடம். இன்னதுதான் என்று குறிப்பிட்டுச் சொல்லுவதற்கில்லை. வெளியேறுவது என்பது மட்டும்தான் தீர்மானம் ஆகியிருந்ததே யொழிய எங்கே போவது இன்னும் முடிவாகவில்லை. விடிகாலையில் ஆறுமணி சுமாருக்கு கும்பகோணத்தில் ஒரு ரயில் வரும். அதில் ஏறிப் போய்விட வேண்டியது. பஸ் ஸ்டாண்டை விட ரயில்வே ஸ்டேஷன் தான் பக்கம். ஆற்றைக் கடந்து திரும்பினால் போதும் ரயில்வே ஸ்டேஷன்.

ரங்கராஜன் அம்மாவின் காலைத் தொட்டு கும்பிடலாமா என்று யோசித்தான். அப்புறம் வேண்டாம் என்று தீர்மானித் தான். ஒரு வேளை அம்மா எழுந்து விட்டால்?

கதவை நெருங்கினான். வீடு பழைய வீடு. இந்த கிராமத்திற்கு அப்பா வந்து செட்டிலான போது சீதனமாய்க் கிடைத்த வீடு. அம்மா கொண்டு வந்ததாம். அதனால் கதவில் பழமையான நாதாங்கி. அதை நீக்கிய போது என்னதான் மெதுவாய் நீக்கினாலும் 'கிர்ர கீய்ச்ச்' என்று ஒலியெழுப்பி விட்டது.

அம்மா எழுந்து விட்டாள்.

''யாரு?''

''நாந்தாம்மா'' என்றான் ரங்கராஜன் திடுக்கிட்டுப் போன மனதுடன்.

''என்னடா ரங்கா? இன்னும் விடியலையே. எங்க இந்த நேரத்தில?'' என்று கேட்டாள் அம்மா.

ரங்கராஜனுக்கு வியர்த்து விட்டது.

## 2

''வெளிலம்மா சும்மா ஒண்ணுக்கு இருக்க'' என்றான் ரங்கராஜன்.

''ம்'' என்று முனகிக் கொண்டே அம்மா திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

ரங்கராஜன் வீட்டை விட்டு வெளியே இறங்கினான்.



உலகம் இருட்டாக இருந்தது. வான், வெளி, வீடு, வாசல் எல்லாம் வேறு வேறு இல்லை, எல்லாம் ஒன்றே என்ற தத்துவத்தை விளக்குவது போலத் தோன்றியது ரங்கராஜனுக்கு. அவனுக்கு வழி தெரியும். அதனால் போவது ஒன்றும் பிரச்சனை இல்லை. இந்த வீட்டை விட்டுப் போகப் போகிறோமே என்ற நினைப்பு அவனை மெல்லக் குத்தியது. திண்ணையில் உட்கார்ந்தான். அவன் தினம் தினம் ஏறிச் செல்லும் சைக்கிள் திண்ணை மேல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் மட்கார்ட் அவனை உரசியது. சைக்கிளை ஒருமுறை குருடன் யானையைத் தடவுவது போலத் தடவிக் கொடுத்தான். இனிமேல் சைக்கிளுக்கும், அவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

எழுந்தான். திண்ணையிலிருந்து நடை, நடையிலிருந்து படி என்று இறங்கி தெருவைத் தொட்டான். காலில் செருப்பு கூட அணியவில்லை. கையில் ஒரே ஒரு பை மட்டும். அதில் மாற்று வேட்டி ஒன்று இருந்தது மாற்றுச் சட்டை ஒன்று.

இந்த வீட்டிலிருந்து விடுதலை கிடைத்து விட்டது. இந்த மனிதர்களிடம் இருந்து விடுதலை கிடைத்து விட்டது. இனி வாழ்க்கை அவனுக்கு மனிதர்களுடன் இல்லை. மனிதர்கள் சஞ்சரிக்காத காடு ஏதாவது இருக்காதா? இல்லை இமயமலை என்கிறார்களே. அங்கே போனால் நதி, பனி, மலை, மரங்கள் இருக்கும். மரங்களில் கனிகள் இருக்கும். பசித்தால் கனிகளைச் சாப்பிடுவது. புல்லைச் சாப்பிடுவது, பசிக்காவிட்டால் சும்மா இருப்பது. இயற்கையோடு வாழ்க்கையை இணைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

இருபது வருட வாழ்க்கையில் எவ்வளவு ஏமாற்றங்கள்! மனிதர்கள் அத்தனை பேரும் நெஞ்சில் நஞ்சும், உதட்டில் புன்னகையும் தரித்து வலம் வருபவர்கள்.

அவன் அப்பாவைத் தெய்வமாகத் தொழுதான். அம்மாவைத் தெய்வமாகத் தொழுதான்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

கடவுள் இருக்கிறாரா என்று அவனுக்குத் தெரியாது.

கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடவும் அவனுக்கு மனசில்லை.

கண்ணுக்குத் தெரியாத கடவுள்களை, தூபதீபம் காட்டி, நைவேத்தியம் வைத்துக் கும்பிடுவதைக் காட்டிலும் தனக்கு உகந்தவர்களையே கடவுளாக நினைத்துக் கொள்வது என்று அவன் சின்ன வயசிலேயே முடிவு செய்து கொண்டான்.

அப்படித்தான் அப்பாவையும், அம்மாவையும், வேணு மாமாவையும் கடவுள்களாக ஆராதிக்கத் தொடங்கினான்.

கடவுள்களே ஏமாற்றுவார்கள் என்று அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

கல்லாய் இருக்கும் கடவுள்களிடம் சூறைத் தேங்காய் விடுவதாகவும், மொட்டை அடித்துக் கொள்வதாகவும் சொல்லி வேண்டுதல்களை விடுத்துக் காத்திருந்து வேண்டு தல்கள் நிறைவேறாமல் போனால் கடவுளர்களை யாரும் கோபித்துக் கொள்வதில்லை. தங்கள் முயற்சியின் மீது அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும். கடவுள் மேல் நிஜ மான, உண்மையான, நூறு சதவீத நம்பிக்கை கிடையாது. கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற வாதமே மனிதனுக்கு வாழ்நாள் முழுக்க மனதில் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அப்படியிருக்கும் போது வேண்டுதல் நிறைவேறாத போது ஒன்று தங்கள் முயற்சியில் அவர்களுக்கு சந்தேகம் வரக் கூடும். அல்லது கடவுள் என்று ஒன்று நிஜமாகவே இருக் கிறதா என்ற சந்தேகம் மனதை நெருடும்.



ஆனால் ரங்கராஜனைப் பொறுத்தவரைக்கும் கடவுள்கள் இல்லை. கண்ணுக்குத் தெரியாத, அவனால் உணர முடியாத எதையும் அவன் கடவுள் என்று ஒப்புக் கொள்ளத் தயாராய் இல்லை.

அதனால் அவன் மனிதர்களைக் கடவுள்களாக்கினான்.

அவன் கடவுளாய் நம்பிய மனிதர்களே அவனை ஏமாற்றி விடுவதென்றால்...

அதுதான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

* * *

இருட்டிலேயே தடவித் தடவி ரங்கராஜன் தெரு முனைக்கு வந்துவிட்டான். ரயில்வே ஸ்டேஷன் ஆற்றுக்கு அப்பால் இருந்தது. இருந்தாலும் இந்த நேரத்தில் ரயிலின் 'பாங்க்' என்ற ஹாரன் ஒலி கேட்டது. ரயில் பெட்டிகளின் தடக் தடக் கேட்டது. கூட்ஸ் வண்டியாய் இருக்கும். அத னால்தான் இவ்வளவு நீளமான ஹாரனும் இவ்வளவு நீளமான தடதடப்பும். காற்று சில்லென்று இருந்தது. மார்பில் காற்றின் குளுமையை உணரமுடிந்தது.

சின்ன வயதில் எல்லாம் அப்பா அவனை எப்படிப் பொத்திப் பொத்திப் பாதுகாத்தார்?

அவன் மார்பில் குளிர்காற்று பட்டால் அவனுக்கு சளி பிடித்து விடும் என்று தன் மேல் போர்த்திக் கொண்டிருக்கும் துண்டை எடுத்து, அப்பா அவனுடைய சட்டைக்கு மேல் போட்டு விடுவார். அம்மா அப்பாவுக்கு ஒரு படி மேலே. அவனுக்கென்று தனியாக ஒரு ஸ்வெட்டரே பின்னிக் கொடுத்து விட்டாள்.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் கல்யாணம் நடந்ததே ஒரு தனிக்கதை. அதில் கண்ணீர், சோகம், நகைச்சுவை,

கருணை எல்லாம் கலந்திருக்கும். அந்தக் கதையைச் சொல்லச் சொல்லி பலமுறை அம்மாவிடம் கேட்டிருக் கிறான். அம்மாவும் சலிக்காமல் சொல்லியிருக்கிறாள்.

அம்மா அப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட அந்த சம்பவம்...

* * *

முதல் கட்டு, நடுக்கட்டு, பின்கட்டு என்று வீடு முழுக்க மணந்து கொண்டிருந்தது. கீழ் மங்கலம் சிவன் கோவிலில் கும்பாபிஷேகம். கும்பாபிஷேகத்தை முன்னால் நின்று நடத்திய பஞ்சாட்சரம் ஊரில் பெரிய மனிதர். நஞ்சை, புஞ்சை என்று ஏகப்பட்ட பிதுரார்ஜித சொத்து. பஞ்சாட்சரம் அந்த சொத்துக்கு மேல் சொத்து சேர்த்துக் கொண்டார் - கையில் இருந்த பணத்தை வட்டிக்கு விட்டு.

பஞ்சாட்சரம் பார்த்தால் சிவப்பழம். நல்ல செக்கச் சேவேர் என்று உடல். நெற்றியில் திருநீற்றுப் பட்டை இல்லாமல் அவரைப் பார்க்கவே முடியாது. ஊர் வழக்கப்படி, உலக வழக்கப்படி தலையை கிராப்பாக்கி விட்டிருந்தார். சிக்கன மான முடி. அதை அழகாக எண்ணெய் தேய்த்துப் படியப் படிய வாரியிருப்பார். கழுத்தில் ஒற்றை ருத்திராட்சம் தங்கச்சங்கிலியில் கோர்க்கப்பட்டு நடக்கும் போது இந்த மார்பிற்கும், அந்த மார்பிற்குமாய் ஊசலாடும். அவர் சாலை யில் நடந்தால் சட்டை அணிய மாட்டார். வெறும் எட்டு முழ சேலம் குண்டஞ்சிதான். அது தறிப்பழுப்புடன் எப்போதும் புதிது எடுத்து உடுத்தினமாதிரியே இருக்கும். 'ஏரோப்ளேன்' டயர் வைத்துத் தைத்த செருப்பை அணிந்து நடப்பார். கிராமத்தில் இருப்பவர்கள் எல்லாம் அவர் எதிரில் வர நேர்ந்தால் உடனே தலைப்பாகையை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு தரை வரை குனிந்து வணங்கிச்



செல்வார்கள். நடந்து வரும் பெண்கள் சட்டென்று ஏதோ ஓர் வீட்டுத் திண்ணை மேல் ஏறி நின்று அவர் சுதந்திரமாகப் போக வழி செய்து கொடுப்பார்கள்.

கிராம மக்களுக்கு பஞ்சாட்சரத்தின் மேல் அவ்வளவு மரியாதை மட்டுமல்ல. பயமும் கூட. ஊரில் அவரிடம் வட்டிக்கு வாங்காதவன் யாரும் இல்லை. வட்டி கட்டாது போனவர்கள் எல்லாம், நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகும் அளவிற்கு அவரிடம் வசவுகளை வாங்கிக் கட்டிக் கொண்டு ஏரோப்ளேன் டயர் வைத்த செருப்பால் அடியும் பட்டிருக் கிறார்கள். அந்தப் பயம்கூட ஊர்க்காரர்களை ஒதுங்கிப் போக வைக்கிறது.

பஞ்சாட்சரம் அப்படி செருப்பால் அடித்து சேர்த்த பணத்தையெல்லாம் பாவப்பணம் என்று அவர் மனைவி சொல்லிவிட்டாள். பஞ்சாட்சரத்தின் பெண் குழந்தைகளில் ஒன்று பிறவிச் செவிடாகவும், ஊமையாகவும் போனதற்கு அவருடைய பாவமும் ஒரு காரணம் என்று அவர் மனைவி மறுபடி மறுபடி குத்திக் காட்டியதால் சிவன் கோவில் கும்பாபிஷேகம் பொறுப்பு தன்னுடையது என்று சபையில் சொன்னார். செலவு மொத்தத்தையும் தானே ஏற்றுக் கொள்வ தாகவும், கிராமத்து மக்கள் அத்தனை பேருக்கும் கும்பாபி ஷேகத்தன்று தன் வீட்டில் விருந்துச் சாப்பாடு போடுவ தாகவும் தெரிவித்தார்.

கிராம மக்கள் அவரை வள்ளல் என்றார்கள். பாரி, பேகன், காரி, ஓரி எல்லாம் எதற்கு ஆவார்கள் என்ற ரீதியில் கும்பாபி ஷேகம் முடிந்ததும் ஒரு சொற்பொழிவும் நிகழ்ந்தது.

அதற்கப்புறம் விருந்து! வடை, பாயசம், அப்பளம், புத் துருக்கு நெய், பருப்பு, சாம்பார், எலுமிச்சை ரசம், கட்டித்தயிர், சன்ன அரிசிச் சாதம், அவியல், கூட்டு, பொரியல், உருளைக்

கிழங்கு கறி, இலைகள் மணந்தன. சமையல் கூடம் மணந்தது. முதல்கட்டு, நடுக்கட்டு, பின்கட்டு என்று வீடே விருந்தால் மணத்தது. முதல் கட்டில் ஆண்கள் உட்கார்ந்து, 'ஜொர், ஜொர்' என்று உறிஞ்சி, உறிஞ்சி வெட்கப்படாமல் சாப்பிட்டார்கள்.

நடுக்கட்டில் பெண்கள் வரிசையாய் ஒற்றைக்காலை உயர்த்தி மடித்து நிறுத்தி உட்கார்ந்திருக்க பந்தி அமர்க்களமாய் நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் மனமாரச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் ராஜேஸ்வரி என்னும் ராஜி மிரட்சியுடன் இடம் தேடினாள். ஒரு மூலையில் உட்கார்ந்தாள். அவள் உட்கார்ந்த நேரம் சரியில்லை.

''எழுந்திரு... ஏய்... உன்னைத்தான்... எழுந்திருன்னா...'' என்று அதட்டலாய் குரல் வந்ததும் அரண்டு போய் விட்டாள். நிமிர்ந்து பார்த்தாள். பஞ்சாட்சரம் பாரி, பேரி, ஓரி, பேகன், காரி அவர்களையெல்லாம் மீறிய வள்ளல்.

''உன்னை யார் இங்கே வந்து உக்காரச் சொன்னது?'' என்று கேட்டார்.

பந்தியில் உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் திரும்பி ராஜேஸ்வரியைப் பார்த்தார்கள். அவளுடைய உடலை ஆயிரம் ஆயிரம் ஊசிகள் துளைப்பது போல் இருந்தது. கண்களில் நீர் திரண்டு விட்டது. தொண்டைக் குழியை எதுவோ அடைத்துக் கொண்டது.

''கேக்கறேன்ல. பதில் சொல்றது'' என்று பஞ்சாட்சரத்தின் குரல் மறுபடி கோயில் மணி போல் ஓங்கி ஒலித்தது.

''யாரும் சொல்லலை'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.



''பின்னே?'' என்று உதட்டை ஒரு மடி மடித்துக் கேட்டார் பஞ்சாட்சரம்.

''எடம் காலியா இருந்தது. அதான் வந்து உக்காந்தேன்'' என்றாள் அவள்.

''அவ்வளவு துளுத்துப் போச்சா உனக்கு? ம்ஹூம்? அவ்வளவு துளுத்துப் போச்சான்னு கேட்டேன். அரிதாரம் பூசிட்டு ஆடற கழுதைக்கு இவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது? ம்ஹ்ம்?''

ராஜி திருதிருவென விழித்தாள். அழுகை நெஞ்சை முட்டிக் கொண்டு, அடைத்துக் கொண்டு வந்தது. அவள் பொட்டு கட்டிய குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். தாசி குலம்தான். ஆனால் என்ன? அவளுடைய அம்மா ஊரறிய ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தியவள். பிள்ளைகள் பெற்றவள். அதெல்லாம் கிடக்கட்டும். பொட்டுக்கட்டிய குடும்பத்தவள் என்றால் தீண்டத்தகாதவளா என்ன? அடுத்தவர்களுடன் உட்கார்ந்து சாப்பிடக்கூட தகுதியில்லாமல் போய்விடுமா என்ன? இது என்ன நியாயம்? மற்றவர்களை விட உயர்ந்தவள் அல்லவா நான்? ஆண்டவன் சேவைக்காக என்று என்னையே அர்ப்பணித்துக் கொண்டவள் அல்லவா நான்! அவன் சன்னிதியில் சப்திக்கிற சலங்கைகளைக் கட்டிக் கொண்டவள் அல்லவா நான்? தாம், தீம், தகதிம், ஜல், ஜல்ஜல், தீம்த்ரிகிட, தீம்தரிகிட, ஜல் ஜல் ஜல், ஜல் ஜல் ஜல். பார்க்கப் போனால் அந்த ஆண்டவனுக்குப் படையல் வைக்கும் நேரத்தில் எனக்கும் வைக்க வேண்டும். சாமிக்கு நைவேத்தியம் காட்டுகிற போதே எனக்கும் நைவேத்தியம் காட்டியிருக்க வேண்டும். பாழாய்ப் போன வயிற்றுக்காக சீக்கிரம் பந்தியில் இடம் பிடித்தது தப்பாகி விட்டதே. ராஜேஸ்வரியின் மனம் பலவித சிந்தனைகளுடன் புயல் சருகு போல் அல்லாடியது.

''நீ இப்ப எழுந்துக்கறியா இல்லையா?'' பஞ்சாட்சரம் விடுவதாய் இல்லை.

அம்மா பின்னால் அந்தக் கதையை அவனுக்குச் சொல்லும்போதெல்லாம் பஞ்சாட்சரம் போலவே உறுமிக் காட்டுவாள். அதட்டுவாள். கீழுதட்டை மடித்துக் காட்டு வாள். மிரட்டிக் காட்டுவாள். ரங்கராஜனுக்கு சிரிப்பு சிரிப்பாய் வரும். அந்த பஞ்சாட்சரத்தை எப்போதாவது பார்க்க நேர்ந் தால் அவர் முகத்தில் எருமை சாணியை எடுத்து வீச வேண் டும் என்று நினைத்துக் கொள்வான். இன்று வரை ரங்க ராஜனின் கை எருமைச் சாணத்தில் முங்கவே இல்லை. ரங்க ராஜன் ஒரு புன்னகையை உதட்டில் படரவிட்டுக் கொண்டு நடந்தான்.

✱ ✱ ✱

நடுக்கட்டின் சலசலப்பு முன் கட்டையும் தொற்றிக் கொண்டது. குசுகுசுவென்று குரல்கள் படர்ந்து பாதிப் பந்தியிலேயே சிலர் எழுந்து நடுக்கூடத்திற்கு வரத் தலைப்பட்டதும் ராஜிக்கு ரொம்ப அவமானமாகப் போய் விட்டது. படுத்த படுக்கையாய்க் கிடக்கும் அவளுடைய அம்மாவிற்கு சேதி எட்டினால் அவ்வளவுதான்....

''சரி உக்காந்துட்டாங்க. போகட்டும். அதுக்காகப் பாதிப் பந்தியிலே ஏன் எழுப்பி விடணும்?'' என்று ஓர் இளைஞன் அவளுக்குப் பரிந்து கெண்டு வந்தான்.

ராஜேஸ்வரிக்கு அந்த இளைஞன் மீது தாங்கொணாத அன்பு பொங்கியது. அவனை அப்படியே அணைத்து உச்சி மோர்ந்துவிட வேண்டும் போல் இருந்தது.

''உங்க வீட்ல விசேஷம் நடக்கறப்ப இந்த மாதிரில்லாம் நியாயம் பேசுவீராய்யா?'' என்று பஞ்சாட்சரம் தொண்டை நரம்பு புடைக்கக் கத்தினார்.



அந்த இளைஞனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டது.

''ஏன் மாட்டேன்? மனுஷங்களில யார் ஒஸ்தி? யார் மட்டம்?'' என்று பதிலுக்குக் கேட்டான்.

''பேசறதுக்கு நல்லா இருக்கு. கேக்கறதுக்கு நல்லா இருக்கு. நடைமுறைலதான்.''

''என்னய்யா நடத்திக் காட்டணும்?''

''உங்க வீட்ல பந்தி நடக்கறப்ப இந்த மாதிரி ஒரு பொம்பளையை நடு வீட்ல உக்காரவச்சி சாதம் போடு. அது போறும்.''

''நீயெல்லாம் ஒரு பெரிய மனுஷன். பேச்சாய்யா பேசறீங்க. எட்டு ஊருக்கு நாத்தமடிக்குதே.'' என்று கத்தினான் அந்த இளைஞன்.

''நாராயணா. சும்மா உக்காரு. உனக்கேன் இந்த வம்புல் லாம்?'' என்று யாரோ சமாதானப்படுத்தினார்கள்.

நாராயணா, நாராயணா. ராஜேஸ்வரிக்கு அந்தப் பெயர் தேன் போல இனித்தது. திரௌபதிக்கு சேலை நீட்டிய நாராயணன். யானையின் அவலக் குரலுக்காக ஓடோடி வந்து சக்கரம் ஏவி விட்ட நாராயணன். இப்போது அவளையும் காக்க வந்திருக்கிறான் போலும்.

''இப்படியே ஒவ்வொருத்தரும் நகந்துட்டா அவ்வளவு தான். இந்த ஊர்ல ஆந்தையும், கோட்டானுந்தான் இருக்க முடியும். நீதி நேர்மை எல்லாம் செத்துப் போயிடும். பசி எல்லாருக்கும் ஒண்ணுதான். காத்து எல்லாருக்கும் ஒண்ணு தான். பூமி எல்லாருக்கும் ஒண்ணுதான். ஏ பொண்ணு. நீ வா எங்கூட. இந்த எடத்துல சோறு தின்னா அது பாவம். இந்த ஜென்மத்துக்கு மட்டும் இல்ல. ஏழேழு ஜன்மத்துக்குப் பாவம். வா... எங்கூட சொல்றேன்...''

எல்லோரும் விதிர் விதிர்த்துப் போய் பார்க்க, எச்சில் கையால் ராஜேஸ்வரியின் கைத்தலம் பற்றினான் நாராயணன்.

ராஜேஸ்வரிக்கு மிகப் பெருமையாக இருந்தது.

# 3

பஞ்சாட்சரம் இருந்த அதே ஊரில்தான் ராமனாதன் இருந்தார். பஞ்சாட்சரம் அளவிற்கு சொத்து இல்லாதவர். ஆனால் அதற்காக ஒன்றுமே இல்லாதவர் என்று சொல்ல முடியாது. அவருக்கும் நிறைய நிலங்கள் இருந்தன. நஞ்சை, புஞ்சை, நஞ்சையில் நெல். புஞ்சையில் கடலை, மஞ்சள், உளுந்து. ராமனாதனுக்கு நிலத்தின் மேல் அபாரமான காதல். பூமி ஒன்றுதான் உலகிலேயே கொஞ்சம் கூட வஞ்சமென்பதை அறியாத ஒன்று என்று அடிக்கடி சொல்வார். தன்னை நம்பியவர்களை பூமி எப்போதும் கைவிட்டதில்லை என்பதில் அபார நம்பிக்கை அவருக்கு. அதனாலேயே வாழ்நாளில் கடைசிவரை விவசாயத்தையே தொழிலாகக் கொள்வது என்று தீர்மானித்து விட்டார். தன்னுடைய நிலங்களை மட்டுமின்றி, மற்றவர்கள் நிலங்களையும் குத்தகைக்கு எடுத்து அவற்றிலும் பொன் விளையக் கண்டவர். பொதுவாகக் குத்தகைக்காரர்கள் என்றாலே மோசம் செய்பவர்கள் என்ற நம்பிக்கை தஞ்சை மாவட்டத்தில் உண்டு. அந்த நம்பிக்கையைப் பொய்க்க வைத்தவர் ராமனாதன். குத்தகைக்கு அவரிடம் நிலத்தை விட்டவர்கள் சொந்தமாக



விவசாயம் பண்ணியிருந்தாலும் விளைவிக்க முடியாத அளவுக்குப் பயிரை விளைவித்து மண்ணைப் பொன்னாக்கியவர் ராமனாதன்.

ராமனாதன் சுயம்பு. தானாக முன்னுக்கு வந்தவர். சின்ன வயதில் அவருடைய பெற்றோர்கள் தவறிப் போன பிறகு மிச்சம் என்ன என்று கணக்குப் பார்த்த போது இரண்டு ஏக்கர் நிலம்தான் மிச்சமிருந்தது. அந்த நிலத்தை உழுது பயிரிட்டு இரண்டு ஏக்கர் நிலத்தை இருபது ஏக்கர் நிலமாக மாற்றியவர். சுற்றத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்க சொந்தத்தில் ஒரு பெண்ணெடுத்துக் கட்டியவர். யாரோ ஒரு சாமியார் கோயில் மடத்தில் வெயிலில் வறுபட்டு, மழையில் நனைந்து உலகப்பற்று இல்லாமல் இருப்பதைக் கேள்விப்பட்டு அந்தச் சாமியாரைப் பார்க்கச் சென்று யோகமும், தியானமும் கற்றுக் கொண்டு வந்தவர். யோகம், தியானம் காரணமாகத்தான் அவருக்குக் கல்யாணமாகி நெடுநாட்கள் வரை குழந்தை பிறக்கவில்லை என்று மற்றவர்கள் சொல்வார்கள். ராமனாதன் சிரித்துக் கொள்வார். தன் முன் பிறப்பு கர்ம பயன் என்ன என்று தெரியாமல் குழந்தை பிறக்காததற்கு யோகத்தையும், தியானத்தையும் குறை சொல்வது எவ்வளவு முட்டாள்தனம் என்று அந்தச் சிரிப்பிற்குப் பொருள். குழந்தை பிறந்தால் நல்லது. பிறக்காவிட்டால் ரொம்ப நல்லது என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு ஓர் ஒழுங்கான வாழ்க்கையை நடத்தியவர்.

சின்ன வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டதால், சின்ன வயது அனாதைகள் யாரைக் கண்டாலும் அவர் மனம் நெகிழ்ந்து விடும். அந்த மாதிரி யாரையாவது பார்க்க நேர்ந்தால், அவர்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டுமோ அதைச் செய்வார். திருப்தியாக மகிழ்ச்சியாக.

நாராயணன் கூட சின்ன வயது அனாதைதான். ராமனாதன் தலையெடுத்தவுடன் சந்தித்த முதல் சின்ன அனாதை. அதனால் ராமனாதனுக்கு நாராயணன் மேல் தனிப்பிரியம். நாராயணனை டவுனுக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.படிப்பு முடியும் தறுவாயில் நாராயணன் செழிப்பான இளைஞனாகி விட்டான். கண்ணெதிரே கதிர் வளர்ந்து அறுவடைக்குத் தலைசாய்த்து நிற்பது போல, ராமனாதன் குத்தகைக்கு நிலங்களை எல்லாம் எடுத்துக் கொண்ட நேரம், நாராயணனை தன் கீழேயே வேலைக்கு வைத்துக் கொண்டார். கணக்கு வழக்குகள் எல்லாம் நாராயணன்தான்.

நாராயணனுக்கும் ராமனாதன் மேல் மரியாதை என்றால் அப்படி ஒரு மரியாதை. மதிப்பு. கூடவே பக்தியும். ராமனாதன் ஒன்று சொன்னார் என்றால் நாராயணன் எதிர்ப்பேச்சு பேசமாட்டான். எதிர்வார்த்தை தொடுக்க மாட்டான். ராமனாதன் 'கிணற்றில் குதி' என்றால் நாராயணன் கிணற்றில் குதித்து விடுவான்.

* * *

ராஜேஸ்வரியை இழுத்துக் கொண்டு நாராயணன் அவர் முன்னால்தான் போய் நின்றான்.

அவன் போய்ச் சேர்ந்த போது ராமனாதன் தியானத்திலிருந்து வெளியே வந்திருந்தார். விடாத யோகப் பயிற்சியும், தியானப் பயிற்சியும் அவர் உடலுக்கு ஒரு பொன்னிற மினுமினுப்பைக் கொண்டு வந்திருந்தன. ஒட்டிய வயிறு. ஒல்லியான உடல்வாகு. நல்ல உயரம். ஒரு வேட்டியும், ஜிப்பாவும் தரித்துக் கொண்டு தியான அறையில் இருந்து வெளியே வந்த ராமனாதன் முகத்தில் ஒரு தனிக்களை தெரிந்தது. நிலம் பார்த்து வந்தவர் நிலத்தில் இரண்டு கொலுசுக்கால்களும். இரண்டு ஆண் கால்களும் சேர்ந்து



வந்து தயங்கித் தயங்கி நிற்பதைப் பார்த்தார். நிமிர்ந்தார். பார்வையின் கூர்மை தாங்காமல் நாராயணன் தலையைக் குனிந்து கொண்டான். அங்கே பஞ்சாட்சரம் வீட்டில் காட்டிய தைரியம் எல்லாம் வழியிலேயே வழிந்து, நழுவி ஓடிவிட்ட மாதிரி நடுநடுங்கி நின்றான். ஆனால் அவன் எச்சில் கை மட்டும் இன்னும் ராஜியின் கரத்தை இறுக்கமாகப் பற்றியிருந்தது.

ராமனாதன், அவன் முகம் பார்த்தார். புருவங்கள் உயர்ந்தன. பார்வை நாராயணன் முகத்தில் இருந்து, ராஜேஸ்வரியின் முகத்திற்குச் சென்று, மறுபடி நாராயணன் முகத்திற்கு வந்தது. இன்னொரு முறை ராஜேஸ்வரியின் முகத்திற்குச் சென்று தயங்கி நின்று, மறுபடி நாராயணன் முகத்திற்கு வந்து நிலைத்தது.

''என்ன நாராயணா?'' என்றார். அமைதியான, ஆழமான குரல்.

''அண்ணா'' என்றான் நாராயணன். அவன் குரல் நடுங்கியது.

''சொல்லுப்பா.''

''பஞ்சாட்சரம் வீட்ல விருந்து.''

'தெரியுமே. நல்லா நடந்ததா?''

''இல்ல.''

''ஏன். என்ன ஆச்சி?''

''இந்தப் பொண்ணை எழுப்பி விட்டுட்டாங்கண்ணா. பந்தியில உக்காந்தவளை எழுப்பறது எந்த ஊர் நியாயம் அண்ணா?''

''ஏன் எழுப்பினாங்க?''

நாராயணன் தயங்கினான். ராஜேஸ்வரி பொட்டுக்கட்டின குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று சொன்னால் ராமனாதனின் மறுசெயல் என்னவாக இருக்கும் என்று தெரியவில்லை எதிர்ப்பாரா? இல்லை, பஞ்சாட்சரம் மாதிரி நியாயம் பேசு வாரா?

''சொல்லேன்.''

''இந்தப் பொண்ணு பொட்டு கட்டுன குடும்பத்தைச் சேர்ந்தவளாம்.''

ராமனாதன் சற்று நேரம் ராஜேஸ்வரியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பார்வையில் கருணைதான் பொங்கி வழிந்தது. ராஜேஸ்வரிக்கு அப்படித்தான் தோன்றியது.

புத்தனுக்கும், இயேசுவிற்கும் பரத்தையாவது, பதிவிரதை யாவது. நல்லவனாவது, கெட்டவனாவது? மேல் ஜாதி யாவது, கீழ் ஜாதியாவது.

''ஓஹோ'' என்றார் ராமனாதன்.

அந்த 'ஓஹோ'வின் அர்த்தம் புரியாமல் தவித்தான் நாரா யணன்.

''அதனால நானும் பாதிப் பந்தியில எழுந்துட்டேண்ணா.''

''ஏன் ஒன் பசி அடங்கிப் போச்சா நாராயணா?''

''இல்லேண்ணா. இந்தப் பொண்ணுக்கு அந்தப் பெரிய மனுஷன் ஏற்படுத்தின அவமானத்தை தாங்க முடிய லேண்ணா. அதான் எழுந்துட்டேன். பஞ்சாட்சரம் வீட்ல சாப்பிடறதே பாவம். வா. அண்ணா இருக்கார். அவர் வீட்ல சாப்பிடலாம்னு கூட்டிட்டு வந்துட்டேன்.''

''ஓஹோ'' என்றார் ராமனாதன் மறுபடியும்.



இந்த ஓஹோவிற்கும் அர்த்தம் புரியாமல் திணறினான் நாராயணன்.

''வெறும் சாப்பாடு போடத்தானே கூட்டிட்டு வந்தே?'' என்று நாராயணனைக் கேட்டார்.

''ஆமண்ணா.''

''அப்படித் தெரியலயே நாராயணா. ஏதோ வேகத்துல எச்சக் கையால அவ கையப் புடிச்சி இழுத்துக்கிட்டு வாச லுக்கு வந்துட்டே சரிதான். நம்ம வீடு வரைக்கும் புடிச்ச கையை உடாம இல்ல வந்திருக்கே போல இருக்கு.''

''அண்ணா'' என்று உதறினான் நாராயணன்.

''ஊர் ஜனம் மொத்தமும் பாத்திருக்குமே.''

''ஆமாண்ணா. தப்புப் பண்ணிட்டேண்ணா.''

''என்ன தப்பு? ஒரு தப்பும் இல்ல. இந்தப் பொண்ணை ஒனக்குப் புடிச்சிருக்கா?''

''அண்ணா?''

''புடிச்சிருக்கு. இல்ல. மட்டைக்கு ரெண்டு கீத்துங்கற மாதிரி பதில் வேணும் எனக்கு. ஆமா... சொல்லிட்டேன்.''

''புடிச்சிருக்குண்ணா.''

''பின்ன என்னடா என் சிங்கக்குட்டி. சும்மா நம்ப வீட்ல ஒரு வாய் சாப்பாடு போடறதோட நிறுத்திக்கப் போறியா? ஞானசூன்யம். அவளை ஏத்துக்கோயேன். ஒனக்கு சமமா.''

''அண்ணா.''

''புடிக்கலியா நாராயணா?''

''ரொம்பப் புடிச்சிருக்குண்ணா.''

''ஏம்மா. பொண்ணு. உம் பேரென்ன?''

''ராஜி. ராஜேஸ்வரி.''

''எங்க நாராயணனைக் கட்டிக்க இஷ்டமா?''

''ம்.''

''சும்மா 'ம்' கொட்டினாப் பத்தாது.''

''ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''சபாஷ். அப்படிப் போடு. நாராயணா அப்புறம் என்ன? மேளத்தைக் கொட்டச் சொல்லிப்புடலாம். சும்மா ரதி மாதிரி பொண்ணு. சும்மா வரதா நெனைச்சிக்காதே. எங்கப்பா எனக்கு விட்டுட்டுப் போனார் பார். ரெண்டு ஏக்கரா. அந்த நெலத்தையும் இவ பேர்ல சாசனம் பண்ணிடறேன். சீதனமா வெச்சிக்கோ. நிலம் இங்கே இல்ல. அண்ணல் அக்ரஹாரம் தாண்டி பாவூர்ல இருக்கு. தெரியுமில்லையா? அங்க எங்க வீடும் சும்மாத்தான் இருக்கு. குடித்தனத்தை அங்க வை. வெவசாயம் பண்ணு. அமோகமா இரு.''

நாராயணனின் கை கால்கள் எல்லாம் நடுங்கின. ஆனந்தத்தால் மனம் பந்தாய்த் துள்ளியது. அழகுப்பெட்டகம், அப்பாவிக் குழந்தை, மிரண்ட மான் அவனுக்கே அவனுக்கு என்று சாசனமாகப் போகிற ஆனந்தம்.

''அண்ணா'' என்றான் நாத் தழுதழுக்க.

''என்னடா?'' என்றார் ராமனாதன்.

''நான் உங்களை விட்டுட்டு அங்க போய் எப்படி இருப்பேன்?''

''படவா. நாலு நாள்ல ஒனக்கு இந்த மாதிரி ஒரு அண்ணா இருந்தான்கறதையே மறந்துடுவே. பாத்த மாத்திரத்திலேயே



சொக்குப்பொடி போட்டு தன் கையைப் பிடிக்க வச்சாளே. என்னை மறக்கடிக்கற சாமர்த்தியம் மட்டும் இவளுக்கு இருக்காதுன்னு நெனைச்சிட்டியா?''

''உங்க கணக்கு வழக்கெல்லாம்?''

''பெரிய கணக்கு வழக்கு. நீதான் சூரப்புலி. உன்னை விட்டா எனக்கு வேற ஆள் அம்பு எதுவும் கெடைக்காது பாரு. போடா. அம்மா ராஜி போ உன் புருஷனோட அழகாக் குடித்தனம் நடத்து. சீக்கிரம் ஒரு கொழந்தையைப் பெத்துக் கொடு. நான் வந்து கொஞ்சணும் - குழந்தையை.''

ராஜேஸ்வரி நாணிக் கொண்டு நின்றாள்.

''விழு கால்ல. விழுன்னா'' என்று அவளையும் கீழ் விழுந்து வணங்கச் சொல்லிவிட்டு, நாராயணனும் நெடுஞ்சாண்கிடையாய் ராமனாதன் காலில் விழுந்து வணங்கினான்.

கெட்டி மேளம் கொட்டியது.

## 4

அடுத்த வருடமே ரங்கராஜன் பிறந்துவிட்டான். ஐந்து வருடங்கள் ரங்கராஜனின் வாழ்க்கையில் எப்படிக் கழிந்ததென்று அவனுக்குத் தெரியாது. ஞாபகமில்லை. என்னவோ பூசி மெழுகிய மாதிரி சில நினைவுகள் மட்டும், வானில் அவ்வப்போது ஒளிரும் மின்னல்போல் தலைகாட்டி விட்டுப் போகும்.

வயல் வேலை, குத்தகை வேலையெல்லாம் முடித்து விட்டு அப்பா வீட்டுக்கு வரும் நேரம், அவன் தூங்கிக் கொண்டிருப்பான். நன்றாக அயர்ந்து தூங்குகிற மாதிரித்தான் இருக்கும். இவன் எழுந்து விடக் கூடாதென்று அப்பாவும் செருப்பு தேயும் சத்தம் கூடக் கேட்காத மாதிரி மெல்ல வீட்டுக்குள் நுழைவார். ஆனால் அப்பாவின் ஏதாவது ஒரு சிறு அசைவு. காலில் தண்ணீரை விட்டு மெல்ல அலம்பும் சத்தம், துண்டால் முகம் துடைக்கும் சரசரப்பு, ஏதாவது ஒன்று போதும். அவன் எழுந்து உட்கார்ந்து கொள்வான். அப்பா சாப்பிடும்போது அவனும் குண்டுத் தொப்பையை முன்னால் தள்ளிக் கொண்டு பிள்ளையார் போல் உட்கார்ந்து கொண்டு பருக்கை, பருக்கையாய்ப் பொறுக்கிச் சாப் பிடுவது நினைவுக்கு வரும்.

மூன்றாவது வீட்டு மோகன் அவன் பம்பரத்து ஆணியைப் பம்பரத்துக்குள்ளேயே குத்துவிட்டு, குத்துவிட்டுப் புதைத்தது நினைவு வரும்.

திறந்த கிணறு இருக்கும் தோட்டத்துக்குப் போய் கொடுக்காப் புள்ளி அடித்தது நினைவுக்கு வரும்.

தேர்தலுக்கு ஓட்டுப் போட அம்மாவோடு கறுப்பான பிளஷர்காரில் கும்பகோணம் போனது நினைவுக்கு வரும்.

அப்பா, அம்மாவை கோபத்துடன் முதுகில் அடித்த அடி நினைவுக்கு வரும்.

அப்பா அடித்தாரா என்ன? அதுவும் அம்மாவையா? அதுவும் விரும்பி கல்யாணம் பண்ணிக் கொண்டவளையா? ரங்கராஜனுக்கு மனதில் பதிந்த அந்தக் காட்சி தப்பு, தப்பு என்று தோன்றும். யாரோ, யாரையோ அடித்ததைப் போய் ஒரு வேளை அப்பா அம்மாவை அடித்ததாய் மனது நம்புகிறதோ என்று தோன்றும்.



ஐந்து வருடம் வரைக்கும் அவனுடைய வாழ்க்கைப் பக்கங்களில் நடந்ததில் அவன் மனதில் பதிந்தது இவ் வளவுதான்.

மற்றபடி மகிழ்ச்சிதான், ஐந்து வருடத்திற்கு மேல் வாழ்க்கை ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

''அண்ணாவுக்கு பெண் குழந்தை பொறந்திருக்காம் ராஜி'' என்று அப்பா சின்னக் குழந்தை போல் குதித்து, குதித்து வந்து சொன்னதும், ''அப்பாடா, இவ்வளவு நாள் கழிச்சாவது கடவுளுக்கு மனசு வந்ததே'' என்று அம்மா அப்பாவின் மகிழ்ச்சியில் பங்கு கொண்டதும் ரங்கராஜனுக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது.

ராமனாதனுக்கு மிகத் தாமதமாக ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது! அதெல்லாம் சரி. ராமனாதன் ராஜியிடம் சொல்லி அனுப்பியதென்ன? 'சீக்கிரம் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடு. நான் வந்து கொஞ்ச வேண்டும்' என்று தானே. அம்மாவும் ரங்கராஜனை மறுவருடமே பெற்று விட் டாளே. ஆனால் ராமனாதன் வந்து அவனைத் தூக்கிக் கொஞ் சிய மாதிரி நினைவில் பதியவே இல்லையே. ராமனாதன் ஏன் வரவில்லை? அம்மா ராமனாதனைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம், ரங்காவை அவர் எடுத்துக் கொஞ்ச வேண் டும் என்பதற்காகவே சீக்கிரம் பெற்றுக் கொண்டதாய்ச் சொல்லுவாள். அப்படி அவசரப்பட்டு பெற்ற அழகான குழந்தையை ஏன் அந்த ராமனாதன் வந்து கொஞ்சவில்லை? ரங்கராஜனுக்கு அந்தக் கேள்வி ரொம்ப நாட்களுக்கு இருந்தது. விடை என்ன என்று தெரியாமலே, தெரிவிக்கப் படாமலேயே அந்தக் கேள்வி அவனுள் இருந்தது.

அம்மா, ராமனாதனுக்குக் குழந்தை பிறந்ததை தெரு முழுக்க கேசரி பண்ணி விநியோகித்துக் கொண்டாடினாள்.

ஆனால் வீட்டை விட்டுப் போய் அந்தக் குழந்தையைப் பார்த்து விட்டு வரவில்லை.

இன்னொரு தடவை அப்பா, ''ராஜி... ராஜி... அண்ணி போய்ட்டாங்களாம்'' என்று அலறிக் கொண்டே வந்தார். அம்மா மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள். அப்போதும் வீட்டை விட்டு ராமனாதனைத் துக்கம் விசாரிக்கப் போக வில்லை. அப்பாதான் போய் வந்தார்.

ரங்கராஜன் வாழ்க்கையை ஒவ்வொரு கணமாக வாழ்ந்து கொண்டிருந்தான். அப்பா பாசத்தை ரசித்தான். அம்மாவின் அன்பை அனுபவித்தான்.

அம்மா!

அம்மா தனியாகத்தான் தெரிந்தாள், எல்லாவற்றிலும்.

ஊருக்குள் இருந்தவர்களுக்கு அம்மா ஒரு புதிராய்த்தான் இருந்தாள். ஆற்றில் தண்ணீர் எடுக்க அம்மா போவது எப்போது என்று யாரும் கவனித்திருக்க முடியாது. சாயங் காலங்களில், திண்ணைக்குத் திண்ணை கூடி அவலை மெல்லுகிற கூட்டத்தில் அம்மாவை யாரும் பார்த்திருக்க முடியாது. கடை கண்ணிக்கு சாமான் வாங்கப் போவதைக் கூட யாரும் கண்டிருக்க முடியாது. ஊருக்கு அப்பாவைத் தெரியும். அவனைத் தெரியும். அம்மாவின் செல்லத் தம்பி வேணு மாமாவைத் தெரியும்.

மற்றபடி அவள் தனிதான்.

இடுப்பிலிருந்து கால் உருண்டு திரண்டு ஒரே சீராய் இறங்கும். கெண்டங்காலில் ஜோராய் சதை போட்டிருப்பது இழுத்துக்கட்டியிருக்கும் புடவையை மீறித் தெரியும். அம்மா எப்போதாவது நினைத்துக் கொண்ட மாதிரி, கால்களில் சலங்கை கட்டாமல், பூமி அதிராமல் ஆடுவாள். காலில் சக்கரம் கட்டியிருக்கிறது போல் இருக்கும். ரங்கராஜன் அம்மாவின் ஆட்டத்தில் அப்படியே கிறங்கிப் போவான். மெய்மறந்து போய் கண்மூடாமல் பார்ப்பான்.



அம்மா சிரிப்பாள். அழுவாள். விம்முவாள். புளகாங்கிதம் கொள்வாள். புருவங்களைத் தனித்தனியே உயர்த்துவாள். இடுப்பை வளைப்பாள். கண்களை அகலமாய் விரிப்பாள். அப்பாவின் செருப்புச் சத்தம் கேட்டதும் அடங்கிப் போவாள்.

அம்மா இன்னும் கொஞ்சநேரம். தகஜூம், தகஜூம் என்று ஆடமாட்டாளா எனத் தோன்றும் ரங்கராஜனுக்கு.

''இன்னும் கொஞ்சம் ஆடேம்மா'' என்பான்.

''அப்பா திட்டுவார்டா. வேண்டாம்'' என்று அம்மா மறுத்து விடுவாள்.

அப்பா ஒரு போதும் அம்மாவைத் திட்டிப் பார்த்ததே யில்லை. அப்பாவும் அம்மாவும் ராமகிருஷ்ணரும் சாரதா தேவியும் போலத்தான் இருந்தார்கள். இல்லாவிட்டால் ராமரும் சீதையும் என்று சொல்லலாமா?

ரங்கராஜனுக்கு அப்புறம் வீட்டில் இன்னொரு குழந்தை தவழவில்லை. ரங்கராஜனுக்கும் அந்த ஏக்கமெலாம் இல்லை. இன்னொரு குழந்தை பிறந்தால் அம்மாவும், அப்பா வும் அவன் மேல் பொழியும் பாச மழையைப் பொழியாது போய்விடுவார்களோ என்ற பயம்தான் காரணம்.

அப்படி அவன் தன்னந்தனியனாய் வீட்டை வளைய வந்து கொண்டிருந்த ஒரு பொழுதில்தான். அப்பா சாந்தாவைக் கூட்டிக் கொண்டு வந்தார்.

* * *

**சா**ந்தாவை அவர் கூட்டிக் கொண்டு வந்த இரவு ரங்க ராஜனுக்கு இன்றும் நன்றாக நினைவில் இருக்கிறது.

வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள் கல்வெட்டில் பொறிக்கப் படுவது போல் மனதில் செதுக்கப்பட்டு விடுமே. அந்த மாதிரித்தான் சாந்தாவின் வரவும்.

அது இரவு நேரம். வெளியே மழையின் தாளம். முற்றத் தில் அங்கங்கே அண்டாக்கள் வைக்கப்பட்டு மழை நீர் தாளத்தோடு அவற்றில் சேகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அம்மா சாதத்தில் தண்ணீரை ஊற்றிவிட்டு சமையல் கட்டில் இருந்து வெளியே வந்தாள்.

''அப்பாவை இவ்வளவு நேரமா காணலியேடா ரங்கா. பஸ் கெடைக்கலியா? பஸ்ஸூ இல்லேன்னா எப்படி வருவாரு? லாரி பிடிச்சி வருவாரா? இல்லை எழவு வீட்லயே இருந் துட்டாரா? ஒண்ணுமே புரியலையே'' என்று உரத்த குரலில் முணுமுணுத்தாள்.

அம்மாவின் கவலை புரியாத வயது அவனுக்கு. தூக்கம் இமைகளைக் கீழே இழுத்துப் பிடித்தது. இமைகளைப் பிய்த்துப் பிய்த்துக் கண்களைத் திறக்க முயன்று கொண் டிருந்தான். மடியில் திறந்திருந்த புத்தகத்தில் கவனம் இல்லை. மனம் அதில் பதியவே இல்லை.

''என்னடா தலை சாய்ஞ்சு சாய்ஞ்சு விழுது? ஒண்ணு படி. இல்லன்னா போய்த் தூங்கேன்'' என்று அம்மா சொல்லிக் கொண்டிருந்த போது வெளிக்கதவு தடதடவென்று இடி பட்டது.

அம்மா ஓடிப்போய் நாதாங்கியை இழுத்து விட்டாள். அப்போதும் அது 'கிரீய்ச்' என்று ஓசையிட்டது.

அப்பாதான். தனியாக இல்லை. கூட யாரோ ஒரு சிறுமி. தூக்கக் கலக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்தாள். மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தாள்.



''என்ன இவ்வளவு லேட்டு?'' என்று அம்மா வாசலிலேயே கேட்டாள்.

''எல்லாம் விவரமா சொல்றேன். முதல்ல கொஞ்சம் தண்ணி கொண்டு வா. சுடுதண்ணி போட்டிருக்கே இல்லே?'' என்று கேட்டார் அப்பா.

''இருக்கு. அடுப்பைக் கூட இன்னும் அணைக்காமத்தான் வச்சிருக்கேன்.''

''சீக்கிரம் கொண்டு வாயேன். பாவம் குழந்தை தூக்கத் தில தள்ளாடிக்கிட்டிருக்கு.''

வாசலிலேயே தலையில் சுடு நீரை ஊற்றிக் கொண்டு, அந்தச் சிறுமிக்கும் ஊற்றிவிட்டு அப்பா வீட்டுக்குள் நுழைந்தார்.

''சாதம் இருக்கா?'' என்று கேட்டார்.

''அடடா. இப்பத்தான் தண்ணி ஊத்தினேன்.''

''பரவாயில்ல. தட்டில பிழிஞ்சி எடுத்துப் போட்டு இந்தக் கொழந்தைக்குக் கொடும்மா. காலேலேர்ந்து ஒண்ணுமே யில்ல. அதுக்கு.''

அம்மாவுக்கு மனசு அடித்துக் கொண்டது. அந்தப் பெண்ணைப் பார்த்தாள். வேதனைப்பட்டாள். அம்மாவின் மன வேதனை முகத்தில் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

அவசர அவசரமாய் தட்டில் சாதத்தை ஒட்டப் பிழிந்து போட்டாள். எடுத்து வைத்திருந்த தயிரை ஏடோடு சாய்த் தாள். நீர்மாவடுவை எடுத்து வைத்து, ''சாப்பிடு கண்ணு'' என்றாள்.

அவள் அழ ஆரம்பித்தாள். விம்மலும் விக்கலுமாய் அழுகை. அந்தப் பெண்ணின் சின்ன உடம்பு தூக்கித் தூக்கிப்

போட்டது. தலையில் தண்ணீர் சூடாக இறங்கியதால் தூக்கம் கலைந்து விட்டது. துக்கம் கவிழ்ந்து விட்டது.

''என்ன ஆச்சிம்மா? எதுக்கு இப்போ அழறே?'' என்று அம்மா அவளுடைய கன்னம் வருடி, பரிவோடு கேட்டாள்.

''அம்மா... அம்மா'' என்று இருமுறை உதடு நடுங்கி விட்டு மறுபடியும் அவள் அழ ஆரம்பித்தாள். அப்பா ஈரத் துண்டால் கண்களில் துளிர்த்த நீரை ஒற்றிக் கொண்டார்.

அம்மா அவள் தோளைச் சுற்றி அணைத்துப் பிடித்து முன் விரல்களால் சாதத்தை அவள் வாய்க்குள் ஊட்டி விட்டாள்.

''யாருன்னு புரியுதா ராஜி?'' என்று அப்பா கேட்டார்.

அம்மா அந்தச் சிறுமியின் முகத்தைப் பார்த்தாள். கணகள் பெரிதாக முத்துச்சிப்பிகள் போல் இருந்தன. இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன. முத்துக்களைச் சரமாய்க் கோர்த்தமாதிரி பற்கள். ரோஜா நிறத்தில் உதடுகள். கன்னமேடுகள் புஷ்டியாய் இருந்தன. மோவாயில் ஒரு சிறுகுழிவு. சாதம் மென்றபோது சின்ன உதடுகள் துடித்ததும், குழிவுள்ள மோவாய் மேலும் கீழும் அசைந்ததும் அவ்வளவு அழகு. கண்ணேறு பட்டுவிடும் போல் இருந்தது. அம்மா ஒருமுறை இரு உள்ளங்கைகளையும் மடக்கி ஒரு முத் திரையாய்ப் பண்ணி அவளுடைய இரு நெற்றிப் பொட்டு களிலும் வைத்து எடுத்து நெட்டி முறித்தாள். உதட்டில் நான்கு விரல்களைக் குவித்து வைத்து 'ப்ச்' என்று சத்தத் துடன் முத்தமிட்டாள்.

''தெரியலையே'' என்றாள்.

''அண்ணாவோட பொண்ணு'' என்றார் அப்பா சுருக்கமாக.

அம்மா திடுக்கிட்டு நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.



# 5

''இந்தக் கொழந்தையைக் கவனிச்சிக்க யாருமில்ல. ஏற்கனவே தாயில்லாக் கொழந்தை. இப்போ அப்பாவும் போய்ட்டாரு.''

ராமனாதன் இறந்து விட்டாரா? ரங்கராஜனுக்கு நெஞ்சில் முள் தைத்த மாதிரி இருந்தது. அப்பா வெளியே போனது. ஒரு துக்கம் விசாரிக்க என்று அவனுக்கு தெரியும். 'ரங்க ராஜன் முதலில் அவ்வளவாய் அதில் அக்கறை காட்ட வில்லை. அப்பாவுக்கு நிறைய நண்பர்கள். மார்கழி பஜனைக் குழுவிலும் உறுப்பினர். கிராமப்புற மேம்பாட்டு வளர்ச்சிப் பணிக்குழுவிலும் அங்கம் வகிப்பவர். அதனால் தினம் ஒரு திருமணம். தினம் ஒரு சடங்கு. தினம் ஒரு வளைகாப்பு, சீமந்தம், அவ்வப்போது இழவும் கூட வாழ்க்கையில் எல் லாமே இயல்பாக நடப்பவை. அப்படித்தான் ஏதோ ஒரு துக்கம் விசாரிக்கப் போயிருக்கிறார் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான்.

ராமனதனா? இறந்து போனது ராமனாதனா? அம்மா ஏன் போகவில்லை? குடும்பத்தில் விளக்கேற்றி விட்டவருக்கு இறுதி மரியாதை செய்யப் போகக்கூடவா கால் ஒத் துழைக்கவில்லை? ரங்கராஜனுக்கு விடை தெரியாத கேள்வி கள், ஆகாயத்தில் மேகங்கள் மிதக்கிற மாதிரி மனதில் மிதந்தன.

''அண்ணா ரிஷி மாதிரி வாழ்க்கையை நடத்தினாரு. கோயில் மடத்துல சாமியாரைப் போய்ப் பார்த்துட்டு தீட்சை வாங்கிட்டு வந்தாரே. அதிலேர்ந்து அவர் வாழ்க்கையைத் தள்ளி நின்னுதான் வேடிக்கை பாத்தாரு. கிருஷ்ணனை மாதிரி எங்கண்ணன். எல்லாக் குசும்பையும் பட்டுக்காம பண்ணுவாரு. அப்படித்தான் கல்யாணம் நடந்திருக்கு. அப்படித்தான் இந்தக் குட்டிப் பொண்ணு பொறந்திருக்கா. அப்படித்தான் அண்ணா எல்லா இடத்திலயும் விளையாடி இருக்காரு. அண்ணி போனதுக்கு அப்புறம் அவருக்கு பிடிப்பே இல்லாமப் போய்டிச்சி. பொட்டுனு ஒடம்பை விட்டுட்டாரு. பொண்ணைப் பத்திக் கவலைப்பட்டாரா, இல்லையான்னு தெரியலே. மரம் வச்சவன், தண்ணி விடுவான்னு நெனைச்சாரோ என்னவோ! யார் மரம் வச்சது? அதான் கேள்வி. பதில் இல்லாத கேள்வி. அதைப் பத்திப் பேசி என்ன? அங்க என்னடான்னா, எழவுக்கு வந்திருந்த அத்தனை பேரும் அவரோட ஒறவுக்காரங்களைத்தான் சொல்றேன். அண்ணா எதை வெச்சிட்டுப் போயிருக்காரு, எவ்வளவு வெச்சிட்டுப் போயிருக்காருன்னு சொத்தைப் பங்கு போட்டுக்கறதில மல்லுக்கு நிக்கறாங்க. ஒரே குடுமி பிடி சண்டை. நாந்தான் அண்ணாவுக்குச் சின்ன வயசில் சோறு போட்டேங்கறான் ஒருத்தன். நான்தான் பொண்ணு பிடிச்சிக் கொடுத்தேங்கறான் ஒருத்தன். அண்ணாவுக்கு மாட்டையா தேடிப்பிடிச்சிக் கொடுத்தான்? பொண்ணு பிடிச்சிக் கொடுத்தானாம். ராஸ்கல் அவன் நாக்கை இழுத்து வச்சி அறுத்து எடுத்து காக்காய்க்குப் போடணும் போல இருந்தது எனக்கு. ச்சீ, த்தூன்னு பண்ணிட்டானுங்க. அவனுங்களுக்குள்ள அடிச்சிக்கறதிலதான் குறியா இருந்தாங்களே தவிர, கோயில் சிலை மாதிரி இருக்கற இவளை எவனுமே கவனிக்கலை. ஒரு மூலைல நின்னு அழற குழந்தையை எந்த மடையனும் சீந்தலை. சரிதான் போங்கடான்னு சொல்லிட்டு இவளை நான் தூக்கிட்டு வந்துட்டேன்.''



அம்மாவின் முகத்தில் இப்போது பிரமிப்பு தெரிந்தது. குழந்தையைப் பார்த்த போதெல்லாம் அவள் முகத்தில் அந்த பிரமிப்பு கூடியது. ரங்கராஜனுக்கும் பிரமிப்பாய்த்தான் இருந்தது. ராமனாதன் பெண்ணா இவள்? ராமனாதன் பெயரைச் சொன்னாலே அப்பாவும், அம்மாவும் சிலிர்த்துப் போவார்கள். அவருடைய பெண் இன்று அனாதையாக இந்த வீட்டில் நுழைந்திருக்கிறது.

கையில் எடுத்திருந்த சோற்றை அப்படியே தட்டில் போட்டாள் அம்மா.

ராமனாதன் பெண்ணுக்குப் பழைய சோறா?

''உன் பேர் என்ன குழந்தை?'' என்று பரிவைக் கொட்டிக் கொட்டிக் கேட்டாள்.

''சாந்தா'' என்றாள் அவள்.

''இரு, நான் ஒரு நிமிஷத்துல உனக்குப் புதுசா சோறு பொங்கிப் போடறேன். இது வேண்டாம்.''

''பரவாயில்ல. மாமாவுக்கு சோறு இருக்கா?''

பத்து வயது இருக்குமா? என்ன அடக்கமான முகம்? என்ன சாந்தமான குரல்? எவ்வளவு பொறுப்பான விசாரிப்பு?

அம்மாவிற்குப் புதையல் கிடைத்த சந்தோஷமாய் இருந்தது.. அப்போதே உயிர் போய்விட்டால் கூடப் பரவா யில்லை என்று தோன்றியது.

''இருக்கும்மா. மாமாவுக்கு நெறைய சோறு இருக்கு. அதுக்காகச் சொல்லலை. இது ஒன் ஒடம்புக்கு ஒத்துக் கலைன்னா என்ன பண்றது? இதோ, ஒரு செகண்டுல வத்தக் குழம்பு வச்சி, அப்பளம் சுட்டுத் தரேன்.''

''வேண்டாம் அத்தை. எனக்கு இதான் புடிச்சிருக்கு'' என்று சொல்லிவிட்டு சாப்பிட்டாள் சாந்தா.

அந்த வினாடியில் இருந்து சாந்தா அந்த குடும்பத்தில் ஒருத்தியாகி விட்டாள்.

வாழ்க்கை ரொம்ப ஜாலியாகக் கழிந்தது. ரங்கராஜன் சாந்தாவோடு விளையாடுவான். சண்டை போடுவான். கடலை மிட்டாயை துணிக்குள் வைத்துக் காக்காய்கடி கடித்துத் தருகிறேன் என்று சொல்லி விட்டு, நேரிடையாகப் பற்களுக்கு நடுவே வைத்து எச்சில் பண்ணிக் கடித்துத் தருவான்.

சாந்தா அவன் எச்சில் பண்ணித் தருவதைப் பற்றி அம்மா விடம் போய் அழுது நின்று பாட்டாய்ப் படிப்பாள். ஆனாலும் சாப்பிட்டு விடுவாள்.

விஷயம் அப்பாவரைக்கும் போகும். அவனைக் கூப்பிடு வார். விசிறியைத் திருப்பி வைத்துக் கொள்வார். காம்பை காற்றில் ஆட்டி 'சிர், ஜிர்' என்று சத்தம் வரவைப்பார். கண்களை அகற்றிக் கொள்வார்.

"என்னடா பண்ணியா?" என்று குரலிலேயே மிரட்டுவார்.

அப்பா அடிக்கப் போகிறார் என்று ரங்கராஜன் பயப்படு வான். சாந்தா உள்ளங்கைகளால் முகத்தை மூடிக் கொண்டு, "வேண்டாம் மாமா. ரங்காவை அடிக்காதீங்க மாமா. ரங்கா இனிமே இப்படிப் பண்ண மாட்டான் மாமா" என்று கிறீச்சிட்ட குரலில் நடுங்கிப் போய்க் கத்துவாள்.

அப்பா விசிறியை எறிந்து விட்டு, சாந்தாவை அருகில் இழுத்து அணைத்துக் கொள்வார்.

அவனைப் பார்த்து "இந்தக் கொழந்தையை போய் அழ வெப்பியாடா நீ? போடா போ. இந்த வயசுல ஆண் கொழந் தைங்க எப்படி நடந்துக்கணுமோ, அப்படி நடந்துக்கணும். ஒனக்கு தானாவும் தெரியலை. சொல்லியும் புரியல.



போடாப்போ. வேணுவைப் பார்த்துக் கத்துக்கோ. ஆம்பிளைப் பையன்னா வேணுவை மாதிரித்தான் இருக்கணும்."

* * *

வேணு! வேணு ரங்கராஜனுடைய சொந்த மாமா. அம்மாவின் கடைசித் தம்பி. பாட்டிக்கு அம்மாவோடு சேர்ந்து பிறந்தவர்கள் ஐந்து பேர். மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள். பெரியம்மா இருந்திருந்தால் இன்றைக்கு அவளும் குடும்பம், குட்டி என்று அல்லாடியிருப்பாள். டவுனுக்குப் போனபோது யாரோ கிண்டல் செய்தார்கள் என்று அரளி விதையை அரைத்துச் சாப்பிட்டு செத்துப் போய் விட்டாளாம். அம்மாவுடைய அண்ணன் சண்முகம். பெரிய மாமா, அவராகப் பார்த்து ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு ஊர் விட்டு ஊர் போய் விட்டார். அம்மாவுக்கு அடுத்த தம்பி, சிவலிங்கம். வீட்டுக்கும் ஊருக்கும் அடங்காத பிள்ளை. குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய வயதில் கோயில் மாடு போல் சுற்றி வந்தான். திருடிக் கொண்டு போன காசில் டவுனில் ஒரு சினிமா விடாமல் பார்த்தான். ஏதோ ஒரு 'பொம்பளை' விவகாரத்தில் மாட்டிக் கொண்டு, கம்பு அரிவாள்களிடம் இருந்து தப்பிக்க ஓடிப் போய் விட்டான். ஓடிப் போன ரொம்பநாள் கழித்துத்தான் அவன் பட்டாளத்தில் இருக்கும் சேதி வந்தது.

அம்மாவின் குடும்பத்தில் தலையெடுத்தது வேணு மாமா மட்டும்தான். அதனால் அப்பாவிற்கு வேணு மாமாவை ரொம்பப் பிடிக்கும். எடுத்ததெற்கெல்லாம் அப்பா வேணு மாமாவைத்தான் உதாரணமாகக் காட்டுவார். அப்பா அவனிடம் ரொம்பக் கோபமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், "போடா, வேணு மாமாவோட மூத்திரத்தைக் குடிடா. அப்பக் கூட ஒனக்குப் புத்தி வராது." என்பார்.

வேணு மாமா நிஜமாகவே ஜகஜ்ஜாலக் கில்லாடிதான்.

"எதொண்ணு கத்துக்கணும்னாலும் மாமாவைப் பாத்துக் கத்துக்கடா" என்று அப்பா வேணு மாமாவை அவனுக்கு ஒரு உதாரண மனிதனாக்கி விட்டார். உதாரண மனிதன் கூட இல்லை. உதாரண தெய்வம்.

அப்பா அடிக்கடி சொல்லியதில் அவருடைய வார்த்தைகள் தேன் மெழுகில் விழும் வார்ப்படம் போல் மனதில் பதிந்து விட்டது.

அப்பா சொன்னதில் ஓரளவு நியாயம் இருந்தது.

கூடப் பிறந்தவர்கள் எல்லாம் எட்டமுடியாத அளவுக்கு வேணு சாமர்த்தியம் கொண்டிருந்தான்.

வேணு மாமாவை சாதாரணமாய் எடை போட்டு விட முடியாது.

ரங்கராஜனுக்கு அவனுடைய சின்ன வயதில் வேணு மாமாதான் ஹீரோ.

படிப்பில் சூரப்புலி வேணு மாமா.

கோயமுத்தூருக்குப் போய் விவசாயத்தை எழுத்தில் படித்து விட்டு ஊர் செம்மண்ணை பச்சையாக்கிக் காட்டியவன் வேணு மாமா.

திறமையில்லாமல் செம்மண்ணை எப்படி பச்சையாய், கண்ணுக்குக் குளுமையாய்க் கொண்டு வர முடியும்?

வேணு மாமாவிற்கு அவனைவிட ஆறு வயதுதான் அதிகம். ஆறு வருட வித்தியாசம் என்பது ஒரு பெரிய வித்தியாசம் இல்லை. ஆனால் இந்த வயசிலேயே வேணு மாமா மட்டும் எப்படி துருவ நட்சத்திரமாய் ஒளிர முடிகிறது என்று ரங்கராஜனுக்கு ஆச்சரியமாய் இருக்கும்.



வேணு மாமா படிக்கிற காலத்திலேயே வீடு வீடாய்ப் போய் பேப்பர் போட்டு சம்பாதிப்பான்.

சிங்கப்பூரில் இருந்த மொய்தீன் பாய் கொண்டு வரும் துணிகளையெல்லாம் ஒன்றுக்கு இரண்டாய் விலை வைத்து கோயமுத்தூரில் ஹாஸ்டல் பையன்களிடம் விற்று விடுவான்.

வேணு மாமாவிற்கு மனம் முழுக்க வியாபாரமும், லாப விகிதமும், படிப்பும்தான்.

ரங்கராஜனின் பெரிய மாமாவிற்கு மாரடைப்பு என்று செய்தி வந்தது. பெண்டாட்டியோடு தனியாகப் போய் குடித்தனம் வைத்த சண்முகம் மாமா. மதுரையில் இருந்தார் அப்போது. அம்மா பதறிக் கொண்டு மதுரைக்குப் போய் விட்டாள்.

வேணு மாமாவிற்கும் செய்தி போனது. வேணு மாமாவிற்குப் பரீட்சை நேரம்.

"நான் வந்து பார்ப்பதால் அண்ணன் பிழைத்துக் கொண்டு விடுவார் என்று யாராவது உத்தரவாதம் கொடுங்கள். நான் வருகிறேன். சும்மா வந்து பார்த்துவிட்டுப் போக எல்லாம் என்னால் இப்போது முடியாது. எனக்குப் பரீட்சை இருக்கிறது. பரீட்சை சமயத்தில் அங்கே வந்து என் நான்கு வருஷப் படிப்பை வீணாக்க முடியாது" என்று வேணு மாமா சொல்லி விட்டான்.

ரங்கராஜனுக்கு ஒரு மாதிரி திக்கென்று இருந்தது. உறவு முக்கியமா, படிப்பு முக்கியமா என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

அப்பா அப்போதும் வேணு மாமாவிற்காகப் பரிந்து பேசினார்.

"என் மச்சினன்டி. அர்ஜுனன் மாதிரி. குறின்னா ஒரே குறிதான். படிப்புக்குன்னு போனவன் இந்தப்பக்கம் அந்தப் பக்கம் அசையறானான்னு பாரேன். அர்ஜுனன் கூட சண்டை போடறப்ப அண்ணன் தம்பின்னுல்லாம் பாக்காமத்தானே அம்பு விட்டான். ஒருத்தன் முன்னேறணும்னா இப்படித்தான்" என்று அம்மாவிடமே, வேணு மாமாவை உயர்த்தி வைத்துப் பேசினார்.

அப்பா சொன்னது சரி என்று தோன்றியது.

வேணு மாமாவின் உருவம் அவன் மனதில் விஸ்வரூபம் எடுத்து உட்கார்ந்தது.

முன்னேறினால் வேணு மாமா மாதிரி முன்னேற வேண்டும். பேசினால் வேணு மாமா மாதிரி சாதுர்யமாக, சாமர்த்தியமாகப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"என்ன வேணு மாமா? படிப்பை முடிச்சிட்டே. விவசாயத்துல கொட்டுது. அப்புறம் கல்யாணம்தானே? எப்ப?"

"கல்யாணமா? எனக்கா? சே, சே. அந்த அசிங்கமெல்லாம் எனக்கு வேண்டாம். நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லடா. பொண்ணுங்களைப் பார்த்தாலே எனக்கு ஆகறதில்ல. அவங்களுக்கு பேச்சு பத்தாது. புத்தி பத்தாது. சும்மா வரிசையா கொழந்தை பெத்துக் கொடுக்கத்தான் லாயக்கு. எங்கம்மா மாதிரி."

வேணு மாமா சொன்ன அத்தனையும் உண்மை என்று தோன்றியது. வேணு மாமா வாய் திறந்து பேசினாலே வேதம் ஓதுகிற மாதிரித்தான் இருக்கிறது. எப்படி எந்த விஷயம் என்றாலும் வேணு மாமாவால் இவ்வளவு தெளிவாக அலசி ஆராய்ந்து பேச முடிகிறது? ரங்கராஜன் பேசினால் ஒரு பக்கம் மட்டும்தான் பார்த்துப் பேசுவான். பிரச்னைக்கு



இன்னொரு பக்கம் இருப்பதே தெரியாது. ஆனால், வேணு மாமா அப்படி இல்லை.

வாழ்ந்தால் வேணு மாமா மாதிரி வாழ வேண்டும் என்று அன்றைக்குத் தோன்றியது. பெண்களைக் கிட்டத்தில் அண்டவே விடக்கூடாது.

## 6

சின்ன வயதில் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாக இருந்தது? அப்பா அன்பைப் பொழியோ பொழி என்று பொழிந்தார். அன்பைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகவே தெரியவில்லை. அப்பாவுக்குப் போட்டி போட்டுக் கொண்டு அம்மா அவனிடம் காட்டிய பரிவு. ஹீரோவாய் ஒரு வேணு மாமா. அவனுடைய கொள்கைகள். அர்த்தம் பொதிந்த அவனது பேச்சு. விளையாட்டுத் தோழியாய் சாந்தா.

எல்லாம் படுஜோர்தான். கவலைகளை அறியாத வயது. ஏன் இப்படித் திடீரென்று சொல்லி வைத்த மாதிரி எல்லாரும் தடம் மாறினார்கள். வயது ஏற ஏற அனுபவம் ஏறும் என்றுதான் சொல்வார்கள். அவன் வாழ்க்கையில் மட்டும் ஏன் இவ்வளவு கசப்பு ஏறியது. தோட்டத்து வெள்ளரி மீது பாம்பு ஊர்ந்து போனால் அந்த வெள்ளரிப் பிஞ்சு கசக்கும் என்று சொல்வார்களே. அதுமாதிரி வாழ்க்கை கசப்பதற்கு எந்த பாம்பு அவன் மேல் ஊர்ந்து போனது?

மனிதர்களுக்கு நிலையான முகம் இல்லை ஒன்று, இரண்டு என்று பலதரப்பட்ட முகங்கள். உள்ளே ஓடுவது ஒன்று. வெளியே தெரிவது ஒன்று.

ஊரில் இருக்கிற அவன் வயதுப் பையன்கள் எல்லாம் படிப்பை ஸ்கூலோடு நிறுத்திக் கொண்ட வேளையில் அப்பா அவனுக்காக என்று எப்படி உருகிப் பேசினார் என்று ரங்கராஜனுக்கு இன்றும் நினைவிருக்கிறது.

"ரங்கா, நீ டவுனுக்குப் போய்ப்படி. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. ஹாஸ்டல்லயே தங்கிக்கோ. வாரம் ஒரு தடவை வந்துட்டுப் போ. நீ நாளைக்கு நல்லா இருக்கணும். என்னடா எங்கப்பன் என்னைச் சரியாப் படிக்க வக்கலியேன்னு பின்னால திட்டக் கூடாது."

"நான் படிக்கிறேன். ஆனா கோயமுத்தூருக்குப் போய் மாமா மாதிரி விவசாயம் படிக்கிறேனே."

"டேய், கண்ணா. அது மட்டும் வேண்டாம்டா. வேணு அவங்க வீட்ல அஞ்சி பையன்களில ஒருத்தன். நீ எங்களுக்கு ஒரே ஒரு பையன். உன்னைப் பாக்காம எங்களால இருக்க முடியாது. கும்பகோணத்துலயோ, தஞ்சாவூர்லயோ படிச்சா நெனைச்ச, நேரத்தில நீ இங்க வரலாம். போலாம். நாங்களும் ஒன்னைப் பார்க்க அங்க ஹாஸ்டலுக்கு வண்டி கட்டிக்கிட்டோ, பஸ் ஏறியோ ஓடி வந்துடலாம். கோயமுத்தூர் வேண்டாம்டா."

அப்பாவுக்கும், அம்மாவிற்கும் அவன் மேல் இருக்கும் பாசத்தைக் கண்டால் அவனுக்கு மனம் அப்படியே உருகிப் போனது. நெகிழ்ந்து போனான்.

அப்பாவின் விருப்பப்படி டவுனிலேயே படித்தான். விவசாயம் எப்படியும் அனுபவத்தில் வந்து விட்டுப் போகிறது. தெரியாவிட்டால் வேணு மாமாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் போயிற்று. அதற்காகப் புதிதாக ஒரு படிப்பு, புதிதாக ஒரு விஷயம் தெரிந்து கொள்ளாமல் இருப்பதா?



ஒவ்வொரு வாரமும் ஹாஸ்டலில் இருந்து வீட்டுக்கு வருவான்.

அவன் ஒரு முட்டாள். வீட்டில் ஏதோ மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருந்திருக்கின்றன. அப்பா அவன் மேல் பாசமாக இருக்கிறார். அம்மா அவன் மேல் அன்பாக இருக்கிறாள் என்ற திருப்தியில் எதையும் கவனிக்காமல் விட்டுவிட்டான். வீட்டுக்குள் கொஞ்சம் கொஞ்சமாய் விரிசல் விழுந்தது. அவனுக்குத் தெரியாமல் அவன் பாட்டுக்கு புத்துருக்கு நெய் விட்டு பருப்பு சாதமும், ஆவக்காய் ஊறுகாயும் சாப்பிட்டு நொட்டை விட்டுக் கொண்டு போய்விட்டான்.

அப்படியும் ஒரேயடியாக அவன் தனக்குத்தானே முட்டாள் பட்டம் கட்டிக் கொள்ள விரும்பவில்லை.

வீட்டுக்குள் மாறுதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறதென்று யார் தான் வெளிப்படையாகத் தெரிவித்தார்கள்?

காக்கை எச்சம் போட்டு அரச மரம் வீட்டுச் சுவரில் வேர் விடும்போது, அது பெரிதாய் வளர்ந்து சுவரைப் பிளக்கும் என்று யாராவது எதிர்பார்க்கிறார்களா என்ன?

அப்பா எப்போதாவது அம்மாவை 'வாடி, போடீ, சோம்பேறி, பொட்டைக் கழுதை' என்றெல்லாம் சொல்லியிருந்தால் கூட அவனுக்கு அது தாம்பத்ய ஊடலாகத்தான் தோன்றியிருக்குமே தவிர, காகம் இட்ட அரச மரத்து விதை எச்சம் என்று அவனுக்குத் தோன்றி இருக்கவே தோன்றி இருக்காது.

வீட்டில் எப்போதும் போல்தான் நடப்புகள் எல்லாம் இருந்தன.

சனிக்கிழமை சாயங்காலம் அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தவுடன் அம்மா அவனை இழுத்துக் கொண்டு அம்மன்

கோவிலுக்குப் போவாள். எப்போதும் போல அவன் பெயருக்கு அர்ச்சனை செய்வாள். அம்மன் குங்குமத்தை அவன் நெற்றியில் இட்டு விடுவாள். எப்போதும் போல கையையும், காலையும் வழித்து திருஷ்டி சுற்றிப் போடுவாள்.

தாவணி போடாமல் இன்னும் பாவாடை சட்டையிலேயே வீட்டை வளைய வரும் சாந்தா, அவனை முன்போல் வம்புக்கு இழுக்காமல், அவனுக்கு நடக்கும் உபச்சாரங்களை எல்லாம் பார்த்து பிரமித்து நிற்பாள்.

திங்கட்கிழமை அதிகாலையில், அப்பாவைக் கும்பிட்டு விட்டு, 'போக வேண்டுமே' என்ற அங்கலாய்ப்புடன் கிளம்பிப் போவான்.

ஆனால், காற்றை எத்தனை நாள் கைக்குள் பிடித்து வைக்க முடியும்?

சின்ன ஓட்டை கிடைத்தாலும் புஸ்ஸென்று வெளியே பாய்ந்து விடாதா? அழுத்தப்பட்ட காற்று, அழுத்த அழுத்த ஆவேசமாய் சீறிக் கொண்டு அல்லவா கிளம்பும்?

முதல்முறையாய் அப்பாவின் அசிங்க முகம் தெரிந்த போது, அழுத்தப்பட்ட காற்றின் சீற்றமாகத்தான் தெரிந்தது அவனுக்கு. அந்த முதல் சீற்றத்தின் முன்னால் சிதறிப் போனான் ரங்கராஜன்.

திடீரென்று காலேஜ் ஸ்டிரைக்.

எப்போது கல்லூரி திறக்கும் என்ற அறிவிப்பு எதுவுமின்றி கல்லூரிக் கதவை இறுக மூடிவிட்டார்கள்.

ஹாஸ்டலையும் மூடிவிட்டார்கள். மாணவர்களை எல் லாம் வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டார்கள்.

மனம் நிறைய மகிழ்ச்சியோடு அவன் வீட்டை நோக்கிப் பறந்து வந்தான். வீட்டிற்குள் காலெடுத்து வைக்கப்



போனவனை அப்படியே அறைந்து நிறுத்துகிற மாதிரியான ஆக்ரோஷமான குரல் உள்ளேயிருந்து பாய்ந்து வந்தது.

''சனியனே. எங்கயாவது போய்த் தொலையேன். நானும் நிம்மதியா இருந்துட்டுப் போறேன்'' என்று அப்பாவின் குரலா அது?

அப்பாவின் குரலேதான்.

இவ்வளவு கடுமையாகக் கூட அப்பாவால் கத்த முடியுமா?

அப்பா யாரிடம் கத்துகிறார்?

தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தவன் திடுக்கிட்டுப் போனான்.

அம்மா தூணைப் பிடித்துக் கொண்டு தலை குனிந்திருந் தாள். அவள் பாதத்திற்குக் கீழே கண்ணீர், கோலத்திற்குப் புள்ளி வைத்திருந்தது.

சாந்தாவை அங்கே காணவில்லை. பின்னால் மூன்றாவது கட்டில் எண்ணெய் போடாத கிணற்றுச் சகடை வீய்ங்க்க்... வீய்ங்க்க் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தது.

ஒருவேளை அப்பாவின் சத்தத்தைக் கேட்கக்கூடாது என்று தான் கிணற்றுச் சகடை அப்படி 'வீய்ங்க்' 'வீய்ங்க்' என்று சத்தம் போட்டதோ என்னவோ!

''அப்பா'' என்றான் ரங்கராஜன்.

அப்பாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. திரும்பிப் பார்த்தார். சத்தியமாய் அந்த நேரத்தில் அவனை எதிர்பார்க்கவில்லை என்று முகம் சொல்லியது.

''நீயா?'' என்று கேட்டார் அப்பா. குரல் நடுங்கியது. கோபத்தாலா? அவமானத்தாலா?

ரங்கராஜன் பதில் சொல்லவில்லை.

அப்பாவும் அம்மாவும் ராமரும், சீதையும் என்றுதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அந்த மாயைக் கண்ணாடி அவன் கண்ணெதிரே பொல பொலவென்று இடிந்து சரிந்து விழுந்ததை அவனால் தாங்க முடியவில்லை.

அப்பாவால், அம்மாவைத் திட்டக்கூட முடியுமா?

அம்மாவை அவர் அவன் முன்னால் தாங்கு தாங்கு என்று தாங்கியதெல்லாம் வெறும் வேஷம்தானா?

நட்ட நடுராத்திரியில் ஒரு நாள் அம்மாவைத் தேள் கொட்டி விட்டது. அம்மாவின் உடம்பில் விஷம் ஏறி அந்தக் கடுப் பில் அம்மா துடித்தாள். அவள் முகம் வேதனைக் கீறல்களை வெளிப்படுத்தியது. அப்பா துடித்துப் போய் பாடம் போடுபவரை அழைத்து வர அந்த நேரத்தில் ஓடினாரே. அந்த மனதா இப்போது கடுமையாகி விட்டது? அவன் எதிரில் அப்படி வளைய வளைய வந்து விட்டு, இப்போது அம்மாவை 'சனியனே வா?''

''என்னப்பா இதெல்லாம்?'' என்று கேட்டான்.

நாக்கு தானாகப் புரண்டு கேட்டு விட்டது. மனதோடு ஒட்டாமல் நுனி நாக்கு மட்டும் தன்னிச்சையாகக் கேட்டு விட்டது.

எதிர்பாராமல் பிடிபட்டதில் அப்பாவின் முகத்தில் கடுமை ஏறிக் கொண்டது.

''உனக்குத் தேவையில்லாத விஷயம். காலேஜுக்குப் போகச் சொன்னா இப்படி ஊர் சுத்திட்டு வந்து நிக்கிறியே?''

அப்பாவா இப்படிக் கேட்கிறார்? ஆராயாமல் கோவல னுக்குத் தண்டனை கொடுத்த பாண்டியன் மாதிரி, காலே



ஜுக்குப் போகவில்லை என்றவுடன் அவன் ஊரைச் சுற்று கிறான் என்று எப்படி தீர்ப்பளித்து விட்டார்?

''காலேஜ் ஸ்டிரைக். ஹாஸ்டல் ஸ்டூடண்ட்ஸையெல் லாம் வீட்டுக்குப் போகச் சொல்லிட்டாங்க.''

''வந்துட்டே இல்லே. போ. உள்ளே போய் சாப்பிடு. படி. சாயங்காலத்துக்கு சாயங்காலம் ஆத்தங்கரைக்குப் போ. மணல்ல உக்காரு. தென்னந்தோப்புக்குப் போய் எளநி வெட்டிச் சாப்பிடு. உன் விஷயத்தைப் பாத்துக்கறதோட நிறுத்திக்கோ. குடும்ப விவகாரம் எல்லாம் உனக்கு வேண் டாம்''

பளீர் பளீர் என்று சாட்டையால் அடித்த மாதிரி சொற்கள். அவன் அம்மாவைப் பார்த்தான். இன்னும் குனிந்த தலை நிமிரவில்லை.

ரங்கராஜன் அர்ஜுனன் அம்பு போல் நேராகப் பின்கட் டுக்குப் போனான். சாந்தா நீர் இறைத்துக் கொண்டிருக் கையில், அவள் முன்னால் போய் நின்று, மௌனமாய் கையை நீட்டி, நீட்டிய கையில் அவள் கொட்டிய தண்ணீரை முகத்தில் அறைந்து கழுவிக் கொண்டு மறுபடியும் வெளியே வந்து விட்டான்.

அப்பாவா? அப்பாவா இப்படி மாறிப் போயிருக்கிறார்? நம்பவே முடியவில்லை.

ஏன்? எதனால்? என்ன காரணம்?

அவனுக்குக் காரணம் தெரியவில்லை.

வேஷம் கலைந்து போனதில் அப்பாவுக்கு தைரியம் அதிகமாகி விட்டது. அடங்கிக் கிடந்த அவரது மனக்குரங்கு அவனுக்கு முன்னாலேயே ஆர்ப்பாட்டம் போட்டது. அவனுக் கெதிரிலேயே அம்மாவைத் திட்டுவதை ஆரம்பித்தார்.

எதற்காக? எதற்காக?

காரணம் கிடைக்கவில்லை.

ரங்கராஜன் சாந்தாவின் தோளைப் பற்றி உலுக்கினான்.

''சொல்லு சாந்தா. நான் காலேஜுக்குப் போய்டறேன். கண்ணிருந்தும் குருடனாப் போய்ட்டேன். நீதான் இங்கேயே இருக்கறவ. அப்பா எதுக்கு அம்மாவைத் திட்றாரு? சொல்லேன்.''

சாந்தா மௌனமாகக் கண்ணீர் பெருக்கினாள்.

''தெரியாது ரங்கா.''

ரங்கராஜனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. அப்பாவையே கேட்டால் என்ன?

அம்மா என்ன பாவம் பண்ணிவிட்டாள் என்று இப்படி அவளைப் போட்டுத் திட்டுகிறீர்கள்?

ஏன் அம்மாவைத் திட்டுகிறீர்கள்!

ரங்கராஜன் வித விதமாய் வார்த்தைகளைக் கோர்த்து வாக்கியங்கள் அமைத்துப் பார்த்தான்.

தைரியம்தான் வரவில்லை.

அந்த மனிதரின் எதிரில் தன்னால் தைரியமாகப் பேச முடியாது. நெஞ்சில் அத்தனை துணிச்சல் இல்லை. இது வரைக்கும் கூட்டுப்புழுவாக, தான் இருப்பதே வெளியில் தெரியாமல் இருந்தாகிவிட்டது. திடீரென்று இறக்கை கட்டிக் கொள்ள வேண்டுமென்றால் அது எப்படி என்று அவனுக்குத் தெரியவில்லை. அப்பாவிடம் பயம்!

பயம்! எதற்குப் பயப்பட வேண்டும்? இத்தனை நாள் பயப்பட்டது கூட தேவையில்லை. ரங்கராஜன் முதலில் அந்தப் பயத்தை ஒழித்துக் கட்டுவது என்று தீர்மானித்தான்.



# 7

பயத்தை எப்படி விரட்டுவது?

கல்லூரியில், பள்ளியில் எல்லாம் கூடப் படித்த பையன்கள் சிகரெட் பிடித்தார்கள். புகையை இழுத்து இழுத்து வெளியே விட்டு ஆனந்தம் என்றார்கள். கண்களை ஒரு மாதிரி கிறக்கமாக மூடிக் கொண்டு அனுபவித்தார்கள். அவர்கள் அப்படி அவனெதிரில் சிகரெட் பிடித்த போதெல்லாம் அதைச் சுவைத்துப் பார்க்கலாமா என்று ஒரு சபலம் அவனுள் எழுந்தது.

ச்சீ. அது கூடாது. பாவம். அப்பாவிற்குப் பிடிக்காது. அப்படி நினைத்துத்தான் அந்த சபலத்தை அவன் துரத்தியடித்துக் கொண்டிருந்தான்.

அப்பாவுக்குப் பிடிக்காது. அப்பாவுக்குப் பிடிக்காதுதானே?

அப்பாவுக்குப் பிடிக்காது என்றால் அதுதான் எனக்குப் பிடிக்கும். அதைத்தான் நான் செய்ய வேண்டும். ரங்கராஜன் அப்பாவிடம் எதிர்ப்பைக் காட்ட அது ஒரு வழி என்று தீர்மானித்தான்.

மெனக்கெட்டுத் தேடிப் போய் ஒரு சிகரெட்டை வாங்கி வந்தான். ஆற்றங்கரையில் அரங்கேற்றம். ஒரு ஆவேச எதிர்ப்பாய் ஆரம்பித்த பழக்கம் அடுப்படி வரையில் வந்து விட்டது.

ஒருநாள் ராத்திரி எல்லோரும் தூங்கும் நேரத்தில் மெல்ல எழுந்து போய், சாம்பலோடு கனிந்து கொண்டிருந்த கரி

நெருப்பை ஊதி ஊதி சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு ஆழமாய் ஓர் இழுப்பு இழுத்து அந்த சுகத்தோடு திரும்பினால்... அப்பா.

கண நேரத்திற்கு இதயம் மரத்துப் போனது. மார்பு அடைத்துக் கொண்டது. வயிற்றில் இருந்து தொண்டைக்கு தவளை எகிறிக் குதித்தது.

எதற்காகப் பயப்பட வேண்டும்? பயப்படாதே.

நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான்.

''எவ்வளவு நாளா இந்தப் பழக்கம்?'' அப்பா நிதானமாய் ஒவ்வொரு வார்த்தையாய் நிறுத்திக் கேட்டார்.

சட்டென்று பதில் வந்துவிட்டது.

''நீங்க அம்மாவைத் திட்ட ஆரம்பிச்ச நாள் முதலா.''

கொதிக்கும் இரும்பை எடுத்து நீரில் அழுத்திய மாதிரி அப்பா அடங்கிப் போனார். மௌனமாய்த் திரும்பினார்.

''அது ரொம்பக் கெட்ட பழக்கம். பிடிச்சுக்கிட்டா ஆளை விடாது. உடம்பைக் கெடுத்துடும். வேண்டாம். விட்டுடு'' என்று மெதுவாய்ச் சொல்லிவிட்டுப் படுக்கப் போய்விட்டார்.

ஒரு வார்த்தை. ஒரே ஒரு சத்திய வாக்கியம். இனிமேல் அம்மாவைத் திட்ட மாட்டேன் என்று ஒரு வாக்கியம். அல்லது ஏன் திட்டுகிறேன் என்ற உண்மையான காரணம். இரண்டிலும் எதையுமே சொல்லாமல், அவன் சொன்னதை லட்சியமே செய்யாமல் தன் மனசுக்குப் பட்டதைச் சொல்லி விட்டு அலுங்காமல் நகர்ந்து விட்டாரே.

ரங்கராஜனுக்கு சலிப்பு வந்தது. கோபம் வந்தது. எரிச்சல் அதிகமானது.



இன்னும் ஆசுவாசமாக புகையை இழுத்து, முழு சிகரெட்டையும் நிதானமாகக் கரைத்து விட்டு அங்கிருந்து நகர்ந்தான் ரங்கராஜன்.

* * *

''நீ சிகரெட் பிடிக்கிறியாமே ரங்கா.''

அம்மாவிடம் இருந்து அந்தக் கேள்வி வந்தது. அவன் அந்தக் கேள்வியை நிச்சயம் அம்மாவிடம் இருந்து எதிர் பார்க்கவில்லை.

இதமான சூட்டில் நல்லெண்ணெயைக் குழைத்து அவன் உச்சந்தலையில் வைத்து உசுப்பி, உசுப்பி, சிலுப்பிச் சிலுப்பித் தேய்த்துக் கொண்டே மென்மையான குரலில் கேட்டாள்.

சடக்கென்று அவனுக்குக் கணணில் நீர் பெருகிவிட்டது.

மெல்ல ஏறிட்டுப் பார்த்தான்.

அம்மாவின் கண்கள் பளபளத்தன.

தலையைக் குனிந்து கொண்டான்.

''உண்மையாவாடா ரங்கா?''

அம்மாவின் கை ஒன்று அவன் மோவாயை ஏந்தியது. இன்னொரு கை தலையில் அழுந்தி மயிர்க்கால்களை நீவிவிட்டது.

அம்மாவுக்கு என்ன சொல்வது?

சொன்னால் அம்மாவால் எவ்வளவு தூரம் புரிந்து கொள்ள முடியும்?

''என்ன பதிலே பேச மாட்டேங்கறே? உண்டா இல்லையா?''

''உண்டு.''

''நீ இல்லேன்னு சொல்லணும்னுதான் எதிர்பார்த்தேன் ரங்கா. அது நெஞ்சையே அறுத்துடுமாம் தெரியுமா? உடம்பைக் கெடுத்துக்காதடா செல்லம். விட்டுடு.''

''எனக்கு சிகரெட் பிடிக்கணும்னு ஆசை வந்து பிடிக்க லேம்மா.''

''பின்னே?'' என்று அம்மா முகத்தில் வியப்புடன் புதிர் முகம் காட்டிக் கேட்டாள்.

''ஒரு ஆத்திரம்தான். அப்பா ஒன்னை அடிக்கடி திட் டறதை என்னால தாங்க முடியலை. அவருக்கு எதிர்ப்பா ஏதாவது செய்யணும்னு தோணிச்சி. அதனாலத்தான் சிகரெட் பிடிக்க ஆரம்பிச்சேன். அம்மா. எதுக்கும்மா அப்பா உன்னை இப்படித் திட்டித் தீர்க்கறாரு?''

''இந்தா சீயக்காப் பொடி. கொஞ்ச நேரம் ஊறிட்டு குளிக்கப் போ.''

''அம்மா நான் கேட்டேனே. ஏன் ஒன்னைத் திட்டறாரு? இத்தனை நாளா இல்லாம இப்படி திடீர்னு ஏன் 'வெளில போ'ன்னு கரிச்சிக் கொட்டறாரு?''

அம்மா பதில் சொல்லவில்லை. சொல்ல மாட்டாள் போலத் தெரிந்தது.

ஏதோ ஒரு பலவீனம் அவள் கைகளைப் பிடித்து வாயை அடைத்து விட்ட மாதிரி.

அதற்கு மேல் ஏதும் பேசத் தோன்றாதவனாய் மௌனமாய் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

* * *



எண்ணி மூன்றாம் நாள் அப்பா செத்துப் போனார்.

அவர் மரணத்திற்கு ஒரு வகையில் ரங்கராஜனே காரணமாகி விட்ட மாதிரி இருந்தது.

அவன் உடைந்து போய் அவர் உடலில் விழுந்து மோதி அழுதான். அம்மா பொங்கிப் பொங்கி அழுதாள். தலையை தரையில் பட் பட்டென்று இடித்துக் கொண்டாள்.

அப்பா அப்படிச் சொல்லியிருக்க வேண்டாம்.

ரங்கராஜனை சிலிர்த்தெழச் செய்யாமல் இருந்திருக் கலாம்.

''உடம்பை விக்கற ஜாதில பொறந்தவதானேடி நீ. விப சாரி நாயே.''

ஒரு கணவன் பேசும் பேச்சா அது?

ஒரு பொறுப்புள்ள தந்தை, மகனுக்கெதிரில் வீசும் வார்த் தைகளா அவை?

ரங்கராஜனின் உடம்பெல்லாம் நடுங்கியது. கொதித்தது.

'எரிதழல் கொண்டு வா' என்று பாரதி, காதில் வந்து குரல் கொடுத்த மாதிரி மனசு அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு காளை போல் மூர்க்கத்தனமாய் சிலுப்பிக் கொண்டு எழுந்து விட்டது.

என்ன செய்கிறோம் என்ற உணர்வே ரங்கராஜனுக்கு இல்லை.

சடாரென்று அவர் மேல் போய் பாய்ந்தான்.

''என்னடா சொன்னே, எச்சில் நாயே'' என்று கூவிக் கொண்டு முஷ்டியை மடக்கி உள்ளுக்கு இழுத்து அவர் மார் பில் ஓங்கி ஒரு குத்து குத்தினான்.

அப்பா நிலை தடுமாறிப் போனார்.

"ரங்கா, நீயா அடிச்சே?"

"ரங்கா, நீயா அடிச்சே?"

"ரங்கா, நீயா அடிச்சே?"

அப்பாவிடம் இருந்து இரண்டு முறை அந்தக் கேள்வி வந்தது. மகன் தந்தைக்காற்றும் உதவியாக அவர் என்ன என்ன எண்ணியிருந்தாரோ! நிச்சயம் இதை எதிர்பார்க்க வில்லை. தரையில் சாய்ந்தார். பேச்சு மூச்சில்லை.

"ஐயோ..." என்று அலறிக் கொண்டே அம்மா ஓடி வந்தாள். "என்ன ஆச்சி உங்களுக்கு?" என்று அவர் மேல் படர்ந்து கன்னத்தைத் தட்டி, இமைகளைப் பிரித்து, உடம்பை உலுக்கினாள்.

சாந்தா ஓடி வந்து பார்த்து விட்டு கையிலிருந்த பாத் திரத்தைத் தவற விட்டாள்.

பாத்திரம் உருண்டு ரங்கராஜன் மேல் என்னவோ தெளித்தது. அதன்பின்தான் அவனைப் பிடித்திருந்த பேய் விலகி ஓடியது. ரங்கராஜன் மனிதனாகி, மகனாகி ஓடிப் போய் டாக்டரை அழைத்து வந்தான்.

அப்பா அதற்குள் அடங்கிப் போயிருந்தார்.

டாக்டர் மாரடைப்பு என்ற ஒற்றை வார்த்தையில் தீர்ப்பு வழங்கிவிட்டுப் போய்விட்டார்.

தீச்சட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு, நெருப்பு வைத்து, மூன்று சுற்று சுற்றி சட்டியை உடைத்து விட்டு வந்து ஆற்றில் விழுந்து எழுந்த பின்னாலும் கூட கண்ணீர் மட்டும் நிற்காமல் வந்து கொண்டேயிருந்தது.



'அப்பா, அப்பா' என்று நெஞ்சு கூவிக் கொண்டே யிருந்தது.

என்னதான் மனதின் சிம்மாசனத்தில் இருந்து அப்பாவை இறக்கி விட்டிருந்தாலும் கூட, அவர் ஒரேயடியாக ஓய்ந்து போன வெறுமையை நெஞ்சு தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தது.

## 8

கால்கள் திடீரென்று ஜில்லிட்டுப் போய், குளுமை கால் வழியாய் தலைக்கு ஏறியதும் சட்டென்று சுய நினைவுக்கு வந்தான் ரங்கராஜன்.

அவனை அறியாமலேயே ஆற்றில் இறங்கியிருந்தான். ஆற்றில் முழங்காலுக்கு மேல் தண்ணீர் இல்லை. முன்பெல் லாம் ஆடி மாதம் இப்படியா இருக்கும்? ஆடி பிறந்தால் எங்கேயோ மதகு திறந்து கரை கொள்ளாமல் தண்ணீர் பாயும். நுங்கும் நுரையுமாய் ஓர் ஆவேசத்தோடு கொப் பளித்துக் கொண்டு பாயும் தண்ணீரில் கை ஓயுமட்டும் எதிர் நீச்சல் போட்டுப் பார்க்கச் சொல்லும். ஆற்றோடு போகும் வாழை மட்டையைத் துரத்திப் பிடிக்கச் சொல்லும். சிப்பி, சங்கு என்று ஏதாவது அகப்படுகிறதா என்று பார்ப்பதற்காக முக்குளித்து கையை மணல் மடியில் விட்டுத் துழாவச் சொல்லும், சமயத்தில் பெரிதாய் எலும்பு கூட கிடைக்கும். மனித எலும்பு.

அஸ்தி கரைப்பதற்காக ஆற்றில் போட்ட சாம்பல் மிச்சத் தில் தட்டுப்படும் எலும்பு. குமட்டிக் கொண்டு வரும். 'தூ'

என்று தூர விசிறியெறியச் சொல்லும். அப்பாவின் அஸ்தி கூட இப்படித்தானே இந்த ஆற்றில் கரைந்தது!

இந்த நேரத்தில் என்ன யோசனை வேண்டிக் கிடக்கிறது!

ரங்கராஜன் ஆற்றை அந்த இருட்டிலேயே கடந்தான். சுருக்கு வழி. குறுக்குவழி. ஆற்றில் தண்ணீர் நிறைய ஓடும் நேரத்தில் ஊரைச் சுற்றிக் கொண்டு போக வேண்டும். இன்றைக்கு அப்படி இல்லை. கரை ஏறினான். எதிரில் பாதை குறுகியது. சுடுகாட்டிற்குப் போகும் பொதுவழி என்பதால் அந்த இடத்தில் பஞ்சாயத்து போர்டு விளக்கு ஒன்று நட்டு வைக்கப்பட்டிருந்தது. அதிசயமாய் அது எரிந்து கொண் டிருந்தது. பாதை ஓரத்தில் சப்பாத்தி மண்டியிருந்தது. எருக்கஞ்செடிகள் எக்குத்தப்பாய் வளர்ந்திருந்தன. அவற்றில் இருந்து கிளம்பிய மணமும், அனாதையாய் வளர்ந்திருந்த துளசியின் வாசமும் மூக்கை உரசி, அவன் ஏதோ மனித அரவமே இல்லாத ஒரு காட்டுப் பகுதிக்குள் நுழைந்து விட்ட மாதிரியான ஒரு பிரமையை ஏற்படுத்தின.

இத்தனைக்கும் நடுவே திடீரென்று சம்பந்தமில்லாமல் சுருட்டு நாற்றம் அடித்தது.

மனதில் ஒரு திடுக் புறப்பட்டது.

யாரும் அறியாமல் ஊரை விட்டுப் புறப்பட்டுப் போவதாய் அவன் நினைத்துக் கொண்டிருக்க, இந்த நேரத்தில் மனிதர்கள் புகைக்கும் சுருட்டு. இந்த நேரத்தில் யாராய் இருக்க முடியும்?''

''யார்ரா அது?'' என்று சற்றுத் தள்ளியிருந்த இருள் கேட்டது. குரல் காட்டிக் கொடுத்தது.

வேணு மாமா. பூனை குறுக்கிடுகிற மாதிரி இந்த வேணு மாமா எங்கேயிருந்து வந்து முளைத்தான்.



''நான்தான் மாமா.''

''அட. ரங்காவா? என்ன இந்த நேரத்திலே?'' கேள்வி புதருக்கு அப்பாலிருந்து ஒலித்தது. லேசான வியப்பைக் காண்பித்தது.

''ஒண்ணுமில்ல. வயிறு கொஞ்சம் சங்கடம் கொடுத்த மாதிரி தெரிஞ்சது. அதான்'' என்று சொன்னான் ரங்கராஜன். ஏதாவது சொல்ல வேண்டுமல்லவா?

''சரி. எதிரிலேயே உக்காரேன். இருட்டுதானே? உன் முகம் எனக்குத் தெரியப் போறதில்ல. என் முகம் உனக்குத் தெரியப் போறதில்ல.''

முகம் தெரிகிற மாதிரி வெளிச்சம் இருந்தால் அவனுக்கு ஏது தைரியம்?

''இல்ல. காததூட கொஞ்சம் நடந்து வேற இடம் பார்க் கறேன்.''

''சரி. சரி. பாத்துப்போ. ஏதாவது பூச்சி பொட்டு இருக்கப் போகுது. தீப்பொட்டி வேணுமா?''

"வேண்டாம்" என்று மறுத்து விட்டு நடந்தான்.

தப்பித்து விட்ட மாதிரி இருந்தது. மாமா பின்னால் வரமாட்டான். உரிமையோடு இழுத்துப் பிடித்து நிறுத்த மாட்டான். பார்த்தால் கூட கொஞ்சம் ஒதுங்கியே போவான். அப்படியே எதிரில் நிற்க வேண்டி வந்தாலும் நேருக்கு நேர் கண் கொண்டு பார்க்காமல் எங்கேயோ பார்வையைத் துழாவ விட்டு விட்டேற்றியாய்ப் பேசி விட்டுப் போவான்.

வேணுவால் இனிமேல் முன்போல் மாற முடியாது.

இந்த வேணுவைப் போய் ஹீரோவாய் நினைத்துக் கொண்டு இவனை மாதிரியே முன்னுக்கு வரவேண்டும் என்று நினைத்து...

சை.

வேணுவிற்குப் பின்னால் வேறு ஒரு முகம் இருந்து முன்னால் தெரியவே இல்லையே. அவன் ஒரு வாய்ச்சொல் வீரன் என்பது தனக்குப் புரியவே இல்லையே.

வேணு மாமா ஹீரோ இல்லை, ஜீரோதான் என்று தனக்குத் தெரிவித்த சம்பவங்கள் ரங்கராஜன் மனதில் மெல்ல எழுந்து நடனமாடத் தொடங்கின.

* * *

மஞ்சள் முனைகளுடன் அம்மா கையில் படபடத்த தாளைக் கண்ட ரங்கராஜன் வியந்து போனான்.

''என்னம்மா இது? கீழ்மங்கலத்திலேர்ந்து வந்த ஜாதகமெல்லாம் பாக்கறே? யாருக்குக் கல்யாணம்'' என்று கேட்டான்.

அம்மா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அம்மா நெற்றியில் இட்டிருந்த கறுப்புத் திலகம் அவனை வேல் போல் குத்தியது. அப்பா போனதற்குப் பின்னால் அம்மாவின் நெற்றியில் இதுதான்.

அப்பா இல்லாத வாழ்க்கையை அம்மா பழகிக் கொண்டு விட்டாள். அப்பா இல்லாததால் கிடைத்திருக்கும் சுதந்திரத்தையும் அம்மா அனுபவிக்கிறாள் என்று அவனுக்குத் தெரிந்திருந்தாலும், அவனைப் பொறுத்தவரை, ரங்கராஜன் தான் அம்மாவின் தாலியை அறுத்தவன். அதனால் குற்ற உணர்வு.

அம்மா வெகு இயல்பாகக் கேட்டாள்.

''ஏண்டா?''

''இல்ல, நம்ம குடும்பத்துக்குக் கூட பெண் கொடுப்பாங்களா என்ன?''



அம்மா அதிர்ந்து போய் இவனைப் பார்த்தாள்.

''போடா, முதல்ல வாயைக் கழுவிக்கிட்டு வந்து உக்காரு. ஆரம்பிக்கிறப்பவே இந்த மாதிரி பேசறியே. கல்யாணம் உனக்கில்ல. வேணு மாமாவுக்கு. அவனுக்குத்தான் பொருத்தம் பாக்கறோம்.''

''வேணு மாமாவுக்கா? அவன் கல்யாணமே செய்துக்கப் போறதில்லேன்னு சொல்லிட்டிருந்தானே.''

''என்னிக்கு?''

''சொன்னான்.''

''சொன்னானாம் சொரைக்காய்க்கு உப்பில்லைன்னு போடா. உனக்கெதுக்கு இதெல்லாம்.''

வேணு மாமாவிற்குக் கல்யாணமா? அவனுக்குத்தான் பெண்களைக் கண்டாலே ஆகாதே. பெண்கள் எல்லாம் சும்மா குழந்தை பெற்றுக் கொடுக்கும் மெஷின்கள்தானே. அவன் சொன்னானே. அது சரியாகத்தானே இருந்தது. அதனால்தானே ரங்கராஜன் பெண்களை யாரையும் ஏறிட்டுக் கூடப் பார்ப்பதில்லை. அம்மா பெண்ணில்லையா என்று ஒரு கேள்வி மனதில் எழும். அம்மா பெண்தான். ஆனால் அம்மாவை அவன் பெண் என்ற கண்ணோட்டத்தில் பார்க்க முடியுமா என்ன? அம்மா தனி.

''என்ன வேணு. கல்யாணமாமே'' என்று வேணு மாமாவைப் பார்த்துக் கேட்டான் ரங்கராஜன்.

''ஆமாண்டா'' என்றான் வேணு கொஞ்சம் அசடு தட்டிப் போன முகத்தோடு.

''கல்யாணமே செய்துக்கப் போறதில்லேன்னு அன்னிக்கு வீரம் பேசினேயே வேணு.''

''ஆ.. அதெல்லாம் கெடக்கு. சொல்றதெல்லாம் நடந் திடுதா?''

''என்ன வேணு. அவ்வளவு ஈஸியாச் சொல்லிட்டே. அது ஒன்னோட வைராக்கியம்னு நெனைச்சிக்கிட்டிருந்தேன்.''

வேணு மாமா அவனை ஏமாற்றிவிட்ட மாதிரி தோன்றியது.

இருந்தாலும் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

கல்யாணமே வேண்டாம் என்பது ஒரு தியாகம் மாதிரி. வேணு கல்யாணம் செய்து கொள்ளட்டும்.

பெண்களை இளக்காரமாய்ப் பேசிய வேணு. கல்யாணத் தன்று முகமெல்லாம் சிரிப்பாய், கீழ் மங்கலத்துப் பெண்ணின் கை கன்னிப் போகிற மாதிரி அழுந்தப் பிடித்துக் கொண்டு அக்னியை வலம் வந்தான். சமயம் கிடைத்த போதெல்லாம் முழங்கையை அவள் இடுப்பில் தேய்த்துப் பார்த்துக் கொண்டான். அவள் திரும்பிப் பார்த்தால் அசடு வழிந்து கண் சிமிட்டினான்.

எண்ணி பத்தாவது மாதத்தில் வேணு மாமாவிற்குப் பெண் குழந்தை பிறந்துவிட்டது. அதற்குள் வேணுவிற்கு முன் மண்டையில் முடி குறைந்து போனது. தொந்தி பெருகியது. மார்புச் சதை தொள தொளவென்று ஆட்டம் கண்டு விட்டது. சுருட்டு பிடிக்கும் பழக்கம் வந்து தொற்றிக் கொண்டது.

இது என்ன அநியாயம்?

மனிதன் இவ்வளவு சீக்கிரம் தடம் மாறிப் போக முடியுமா?

ரங்கராஜனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இதெல்லாம் கூடப் பரவாயில்லை. ஆனால்...

வேணு மாமா செய்த இன்னொரு காரியம்தான் அவனை மனிதனாகக் கூட இல்லை, மிருகத்திலும் கேவலமாக்கிக்



காட்டி விட்டது. மிருகத்திலும் கேவலமான மிருகம். பன்றியைக் காட்டிலும் கேடு கெட்டவனாக்கிக் கொட்டியது.

* * *

**சாந்தா!**

எவ்வளவு பெரிய இடத்திலிருந்து வந்த குலக்கொழுந்து. போனால் போகிறதென்று தேவதை ஒன்று வானத்தில் இருந்து இறங்கி வந்து ரங்கராஜனின் வீட்டில், சமையல் கட்டில், கொல்லைக் கிணற்றடியில், தோட்டத்தில், பற்றுப் பாத்திரங்கள் தேய்க்கும் இடத்தில் வேகு வேகு என்று வேகிற மாதிரித் தோன்றும் அவனுக்கு.

அவளுக்குத் தந்த தனி மரியாதைகளையெல்லாம் வேண்டாம் என ஒதுக்கித் தள்ளிய சாந்தா...

அவன் வீட்டில் ஒரு தனி ஜோதியாய் ஒளிர்ந்து கொண் டிருந்த சாந்தா...

அந்த சாந்தாவை...

அவளுக்குத் தாவணி போடுகிற காலம் முடிந்து சேலை கட்டுகிற நேரம் வந்த போது, அந்த அயோக்கிய நாய் வேணு....

* * *

''வேணு'' என்று தொண்டை நரம்பு புடைக்கக் கத்தினான்.

தடக்கென்று எழுந்து கொண்டான் வேணு. இத்தனை நேரம் திமிறிக் கொண்டிருந்த சாந்தா, பரபரவென எழுந்து சரிந்து போன புடவைத் தலைப்பை எடுத்து மார்பைப் போர்த்திக் கொண்டு ஓடிப் போய்க் கிணற்றடியில் துவைக்

கும் கல்லில் உட்கார்ந்து விம்மி விம்மி அழத் தொடங் கினாள்.

வேணு, அவனைப் பார்க்கத் துணிவில்லாமல் சாரைப் பாம்பு மாதிரி சரசரவென்று வெளியேறிப் போனான்.

வீடு முழுக்க அசாதாரண அமைதி நிலவ ரங்கராஜன் உள்ளே போனான். யாருமில்லை.

''அம்மா எங்க சாந்தா?''

அவள் முதுகும் தலையும் குலுங்கிக் குலுங்கி விழுந்தன. பதில் இல்லை.

அவளை நெருங்கி மெல்லத் தோளில் தட்டினான்.

''சாந்தா சொல்லேன்.''

அவள் அழுகையினூடே சிதைத்துச் சிதைத்து சொன்ன வார்த்தைகளில் இருந்து, அவளுக்கு வயதாகி விட்டதால், மாப்பிள்ளை ஜாதகம் கொண்டு வர அம்மா கீழ்மங்கலத் திற்குப் போயிருக்கிறாள் என்று தெரிந்தது.

''எப்பப் போனாங்க அம்மா?''

''மத்தியானம். வண்டி கட்டிக்கிட்டுப் போனாங்க.''

''ஓ...''

''ரங்கா. எனக்குக் கல்யாணமே வேணாம் ரங்கா. என்னால இந்த மாதிரி எல்லாம் அவஸ்தைப்பட முடியாது. அவங்க கிட்ட சொல்லிடு. அம்மாகிட்ட நீயே சொல்லிடு. நான் இங்கேயே கடைசி வரைக்கும் கஞ்சியோ கூழோ குடிச்சிட்டுக் காலத்தை சந்தோஷமாத் தள்ளிடுவேன் ரங்கா.''

''ஸ்ஸு. என்ன பேச்சு இதெல்லாம். அந்த வேணு இன்னொரு தடவை இந்த வீட்டுப் பக்கம் வரட்டும். காலைக் கழட்டிக் கைல கொடுத்துடறேன்.''



கீழ்மங்கலம் ஜாதகம் சரிப்பட்டு வரவில்லை. ஜாதகமா, மனிதர்களா எதில் தோஷம் என்று ரங்கராஜனுக்குப் புரிய வில்லை.

ஆனால் வேணு அப்புறம் வரவில்லை. எப்போதாவது பார்க்க நேர்ந்தாலும் தலையை சாய்த்துக் கொண்டு போவான். இருட்டில் கூட தலை நிமிர்ந்து பார்க்க மாட்டான்.

இந்த வேணுவைப் போலவா ரங்கராஜன் மாற ஆசைப் பட்டான்.

இவனைப் போய் ஒரு கதாநாயகனாக வரித்துக் கொண் டான்?

## 9

''அம்மா'' என்று முனகினான் ரங்கராஜன்.

மனதை அதன் போக்கில் அலைய விட்டு நடந்ததில் நீட்டிக் கொண்டிருந்த கல் ஒன்று கால் கட்டை விரல் நகத்தைப் பெயர்த்து விட்டது.

சாந்தாவாயிருந்தால் 'வாயில வச்சிக்கோ. வாயில வச்சிக்கோ' என்று பதறியிருப்பாள். அம்மா பார்த்திருந்தால் நீர் பெருகியிருக்கும் கண்களில்,

கீழே அமர்ந்து கட்டை விரலை அழுத்திக் கொண்டான். கட்டியிருந்த வேஷ்டியிலிருந்து கரையோடு கொஞ்சம் கிழித்து காலுக்குக் கட்டுப் போட்டான். ரத்தம் பரவிப் போய் அந்தத் துணி கிழிசலை சிகப்பாக்கியது.

கொஞ்ச நேரம் அப்படியே ஓய்வெடுத்தான்.

கீழ்வானில் கருமை சுரண்டப்பட்டு சாம்பல் தெரிந்தது. மூடி வைத்திருந்த கையை மெல்ல மெல்லத் திறந்து காட்டுகிற மாதிரி ஒவ்வொன்றும் மெல்ல மெல்ல உருக் கொண்டு வடிவம் காட்ட ஆரம்பித்திருந்தது. தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் மங்கலாய்ப் புலப்பட்டது. பறவைகள் கூடுகளில் இறக்கைகளை சிலுப்பிக் கொண்டு இன்னும் கொஞ்ச நேரத்தில் சடசடவென்று புறப்பட்டு விடும்.

இவன்கூட இனி அந்தப் பறவை போலத்தான்.

அந்தப் பறவைகள் எல்லாம் மாலையில் கூடு திரும்பும். ஆனால் ரங்கராஜன் திரும்பப் போவதில்லை. அவனால் இனிமேல் தாங்க முடியாது.

மூளையாகி, முனை உடைந்த சிலைக்கெல்லாம் பொற் கவசம் போட்டுப் பார்த்தது போதும். இனிமேல் உங்கள் உறவு வேண்டாம். உங்கள் பாசம் வேண்டாம். உங்கள் தொடர்பு வேண்டாம். இந்த ஊரே வேண்டாம்.

ஒரு மனிதனின் முதல் உறவு அம்மா. அந்த அம்மாவே தனக்குள் ஒரு முகத்தை ஒளித்து வைத்திருந்தால் என்ன அர்த்தம். அம்மா கூடவா இப்படி?

* * *

அவன் ஒரு வழியாய்ப் படிப்பை முடித்துவிட்டு வீட்டோடு வந்து இருந்து கொண்டு விவசாயத்தில் இறங்கி, அம்மாவின் கை பொம்மையாக மாறிய பின்தான் ரங்க ராஜனுக்கு அப்பா ஏன் கத்திக் கொண்டிருந்தார் என்பது புரிந்தது.

கோபால்சாமி.



கோபால்சாமி வீட்டுக்கு வந்தால் அம்மாவின் முகத்தில் மத்தாப்பு எரியும். சற்றுநேரம் வரை இருந்த கால் வலியும், தலைவலியும் போன இடம் தெரியாது.

யார் அவர்?

அவர் மேல் அப்படியென்ன பாசம் அம்மாவிற்கு? அப்படி என்ன ஒட்டுதல்? அவர் இடது காலைத் தூக்கிச் சுவரில் அழுத்திக் கொண்டு பேசும்போது, அவரது கண்களை அவ்வளவு ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு அம்மா ஏன் கீழே உட்கார்ந்திருக்க வேண்டும்?

மணை போட்டு, தலைவாழையிலையில் பார்த்துப் பார்த்துப் பரிமாறும் போது அம்மா என்ன சுகத்தைக் கண்டாள்? அவர் வரப்போகிறார் என்று வாசல் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருப்பாளே, ஏன்? எதற்காக?

"யாரும்மா இந்த கோபால்சாமி?"

"நம்ப குடும்பத்துக்கு ரொம்ப வேண்டியவர்டா."

நம்ப குடும்பத்துக்கா, உனக்கா?

அடுத்த கேள்வி அதுவாகத்தான் இருந்தது. கேட்க வில்லை. கேட்க முடியுமா?

கோபால்சாமியின் மீது கோபம் கோபமாய் வந்தது. வாழைக் குருத்து போன்ற அம்மாவின் மனத்திற்குள் சரக்கென்று கத்தியால் கீறிவிட்டாரோ.

அப்பாவின் கோபத்திற்குக் காரணம் என்ன என்று இனிமேல் அவனுக்கு யாரும் சொல்லத் தேவையில்லை.

அப்பா அடங்கிப் போன பின்னரும் அந்த கோபால்சாமி வந்து கொண்டுதான் இருந்தார். அம்மாவின் உபசரிப்பு களிலும் குறைவில்லை. ஆனால் நேற்றைக்கு அவர்கள்

பேசிக் கொண்டிருந்தது தான் எல்லாவற்றிலும் மிகக் கொடுமையானது. நெஞ்சைக் கீறி மிளகாய் தூவிய பேச்சு.

கோவில் போய்விட்டு அவன் வீடு திரும்பி உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அம்மா வெற்றிலையைச் சுருட்டிச் சுருட்டி ஒரு தட்டில் வைக்க, கோபால்சாமி எடுத்து வாயில் அடக்கிக் கொண்டிருந்தார்.

"அப்ப நாளைக்கு என்னோட நீ வரியா?" கோபால்சாமி தான் கேட்டார்.

"வரேன். சாயங்காலம். நாலுமணிக்கு வண்டி அனுப் பிடுங்க" என்றாள் அம்மா. முகத்தில் கொஞ்சம் மகிழ்ச் சியைத் தேக்கிக் கொண்டு.

"ரைட்டோ. அப்ப நான் பொறப்படறேன். எல்லாம் நல்ல படியா நடக்கும். பையனைப் பத்திக் கவலைப்படாதே. அவன் ஒண்ணும் துக்கப்பட மாட்டான். வரட்டுமா" என்று கோபால் சாமி அம்மாவின் தலையில் ஒருமுறை கைவைத்து தஞ்சாவூர் உருட்டுப் பொம்மையைப் பிடிப்பது போல் பிடித்து விட்டு எழுந்தார். இவனைத் தாண்டிக் கொண்டுதான் அவர் போனார் லேசாகப் புன்னகைத்துக் கொண்டே.

தூண் மறைவில் சாந்தாவைப் பார்த்தான். அவள் முகம் பேயறைந்தது போல் இருந்தது. சாந்தா வாயில்லாப்பூச்சி. எதுவும் வாய் திறக்கமாட்டாள் என்று அவள் வீட்டில் இருக் கும்போதே...

தகதகவென்றிருந்தது ரங்கராஜனுக்கு.

நினைவு தெரிந்து ஒரு தடவை கூட அம்மா வெளியில் போனதில்லை. அதுவும் வேற்று மனிதருடன் எப்படி முடிந்தது அம்மாவால்?

கேட்டால் என்ன பதில் சொல்வாள்!



ச்சீ... கேவலம். இதை எப்படி அவளிடம் கேட்க முடியும்?

எங்கே போகப் போகிறாள் அந்த கோபால்சாமியுடன் எதற்காக?

ஒருவேளை சாந்தாவிற்குத் தெரியுமா? அவளைக் கேட்க லாமா?

வேண்டாம். அவளுக்குக்கூட தர்மசங்கடமாகத்தான் இருக்கும். இதை எப்படி அவளிடம் போய்க் கேட்பது?

அப்பா இதெல்லாம் தாங்காமல்தான் போய்ச் சேர்ந்து விட்டாரோ?

அம்மாவைக் கொண்டு வந்து நடுக்கட்டில, அவர் உட்கார வைத்ததுதான் பெரிய தப்போ?

கீழ்மங்கலத்துக்காரர்களும், சொந்த ஊர்க்காரர்களும் அவளை ஒதுக்கி வைத்தது நியாயம்தான் போலிருக்கிறது.

அம்மா இப்போதெல்லாம் அவனைக் கவனிப்பது கூட இல்லை.

உட்கார வைத்து எண்ணெய் தேய்ப்பது இல்லை. இலை போட்டுப் பரிமாறுவதில்லை. வெறும் உயிரற்ற கட்டளை கள்தான். இங்கே போ. இதை வாங்கி வா. அங்கே போ. அதை முடித்து வா.

சாந்தா மட்டும் வீட்டில் இல்லையென்றால் அது பெரிய நரகமாகவே ஆகிவிட்டிருக்கும்.

"ரங்கா தண்ணி இறைச்சி வச்சிருக்கேன் குளிக்க வா."

அவளுக்குத்தான் அவன் மேல் என்ன கரிசனம்!

"ரங்கா. அப்படியே போடு சொல்றேன். அத்தனை துணியை யும், நான் தோய்ச்சிப் போட மாட்டேனா. விடு சொல்றேன்."

''வெயில்ல அலைஞ்சிட்டு வந்திருக்கியே ரங்கா. இந்தா மோர் குடி.''

அன்றைக்கு அப்படித்தான். வழக்கமாய்க் குனியவேண்டிய இடத்தில் மறந்து போய் குனியாமல் நிலைப்படியில் இடித்துக் கொண்டபோது, ''அச்சச்சோ பாத்து வரக்கூடாது?'' என்று ஓடி வந்தாள். ''நல்லா தேச்சிக்கோ. இல்லேன்னா வீங்கிடும்'' என்று அவன் தலையைப் பிடித்து இழுத்து நெற்றியில் பரபரவென்று அவள் தேய்த்தபோது ரங்கராஜன் ரொம்பத் தடுமாறிப் போனான்.

வயது வந்த பெண். கூச்சமில்லாமல் தொடுகிறதே. விலக முயற்சி செய்தான்.

''ஏன் ரங்கா. உன்னை நான் தொடக் கூடாதா? எனக்கு அதுக்கு அருகதை இல்லேன்னு சொல்றியா?''

''ச்சீ... ச்சீ. அதெல்லாம் ஒண்ணுமில்ல.''

''அப்பப் பேசாம நாற்காலில சாய்ஞ்சிக்கோ. நான் தேய்ச்சி விடறேன்.''

கண்களை மூடிக் கொள்வான். திடீரென்று குறுகுறுவென்றிருக்கும்.

நிமிர்ந்து பார்த்தால் சாந்தா அவனைக் கண்ணெடுக்காமல் துளைத்துக் கொண்டிருப்பாள்.

''என்ன சாந்தா?''

''உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு ரங்கா. எதையோ நெனைச்சிக் குழப்பிக்கிறே. நீ இன்னும் நிறைய சாதிக்கணும். அதெல்லாம் ஓம் மனசுக்குத் தோணலியேன்னு வருத்தமாயிருக்கு.''

ரங்கராஜனுக்குக் கோபம் வரும்.



எப்படி முடியும்? மனசைப் போட்டு உழப்பிக் கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? இந்த அம்மாவே இப்படி நடந்து கொள்ளும் போது?

அம்மாவை யார் கண்டிப்பது?

இப்போது கூட அம்மாவைக் கண்டிக்க வேண்டும் என்று தோன்றவில்லை. அது அவன் இயல்பாகப் போய்விட்டது.

அதனால்தான் விலகிக் கொண்டிருக்கிறான்.

எல்லாவற்றில் இருந்தும் விலகிப் போனால் ஞானம் வந்துவிடும். ஞானமே, வா!

## 10

ரயிலவே ஸ்டேஷனை நெருங்குகையில் விடிந்து விட்டது.

பொத்தல் கண்ட சர்க்கரை மூட்டை போல சுற்றிக் கருமேகம் சூழ்ந்திருக்க ஒரு வானக்கிழிசலில் இருந்து கதிர் வழிந்தது. நடந்ததில் வியர்வை. வேஷ்டி கால் தொடையுடன் ஒட்டியது. நடுமுதுகில் கோடாய் வியர்வை. அடிபட்ட விரல் நமநமவென்று எரிச்சல் கொடுத்தது.

தூரத்தில் சத்தம் கேட்டது. ரயில் வந்துவிட்டது. டிக்கெட் வாங்காமல் ஓர் ஒதுக்குப்புறத்தில் இருந்து உள்ளே நுழைந்தான். ஸ்டேஷன் மாஸ்டருக்கு அவனைத் தெரியும். அவர் மனதில் வீணாய் சந்தேகங்களை எழுப்பக் கூடாது.

சிமெண்ட் பிளாட் ஃபாரத்தில் இருந்த மணல்கள் அதிர்ந்து எழும்பிக் குதிக்க, ரயில் குபுகுபுவென்று பிளாட் ஃபாரத்தில் நுழைந்து பெருமூச்சு விட்டு நின்றது.

அவசரமில்லாமல் முதல் பெட்டியை நெருங்கினான். உள்ளே கூட்டம் அதிகம் இல்லை. ஒன்றிரண்டு பேர் ஆலங்குச்சியாலும், பிரஷ்ஷாலும் ஈறுகளைத் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பெரியவர் பேப்பரை உதறிப் பிடித்துப் படிக்கத் தொடங்கினார்.

''காபி. காபி. காபி.''

ரங்கராஜன் படியில் காலை வைத்தான்.

''எங்கே போறதா உத்தேசம்?''

பின்னாலிருந்து குரல் வந்தது. கொக்கி போட்டு இழுத்து நிறுத்துகிற மாதிரி. திடுக்கிட்டுப் போய்த் திரும்பினான்.

''சாந்தா நீயா?''

''கீழ இறங்கு, சொல்றேன்.''

''வேண்டாம் சாந்தா.''

''இறங்கப் போறியா இல்லியா?''

''இறங்கலைன்னா என்ன செய்வே?''

''ஒண்ணும் செய்யமாட்டேன். ஸ்டேஷனை விட்டு வண்டி தாண்டறதுக்குள்ள அதுவே நின்னுடும்.''

''என்ன சொல்றே நீ?''

''என் உடம்பைப் பொறுக்கி எடுக்கறதுக்குன்னு சொல் றேன். இறங்கறியா, இல்லையா?'' கண்களைப் பார்த்தாள் தீவிரம் தெரிந்தது.



பாவி. செய்தாலும் செய்வாள்.

ரயில் கூவியது. ரங்கராஜன் சாந்தமாய் வண்டியிலிருந்து கீழே இறங்கினான்.

ஒவ்வொரு பெட்டியாய் கடந்து போவதை வருத்தத்தோடு பார்த்தான். கடைசிப் பெட்டி கடந்த பின்பு எரிச்சலில் ஒரு கல்லைப் பொறுக்கி எடுத்து அது சென்ற திசையில் எறிந் தான். தண்டவாளத்தில் பட்டு அது நெருப்புப் பொறியைக் கிளப்பியது.

''போகலாமா?''

''எங்க?''

''வீட்டுக்குத்தான்.''

''எதுக்குப் போகணும். சனியனே. நான் திடீர்னு கௌம்பி வந்தது உனக்கு எப்படித் தெரியும்?''

அவள் சிரித்தாள். ''ஒன்னைத் தெரிஞ்சிக்காம இருக்கற அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்ல? எதிர்பாத்துக் கிட்டுத்தான் இருந்தேன். இன்னிக்கு நீ விடிகாலைல எழுந்துக்கறதை பார்த்ததும் உடம்புல ஊசி குத்தின மாதிரி இருந்தது. அம்மா கேட்டப்ப நீ தடுமாறினதைப் பார்த்தேன். அதான் பின்னாலயே வந்துட்டேன். ராமன் இருக்கிற இடம்தானே சீதைக்கு அயோத்தி?''

''நீ என்ன சொல்றே?''

''உனக்கு எதுவுமே உடனே புரியமாட்டேங்குது ரங்கா. புரிஞ்சிக்கறது எல்லாம் தப்பாப் போயிடுது.''

''சாந்தா.''

''இங்க எந்த கூனியும் சூழ்ச்சி பண்ணி உன்னைக் காட்டுக்கு அனுப்பலியே. தானா ஓடிப்போற ராமனுக்கு

விவரம் எதுவும் தெரியாதுன்னுதான் நான் தடுத்துட்டேன்.''

''உனக்கு எல்லாம் தெரியுமா?''

''இப்படி வா. ஆத்தங்கரைல உக்காந்து பேசுவோம்.''

''என்ன பேசணும்?''

''நீ எதுக்கு ஓடப்பாத்தே சொல்லு.''

''உனக்குப் புரியலையா? மொதல்ல அப்பா, அப்புறம் வேணு மாமா. இப்ப அம்மா. எல்லாரும் என்னை ஏமாத்திட்டாங்க சாந்தா.''

''தப்பு ஒம்பேர்ல ரங்கா. ஓடிப்போயிட்டா இதெல்லாம் சரியாப் போய்டும்னு நெனைச்சியா? சரியாத் தெரிஞ்சிக்காம நீ பாத்ததும், நெனைச்சதும், நம்பினதும்தான் கரெக்ட்னு வாதாடறே. ஆம்பளைங்களுக்கு இதே பழக்கமாப் போய்டிச்சி.''

''நான் என்ன தப்பா எடை போட்டேன் சொல்லு.''

''எதை சரியா எடை போட்டே சொல்லு. மனுஷங்களை மனுஷங்களாப் பாக்கலியே ரங்கா நீ! நீ எல்லாரையும் தெய்வமா நெனைச்சிட்டே. எல்லாரையம் தூக்கி வச்சிக் கும்பிட்டே. அவங்க அதுக்காக கடைசிவரைக்கும் அந்த வேஷமே போட்டுக்கிட்டிருக்க முடியுமா?''

''நான் காதலிச்சேன் சாந்தா. அப்பாவை, அம்மாவை, வேணு மாமாவை.''

''ஆமா. காதலிச்சே. பேரு, ஊரு, அட்ரஸ்லாம் தெரிஞ்சிக்கிட்டு காதலிச்சே. அதுக்குப் பேரு காதலா?''

''அப்படின்னா?''



''காதல்னா எதிர்பார்ப்பு இருக்கக் கூடாது ரங்கா. நீ பாட்டுக்குக் காதலிச்சிக்கிட்டே இருக்கணும். இவங்க இன்னிக்கு இருக்காங்க. இதுக்காக இவங்களை நான் காதலிக்கிறேன். இவங்க கடைசி வரைக்கும் இப்படியேதான் இருப்பாங்கன்னு நெனைச்சி நீ அன்பு செலுத்துனே. ஒன் எதிர்பார்ப்பு தோத்துப் போச்சி. அதனால வெறுப்பு, கோபம் எதிர்பார்ப்போட காதலிக்கறது ஒரு காதலா சொல்லு? ஒன் மனசு இன்னும் பக்குவமாகலை ரங்கா. தேங்கா முதிர்ச்சியடைஞ்சாதான் கொப்பரையாகும். எண்ணெயாகும். அரிசி பழசானாத்தான் சாதம் மல்லிகைப்பூவா இருக்கும். ஒனக்கு அந்த முதிர்ச்சி வரலியே ரங்கா?''

''இல்ல சாந்தா. இந்த அப்பா எப்படி இருந்தார் தெரியுமா?''

''எப்படி இருந்தார்? அவர் என்ன தப்பு பண்ணினாரு? அம்மாவைத் திட்டினார். அவ்வளவுதானே? உங்கிட்ட பாசமா இருந்தாரு. அம்மாகிட்டே அவர் இயல்புப்படி சத்தம் போட்டார். மாமா அத்தையைப் புரிஞ்சிக்கிட்டது அவ்வளவு தான். உங்கப்பா மொதல்ல யாரை சந்தேகப்பட்டார் தெரியுமா? எங்கப்பாவை, அவரோட குருவை, உங்கம்மாவோட சேத்து சந்தேகப்பட்டுட்டாரு. அது தெரிஞ்சதாலதான் எங்கப்பா சீக்கிரமே கண்ணை மூடிட்டாரு...

ஒரேயொரு தடவை அத்தை இதையெல்லாம் எங்கிட்ட சொல்லியிருக்காங்க. உங்கப்பா பட்ட சந்தேகத்துக்கு அர்த்தமே இல்லைன்னு அழுதிருக்காங்க. உங்கிட்ட இதைப் பத்திப் பேசமுடியுமா? நீ வயசுக்கு வந்த பையன். அப்பாவைப் பத்தி நீ தப்பா நெனைச்சிட்டா என்ன செய்யறதுன்னு அத்தைக்குத் தயக்கம். உங்கப்பாவுக்கு யோசனை கம்மி. பாசம் தான் அதிகம் உங்கம்மா பேர்ல. தன்னோடது எங்கே தன்னை விட்டுப் போய்டுமோன்னு பயம். அதான் குலத்துக்கு மரியாதை குடுத்துத் திட்டிட்டாரு. அத்தை சொல்லியும் அவர் மண்டைல ஏறல. என்ன இருந்தாலும் அவரும் ஒரு மனுஷர்தானே? மனுஷ இயல்புப்படி நடந்துக்

கிட்டாரு. மனம் ஆடிவச்சபடி ஆடிட்டாரு.'' சாந்தாவிற்கு மூச்சு இரைத்தது. மார்பு ஏறி இறங்கியது. மூக்கு லேசாக விடைத்திருந்தது.

''அம்மா போல தப்பே இல்லைன்னு சொல்றியா சாந்தா?''

''இல்ல. எந்தத் தப்பும் இல்ல.''

''அப்ப அந்த கோபால்சாமி?''

''அவர் என்னோட சித்தப்பா.''

''சித்தப்பாவா?''

''ஆமா. சொந்த சித்தப்பா. அத்தைக்கு ஒரு வாழ்வு தேடித்தந்த எங்கப்பாவைத் தெய்வமா நெனைச்சிக்கிட்டிருந்தாங்க. அவரோட சொந்தத் தம்பி. எங்கப்பா எல்லாச் சொத்தையும் எம்பேர்ல எழுதி வச்சிட்டு, சித்தப்பாவை கார்டியனாப் போட்டுட்டுப் போய்ட்டாரு. சித்தப்பாவுக்கு மலேஷியால கொடி கட்டிப் பறக்கிற வியாபாரம். வக்கீல்கிட்டேர்ந்து லெட்டர் வந்ததும் ஓடி வந்தார். பொறுப்பை எடுத்துக்க, என்னைப் பார்க்கறதுக்காக அடிக்கடி வீட்டுக்கு வந்துட்டு இருக்காரு. என்னோட நல்லதுக்குன்னு அவர் ஏதோ ப்ளான் போடுவார். அத்தைகிட்ட கலந்து பேசுவார். அது தப்பா ரங்கா? அத்தை எம்மேல உயிரையே வச்சிருக்காங்க. எனக்காக என்ன வேணும்னாலும் செய்வாங்க. நீ மனசில வேற அர்த்தம் பண்ணிக்கிட்டா அதுக்கு அத்தை எப்படி பொறுப்பாக முடியும்? பொட்டுக்கட்டின குடும்பத்தில வந்த அத்தனை பேரும் மட்டமானவங்கதானா? எல்லாரையும் தெய்வமா நெனைச்சிட்டு, நீ மட்டும் மிருகம் மாதிரி சாக்கடையிலேயே சுத்திக்கிட்டு இருக்கியே, இன்னிக்கு என் கல்யாணத்துக்கு சம்பந்தம் பேசப் போறாங்க அத்தை. பெரிய எடத்துல. அதுக்குத்தான் சித்தப்பா வண்டியனுப்பப் போறாரு.''

''இதையெல்லாம் எங்கிட்ட ஏன் மறைக்கணும்?''



''அது தெரிஞ்சா இன்னும் பிரமிச்சிப் போயிடுவே. எனக்கு சொத்தும் சுகமும் சேரப்போவுதுன்னு தெரிஞ்சா எங்க நீ அதுக்கு ஆசைப்பட்டு எம்மேல ஆசை வச்சிடுவியோன்னு அத்தை பயப்பட்டாங்க. என்னைத் தனியா ராணியாக்கணுமே தவிர அதை வேற விதமா அனுபவிச்சதாப் பேரு வரக் கூடாதுன்னுதான் கவனமா இருந்தாங்க. ஏற்கனவே எங்கப்பா கொடுத்த ரெண்டு ஏக்கரால உங்கப்பாவுக்கு சந்தேகம் வந்தது. 'சீக்கிரம் கொழந்தையைப் பெத்துக்கொடு கொஞ்ச வரேன்'னு எங்கப்பா சொன்னது உங்கப்பா மனசுல சந்தேகப் பேயை நொழைச்சிடுச்சி. எங்க குடும்பத்துச் சொத்துல ஆசைப்பட்டு உன் வாழ்க்கையும் நாசமாய்டக் கூடாது. நானும் மகாராணி மாதிரி தூரத்திலயே இருக்கணும்.''

சாந்தா விம்மி அழத் தொடங்கினாள். ரங்கராஜனுக்கும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அழுதான். அவன் அழுவது கண்டு சாந்தா அழுகையை நிறுத்தினாள்.

''ஆம்பிளை அழக்கூடாது ரங்கா'' என்றாள்.

''வேணு மாமா போலயும் நீ அளவுக்கு அதிகமாவே மரியாதை வெச்சிட்டே. அவனும் சராசரி மனுஷன்தான்னு புரிஞ்சிக்கல. மனுஷனுக்கு சபலம் எப்பவுமே உண்டு. எம்பேரில தப்பு இல்லேன்னு சொல்ல வரல. என் உடம்பு வாகு அப்படி. வேணு கல்யாணம் பண்ணி அந்த சொகம் தெரிஞ்சவுடனே சபலத்துக்கு அடிபட்டுட்டான். இப்ப சூடுபட்ட பூனை மாதிரி ஆய்ட்டான். அவனுக்காக வருத்தப்பட்டு என்ன ஆவப்போவுது. வேண்டாத விஷயங்களையெல்லாம் போட்டுக் கொழப்பி உன்மனசு வேற மாதிரி ஆய்டிச்சி. அதோட மென்மையும், ரசனையும் காணாமப் போய்டிச்சி. ஆனாலும் என்னை இப்படித் தவிக்க விட்டுட்டு கிளம்ப உனக்கு எப்படி மனசு வந்தது ரங்கா? என்னை நீ புரிஞ்சிக்கலயே. எம் மனசைத் தெரிஞ்சிக்கலயே. நானும் உன்னை லவ் பண்றேன். உன் பேரு, முகவரி

எல்லாம் தெரிஞ்சிக்கிட்டுத்தான் லவ் பண்றேன். ஆனா நீ அப்படிப் போவே, இப்படி இருப்பேன்னு எதிர்பார்ப்பெல்லாம் இல்ல. வீட்டுக்கு வா ரங்கா. நான் புதுசா ஒரு வீட்டுக்குப் போறதை விட, இந்த அப்பாவி ரங்காவுக்கு ராணியா இருக்கிறேன். வரமாட்டியா?''

கண்ணில் நீர் மல்க சாந்தா கேட்டாள்.

ரங்கராஜன் அவளைப் பார்த்தான். அவன் கண்களிலும் நீர் பெருகியது.

''என்னை மன்னிச்சிடு சாந்தா'' என்று கண்ணீருடன் சிரித்தான்.

''மன்னிக்க மாட்டேன். நான் மன்னிக்கணும்னா, நீ என்னைக் கட்டிப்பிடிச்சி ஒரு முத்தம் கொடுக்கணும்.''

''இங்கேயே வா?''

''நாம இந்த உலகத்துலதானே இருக்கப் போறோம்? யாருக்கும் தெரியாம எதுவும் பண்ணிட முடியுமா என்ன?''

சாந்தா மிகப் பெரியவளாகத் தோன்றினாள். அவனை விடப் புத்திசாலி. அவனுக்கு ஞானப்பால் புகட்ட வந்தவள். அவள் சொல்லுக்கு ஆட்படாமல் யார் சொல்லுக்குக் கட்டுப் படுவதாம்?

ரங்கராஜன் தைரியமாக் அவளை நெருங்கினான்.

''புல்லின் நுனி பனித்துளி நடுங்கியது. பட்சிகள் கீய்ச்ச் கீய்ச்ச் என்றன.

சாந்தா கண்மூடி உடல் சிலிர்த்து அந்தத் தருணத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தாள்.